13698

# இளங்கதிர்

## 2வது ஆண்டு மலர்

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்



378.05
இளங்
SL/PR

தமிழ்ச்சங்கம் (92/93)
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை

# இளங்கதிர்

## 27வது ஆண்டு மலர்

**1992 1993**

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

இதழாசிரியர் :-

**செல்வன். எஸ். வை. ஸ்ரீதர்**
(கலைப்பீடம்)

வெளியீடு :-

தமிழ்ச் சங்கம்
பேராதனைப் பல்கலைக் கழகம்
பேராதனை.

13698
378.05
Indexed
கொழும்புத் தமிழ்ச் சங்கம்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்
7. 6. 1988

செ. குணரத்தினம்
தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்
13698

# தமிழ்ச்சங்கக்கீதம்

புகழ் திகழ் தமிழ்மகள் புவிமீ தாளும்
பொன்னாள் வருக ! வருக ! !
மகிழ்வுறு தமிழ் நில மாந்தர்கள் பண்பு
மலைவிளக் காகவே ஒளிர்க
சகலரும் ஒருதாய் தன்பிள்ளை கள்போல்
சமத்துவ மாகவே வாழ்க
தனித்துவம் காத்திட எழுக ! எங்கள்
தமிழ்க் குற ளறநெறி தழைக்க
தாயக மணிக்கொடி துலங்க
பனித்திடு மலைசூழ் பழநகர் பேரா
தனையுயர் தமிழ்க்கலை மன்றம்
வளர்க ! வளர்க ! வளர்க !
மாநிலம் போற்றிட வளர்க ! !

வளம்தரு மாவலி நதிமருங் கமைந்தபே
ராதனைப் பல்கலை மன்றில்
விளைந்திடு பயிராய் விளங்கிடு சங்கம்
வீறு கொண் டிலங்கி மிளிர்க
இளந்தமிழ் மாணவர் இன்கலைக் கோட்டம்
இவ்வுல குளவரை துலங்க
ஈழமணி நாடுயர்க ! எங்கள்
நாளைய வாழ்வும் உயர்க
நமதிறை அருண்வழி பொலிக
பாளையின் குளிர்தரு மலைசூழ் பேரா
தனைத்தமிழ்ப் பணியகம் வாழ்க !
வாழ்க ! வாழ்க ! வாழ்க !
பல்லாண் டுயர்வுடன் வாழ்க.

(''ஜன கண மன'' எனும் இந்திய தேசிய கீத மெட்டு)

— சக்திதாசன்

# இந்த மலரில் . . . .


| | | |
|---|---|---|
| முகப்பு | ... | i |
| தமிழ்ச்சங்கக் கீதம் | ... | ii |
| இந்த மலரில் | ... | iii |
| துணை வேந்தரின் வாழ்த்துச் செய்தி | ... | v |
| பெருந்தலைவர் வாழ்த்துகின்றார் | ... | vi |
| பெரும் பொருளாளர் வாழ்த்துரை | ... | vii |
| அட்டைப்படக் கவிதை | ... | viii |
| தமிழ்ச்சங்கச் செயற்குழு (1992 / 93) | ... | ix |
| தமிழ்ச்சங்கச் செயற்குழு (படம்) | ... | x |
| தலைவரின் உணர்விலிருந்து | ... | xi |
| உப தலைவரின் உள்ளத்திலிருந்து | ... | xii |
| செயலாளரின் பேனாவிலிருந்து | ... | xiii |
| இளம் பொருளாளரிடமிருந்து | ... | xiv |
| என்னுடன் சில நிமிடங்கள் | ... | xv |
| போட்டி முடிவுகள் | ... | xvi |
| செயலாளர் ஏட்டிலிருந்து | ... | 166 |
| சங்கத்தின் பாதையிலே | ... | 172 |


கட்டுரைகள்


| | | |
|---|---|---|
| பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் ஒரு வரலாற்று நோக்கு (1926 - 1993) - கலாநிதி க. அருணாசலம் | ... | 1 |
| பள்ளு இலக்கியத்தில் நாட்டார் இலக்கியக் கூறுகள் - கலாநிதி துரை மனோகரன் | ... | 11 |
| சிங்கள நாடகமரபில் 'கலைப்பாணி'யின் செல்வாக்கு - ஜனாப் எம். எஸ் எம். அனஸ் | ... | 21 |
| விபுலாநந்த அடிகளாரின் மானிட நோக்கு - பேராசிரியர் சி. தில்லைநாதன் | ... | 26 |
| இலங்கையில் தமிழ்த் தேசிய வாதத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - கலாநிதி அம்பலவாணர் சிவராஜா | ... | 36 |
| குறை விருத்தியும் குறைந்த வாழ்க்கைத்தரத்தின் பரிமாணங்களும் - மா. செ. மூக்கையா | ... | 44 |
| குருதி அமுத்த அதிகரிப்பிற்கான காரணிகள் - கலாநிதி இரா. சிவகணேசன் | ... | 63 |

- வாசகனின் நடுநிலைப் போக்கு - எம். ஏ. அப்துல் சக்காப் ... 67
- 'எயிட்ஸ்' மனித உலகுக்கு ஒரு சவால் - எஸ். ஜெயசீலன் ... 78
- கிராம அபிவிருத்தியும் அதில் கிராம மக்களின் பங்களிப்பும் - நல்லதம்பி நல்லராஜா ... 86
- கணனிகளே வாழ்க்கையாக - செல்வன் மு. தாரகன் - செல்வன் பே. இராஜசிங்கம் ... 96
- இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறை தீர்வாகுமா ? - செல்வன் எம். அப்துல் நாஹிப் ... 100
- மஹர்மேதை கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியின் கலை மெய்யியல் - பற்றிய ஓர் சிறு நோக்கு - செல்வன் கே. கணேசராஜா ... 108
- பெண்நிலை வாதமும் மகளிர் நிலைப்பாடும் - நல்லதம்பி நல்லராஜா ... 112
- கீழைத்தேய கலை, அழகியல் மெய்யியலில் இந்தியாவின் பங்களிப்பு: ஓர் அறிமுகமும் - செல்வன் பீ. எம். ஜமாஹிர் ... 121
- குறள் கூறும் நவீன மருத்துவம் - ஸ்ரீதரன் ஜெயரட்னம் - செ. சதானந்தன் ... 126
- வளி மாசடைதல்: காரணங்களும் விளைவுகளும் - வை. நந்தகுமார் ... 132
- பழந்தமிழ் இலக்கியத்தில் அங்கத மரபுகள் - பேராசிரியர் பொ. பூலோகசிங்கம் ... 149
- பதிவு நவிற்சி ஓவியங்கள் - கலாநிதி - ந. வேல்முருகு ... 158


## சிறுகதைகள்


- பாதை மாறிய பயணங்கள் - செல்வன் மு. விஜேந்திரா ... 54
- சொந்தங்கள் சுமையான போது.. - செல்வி மரீனா இல்யாஸ் ... 70
- இன்னொரு ஜனனம் - செல்வி என். தாரணி ... 89


## கவிதைகள்


- ஓ தென்றலே - செலவன் எஸ். வை. ஸ்ரீதர் ... 25
- மௌனராகம் - செல்வன் எம். ராஜன் நசூர்தீன் ... 35
- மனிதா உன்னைத்தான் - செல்வன் ரஷீத் எம். றியாழ் ... 53
- முடிவுரையும் முன்னுரையும்.. செல்வன் வே. இராஜ கோபாலசிங்கம் ... 85
- வழி பிறக்காதா ? - செல்வன் இ. ஸ்ரீதர் ... 99
- அண்ணனுக்கு ஓர் அஞ்சல் - செல்வி மரீனா இல்யாஸ் ... 116
- உரமாகிப் போனது - கே. எம். அப்துல் ஸமது ... 125
- சமநிலை உணர்ந்து சமன் செய்து கொண்டு - செல்வன் ரி. வி. ஆர். சங்கர் ... 129
- காத்தல் ... - செல்வன் இரா. இரவிசங்கர் ... 147
- ஒரே ஒரு முறை மட்டும்.. - செல்வி ந. தாரணி ... 155
- இயற்கை அளிக்கும் ராகம், இதயம் களிக்கும் சுகம்...! - செல்வன் எம். வை. எம். அலி ... 164
- மனு நீதி... - செல்வன் வி. பீற்றர் ரஞ்சித் ... 174


## கார்ட்டூன்கள்


- செல்வன் எம். ஐ. முகமட் மர்சூன் ... 62
- செல்வன் எம். எல் பௌசுல் அமீர் ... 77
- செல்வன் ச. கண்ணன் ... 95

# A Message from our Vice - Chancellor

It gives me great pleasure to send this message of greetings to the Tamil Society on the occasion of the release of its annual magazine. It is my fervent hope that this Society would continue its good work in the years to come in promoting creative writing and artistic skills among students.

Ilankathir has a rich tradition and throughout its history it has maintained high standards and fostered noble values and attitudes to sustain social harmony, cultural upliftment and national development. It gives a sense of achievement to find that some of its editors have in later years become the editors of national daily newspapers and a few of the known Tamil scholars had their maiden attempts published in this journal.

The Tamil Society should be commended for the excellent manner in which it couducted its affairs during the current year. some of the programmes it organized have not only enabled students to experience meaningful social life but also have given them the necessary forum to develop their talents.

I congratulate the Editor, and the Working Committee for their achievement.

Professor J. M. Gunadasa
Vice - Chancellor

University of Peradeniya,
PERADENIYA.

# பெருந்தலைவர் வாழ்த்துகின்றார்....

பேராதனைப் பல்கலைக்கழகத்திற் பயிலும் தமிழ் மாணவர் தம் கலை இலக்கிய ஆர்வத்தையும் ஆற்றல்களையும் வளர்த்துக்கொள்ள வேண்டிய வாய்ப்புக்களை வழங்குவதற்கான முயற்சிகளைத் தமிழ்ச் சங்கம் நீண்டகாலமாகவே மேற்கொண்டு வந்திருக்கின்றது.

ஒரு மக்கட் கூட்டத்தின் உயர் நிலையையும் உலக நோக்கையும் இலட்சியங்களையும் எடுத்துக்காட்டுவன அதன் கலை இலக்கியங்களாகும். அந்தவகையில், எங்கள் இளைஞர்கள் பல்கலைக்கழகத்திற் பயிலும் காலத்திற் பண்பாட்டை வளர்க்கும் பயனுள்ள பணிகளிலும் ஈடுபடுவது மெச்சத்தக்கதேயாகும்.

பல்கலைக்கழக மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் அனுபவங்களையும் சிந்தனைகளையும் பதிவுசெய்யும் வகையிலும் பரிமாறும் வகையிலும் வெளிவருவது இளங்கதிர். இவ்வாண்டும் அதன் உதயத்தைக் காண்பதிலே தமிழ்ச்சங்கச் செயற்குழுவினர் காட்டும் ஆர்வம் உவகையளிப்பதாய் உள்ளது. அவர்களுக்கு எமது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

**சி. தில்லைநாதன்**
பெருந்தலைவர்,
தமிழ்ச் சங்கம்.

தமிழ்ப் பேராசிரியர்
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை.
25 - 10 - 1993

# பெரும் பொருளாளர் வாழ்த்துரை . . . .

இளங்கதிர் சஞ்சிகையின் இவ்வருட உதயம் திட்டமிட்டபடி காலத்தோடு வெளி வந்திருப்பது தமிழ்ச்சங்க உறுப்பினர்களது அயராத உழைப்பையே காட்டி நிற்கின்றது தமிழ்ச்சங்கத்தைப் பொறுப்பேற்ற நாள் முதல் இளங்கதிர் சஞ்சிகையின் பிரசுரம் ஒன்றே தமிழ்ச்சங்கக் குழுவின் முழு மூச்சாக இருந்திருக்கின்றது என்றால் மிகையாகாது.

தமிழ்ச்சங்க கலைநிகழ்ச்சி ஒன்றை கொழும்பில் மேடையேற்றிய போது அவர் களை எதிர்நோக்கிய இடர்பாடுகளை (இங்கு காவல்துறை விசாரணையும் உட்படும்) ''எது வந்த போதிலும் இளங்கதிர் பிரசுரமாக வேண்டும்,'' என்று இவர்கள் துணிந்து முன்னேறியமை இச்சஞ்சிகை மீது இவர்களுக்கு இருந்த பற்றுதலையே எனக்குத் தெளிவுபடுத்துகின்றது.

மாண்புமிகு இந்து கலாசார அமைச்சர் அவர்கள் இக்கலைவிழா சார்பாக தமிழ்ச்சங்க உறுப்பினர்களிற்கு வழங்கிய ஒத்துழைப்பை நன்றியோடு நினைவுகூர விரும்புகிறேன்.

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களது எழுத்துத்திறனை வளர்த்தலும், கற்பனை வளத்தை ஊக்குவித்தலும், ஆராய்ச்சி அறிவை விரிவாக்கலும் என்று பல உயர்ந்த நோக்கங்களோடு பிரசுரமாகும் இச்சஞ்சிகைக்கு கேட்டபொழுதெல்லாம் பல் வேறு வழிகளிலும், நிதியுட்பட உதவி புரிந்த எல்லாத் தமிழ் பேசும் அன்பர்களுக்கும் தமிழ்ச்சங்கம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது.

தமிழ்ச்சங்கம் இவ்வருடம் நடத்திய பட்டிமன்றம், கவிஅரங்கு, உரைநிகழ்ச்சிகள், நினைவு விழாக்கள் யாவும் தரமாகவும் சிறப்பாகவும் அமைந்திருந்தன. இயல், இசை, நாடகம் என்ற வகையில் தமிழ்ச்சங்கம் தனது கடமைகளை விரிவுபடுத்திக் கொள்ளு மானால் தமிழ்ச்சங்கம் மேலும் சிறப்பாக தமிழ்த் தொண்டு புரியலாம் என இவ்வருட உறுப்பினர்கள் அபிப்பிராயப்பட்டனர். இக்கருத்தை இனிவரும் தமிழ்ச்சங்க நிர்வாகக் குழு கவனித்து ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது நல்வாழ்த்துக்கள் இளங்கதிர் பிரசுரத்திற்கு
உதவிய யாவருக்கும் உரித்தாகட்டும்.

ஜனாப். எம். எல். ஏ. காதர்
B. A. (Hons); M. A (ANU)
பெரும் பொருளாளர்.
தமிழ்ச்சங்கம்

முதுநிலை விரிவுரையாளர்,
அரசறிவியற்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.
25 - 10 - 1993

# அட்டைப்படக் கவிதை

மொட்டுக்கள் மலர்ந்து
மணம் வீசவேண்டும் - ஏட்டில்
சிந்திய துளிகள் எம்
சிந்தை தொடவேண்டும் !

அறியாமை இருட்டை
அகற்றிவிடவேண்டும் - தமிழில்
அஞ்சாமை நன்றென்று
புதுக்கவிபாடவேண்டும் ! !


மேதினியின் மேனி தொட்டு
இளங்கதிர் பரவவேண்டும் - அது
விழித்தெழு என்று நம்
விடியலை உணர்த்தவேண்டும் ! ! !

அட்டைப்படத்திற்கான
ஓவியம்: இராஜேஸ் இராஜரட்ணம்
இறுதிவருடம் (விவசாயபீடம்)

எழுத்தமைப்பு: திக்குவெல்ல ஸும்றி
(விடுகைவருடம் கலைப்பீடம்)

# தமிழ்ச்சங்கச் செயற்குழு 1992 / 93

| | | |
|---|---|---|
| பெருந்தலைவர் | :- | பேராசிரியர் சி. தில்லைநாதன் |
| பெரும் பொருளாளர் | :- | ஜனாப் எம். எல். ஏ. காதர் |
| தலைவர் | :- | செல்வன் க. நா. சண்முகதாசன் |
| உப தலைவர் | :- | செல்வன் பீ. எம். ஜமாஹிர் |
| செயலாளர் | :- | செல்வன் சி. சிவானந்தன் |
| இளம் பொருளாளர் | :- | செல்வி இ. வாசுகி |
| இதழாசிரியர் | :- | செல்வன் எஸ். வை. ஸ்ரீதர் |
| குழு உறுப்பினர்கள் | :- | செல்வன் பி. ஜே. கஷ்ரர் |
| | | செல்வி ந. அனுஷா |
| | | செல்வி ஏ. ஆனந்தரூபி |
| | | செல்வன் எம். ஆர். எம். ராஜன் நசூர்தீன் |
| | | செல்வன் வி. காண்டீபன் |
| | | செல்வன் எம். எச். எம். ஹஸ்மி |
| | | திருமதி. ஜெயகௌரி வேல்முருகு |



இருப்பவர்கள் (இ. வ) செல்வன் எஸ். வை. ஸ்ரீதர் (இதழாசிரியர்), செல்வி இ. வாசுகி (இளம் பொருளாளர்), ஜனாப். எம். எல். ஏ. காதர் (பெரும் பொருளாளர்), பேராசிரியர் ஜே. எம். குணதாச (துணைவேந்தர்), பேராசிரியர் சி. தில்லைநாதன் (பெருந் தலைவர்), செல்வன் க. நா. சண்முகதாசன் (தலைவர்), செல்வன் சி. சிவானந்தன் (செயலாளர்)

நிற்பவர்கள் (இ. வ) செல்வி ந. அனுராஷா (கு. உ), செல்வன் பி. ஜே. கஷ்ரர் (கு. உ), செல்வன் பீ. எம். ஜமாஹிர் (உப தலைவர்), திருமதி ஜெயகௌரி வேல்முருகு (கு. உ)

# தலைவரின் உணர்விலிருந்து. . . .

''வரப்புயர'' என்ற ஒரு சொல்லினுள் அடங்கியுள்ள ஆழமான அர்த்தம் போல எமது தமிழ்ச்சங்கமும் அதனது சஞ்சிகையாம் இளங்கதிரும் தமிழ் கலை இலக்கிய வரலாற்றின் ஒரு உறுதியான அடித்தளமாய் இருப்பது வெளிப்படை. அந்தத் தொடரிலே இம்முறையும் எமது 27வது மலரினை இலக்கிய உலகின் கரங்களில் தவழ விடுவதையிட்டுப் பெரு மகிழ்வடைகின்றேன்.

எமது தமிழ்ப்பணியை தனியே பல்கலைக்கழகத்துடன் நிறுத்திவிடாது வெளியிடங்களிலும் தொடரவேண்டும் என்ற நோக்கோடும், இவ் இளங்கதிர் வெளியீட்டு நிதிக்காகவும் கொழும்பு மாநகரில் ''கலைமதுரம்'' என்ற நிகழ்ச்சியைப் பெரும் சிரமங்களின் மத்தியிலும், தரமானதாகவும், வெற்றிகரமானதாகவும் நடாத்தி முடித்ததையிட்டு பெருமைப்படும் அதேவேளை இந்நிகழ்ச்சியை நடாத்த உதவிய அனைவருக்கும் நன்றி கூறிக் கொள்கின்றேன்.

தற்போதைய இளைஞர்கள் மத்தியில் இலக்கிய ஆர்வம் குறைந்து வருகின்றது, ஆடம்பர நிகழ்ச்சியையே அதிகம் விரும்புகின்றனர் என்பது பொதுவான கருத்து. ஆனால் எமது தமிழ்ச்சங்கம் நடாத்திய இலக்கிய நிகழ்ச்சிகளும், அதில் பங்கு கொண்ட மாணவர்களின் ஆர்வமும் எதிர் காலத்தில் எமது தமிழ் இலக்கியம் தொடர்ந்தும் தரமானதாக வலுப்பெறும் என்ற நம்பிக்கையைக் கூட்டுகின்றது. இதற்கு சிகரம் வைத்தது போல் இம்முறை நடாத்திய கவிதை, கட்டுரை, கார்ட்டூன், சிறுகதை, நாடகப் போட்டிகளில் மாணவர்கள் காட்டிய ஆர்வம் எம்மை மிகவும் திருப்தியடையச் செய்தது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியை நன்கு வளர்த்துள்ளோம், தரமான கலை இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளோம் என்ற வகையில் எம்மை வழி நடத்திய பெரும் தலைவர், பெரும் பொருளாளரும், ஏனைய விரிவுரையாளர்களும், எம்முடன் தோளோடு தோள் நின்ற மாணவர்களுமே பெருமைக்குரியவர்கள்.

இனிவரும் தமிழ்ச்சங்க உறுப்பினர்களும் வரலாறு படைத்த தமிழ்ச்சங்கத்தை மேலும் சிறப்படையச் செய்து, தமிழ்ப்பணி ஆற்ற வேண்டும் என்று விரும்புகின்றேன்.

வாழ்க தமிழ்மொழி! வளர்க இளங்கதிர்!

நன்றி.

க. நா. சண்முகதாசன்
தலைவர்,

விவசாய பீடம்
பேராதனைப் பல்கலைக் கழகம்.

# உபதலைவரின் உள்ளத்திலிருந்து....

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் முத்தமிழ் இலக்கியங்களையும் தன்னகத்தே கொண்டு சங்கம் வளர்த்த தமிழைத் தங்களது ஆண்டுச் சஞ்சிகையான 27வது "இளங்கதிர்" மலரை வெளியிடுவதன் வாயிலாக நறுமணங்கமழச் செய்வது தமிழ் பேசும் மக்கள் பெருமைப் படக்கூடிய விடயமாகும்.

பல்கலைக்கழகத்தின் இடர்மிகுந்த காலத்தைத் தவிர்த்து நோக்குகையில் தமிழ்ச் சங்கமானது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஓர் வீறுநடை நோக்கிய பாதையைத் தேர்ந்தெடுத்துக்கொண்டதை எந்த ஒரு இதயமும் 27வது இளங்கதிர் இதழினை விரித்துப் பார்க்கும்போது மறுக்கமுடியாது. அந்தளவுக்குத் தமிழ்ச் சங்கம் தன்னை வளர்த்துக்கொண்ட பூரிப்பு நிலையைத் தமிழ் உலகு என்றும் மார்தட்டிக் கொள்ளும்.

பல்கலைக்கழக கலைவிழாக்கள் மாணவர்களிடம் மறைந்துள்ள கலைத்திறமைகளை வெளியிட்டுக் காட்டுவதாகும். இவ்வகையில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் பெருமைக்குரியதாகும். ஏனெனில் சமகாலக் கெடுபிடிகளுக்கு மத்தியில் பல்கலைக்கழகத்திலும், கொழும்பு நகரிலும் தனது தமிழ்ப்பணியைத் தொடர்வது சிறப்பாகச் சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும். இதில் பெருந்தலைவரினதும், பெரும் பொருளாளரினதும் பணி மறக்கமுடியாது.

இத்தொடரில் தமிழ் அன்னைக்குப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் வருடாந்தம் நடாத்தும் சகல நிகழ்வுகளுக்கும் ஆதரவு வழங்கிய அனைவரும் அன்புடன் நினைவு கூரப்படவேண்டியவர்கள். தொடர்ந்து, புதிய சங்கத்தார் சிறப்புடன் இவ்வழி செல்ல என் வாழ்த்துக்கள்.

வாழ்க தமிழ்!

வளர்க பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம்

நன்றி

மெய்யியற்றுறை
விடுகை வருடம்,
கலைப்பீடம்

பீ. எம். ஜமாஹிர்
உபதலைவர்

# செயலாளரின் பேனாவிலிருந்து....

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பேசும் மாணவர்கள் அனைவருக்கும் பொதுவாக உள்ள ஒரேயொரு சங்கம் எமது தமிழ்ச்சங்கமாகும். இச்சங்கம் இவ்வருடத்துடன் தனது 59 ஆவது வயதைப் பூர்த்தி செய்கிறது. மெல்ல (ஈழ)த்தமிழ் இனிச் சாகுமோ என்று எல்லாரும் தவித்திருக்கும் இவ்வேளை, இல்லை தமிழ் ஒரு சாகாமொழி என்று நிரூபிக்கும் வகையில் தூர்ந்து கொண்டிருந்த எமது தமிழ்ச்சங்கம் மீண்டும் எழுந்து நிற்கின்றது. இது ஒரு வரலாற்றுப் பாடமாக எம் எல்லோர் மனத்திலும் பதிந்திருக்கட்டும். இவ்வொப்பற்ற பணியைச் செய்த செல்வன் வ. பவஹரன் தலைமையிலான சென்ற ஆண்டுக்குரிய நிர்வாக சபையினரை நாம் பாராட்டி இங்கு நினைவு கூருகிறோம்.

எமது சங்கம் தனது நீண்ட வரலாற்றில் செய்த பணிகள் அளப்பரியன. நாட்டின் நாலாபுறங்களிலிருந்தும் கல்வியெனும் தேன் தேடி பேராதனை மொய்த்துள்ள தமிழ் பேசும் மாணவரிடையே எமது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பேணி வளர்த்தெடுக்கும் ஒரு பாரிய கடமையை எமது சங்கம் தன்னாலியன்ற வரையில் நிறைவேற்றி வந்துள்ளது. அதேபோன்று சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் பல்கலைக் கழகத்திற்கு வெளியிலும் தனது பணிகளை விரிவு படுத்திக்கொள்ள அது தவறவில்லை. மேலும் இலக்கிய உலகிலும் தனது ''இளங்கதிர்'' களைப் பரப்பி ஒரு அழியாத தடத்தைப் பதித்துள்ளது. இம்முறை இச்சஞ்சிகை 27 ஆவது ஆண்டு மலராக வெளிவருவதையெண்ணிப் பெருமகிழ்வடைகிறோம்.

தமிழ்ச்சங்கம் மேலும் வளரவேண்டும்
இளங்கதிர் மேலும் புத்தொளி வீச வேண்டும்.

என வாழ்த்தும் நெஞ்சங்களுடன் நானும்
இணைந்து கொள்கிறேன்,

சி. சிவானந்தன்
செயலாளர்

மின்னியற்றுறை
இறுதிவருடம்
பொறியியற்பீடம்

# போட்டி முடிவுகள்

(தமிழ்ச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட கட்டுரை, சிறுகதை, கவிதை, கார்ட்டூன், நாடகப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் விபரங்கள் பின்வருமாறு)

★ கட்டுரைப் போட்டி

முதலாம் இடம் : நல்லதம்பி நல்லராஜா
(கலைப்பீடம்)

★ சிறுகதைப் போட்டி

முதலாம் இடம்: செல்வன் மு. விஜேந்திரா
(பொறியியற்பீடம்)

இரண்டாம் இடம்: செல்வி மரீனா இல்யாஸ்
(கலைப்பீடம்)

மூன்றாம் இடம் : செல்வி என். தாரணி
(கலைப்பீடம்)

★ கவிதைப் போட்டி

முதலாம் இடம் : செல்வி மரீனா இல்யாஸ்
(கலைப்பீடம்)

இரண்டாம் இடம்: செல்வன் இரா. இரவிசங்கர்
(விவசாயபீடம்)

மூன்றாம் இடம் : செல்வி என். தாரணி
(கலைப்பீடம்)

★ கார்ட்டூன் போட்டி

முதலாம் இடம் : செல்வன் எம். ஐ. முகமட் மர்சூன்
(கலைப்பீடம்)

இரண்டாம் இடம்: செல்வன் எம். எல். பௌசுல் அமீர்
(கலைப்பீடம்)

மூன்றாம் இடம் : செல்வன் எஸ். கண்ணன்
(பொறியியற்பீடம்)

★ நாடகப் போட்டி

முதலாம் இடம்: "திக்குத்தெரியாத காட்டில்"

| | | | |
|---|---|---|---|
| நெறியாள்கை | — | செல்வன் ச. விஜயமோகன் (விஞ்ஞான பீடம்) | |
| உதவி நெறியாள்கை | — | செல்வன் மு. தாரகன் | ,, |
| இசையமைப்பு | — | செல்வன் என். எஸ். டேவிட் | ,, |
| | — | செல்வன் ச. தயாபரன் (பொறியியற் பீடம்) | |
| ஒளி அமைப்பு | — | செல்வன் என். பற்றிக் (விஞ்ஞான பீடம்) | |
| | — | செல்வன் த. விக்னேஸ்வரன் | ,, |
| பின்னணி | — | செல்வன் வே. சிவகுமார் | ,, |
| மேடையமைப்பு | — | செல்வன் ம. ஜோதிராஜ் | ,, |
| | — | செல்வன் க. இதயராஜ் | ,, |
| | — | செல்வன் சு. கணேசமுருகன் | ,, |
| நடிப்பு | — | செல்வி இ. சுகந்தி | ,, |
| | — | செல்வன் ச விஜயமோகன் | ,, |
| | — | செல்வி ந அனுஷா | ,, |
| | — | செல்வன் சோ சந்திரகாந்தன் | ,, |
| | — | செல்வன் வி. நிரஞ்சன் | ,, |
| | — | செல்வன் ம. மகிழ்ராஜ் | ,, |
| | — | செல்வன் பே. இராஜகுலசிங்கம் | ,, |
| | — | செல்வி பா. ரேவதி | ,, |
| | — | செல்வன் என். எஸ். டேவிட் | ,, |
| | — | செல்வன் த. விக்னேஸ்வரன் | ,, |
| | — | செல்வன் எம். இரவிச்சந்திரன் | ,, |
| பின்னணிப்பாடல் | — | செல்வி சு. கார்த்தியாயினி (விவசாய பீடம்) | |
| | — | செல்வி பா. கலைவாணி | ,, |
| | — | செல்வன் து. ரமேஸ் (பொறியியற் பீடம்) | |

இரண்டாம் இடம்: "மொஸ்கோ விசாரணை"

| | | |
|---|---|---|
| நெறியாள்கை | — | செல்வன் பார்த்தீபன் |
| | — | செல்வன் மு. மகாசேனன் |

தமிழ்ச் சங்கத்தினால் நடாத்தப்படும் 'கலை விழா' நிகழ்ச்சியின் போது மேற்படி போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப் படும்.

போட்டி ஏற்பாட்டுக்குழு

- தமிழ்ச் சங்கம் -




சிறு நண்டு மணல் மீது
படம் ஒன்று கீறும்
சிலவேளை இதை வந்து
கடல் கொண்டு போகும்

எறிகின்ற கடல் என்று
மனிதர்கள் அஞ்சார்
எதுவந்த தெனின் என்ன
அதை வென்று செல்வார்.



— மஹாகவி



இருப்பவர்கள் (இ. வ) எஸ். வை. ஸ்ரீதர் (இதழாசிரியர்), இ. வாசுகி (இளம் பொருளாளர்), ஜனாப் எம். எல். ஏ. காதர் (பெரும் பொருளாளர்), பேராசிரியர் சி. தில்லைநாதன் (பெருந் தலைவர்), க. நா. சண்முகதாசன் (தலைவர்), சி. சிவானந்தன் (செயலாளர்)

நிற்பவர்கள் (இ. வ) ந. அஞ்ஷா (கு. உ.), எம். ஆர். எம். ராஜன் நசூர்தீன் (கு. உ.), பி. ஜே. கஷ்ரர் (கு. உ), எம். எச். எம். ஹஸ்மி, பீ. எம். ஜமாஹிர் (உப தலைவர்), ஜெயகௌரி வேல்முருகு (கு. உ)

# பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம்
# ( 1926 - 1993 )
## ஒரு வரலாற்று நோக்கு

- கலாநிதி க. அருணாசலம் -
[முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை]

தமிழ் இலக்கிய உலகில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் 'சங்கம்' என்னும் சொல்பயிலப்பட்டு வந்துள்ளதை அவதானிக்கலாம். சங்கம் என்னும் சொல் இன்று தமிழ் இலக்கிய உலகில் மட்டுமன்றித் தொழிற்சங்கம், வர்த்தகசங்கம், மாதர் சங்கம், மாணவர் சங்கம், கூட்டுறவுச்சங்கம், இராமகிருஷ்ண சங்கம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எனப் பல்வேறு பகுதியினரினதும் பல்வேறு துறைகளினதும் கூட்டமைப்புக்குப் பயன்படுத்தப்படுகின்றது. குறிப்பிட்ட ஏதேனும் ஒரு நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகச் சிலரோ பலரோ ஒன்றாகச் சேர்ந்து ஏற்படுத்தும் கூட்டமைப்பே சங்கம் எனப்படும். ஒருவர் தனித்து நின்று சாதிக்க முடியாதவற்றைப் பலரது கூட்டுமுயற்சியின் மூலம் சாதிக்க முடிகின்றது. சங்கம் என்னும் சொல் மேற்குறிப்பிட்ட பொருளில் மட்டுமன்றி அழகு, ஒருதொகை நிதி, சங்கு, கோடாகோடி, புணர்ச்சி, சபை, அன்பு, பேரெண், நெற்றி, படைப்பிரிவு எனப்பல பொருளையும் குறித்து நிற்குமாயினும் இன்று மேற் கண்ட பொருளிலேயே பெருவழக்குப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே தமிழகத்திற் குறிப்பாக மதுரையில் புலவர் களும் புரவலர்களும் கூடித்தமிழ் ஆராய்ந்த கழகம் அல்லது சங்கம் 'கூடல்', 'தொகை', 'அவை', 'புணர்' முதலிய பெயர்களால் அழைக்கப்பெற்றதைச் சான்றுகள் வாயிலாக நாம் அறிகின்றோம். [1] காலப்போக்கிற் சமண, பௌத்த மதங்களின் தொடர்பினால் சங்கம் என்னும் சொல் தமிழ் உலகிற் பெருவழக்குப் பெற்று இன்று வரை நிலைத்துள் ளது.

கலை - இலக்கிய உலகில் மட்டுமன்றிப் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் பல் கலைக் கழகங்களிலும் பிற இடங்களிலும் தத்தமது சமயபண்பாட்டு அம்சங்களையும் தமிழியலையும் பேணிவளர்க்கும் நோக்குடன் தமிழ் பேசும் மக்கள் பலசங்கங்களை நிறுவிச் செயற்பட்டு வருவதை அவதானிக்கலாம். இன்று இலங்கையில் தமிழ் பேசும் மாணவர்கள் பயிலும் பல்கலைக் கழகங்களிற் பலவகைச் சங்கங்கள் செயல்பட்டு வரு கின்றன. இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகள் முதல் பல்வேறு காரணங்களாற் கடந்த சில தசாப்தங்களில் தமிழ்பேசும் மக்கள் குடியேறியுள்ள பிரித் தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சலாந்து, நோர்வே, ஐக்கிய அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா முதலிய நாடுகள் வரை ஆங்காங்கே சங்கங்கள் அமைத்துச் செயற் பட்டு வருவதைக் காணலாம்.

பல வழிகளிலும் இன்று பெருமளவு முழுமையான ஒரு பல்கலைக்கழகமாக விளங் கும் பேராதனைப் பல்கலைக்கழகமே இலங்கையின் இன்றைய பல்கலைக்கழகங்களுக் கெல்லாம் தாய்ப் பல்கலைக்கழகமாக விளங்குகின்றது. [2] 1952 ஆம் ஆண்டிலே இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனைக்கு இடம்மாற்றப்படுவதற்கு முன்பு கொழும்பிலே உயர்

கல்வி நிறுவனமாக முதலிற் பல்கலைக்கழகக் கல்லூரியும் (1926 - 1941) பின்பு பல்கலைக்கழகமும் விளங்கின. அந்நாளில் இலங்கையின் புகழ் பூத்த கணிதப் பேராசிரியராக விளங்கிய சுந்தரலிங்கம் அவர்களைத் தலைவராக் கொண்டு அவரது நண்பர்களின் ஒத்துழைப்புடன் 1926 ஆம் ஆண்டு இன்றைய தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. 1952 ஆம் ஆண்டு பல்கலைக்கழகம் பேராதனைக்கு இடம் மாற்றப்பட்டபோது தமிழ்ச் சங்கமும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இயங்கத் தொடங்கிற்று. இவ்வருடம் தமிழ்ச்சங்கம் தனது அறுபத்தேழாவது வயதை அண்மித்துக் கொண்டிருக்கிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையிலே பிரித்தானியராட்சி நிலை நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுத் துறைகளிற் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படலாயின. ஆங்கிலக் கல்வி விருத்தி, அச்சியந்திரவருகை, நவீன கல்வித்துறைகளின் வளர்ச்சி, பொருளாதாரத்துறையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள், கிறிஸ்தவ மதப்பரம்பல் முதலியவை சமுதாயத்துறையிற் குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தின. மேலைத்தேய மொழி, பண்பாட்டம்சங்கள் முதலியன போற்றப்பட்ட அதே சமயம் சுதேசமொழி, பண்பாட்டம்சங்கள் முதலியன புறக்கணிக்கப்பட்டன. ஆங்கில மொழியிலும் மேலைத்தேய நடையுடை பாவனைகளிலும் பண்பாட்டம்சங்களிலும் மோகம் கொண்ட சுதேசிகள் பலர், குறிப்பாக ஆங்கிலக் கல்வி கற்ற மத்தியுதரவர்க்கத்தினர் தமது தாய் மொழியையும் தமது பிறப்புரிமையான பண்பாட்டம்சங்களையும் புறக்கணித்து எள்ளி நகையாடினர். அதே சமயம் அந்நியராட்சியிலும் அந்நியமொழி பண்பாட்டம்சங்களிலும் தீவிர வெறுப்பும், தாய் நாட்டின் விடுதலையிலும் தமது தாய்மொழி, பண்பாட்டம்சங்களிலும் அதீத பற்றும் கொண்ட கற்றறிந்த மத்தியதரவர்க்கத்தினருள் ஒரு பகுதியினர் அந்நியராட்சிக்கெதிராகப் பல்வேறு வழிகளிலும் போராடத்தலைப்பட்டனர். இலங்கையிலும் பார்க்க இந்தியாவில் இப்போக்கு இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து தீவிரமடையத் தொடங்கியது.

முதலில் லோகமான்ய பாலகங்காதரதிலகர், லாலாலஜபதிராய், விபினசந்திரபாலர் முதலியோரது தலைமையின் கீழும் 1920களிலிருந்து மகாத்மாகாந்தியின் தலைமையிலும் இந்திய விடுதலைப் போராட்டம் உக்கிரம் பெற்றுக் கொண்டிருந்தபொழுது விதேசிய வெறுப்பும் சுதேசப்பற்றும் மேலோங்கத், தொடங்கிற்று; அடிமைத்தனத்தை உடைத்தெறியமுயன்று கொண்டிருந்த அதே சமயம் சுதேசமொழிகளையும் பண்பாட்டம்சங்களையும் பேணிப்பாதுகாக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படலாயின. மகாத்மாகாந்தியும் ஏனையோரும் மேற்கொண்ட நடவடிக்கைகள் பல இந்தியாவுடன் மட்டும் அமையாது இலங்கையிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தலாயின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் முறையே ஆறுமுக நாவலரும் சுவாமி விபுலாநந்தரும் மேற்கொண்ட நடவடிக்கைகளும் இவ்வகையிலே நினைவு கூறத்தக்கவை. இத்தகையதொரு சூழ்நிலையிலேயே 1926 ஆம் ஆண்டு தமிழ்ச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டமை மனங் கொளத்தக்கது.

"..........நமது சங்கம் தமிழ் மொழியையும் தமிழர் நாகரிகம், பண்பாடு ஆகிய இவற்றை வளர்ப்பதற்காகவும் எம்மோடு தொடர்புடைய ஏனைய பண்பாடுகளைக் கற்றறிந்து கொள்வதற்காகவும் நிறுவப்பட்டது என்பது யாவரும் அறிந்ததே. இப்பணியை ஏற்று எமது சங்கம் தனது குறிக்கோளில் ஒரு சிறிதும் வழுவாது ஆற்றி வருகின்றது.........." [3] எனத்தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டதன் நோக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளமை மேற்கண்ட சூழ்நிலையுடன் ஒப்புநோக்கத்தக்கது.

"......... இன்று எமது நாடு, எம்மொழி, கலை ஆகியவற்றை ஆர்வத்துடன் பயிலும் நிலைமை எய்திவிட்டது. ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்னோ நிலைவேறு

ஐரோப்பிய நாகரிகத்தின் நன்மையையும் தீமையையும் பகுத்துப் பார்க்கும் ஆற்றல் நம்மிடம் இருக்கவில்லை. பகுத்துப் பார்க்காமல் எல்லாவற்றையும் உட்கொண்டோம். எமது நாட்டவர் என்று சொல்லவும் தாய்மொழியைப் பயிலவும் தமது பிறப்புரிமையான பண்பாட்டை மேற்கொள்ளவும் நாணினர் நம்மவர். தமிழ் தளர்வுற்ற அந்நாளிலே எமது சங்கத்தின் முன் அணியில் நின்றவர்களின் வீரத்தையும் ஆர்வத்தையும் நாம் பாராட்ட வேண்டும். அன்னோரின் விடாமுயற்சியினாலேயே எமது சங்கம் வலியுற்றுத் திகழ்கின்றது அப்பெரியோர்களுக்கு எமது நன்றியை இன்று செலுத்துதல் சாலச்சிறப்புடையதே.'' [4] எனத் தமிழ்ச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டு இருபத்திரண்டு ஆண்டுகளின் பின்னர் 1948 ஆம் ஆண்டு தெரிவிக்கப்பட்டுள்ள கருத்தும் தமிழ்ச் சங்கத்தின் நோக்கத்தைப் புலப்படுத்துவதாக உள்ளது.

இன்று வரையிலான தமிழ்ச் சங்கத்தின் வரலாற்றையும் அது செய்து முடித்துள்ள பணிகளையும் கூர்ந்து நோக்கும் போது அது தன் குறிக்கோளிலிருந்து விலகாமல் இயன்றவரை செயற்பட்டுக் கொண்டே வந்துள்ளதனை அவதானிக்க முடிகின்றது. பல்கலைக்கழகத்தின் மிகப் பழைய மாணவர் சங்கமும் நீண்டகாலம் தொடர்ச்சியாக உயிர்த்துடிப்புடன் செயற்பட்டு வரும் சங்கமும் இதுவேயாகும். தமிழ்ச் சங்கத்தின் முதற் பெருந் தலைவராக விளங்கியவர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தராவர்.[5]

அன்றுதொட்டு இன்று வரை தமிழ்ச் சங்கத்தின் பெருந்தலைவராகத் தமிழ்த் துறையின் அவ்வப்போதைய தலைவர்களே செயற்படுதல் மரபாக இடம் பெற்று வருகின்றது. எனினும் தமிழ்ச் சங்கம் பல்கலைக்கழகத்தின் குறிப்பிட்ட ஒரு பீடத்தினருக்கோ குறிப்பிட்ட ஒரு துறையினருக்கோ சொந்தமாக அல்லாமல் பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களையும் சகலதுறைகளையும் சார்ந்த தமிழ் பேசும் மாணவர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் பிறருக்கும் உரியதாக விளங்கிவருதல் அதன் தனிச் சிறப்பாகும்.

நீண்டகால வரலாற்றைக் கொண்ட தமிழ்ச் சங்கத்தின் பன்முகப்பட்ட வளர்ச்சிக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் பிறரும் அரிய பங்களிப்புகளைச் செய்துள்ளனரேனும் அவர்கள் யாவருள்ளும் விதந்து கூறத்தக்க வரும் முதன்மையிடம் வகிப்பவரும் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களேயாவர். புகழ் பூத்த கணிதப் பேராசிரியராக விளங்கிய சுந்தரலிங்கம் தமிழ்ச் சங்கத்தை ஆரம்பித்து வைத்தபோதும் புகழ் பூத்த தமிழ்ப் பேராசிரியராகிய கணபதிப்பிள்ளை அவர்களே ஏறத்தாழ இருபத்தொன்பது ஆண்டுகளாக அதன் பெருந்தலைவராக விளங்கி, அதனை வழி நடத்தித் துடிப்புடன் செயற்பட வைத்துச் சாதனைகள் பல புரியச்செய்தவராவர். அவருடன் இணைந்து நீண்டகாலம் செயற்பட்டவர்களுள் முதன்மையிடம் வகிப்பவர் அவரது பேரன்புக்குரிய மாணவனான பேராசிரியர் சு. வித்தியானந்தனாவார்.

அமைதியான சுபாவமும் சாந்தகுணமும் நிறையப்பெற்ற கணபதிப்பிள்ளை அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்திலே (இலங்கை - பேராதனை) 1936 ஆம் ஆண்டு தொடக்கம் 1965 ஆம் ஆண்டு வரை சுமார் இருபத்தொன்பது ஆண்டுகள் கடமையாற்றியுள்ளார். இவ்விருபத்தொன்பது ஆண்டுகளுள் இருபத்தாறு ஆண்டுகள் தமிழ்த்துறைத் தலைவராகக் கடமையாற்றியுள்ளார். 1944 ஆம்ஆண்டு முதல் 1947 ஆம் ஆண்டுவரை தமிழ்த்துறையின் முதலாவது பேராசிரியராகச் சுவாமி விபுலாநந்தர் கடமையாற்றியபோதும் தமது பெருமதிப்பிற்குரிய மாணவனான கணபதிப்பிள்ளை அவர்களிடமே தமிழ்த்துறைத் தலைமைப் பதவியை ஒப்படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.[6]

1947 ஆம் ஆண்டு பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்ற அவர் 1965 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார். திராவிட மொழியியல் வல்லுனராகவும் தலைசிறந்த நாடக ஆசிரியரா கவும் விளங்கிய அவர், தமிழ் மொழியையும் தமிழ் கற்பவர்களையும் 'பனங் கொட்டைகள்' என விதேசிய மோகம் கொண்டவர்களால் எள்ளி நகையாடப்பட்ட அக்காலப் பகுதி யிலே ஆற்றிய பணிகள் பல்கலைக்கழக வரலாற்றிலும் தமிழ்த்துறை வரலாற்றிலும் தமிழ்ச் சங்க வரலாற்றிலும் மிக முக்கியமானவையாகும். 1936 ஆம் ஆண்டு அவர் விரிவுரையாளராக நியமனம் பெற்றபோது தமிழை ஒரு பாடமாகப் பயின்றவர் தொகை பத்துக்கு மேற்பட்டதில்லை. அதே போன்று இடையிடையே ஒருவர் அல்லது இருவரே தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்றனர். ஆயின் அவரது இறுதிக் காலத்தில் ஒவ் வொரு வருடமும் 350 முதல் 450 வரையிலான மாணவர்கள் தமிழை ஒரு பாடமாகப் பயின்றமையும் ஐந்து முதல் பதினேழு வரையிலான மாணவர்கள் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்றமையும் குறிப்பிடத்தக்கது.[7] இதே நிலைமையினைத் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சி நிலையிலும் மிகத் தெளிவாகக் காணமுடிகின்றது.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் மாணவர்களிடம் மறைந்திருக்கும் உள் ளார்ந்த எழுத்தாற்றலையும் பேச்சு வன்மையையும் நடிப்பு, இசை ஆற்றல்களையும் தமிழ்ச் சங்கத்தின் மூலம் வெளிக்கொணர்ந்து பேணி வளர்த்தார். தமிழ்ச் சங்கத்தின் அறுபத்தேழு ஆண்டுகால வரலாற்றில் ஏறத்தாழ இருபத்தொன்பது ஆண்டுகாலம் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களே தமிழ்த்துறைத் தலைவராகவும் தமிழ்ச் சங் கத்தின் பெருந்தலைவராகவும் விளங்கி வழி நடத்தியுள்ளார்.

தமிழ்ச் சங்கத்தின் ஆரம்பகால நடவடிக்கைகள் விதந்து கூறத்தக்கதாக எவையும் அமையவில்லை. ஆண்டுக்கொரு நாடகம் நடிப்பதும் இசை, நடன நிகழ்ச்சிகளுடன் தேநீர் விருந்தளிப்பதுமாக ஆரம்ப கால நடவடிக்கைகள் அமைந்தன. இது பற்றி இளங்கதிரின் முதலாவது இதழாசிரியர் குறிப்பிடும் விடயங்கள் சில வருமாறு "......... ஆண்டுதோறும் எமது சங்கத்தினர் நாடகம் ஒன்றை நடிப்பதுண்டு. எமது நாடகம் கடற்கரையிலும் பூங்காவிலும் நடக்கும் இன்ப நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டுவன அல்ல. வாழ்விலே ஒரு பிரதான நிகழ்ச்சியை எடுத்து அந்நிகழ்ச்சியில் நிகழும் தவறைத் திருத் தும் நோக்கத்துடன் நடித்துக் காட்டப்படுவன எமது நாடகங்கள். இம்முறை "பொருளோ பொருள்" என்னும் நாடகம் நடிக்கப்பட்டது. ......... அதன் வெற்றியெல்லாம் பேராசிரி யர் கணபதிப்பிள்ளை அவர்களதே. எம்மை இடைவிடாது இயக்கியவர் சு. வித்தியா னந்தன் அவர்கள். நடிப்பைப் பழக்குவதிலும் நாடகமேடை ஒழுங்கை அவதானிப்பதிலும் அவர்காட்டிய ஆர்வத்தை நாம் மறக்க முடியாது. ........."[8]

இளங்கதிரின் இரண்டாவது இதழின் ஆசிரியர் தமதுரையிற் குறிப்பிடும் விடயங் கள் சில எமக்கு வியப்பையும் திகைப்பையும் தருவனவாயினும் உண்மை நிலையையும் தமிழ்ச்சங்கத்தினது வளர்ச்சிக் கட்டங்களையும் செவ்வனே அறிந்து கொள்வதற்கு அவை உதவியாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அவ்வுரையின் ஒரு பகுதி வரு மாறு; இதழாசிரியர் தமிழ்ச் சங்கத்தின் வழமையான வருடாந்த நிகழ்ச்சிகளான தேநீர் விருந்து, நடன – இசை நிகழ்ச்சிகள், நாடக அரங்கேற்றம், நாடகத்தின் சிறப்பம் சம் முதலியவற்றைக் குறிப்பிட்ட பின், "......... இதுகாறும் சங்கத்தில் நடந்திராத ஒரு நன்னிகழ்ச்சியும் இவ்வாண்டு நிறைவேறியது இதுவும் நமது சங்கம் புத்தம் புதிய துறைகளைக் கண்டு பிடித்துத் தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டாற்ற முன் வந்துள்ளது என்பதை வலியுறுத்தும் யாம் இங்கு குறிப்பிடுவது இவ்வாண்டு நடந்த தமிழ்ப் பேச்சு போட்டியையே. ........."[9]

1950 களிலிருந்து படிப்படியாகப் பேச்சுப்போட்டி மட்டுமன்றி சிறுகதை, கவிதை, நாடகம் முதலிய துறைகளிலும் போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றமையும் கவியரங்குகள், பட்டிமன்றங்கள் முதலியன இடம் பெற்று வருவதும் கலை - இலக்கிய விழாக்கள் நடாத்தப்படுவதும் மனங்கொளத்தக்கவை. அத்துடனமையாது உள்நாட்டிலும் வெளிநாடுகளிலுமிருந்து அறிஞர்களையும் கலைஞர்கலையும் வரவழைத்துப் பயன்மிக்க சொற்பொழிவுகளையும் கருத்தரங்குகளையும் கலைநிகழ்ச்சிகளையும் நடாத்தியுள்ளமையும் நடாத்திவருகின்றமையும் அமரர்களாகிவிட்ட அறிஞர் பெருமக்களான சி. வை. தாமோதரம்பிள்ளை, ஆறுமுகநாவலர், பேராசிரியர்களான சுவாமி விபுலாநந்தர், கணபதிப்பிள்ளை, செல்வநாயகம், தனிநாயகஅடிகள், வித்தியானந்தன், கைலாசபதி, பிரான்சிஸ் கிங்ஸ்பரி முதலியோருக்கும் கலை - இலக்கியத்துறைகளிற் பெரும் பணியாற்றிய மகாவித்துவான் சி.கணேசையர், மஹாகவி உருத்திரமூர்த்தி முதலியோருக்கும் ஞாபகார்த்தக் கருத்தரங்குகள், பேச்சுப்போட்டிகள் முதலியன நடாத்தியமையும் பல்கலைக்கழகத்தில் நீண்டகாலம் அரும்பணிகள் ஆற்றி ஓய்வுபெற்ற பேராசிரியர்கள் குலசூரியா, கார்ல் குணவர்த்தனா முதலியோரைக் கௌரவித்துப் பாராட்டியமையும் குறிப்பிடத்தக்கவையாகும்.[10]

பேராசிரியர் கணபதிப்பிள்ளை தமிழ்ச்சங்க மாணவர்கள் நடிப்பதற்கென ஒன்பது நாடகங்களை எழுதினார். உடையார்மிடுக்கு, முருகன்திருகுதாளம், கண்ணன் கூத்து, நாட்டவன் நகரவாழ்க்கை (நானாடகம் என்ற பெயரில் நூலாக வெளிவந்தவை), பொருளோ பொருள், தவறான எண்ணம் (இருநாடகம் என்ற பெயரில் நூலாகவெளி வந்தவை), சங்கிலி (வரலாற்றுநாடகம்), சுந்தரம் எங்கே, துரோகிகள் என்பனவே அவையாகும். ''உலகத்திலே நடப்பதை அரங்கிற் காட்டுவதே நாடகம். எனவே நாடகத்தில் வரும் பாத்திரங்கள் பேசும் மொழியும் உலகவழக்கிற் பேசும் மொழியாக இருத்தல் வேண்டும்.'' எனப்பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களே கூறியதற்கேற்ப மக்களைப்பற்றி மக்களுக்காக ஆக்கப்படும் நாடகங்களில் மக்கள் பேசும் மொழிகையாளப்பட வேண்டும் என்பதைத் தமது நாடகங்கள் மூலம் நிலை நாட்டியவர்.

நீண்டகால வரலாற்றைக் கொண்டதமிழ்ச்சங்கத்தின் விதந்து கூறத்தக்க அரும்பணிகளுள் ஒன்று, தமிழ்நாடக வளர்ச்சிக்கு அது ஆற்றிய அரிய பங்களிப்பாகும். இலங்கைத் தமிழ் நாடக வளர்ச்சியிற் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கும் அதனூடாகத் தமிழ்ச்சங்கத்துக்கும் மிகமுக்கியமான பங்குண்டு. ஆரம்பத்தில் ஆண்டுக்கொரு நாடகமாக மேடையேற்றப்பட்ட நிலைமைமாறிக் காலப்போக்கில் ஆண்டுதோறும் பல நாடகங்கள் மேடையேற்றப்பட்டமையும் பல்கலைக்கழகத்தில் மட்டுமன்றி நாட்டின் நாலாபாகங்களிலும் மேடையேற்றப்பட்டமையும் நாடகப்போட்டிகள் நடத்தப்பட்டமையும் நடாத்தப்படுகின்றமையும் 1960 களில் ஆண்டுடொன்றுக்குப் பத்துமுதல் பதினைந்து நாடகங்கள் வரைமேடையேற்றப்பட்டமையும் மனங்கொளத்தக்கவை. புகழ்பூத்த நாடக ஆசிரியர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை, நாட்டுக்கூத்துக் கலைக்குப் புத்துயிரளித்த பேராசிரியர் சு. வித்தியானந்தன், நாடகங்களை எழுதியும் மேடையேற்றியும் நடித்தும் நாடக விமர்சனங்களை எழுதியும் பணிபுரிந்த பேராசிரியர்கள் சிவத்தம்பி, தில்லைநாதன். கலாநிதி சி. மௌனகுரு முதலியோர் பேராதனைப் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்தவர்களே.

தமிழ்ச்சங்கத்தின் பன்முகப்பட்ட வளர்ச்சிக்குப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் ஆற்றிய அரும்பணிகளுள் விதந்து கூறத்தக்க ஒன்று தமிழ்ச்சங்க ஏடாகிய இளங்கதிரை அவர் தொடக்கிவைத்துத் தொடர்ந்து வெளிவர வழிவகுத்தமையேயாகும். இலங்கையிலே நீண்ட காலமாகத் தொடர்ந்து வெளிவரும் தரமான தமிழியற் சஞ்சிகையாக இளங்கதிர் விளங்குகின்றது.[11] பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களால் 1948 ஆம் ஆண்டு 'இளங்கதிர்' சஞ்சிகை ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை தொடர்ந்து-

இடையிடையே தடைப்பட்டாலும் - வெளிவந்திலதேற் கடந்தகாலத்தமிழ்ச் சங்கத்தின் வரலாறு, அதன் அரும் பணிகள், சாதனைகள் முதலியன பற்றி விரிவாகவும் நம்பகமாகவும் ஏதும் அறிய முடியாத நிலையிலேயே நாம் இருந்திருப்போம்.

1926 ஆம் ஆண்டு தமிழ்ச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டபோதும் 1948 ஆம் ஆண்டே இளங்கதிர் ஆரம்பிக்கப்பட்டு வெளிவரத் தொடங்கியது. தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டு ஏறத்தாழ இருபத்தொரு ஆண்டுகள் வரை அதற்கெனச் சஞ்சிகையோ ஆண்டு மலரோ வெளிவராமை துரதிஷ்டமே. 1926 ஆம் ஆண்டு முதல் 1948 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியின் தமிழ்ச் சங்க வரலாறு, அதன் செயற்பாடுகள் முதலியன பற்றி விபரமாக ஏதும் அறிய முடியாத நிலையிலேயே இன்று நாம் உள்ளோம். தகுந்ததொரு பதிவேடு இல்லாமையால் அக்கால கட்ட நிகழ்ச்சிகளும் செயற்பாடுகளும் ''காற்றோடு காற்றாக''ப் போய் விட்டன. அதிஷ்டவசமாக 1948 ஆம் ஆண்டு இளங்கதிர் ஆரம்பிக்கப்பட்டமையினாலேயே அன்று தொட்டு இன்று வரையிலான தமிழ்ச்சங்கத்தின் வரலாற்றையும் ஆண்டுதோறும் இடம்பெற்ற அதன் செயற்பாடுகளையும் செய்து முடித்த பணிகளையும் பற்றி விரிவாகவும் நம்பகமாகவும் தெரிந்து கொள்ளக் கூடிய அளவிற்கு ஆண்டுதோறும் வெளிவந்த இளங்கதிர் இதழ்கள் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுப் பதிவேடுகளாக விளங்குகின்றமையை அவதானிக்கலாம்.

1948 ஆம் ஆண்டு முதல் ஆண்டு தோறும் தமிழ்ச்சங்கம் நடாத்திய கலைவிழா நிகழ்ச்சிகள், கவிதை, சிறுகதை, நாடகம், பேச்சு முதலிய துறைகளிலான போட்டி முடிவுகள் பரிசுகள், பெற்றோர் பற்றிய விபரங்கள், பரிசுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆக்கங்கள் பற்றிய விபரங்கள், இடம்பெற்றபட்டி மன்றங்கள், கருத்தரங்குகள், ஆண்டுதோறும் இளங்கதிர் இதழ்களில் வெளிவந்த அறிஞர்களின் பலதுறைகள் சார்ந்த ஆக்கங்கள், தமிழியலின் வளர்ச்சிக்குத் தமிழ்ச்சங்கம் ஆற்றிய பணிகள் முதலியன பற்றியெல்லாம் விரிவாகவும் தெளிவாகவும் அறியத்தக்க வகையில் இளங்கதிரின் இதழ்கள் விளங்குகின்றன. இளங்கதிர் இதழ்களில் இடம்பெற்றுள்ள இதழாசிரியர்களின் உரைகள், தமிழ்ச்சங்க ஆண்டறிக்கைகள், பெருந்தலைவர், தலைவர், பெரும்பொருளாளர், செயலாளர் முதலியோரின் குறிப்புரைகள், இளங்கதிர் இதழ்களின் இறுதியில் இடம்பெற்றுள்ளதும் தமிழ்ச்சங்கத்தினால் மேடையேற்றப்பட்டதுமான நாடகங்களின் முக்கிய காட்சிகள் சில புகைப்படப்பிரதிகளாக இடம் பெற்றுள்ளமை, அவைபற்றிய குறிப்புகள் முதலியன பயனுள்ள பலதகவல்களைத் தருகின்றன. பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் பெருந்தலைமையிலே தமிழ்ச்சங்கம் தமிழியலின் பன்முகப்பட்ட வளர்ச்சிக்கு அரும் பணிகள் ஆற்றுவதற்கு முக்கியகளமாக இளங்கதிர் இதழ்களே விளங்கிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் தாம் எழுதிய நாடகங்களைத் தமிழ்ச் சங்கத்தின் பெயரிலேயே தயாரித்துப் பல்கலைக்கழகத்தில் மட்டுமல்லாது இலங்கையின் பல்வேறிடங்களிலும் மேடையேற்றி அதனாற் பெறப்பட்ட பணத்தைக் கொண்டு பல்கலைக்கழகத்திலே தமிழ் பயிலும் மாணவர்களுக்குப் பலபரிசில்களைத் தமிழ்ச்சங்கத்தின் பெயரில் வழங்க வழிசெய்தார். 1955 ஆம் ஆண்டிலிருந்து சுவாமி விபுலாநந்தர், பிரான்சிஸ் கிங்ஸ்பெரி ஆகியோர் பெயரில் ஆண்டுதோறும் இருபரிசில்களை வழங்கவும், [12] 1957 ஆம் ஆண்டிலிருந்து சி. வை. தாமோதரம்பிள்ளை, ஆறுமுகநாவலர் ஆகியோர் பெயரில் பரிசில்கள் வழங்கவும் [13] ஒழுங்குசெய்யப்பட்டது. பல்கலைக்கழகப் புகுமுகத்தேர்வு, பொதுக்கலைத்தகுதித்தேர்வு, சிறப்புக்கலை இறுதித்தேர்வு ஆகியவற்றிற் சிறப்பாகத் தேறுபவர்களுக்கு இப்பரிசில்கள் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் பின்பு பேராசிரியர்கள் செல்வநாயகம், வித்தியானந்தன், வேலுப்பிள்ளை, சதாசிவம் ஆகியோர் தமிழ்த்துறைத் தலைவர்களாகவும் தமிழ்ச்சங்கத்தின் பெரும் தலைவர்களாகவும் விளங்கித் தமிழ்ச்சங்கத்தை வழிநடத்தினர். இவர்களுட் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பலவகையிலும் விதந்து கூறத்தக்கவர். 1946 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தலைவராகவும் பின்பு துணைவேந்தராகவும் பதவியேற்றுச் செல்லும் வரை ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் தமிழ்ச்சங்கத்தின் பன்முகப்பட்ட வளர்ச்சிக்கு அயராதுழைத்தவர்; பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களுடன் ஒருங்கிணைந்து அவரது வலதுகரமாகச் செயற்பட்ட அவர் இடையிடையே தமிழ்ச்சங்கத்தின் பெரும் பொருளாளராகவும் பின்பு 1971 ஆம் ஆண்டுமுதல் 1977 ஆம் ஆண்டின் முற்பகுதிவரை பெருந்தலைவராகவும் விளங்கிப் பல பணிகள் புரிந்துள்ளார்.

பேராசிரியர் வித்தியானந்தன் தமிழ்ச்சங்கத்தின் வளர்ச்சிக்கும் அதன் மூலம் நாட்டுக்கூத்து, நாடகம் முதலியவற்றுக்கும் ஆற்றிய அரும் பணிகளைப் பாராட்டாத இளங்கதிர் ஆசிரியர்களே இல்லை எனக் கூறத்தக்க அளவிற்கு அன்றைய இளங்கதிர் ஆசிரியர்கள் பலரும் பாராட்டியுள்ளனர். அப்பாராட்டுரைகளுள் ஒருசில வருமாறு; ''.........தவறான எண்ணத்தை அரங்கேற்றுவதற்கு ஓடி ஆடி மாதக்கணக்காக உழைத்தவர் பலர், அவர்களுள் தமது பல அலுவல்களுக்கிடையே (சிலவேளைகளில் ஊன் உறக்கம் இன்றியும்) ஆதிதொட்டு அந்தம் வரையும் சலியாது நாடகத்தை நடத்தி முடித்த கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களின் தொண்டு மறக்கற்பாலது அன்று. .. .......''14

''.. ......நம் தமிழ்ச்சங்கப் பொருளாளர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களின் உதவி அளக்க முடியாதது. சிறுகதைப் போட்டிக்குறிய தங்கப் பதக்கங்கள் செய்விப்பது தொடக்கம், அச்சகம் ஒன்றில் வேலையை ஒப்படைத்துப் பொறுப்பேற்பதூடாக, விடுதலை நாட்களில் நாள்தோறும் ''ப்றூப்'' படிப்பது வரை அவரே செய்து உதவினார். விரிவுரை வகுப்புகள், வெளியூர்ப் பயணங்கள், சொற்பொழிவுகள், கலைக்கழகப் பணிகள் என்று நாட்டுக்குழைப்பவரின் உதவி நமக்குக்கிடைத்தது பற்றிப் பெருமைப்படுகிறோம். இதழாசிரியர் என்ற பெயர் எனக்கிருக்க, அதற்குரிய பணியை மறைமுகமாக அவர் செய்து முடித்த பெருந்தன்மையை மறக்கமுடியாது. முதலில் அவருக்கு என் இதயங் கலந்த நன்றி. ...... ''15

''சென்ற ஆண்டு (30-9-62) நமது சங்கக்கலைவிழா வழக்கத்தை விட மிகச் சிறப்பாக நடைபெற்றது என்பது பலரின் பாராட்டுரை. இப்பாராட்டுரையைப் பெறுவதற்கு முழுமூச்சாக உழைத்த பெருமை நமது சங்கக்காப்பாளர், அனைவருக்கும் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களுக்குமே உரியது.''16

''.........தமிழ்ச்சங்கத்தின் வளர்ச்சியிலே உயிரான அன்பு கொண்டு என்னைப் (இளங்கதிர்) பெற்று வளர்த்த பெருமையில் பெரும் பங்கைத் தனதாக்கிக்கொண்ட கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களை நினையாதிருப்பது எப்படி?........''17

தமிழ்ச்சங்கம் தனது நீண்டகால வரலாற்றில் சாதனைகள் பல படைத்த ஒளிமிக்க கால கட்டங்களையும் இருள் சூழ்ந்த காலகட்டங்களையும் 'தத்து'களையும் ஏற்ற இறக்கங்களையும் கண்டுள்ளது. தமிழ்ச்சங்கம் தனது வரலாற்றில் மிகவும் துடிப்புடன் செயற்பட்டதும் பலதுறைச் சாதனைகளை நிலை நாட்டியதுமான காலகட்டம் 1953 ஆம் ஆண்டுமுதல் 1970 ஆம் ஆண்டுவரையிலான காலப்பகுதியேயாகும். அக்காலகட்டப்பகுதியில் ஆண்டுதோறும் ஒழுங்காக (1963-1964க்குரிய ஒரு இதழ் வெளிவரவில்லை) வெளிவந்த இளங்கதிர் இதழ்களே இவைபற்றிய விரிவான தகவல்களைத் தருகின்றன.

அக்கால கட்டப்பகுதியில் முன்போ பின்போ காணப்படாத அளவிற்குத் தரமான பல நாடகங்கள் ஆண்டுதோறும் மேடையேற்றப்பட்டன. சிறுகதைத் தொகுதிகள் பல தமிழ்ச்சங்கத்தின் பெயரால் வெளிவந்துள்ளன. 'தமிழியல்' என்ற பதத்திற்குப் பொருத்தமான வகையிற் பல துறைகளையும் சார்ந்த பெறுமதிமிக்க ஆய்வுக்கட்டுரைகள் பல அன்றைய இளங்கதிர் இதழ்களில் வெளிவந்துள்ளன. இளங்கதிர் இதழ்களும் 100 முதல் 210 பக்கங்களைக் கொண்டனவாகவும் கனதியானவையாகவும் வெளிவந்துள்ளன. முத்தமிழ் சார்ந்த அதிக அளவிலான நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் இடம்பெற்றமையால் அதிகமான ஆண்டுகளில் மூன்று நாட்கள் தொடர்ச்சியாகத் தமிழ்ச்சங்கக் கலை விழாக்கள் இடம் பெற்றன. இதுபற்றிய ஒரு சில குறிப்புகளை இங்கு தருதல் பொருத்தமானதாகும்.

"......... தமிழ்க்கன்னியின் அகங்குளிர முத்தினங்களாகப் பலருங்கூடி முத்தமிழின் எழில் கொழிக்க 'முத்தமிழ்விழா'வைக் கலை மண்டபத்திலே கோலாகலமாகக்கொண்டாடினோம்........."[18]

"......... எமது சங்கம் நடாத்தும் பெருவிழாவான முத்தமிழ் விழாவிற்குப் பேரறிஞர்கள் பலரை அழைத்துச் சிறப்பாக நடாத்தி முடித்தோம். மூன்று நாட்கள் நடந்த இப்பெருவிழாவில் அறிவியலரங்கம், இலக்கிய அரங்கம், கவியரங்கம், நாடக அரங்கம் என்பன இடம் பெற்றுத் தமிழன்னைக்குச் சிறப்பும் மகிழ்வும் தந்தன. இலக்கிய அரங்கம் "ஈழத்து இலக்கியம்" என்ற முக்கிய அம்சத்தை மையமாகக்கொண்டமைந்தது"[19]

அக்காலகட்டப்பகுதியில், வான்புகழ் கொண்டவள்ளுவப் பெருந்தகை முதல் ஆறுமுக நாவலர், சுவாமி விபுலாநந்தர் முதலியோர் வரை பெருமக்கள் பலருக்கும் விழாக்கள் நடத்தப்பட்டமையும் அவர்களது ஞாபகார்த்தமாக நினைவுப் பேச்சுப்போட்டிகள் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கவை.[20]

1971ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் நாடளாவியரீதியில் இடம்பெற்ற பெரும் கிளர்ச்சியும் அதனைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிமிக்க சூழ்நிலைகளும் அவற்றின் துரிதவளர்ச்சியும் மாணவர்களின் அசமந்தப்போக்கும் பிற காரணங்களும் 1971ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை தமிழ்ச்சங்க நடவடிக்கைகளை அடிக்கடி வெகுவாகப் பாதித்து வந்துள்ளமையினை அவதானிக்க முடிகின்றது. [21]

இத்தகைய நெருக்கடிமிக்க சூழ்நிலைகளின் மத்தியிலும் தமிழ்ச்சங்கத்தை அழிய விடாது தொடர்ந்து இயங்கச் செய்வதில் முனைப்புடன் பணியாற்றி வரும் மாணவர்கள் முதல் தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் வரை அனைவரும் பாராட்டப்படத்தக்கவர்களே.

1970ஆம் ஆண்டின்பின் தமிழ்ச்சங்கத்தின் வருடாந்த முக்கிய நடவடிக்கைகளுள் ஒன்றாக அமையும் இளங்கதிர் வெளியீடு அடிக்கடி தடைப்படலாயிற்று. 1970ஆம் ஆண்டைத் தொடர்ந்து இற்றை வரையிலான ஏறத்தாழ இருபத்திரண்டு ஆண்டுகாலப் பகுதியில் எல்லாமாக ஐந்து இதழ்கள் மட்டுமே மலர்ந்துள்ளன. 1970ஆம் ஆண்டுக்குப் பின் 1976 - 1977ல் தமிழ்ச்சங்கத்தின் பொன்விழா மலராகவும் அளவிற்சிறியதாகவும் இளங்கதிர் வெளிவந்தது. 1978 – 1979, 1980 - 1981, 1981 – 1982 ஆகிய ஆண்டுகளில் மூன்று இதழ்கள் வெளிவந்துள்ளன. அதன் பின் பத்தாண்டுகால இடைவெளிக்குப் பின் 1991 - 1992ல் இளங்கதிரின் இருபத்தாறாவது இதழ் வெளிவந்துள்ளது.

நெருக்கடிமிக்க சூழ்நிலைகளின் மத்தியிலும் ஏறத்தாழக் கடந்த பத்தாண்டுகளாகத் தமிழ்த்துறைத் தலைவராகவும் தமிழ்ச்சங்கத்தின் பெருந்தலைவராகவும் விளங்கித் தமிழ்ச்சங்கத்தினை வழி நடத்திச் செல்லும் பேராசிரியர் தில்லைநாதன் அவர்களின்

பணி விதந்து கூறத்தக்கதொன்றாகும் . தமிழ்ச்சங்கத்தின் வளர்ச்சியில் நீண்ட காலம் பங்குகொண்டு அரும் பணியாற்றிய பெருந்தலைவர்களுள் பேராசிரியர்கள் கணபதிப்பிள்ளை, வித்தியானந்தன் ஆகியோருக்கு அடுத்தநிலையில் அவர்களது பேரன்புக்குரிய மாணவனான பேராசிரியர் தில்லைநாதன் அவர்கள் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. அவரது பெருந்தலைமையில் தமிழ்ச்சங்க வரலாற்றில் நடந்திராத புதுமையாகக் கடந்த ஆண்டு தமிழ் பேசுவோர் அல்லாத நாட்டின் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற நான்கு பேராசிரியர்கள் அவர்களது அருஞ்சேவைக்காகத் தமிழ்ச்சங்கத்தால் கௌரவித்துப் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

தமிழ்ச்சங்கத்தின் வருடாந்த நடவடிக்கைகள் இளங்கதிர் வெளியீட்டுடனேயே முழுமைபெறுவது இயல்பாகும், மாணவர்களினதும் ஏனையோரதும் ஒத்துழைப்பினால் இவ் வருடமும் இளங்கதிர் வெளிவரவிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இறுதியாக, 1954 ஆம் ஆண்டு இளங்கதிரின் ஏழாவது இதழாசிரியர் கூறியுள்ள ஒரு விடயத்தை இங்கு குறிப்பிடுதல் மிகப் பொருத்தமானதாகும். ''........ இப்பெரியார் உதவி ஒரு புறமிருக்க சங்க உறுப்பினரின் உசாரும் உற்சாகமும் உழைப்பும் ஒற்றுமையும் இல்லாதிருந்தால் தமிழ்ச்சங்கம் எங்கே! தவறான எண்ணம் (நாடக அரங்கேற்றம், எங்கே! முத்தமிழ் ஆரம் எங்கே! கூட்ட நிகழ்ச்சிகளில் ஆர்வத்துடன் பங்கு பற்றுதல், தாம் செய்யக் கூடிய உதவிகளைச் செய்து நிகழ்ச்சிகளை மேம்படுத்துதல்.........செயற் குழுவினரைப் பொறுத்த வரையில் தாம் ஏற்றுக்கொண்ட பொறுப்புணர்ச்சியாலும் தளராத தமிழ் ஆர்வத்தாலும் தம் ஆற்றல் திறனாலும் ஒரு மனதுடன் உழைத்து இவ்வாண்டு நிகழ்ச்சிகளைத் திறமையுடன் ஒப்பேற்றினர் என்பதைப் பல்கலைக்கழகத் தமிழ் கூறுநல்லுலகம் நன்கு அறியும்,''[22]

## சான்றாதாரம்:


1. வித்தியானந்தன், சு., தமிழர்சால்பு (1958), பக. 16-17 .
2. இதுபற்றிப் பேராசிரியர். சி. பத்மநாதன் அவர்கள் தாம் எழுதிய கட்டுரை ஒன்றில் விரிவாக நோக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
   University of Ceylon / Univercity of Peradeniya
   Golden Jubilee Souveuir, 1942-1992 .
   ''பேராதனைப்பல்கலைக்கழகம்: ஒருவரலாற்றுக் கண்ணோட்டம்'' பக். 69-74.
3. இளங்கதிர், மலர்- 1, இதழ் - 1, 1948-49, இதழாசிரியரின் உரை
4. ,, ,, ,,
5. இளங்கதிர், 1966-1967, பக். 117.
6. இளங்கதிர், 1967-1968, பக். 131.
7. ,, ,, ,, பக். 130-132.
8. இளங்கதிர், இதழ். 1, 1948-1949, பக். 4.
9. இளங்கதிர், இதழ் - 2, 1949-1950, பக். 4.

10. தமிழ்ச்சங்கம் உருவாக்கிய கவிஞர்கள், எழுத்தாளர்கள், நாடக ஆசிரியர்கள் முதலியோரிற் பலர் இன்று நாடறிந்த கவிஞர்களாவும் சிறுகதை, நாவல் எழுத்தாளர்களாவும் பத்திரிகையாளர்களாவும் திறனாய்வாளர்களாவும் அறிஞர்களாவும் விளங்குதல் குறிப்பிடத்தக்கது.

11. இச்சஞ்சிகையின் அரும்பணிகள் பற்றி இக்கட்டுரையாசிரியர் விரிவான முறையில் ஆராய்ந்து எழுதியுள்ளார். விரைவில் நூலாக வெளிவரவுள்ளது.

12. இளங்கதிர், இதழ் - 7, 1954 - 1955, பக். 127 - 128.

13. இளங்கதிர், இதழ் - 17, 1965 - 1966, பக். 6-7.

14. இளங்கதிர், இதழ் - 7, 1954 - 1955, பக். 126.

15. இளங்கதிர், இதழ் - 12, 1959 - 1960, பக். 117.

16. இளங்கதிர், இதழ் - 15, 1962 - 1963.

17. இளங்கதிர், இதழ் - 11, 1958 - 1959, பக். 184.

18. இளங்கதிர், இதழ் - 18, 1966 - 1967, பக். 118.

19. இளங்கதிர், இதழ் - 19, 1967 - 1968, பக். 144.

20. ,, ,, ,, ,, ,, பக். 143.

21. இவைபற்றி இக்கட்டுரையாசிரியரால் பிறிதோரிடத்தில் விரிவாகநோக்கப்பட்டுள்ளது அடிக்குறிப்பு 11ஐப் பார்க்கவும்

22. இளங்கதிர், இதழ் - 7, 1954 - 1955, பக். 126 - 127.

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது

சுவாமி விபுலாநந்தர்

தெய்வம் பல பல சொல்லிப் - பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்;
உய்வ தனைத்திலும் ஒன்றாய் - எங்கும்
ஓர் பொருளானது தெய்வம்

— மகாகவி பாரதியார்

# பள்ளு இலக்கியத்தில்
# நாட்டார் இலக்கியக் கூறுகள்

கலாநிதி துரை. மனோகரன்
(முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை)

பள்ளு இலக்கியம் தமிழில் எழுந்துள்ள பல்வேறு சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகும். அதேவேளை, சமூகத்தின் அடிமட்டத்தினரைச் சித்தரிக்கும் பொதுமக்கள் சார்பு இலக்கியங்களுள் ஒன்றாகவும் விளங்குகின்றது. பிற சிற்றிலக்கியங்களைப் போன்றே இவ்விலக்கியமும் பாட்டுடைத் தலைவரைச் சிறப்பிப்பதையே நோக்கமாகக் கொண்டிருப்பினும், முதன் முதலாகத் தமிழ் இலக்கியத்திலே வேளாண்மைத் தொழிலாளரான பள்ளர் என்னும் சமூகத்தை அது அறிமுகப்படுத்தி, தன் தனித்துவத்தை இனங்காட்டியதோடு, தனது பொது மக்கள் சார்பையும் உணர்த்தியது.

பள் என்பது பள்ளர் என்னும் மக்கள் பிரிவையும், அம்மக்களைப் பாத்திரங்களாகக் கொண்ட நாடகத்தன்மை வாய்ந்த சிற்றிலக்கியத்தையும் காளி முதலான தெய்வங்களுக்குப் பலி கொடுக்கும் காலத்தில் பாடப்படும் பண் வகையையும் குறிப்பிடுகின்றது.[1] பள் என்னும் சொல்லே, பள்ளர் வகுப்பினரைப் பாத்திரங்களாகக் கொண்டு பாடப்பட்ட சிற்றிலக்கியத்திற்குப் பள்ளு எனப் பெயர் அமையக் காரணமாயிற்று என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

பள்ளு இலக்கியத்தின் தோற்றம், வளர்ச்சி குறித்து நோக்குமிடத்து, கி. பி. 17ம் நூற்றாண்டு முதல், கி. பி. 19ம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியே அதன் வளர்ச்சிக் கட்டத்திற் குறிப்பிடத்தக்க காலப்பகுதியாகும். நிலப்பிரபுத்துவச் சமூதாய அமைப்பும், அதற்கேற்ப நிலப்பிரபுக்களையும், குறுநிலத்தலைவர்களையும், தெய்வங்களையும் பாட்டுடைத்தலைவர்களாகக் கொள்ளும் போக்கும், சமயநிறுவனங்களான கோயில்களின் வளர்ச்சி நிலையும், அதனாலேற்பட்ட சமயவுணர்வும், கோயிலை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்த கூத்துக்கலை தொடர்பான மக்களின் ஈடுபாடும், சாதியமைப்புப் பெற்றிருந்த சிறப்பிடமும் பள்ளு இலக்கியம் வளர்ச்சி பெறுவதற்கு முதன்மையான காரணங்களாயின.

பள்ளு இலக்கியத்தின் அமைப்பினை விளங்கிக் கொள்வதற்கு முன்னர், பள்ளு எனப் பெயர் கொண்ட பிற ஆக்கங்களையும் பற்றி நோக்குதல் இன்றியமையாதது. குறிப்பாக, மலையாளத்திலே தோன்றிய தேவேந்திரப் பள்ளு என்பது, பள்ளு எனப்பெயர் கொண்டு அமைந்திருப்பினும், அதன் பொருளமைதி, தமிழ்ப் பள்ளு இலக்கியத்தின் பொருளமைதியினின்றும் வேறுபட்டதாக உள்ளது.[2] இது போன்றே திருவரங்கம் கோயிலில் அரையர் பாடும் பள்ளுப்பாட்டுக்களுக்கும், பள்ளு இலக்கியத்துக்கும் இடையே வேறுபாடுகள் இருப்பதை சு. வேங்கடராமன் சுட்டிக்காட்டியுள்ளார்.[3] இதே போன்று, திருநீலகண்டன் பள்ளு, வைத்தியப்பள்ளு என்பவை பள்ளு எனப் பெயர் கொண்டு, பள்ளு இலக்கியம் அல்லாத நூல்களாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

இவ்விலக்கியத்தின் அமைப்பினை முழுமையாக நோக்குவதற்கு, அதன் கதையமைப்பினைக் கருத்திற் கொள்வது அவசியமானது. பாட்டுடைத்தலைவருக்கு உரிய பண்ணையில்

வேளாண்மைத்தொழிலில் ஈடுபடும் பள்ளர் தலைவனுக்கு இரு மனைவியர் உளர். கணவன் இளைய மனைவி மீது மையல் கொண்டவனாகி, முதல் மனைவியை வெறுத்து ஒதுக்குபவனாக இருப்பான். அவனது செயல்களால் வேதனையுற்ற முதல் மனைவி பண்ணைக்காரனிடம் முறையிட, அவன் பள்ளர் தலைவனுக்குத் தண்டனை வழங்குவான். பின் பல்வேறு பிரச்சினைகளுக்குப் பின், சக்களத்தியர் இருவரும் சமாதானமுற்றுக் கணவனுடன் மகிழ்ந்து வாழ்வர். அதனோடு, பள்ளு இலக்கியத்தின் கதை நிறைவு பெறும்.

பள்ளு நூல்களின் அடிப்படைக்கதையமைப்பு ஒரே வகையிலேயே அமைந்திருப்பினும், காலத்திற்கேற்பவும், அவ்வவ் நூலாசிரியரின் மனப்போக்குக்கும், நோக்குக்கும் ஏற்பவும் சிலமாற்றங்கள் அவ்வப்போது ஏற்பட்டுள்ளன. இவ்விலக்கியத்தைப் பொறுத்தவரையில், அறுபத்தைந்துக்கும் மேற்பட்ட நூல்கள் பற்றிய செய்திகள் தெரியவருகின்றன. ஆயினும், அவற்றுட் சிலவே கிடைக்கப்பெற்றுள்ளன. இன்று கிடைக்கப்பெறும் நூல்களில், முக்கூடற்பள்ளு, சிறந்ததாக விளங்குகின்றது. இந்நூல் தவிர, திருவாரூர்ப்பள்ளு, குருகூர்ப்பள்ளு, திருமலை முருகன்பள்ளு கண்ணுடையம்மன் பள்ளு, செண்பகராமன் பள்ளு, பொய்கைப் பள்ளு, செங்கோட்டுப்பள்ளு முதலான தமிழகப் பள்ளு நூல்களும், கதிரமலைப் பள்ளு, ஞானப்பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு ஆகிய ஈழத்துப்பள்ளு நூல்களும் குறிப்பிடத்தக்கனவாக விளங்குகின்றன.

பள்ளு இலக்கியத்துக்கும் நாட்டார் இலக்கியத்துக்கும் இடையிலான தொடர்புகளை நோக்குவதற்கு முன்னர், நாட்டார் இலக்கியம் பற்றிய பொதுப்பண்புகளை நினைவு கூறுவது பயனுள்ளது. நாட்டார் இலக்கியங்கள், மனித உள்ளத்தில் எழுகின்ற பல்வேறு உணர்ச்சி பாவங்களையும் உள்ளது உள்ள வாறே வெளியிடுகின்றன. பாமர மக்களால் உருவாக்கப்பட்டு, அவர்களாலேயே அவை பேணப்பட்டும் வருகின்றன. பேச்சு வழக்கும், எளிமையும், இசையும் அவற்றின் இன்றியமையாப் பண்புகளாக விளங்குகின்றன. பாடலடிகள் திரும்பத்திரும்ப இடம் பெறுவதுண்டு. ஒரு நாட்டினதும், சமூகத்தினதும் நாடியை அறிந்து கொள்ளவும், பழக்க வழக்கங்களைப் புரிந்து கொள்ளவும் அவை உதவுகின்றன.

பல்வேறு மொழியிலக்கியங்களின் வரலாற்றினைநோக்கின், செந்நெறி இலக்கியமும், நாட்டார் இலக்கியமும் ஒன்றினையொன்று சார்ந்தும், இணையாகவும் வளர்ச்சிபெற்று வந்திருப்பதனை உணரலாம். தமிழ் இலக்கிய வரலாற்றினை நோக்கினும், இவ்வுண்மை புலனாகத்தவறாது. அதேவேளை, செந்நெறி இலக்கியத்துக்கும், நாட்டார் இலக்கியத்துக்கும் இடையிற் காணப்படும் வேறுபாடுகளும் கருதத்தக்கன. அவை பற்றிப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் குறிப்பிடுபவை மனங்கொளத்தக்கன.

> "இலக்கியத்துக்கும் நாட்டுப்பாடல்களுக்கும் குறிப்பிடத்தக்க வேற்றுமையுண்டு. இலக்கியங்கள் பெரும்பாலும் இலட்சிய வாழ்க்கையையே அடிப்படைக்குறிக்கோளாகக் கொண்டவை. இலக்கியங்களுக்குத் தலைவராக அமைபவர் குற்றமே இல்லாதவராய்க் குணங்களுக்கு இருப்பிடமாய்ப் படைக்கப்படுகின்றனர்.........இது உண்மையான வாழ்க்கைக்குப் பொருத்தமற்றதாக இருக்கின்றது. இதற்கு மாறாக மனிதனின் குறைகுற்றங்களையும் சமூக ஊழல்களையும் உள்ளவாறே எடுத்து இயம்புகின்றன நாட்டுப்பாடல்கள்"[4].

செந்நெறி இலக்கியத்துக்கும், நாட்டார் இலக்கியத்துக்கும் இடையேயான இத்தகைய அடிப்படை வேறுபாடுகளே, இவ்விருவகை இலக்கியங்களின் சிறப்பியல்புகளையும் இனம் பிரித்துக்காண உதவுகின்றன.

செந்நெறி இலக்கியம் தொடர்பான பல செய்திகளைக்குறிப்பிடும் தொல்காப்பியம், சுருக்கமாக நாட்டார் இலக்கியம் தொடர்பான குறிப்பினையும் தெரிவித்துள்ளது. தொல்காப்பியர் பண்ணத்தி, பிசி, தொன்மை, புலன் என்பன பற்றிக்கூறிய வற்றை நாட்டார் இலக்கியத்தோடு தொடர்பு படுத்தலாம். அவற்றுக்கு இளம் பூரணரும், பேராசிரியரும் கூறிய உரைவிளக்கங்களினின்றும் வெளிப் போந்த கருத்து, தொல்காப்பியர், காலத்திலும், அதற்கு முன்னரும் நாட்டார் இலக்கியங்கள் வழக்கில் இருந்துள்ளன என்பதேயாகும்.

நாட்டார் இலக்கியங்கள் செந்நெறி இலக்கியங்களைப் பாதிப்பதும், செந்நெறி இலக்கியங்கள் நாட்டார் இலக்கியங்களைப் பாதிப்பதும் இயல்பே இவ்வகையில், நாட்டார் இலக்கியத்தின் செல்வாக்கு, காலந்தோறும் செந்நெறி இலக்கியங்களைப் பாதித்துள்ளமைக்குத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே சான்றுகள் பலவுண்டு. 5

பழந்தமிழ் இலக்கியங்களில் நாட்டார் இலக்கியக் கூறுகளைப் பெருமளவு தன்னகத்தே கொண்ட இலக்கியமாகச் சிலப்பதிகாரம் விளங்குகின்றது. இவ்விலக்கியத்திற் கலந்துள்ள நாட்டார் இலக்கியக் கூறுகள் சில, பின்னர் தோன்றிய பள்ளு இலக்கியக் கூறுகள் சிலவற்றுக்கு முன்னோடியாக விளங்கியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இவ்வகையில், சிலப்பதிகார நாடுகாண் காதையிற் கூறப்படும் உழவுடன் தொடர்பான விருந்திற் பாணி, ஏர்மங்கலம், முகவைப்பாட்டு ஆகிய நாட்டார் இலக்கியக் கூறுகளைக் குறிப்பிடவேண்டும். 6 இம்மூன்றும் சிலப்பதிகார காலத்தில் நாட்டில் வழங்கிய நாட்டார் பாடல் வடிவங்களே என்பதும், அவை உழவுத் தொழிலுடன் தொடர்புற்றவையாய் இருந்துள்ளன என்பதும், அவை பற்றிச் சிலப்பதிகாரம் விளக்கும் முறையினின்றும் தெளிவாகின்றது.

இவை ஒருபுறமிருக்க, கலித்தொகைப் பாடல்களும் இவ்விடத்து நினைவு-கூரத்தக்கவையாகும். அவை தாழ்நிலையிலுள்ள மாந்தரையும் பாத்திரங்களாகக் கொண்டவை மாத்திரமன்றி, நாட்டார் பாடல்களின் எளிய அமைப்பினைக் கொண்டவையாகவும், பேச்சுவழக்குச் சொற்களையும் பயன்படுத்தியவையாகவும் காணப்படுகின்றன. இவை நேரடியாகப்பள்ளு இலக்கியத்தின் தோற்றத்துக்குத் துணை செய்தன எனக் கூற முடியாவிடினும், தம்மளவில் தாழ்நிலைப் பாத்திரங்களைப் படைக்கவும், நாட்டார் இலக்கிய அமைப்பைப் பின்பற்றவும் பிற்கால இலக்கியங்களுக்கு முன்னோடியாக அமைந்தன எனலாம்.

இவற்றோடு, இன்னோர் அம்சத்தையும் மனங்கொள்ள முடிகின்றது. பள்ளு என்ற பெயரில் சில நாட்டார் பாடல்களும் வழங்கி வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வகையில், பண்டிப்பள்ளு, குருவிப்பள்ளு, கடல் நாச்சியம்மன் பள்ளு என்பன, பள்ளு என்ற பெயரைக் கொண்ட நாட்டார் பாடல்களாக ஈழத்திலே வழக்கில் இருந்துள்ளன.

இவை மாத்திரமின்றி, பல்வகை நாட்டார் பாடல்களின் அமைப்பு முறை நேரடியாகவே பள்ளு இலக்கியத்தைப் பாதித்துள்ளது. இவ்வகையில், மழை பெய்ய ஆயத்தமாகும் போது பாடப்படும் நாட்டார் பாடல் ஒன்றினை முதலில் நோக்கலாம்.

''படபடத்து பூமியெல்லாம் மழை பதறி வருகுது
கடகடன்னு வானமெல்லாம் கரியநிற மாகுது
இடியிடித்து மின்னல் மின்ன எங்கும் மழை பெய்யுது
துடிதுடித்து வானமெல்லாம் கடுகடுத்து நிக்குது'' 7

இதை ஒத்ததாகப் பள்ளு நூல்களில் மழைக்குறி தோன்றுவது தொடர்பாகப் பாடல்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. சான்றாக, முக்கூடற் பள்ளிலிருந்து ஒரு பாடலைக் காட்டலாம்.

''ஆற்று வெள்ளம் நாளை வரத்
தோற்று தேகுறி - மலை
யாள மின்னல் ஈழமின்னல்
சூழமின் னுதே
நேற்று மின்னுங் கொம்பு சுற்றிக்
காற்ற டிக்குதே - கேணி
நீர்ப்படு சொறிந்த வளை
கூப்பிடு குதே
சேற்று நண்டு சேற்றில் வளை
ஏற்ற டைக்குதே - மழை
தேடியொரு கோடி வானம்
பாடியாடுதே
போற்று திரு மாலழகர்க்
கேற்ற மாம்பண்ணைச் - சேரிப்
புள்ளிப் பள்ளர் ஆடிப் பாடித்
துள்ளிக் கொள்வோமே'' 8

நெற்பயிர்ச் செய்கையில் நாற்று நடுகை ஒரு முக்கிய கட்டமாகும். இது தொடர்பான நாட்டார் பாடல்கள் பலவுள்ளன. வயலில் வேலை செய்யும் பெண்கள், தமது வேலைப் பளுவையும், களைப்பையும் மறப்பதற்காகப் பாடல்களைப் பாடி உழைப்பது வழக்கமாகும். நாற்று நடுகைப் பாடல்களும் இவ்வகையிலேயே வயலில் உழைக்கும் பெண்களாற் பாடப்படுகின்றன. சான்றாக,

''மயிலை எருதுபூட்டி - அண்ணன்
வயலை உழுதிட்டான்
வயலை உழுதிட்டான்
வாழை சம்பா நாத்தெடுத்து
வகையா நடுங்கோடி
வகையா நடுங்கோடி. 9

என்ற பாடலைக் காட்டலாம். பள்ளு இலக்கியத்திலும் இத்தகைய நாட்டார் பாடல்களின் செல்வாக்கினால் நாற்றுநடும் பகுதி இடம் பெற்றதெனக் கொள்ள முடிகின்றது.

''பந்திப் படுத்தி நிரைய வகுத்துப்
பரவை யொலிபோல் குரலை எழுப்பி
பயிர் நெருங்காமல் கலந்து போகாமல்
பதியும் பள்ளீரே'' 10

என்ற பாடற் பகுதியை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

குடும்பப் பூசல்களையும் நாட்டார் பாடல்கள் புலப்படுத்தத் தவறுவதில்லை. ஒரே கணவனின் இரு மனைவியரான சக்களத்திகளிடையே இடம்பெறும் பூசல்கள் தொடர்பாகவும் நாட்டார் பாடல்கள் அமைந்துள்ளன. சான்றாக,

''சண்டையின்னா சண்டைங்க - இது
சக்களத்தி சண்டைங்க
சக்களத்தி சண்டையில - நான்
திங்கபோறேன் கொட்டைங்க'' 10

என்பதனையும்,

''சக்களத்தி சுட்டபுட்டு ஏலேலம்படி ஏலம் அது
சாக்கடத்தான் சோறுபோல ஏலேலம்படி ஏலம்
அல்லாருஞ் சுட்டபுட்ட ஏலேலம்படி
ஏத்தி இறக்குங்கடி ஏலேலம்படி ஏலம்
சக்களத்தி சுட்டபுட்ட ஏலேலம்படி ஏலம்
சாக்கடைலே கொட்டுங்கடி ஏலேலம்படி ஏலம்'' [12]

என்ற பாடலையும் காட்டலாம். இவற்றில் முதற்பாடல், இரு மனைவியராற் பிரச்சினை ஏற்பட்டபோது ஒரு கணவன் பாடுவதாகவும், மற்றையது, சக்களத்தியர் இருவருள், ஒருத்தியை மற்றவள் பரிகாசம் செய்வதாகவும் அமைந்துள்ளது. பள்ளு இலக்கியத்தைப் பொறுத்தவரை, மூத்த பள்ளி - இளையபள்ளி ஆகியோருக்கிடையிலான சக்களத்திப் போராட்டமே அதன் மையப்பொருளாக விளங்குகின்றது. இவ்வகையில் நோக்கும்போது, பள்ளு இலக்கியத்திற் சிறப்பிடம் பெற்றுள்ள சக்களத்திகளின் போராட்ட உறவு பற்றிய சித்திரிப்பு, பெருமளவுக்கு நாட்டார் இலக்கியத்தினின்றே பெறப்பட்டதாகக் கருத இடமுண்டு.

ஆடவரைக் கவர்வதற்கு எனப் பெண்கள் சிலர் மருந்திடுவதுண்டு என்ற கருத்து பாமர மக்களிடையே காணப்படுவதுண்டு. இதேபோன்று, நாட்டார் இலக்கியங்களிலும் இடம்பெறுவதைக் காணலாம். இவ்வாறு மருந்திடுபவர் பெரும்பாலும் பொது மகளிரே என்பதும் நாட்டார் பாடல்கள் மூலமாக வெளிப்படுகின்றது. ''தாசி வச்ச கைமருந்து தலையிலே தாவிடிச்சு,'' [13] ''தாசி மருந்தாலே - பெத்த தாயை மறந்தானே'' [14] என்பன போன்ற நாட்டார் பாடலடிகளைச் சான்றாகக் குறிப்பிடலாம். பொது மகளிர் வசியக் கலையில் தேர்ந்தவராகவும், மருந்திட்டு ஆடவரை மயக்குபவராகவும் நாட்டார் இலக்கியங்களிற் சித்திரிக்கப்படுகின்றனர். [15] பள்ளு இலக்கியத்தில் தனது கணவனை வசிய மருந்திட்டே இளையபள்ளி மயக்கி, தன்னிடமிருந்து பிரித்துவிட்டாள் என்ற நிலைப்பாட்டில் மூத்தபள்ளி விளங்குவதை இவ்விடத்து நினைவு கூரலாம். [16] மூத்தபள்ளியின் நோக்கில் இளையபள்ளி தனது கணவனை மயக்குவதற்கு வசிய மருந்திட்ட பொதுமகளாகவே தென்படுவது குறிப்பிடத்தக்கது. இவற்றுக்கு அடிப்படையாக நாட்டார் இலக்கியமே விளங்குகின்றது என்பதும் இவற்றின் மூலம் தெளிவாகின்றது.

ஆண்களைப் பெண்கள் பரிகாசம் செய்து பாடும் பல பரிகாசப் பாடல்கள் நாட்டார் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. இத்தகைய பாடல்கள் பெரும்பாலும் திருமணச்சடங்கில் மாப்பிள்ளையைப் பரிகாசம் செய்யும் பாடல்களாக விளங்குகின்றன. இவ்வாறு, எள்ளல் முறையில் அமைந்த திருமணப் பரிகாசப் பாடல்களின் தோற்றம் குறித்து நோக்கிய குருவிக்கரம்மை சண்முகம்,

''ஆரம்ப காலத்தில் இப்பரிகாசப் பாடல்கள்
ஆடவரும் பெண்டிரும் ஒருவரையொருவர்
கேலி செய்து பாடும்போக்கில் தோன்றியிருக்கலாம்.
காலப்போக்கில் திருமண விழாவில் சடங்குகள்
இடம் பெற்ற போது இப்பாடல்களைப் பாடுவதும்
ஒரு சடங்காகவே ஆகிவிட்டது எனலாம்.'' [17]

எனக் கூறியுள்ளார். இத்தகைய பரிகாசப் பாடல்களை உண்மையில் ஆடவரும் பெண்டிருமாகப் பாடியிருக்கலாம். அல்லது, தொழிலில் உழைத்துக் களைத்திருக்கும்போது, சுவையுணர்வுக்காக ஆண்கள் மாத்திரமோ, அல்லது பெண்கள் மாத்திரமோ தம் போக்கிற் பாடியுமிருக்கலாம். அடிப்படையில், இவற்றை உழைப்பாளர் பாடல் என்று கூறுவதே பொருத்தமாகலாம். காலப்போக்கில், குருவிக்கரம்பை சண்முகம் கருதுவது

போன்று, திருமண விழாச் சடங்குகளிற் பாடுவதற்காகப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கலாம். இத்தகைய பரிகாசப் பாடல்கள் ஈழத்திலும், தமிழ் நாட்டிலும் காணப்படும் நாட்டார் பாடல்களில் இடம் பெற்றுள்ளன, சான்றாக, ஈழத்து நாட்டார் பாடல்களில் ஆணைப் பெண்பரிகாசம் செய்யும்பாடலொன்று பின்வருமாறு அமைந்துள்ளது;

''முப்பத்தி ரெண்டிலே
மூணுபல்லுத் தான் மீதி
காகக் கறுப்பு நிறம் - ஒரு
காலுமல்லோ முடமவர்க்கு'' 18

தமிழ் நாட்டில் மாப்பிள்ளை ஏசலாக அமைந்துள்ள திருமணப் பரிகாசப் பாடல் ஒன்று பின்வருமாறு:

''அரிசி அரிச்சாப் போல
அஞ்சாறு பல்லுகளாம்
பருப்பு கடைஞ்சாப்பல
பல்நிறைய பாசைகளாம்'' 19

பள்ளுப் பாடல்களில் இடம்பெறும் பண்ணைக்காரன் பற்றிய வருணனை தொடர்பான பகுதியினை நோக்குமிடத்து, ஆணைப் பெண் பரிகாசம் செய்யும் நாட்டார் பாடல்களும், திருமணப் பரிகாசப் பாடல்களும் அதற்கு முன்னோடியாக அமைந்துள்ளமையினை உணரலாம். பள்ளு இலக்கியத்தினின்றும் இத்தகைய பாடலொன்றினை எடுத்துக்காட்டுவது, இவ்விடத்துப் பொருத்தமாக அமையும்.

''மாறு கண்ணும் பருத்திப்பைக்
கூறு வயிறும் - கீரை
மத்துப்போல் தலையும் சுரை
வித்துப்போல் பல்லும்
நீறு போல் வெளுத்த வூளை
யூறு நாசியும் – தட்டி
நெரித்தமாங் கொட்டை போல் ஈ
அரித்த வாயும்
தாறுமாறாய் மீசையில் அஞ்
சாறு மயிரும் - தூங்கற்
சண்ணைக் கடாப்போல் நடையும்
மொண்ணை முகமும்
வேறு கீறி ஒட்டவைத்த
ஏறு காதுமாய் - நேமி
வீர னார்முக் கூடற்பண்ணைக்
கார னார்வந் தார்.'' 20

பள்ளு நூல்களில் பள்ளர் தலைவனின் நடத்தை குறித்து மூத்தபள்ளி பண்ணைக்காரனிடம் முறையிடுவது பற்றிக் கூறப்படுகின்றது. அவ்வாறு முறையிடும்போது, அவனைப் பற்றிய பல குறைகளைக் கூறி முறையிடுவதைக் காணலாம். நாட்டார் இலக்கியத்திலும் இதேபோன்று, கணவனின் குறைகளை மனைவி கூறும் முறையிலமைந்த பாடல்களைக் காணமுடிகின்றது. சான்றாக,

''நத்தையின்னா சட்டி திம்பான்
நாத்துகட்டு தூக்க மாட்டான்
கூளுன்னா கொடம் குடிப்பான் - என்தங்கமே
குமிஞ்ச வேலையைச் செய்யமாட்டான்'' 21

என்ற பாடலைக் குறிப்பிடலாம். இத்தகைய பாடலுடன், முக்கூடற்பள்ளில் மூத்தபள்ளி தன் கணவனைப் பற்றி பண்ணைக்காரனிடம் முறையிடும் பாடலொன்றை ஒப்பிட்டு நோக்கலாம்.

''கட்டின மாட்டைத் - தொட்டவி ழான் ஒருக்
காலுந்தான் உழக் - கோலுங்கை தீண்டான்
தொட்டியர் காளை - மட்டிபோல் வெந்து நான்
சோறிட் டாலுங்கண் - ஏறிட்டும் பாரான்'' 22

மேற்காட்டிய எடுத்துக்காட்டுகளின்றும், கணவனைப் பற்றி மனைவி குறை சொல்வதாக அமையும் நாட்டார் பாடல் வடிவத்துக்கும், பள்ளு இலக்கியத்தில் மூத்தபள்ளி தன் கணவனைப் பற்றி குறை கூறும் பகுதிக்கும் இடையிலான உள்ளார்ந்த தொடர்பினை நோக்க முடிகின்றது.

நாட்டார் இலக்கியங்கள் கிராமிய அம்சங்களோடு நெருங்கி தொடர்பு கொண்டவையாக விளங்குகின்றன. பள்ளு இலக்கியமும் அவ்வாறே கிராமிய அம்சங்களோடும் வேளாண்மையோடும் தொடர்புபட்ட இலக்கியமாக விளங்குவதைக் காணலாம். மேலும், மழை, வளமை, வேளாண்மை தொடர்பான அம்சங்களின் நம்பிக்கையுணர்வுகள், நிமித்தம் பார்த்தல், கண் ணூறு, கனவு காணுதல், பல்லி சொல்லல், நேர்த்தி வைத்தல், சன்னதம் ஆடுதல், பேய்கள் பற்றிய நம்பிக்கை முதலானவையும் பள்ளு இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. இவற்றோடு, சிறுதெய்வ வழிபாட்டு அம்சங்கள், சடங்குகள், கிராமிய மக்களின் கலையுணர்வு, பழக்கவழக்கங்கள் என்பவையும் இவ்விலக்கியத்தில் புலப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. இவை நாட்டார் வழக்காற்றியலோடு தொடர்புடைய அம்சங்கள் என்பது, இவ்விடத்து நினைவுறுத்தத்தக்கது.

நாட்டார் இலக்கியங்களிற் காணத்தகுந்த இன்னொரு பண்பு, கூட்டு வாழ்க்கை கூட்டு முயற்சிகள் பற்றிய பிரதிபலிப்பாகும். ''ஏனெனில் நாட்டார் பாடல்களில் கூட்டு வாழ்க்கையினதும் கூட்டு முயற்சியினதும் உணர்வு உள்ளூர இருக்கின்றது'' 22அ இத்தகைய அம்சத்தைப் பள்ளு இலக்கியத்திலும் காணமுடிகின்றது. பள்ளு நூல்கள், வேளாண்மையுடன் தொடர்புடைய அனைத்துச் செயல்களிலும் பள்ளர் சமூகத்தவரின் கூட்டு முயற்சிகளையும், கூட்டுணர்வினையும் புலப்படுத்துகின்றன. ''பண்ணை வயலிலின்றே சிறப்பாக நாமெல்லோருங் கூடிச் சென்றே நாளேரிடவாரும் நயினாரே'' 23 ''கொத்தடிமைப் பள்ளரெல்லாங் கோவில்வய லத்தனையும் விதைவிதைத்து வந்தாரே,'' 24 ''எல்லோருங் கூடி நெல்லை எடுத்தணியாக வீசி வல்லமையால் விதைத்து மாதேவரைத்தொழுது இல்லந்தனில் வந்தவர் இருந்து சுகித்தனரே'' 25 போன்ற உதாரணங்கள், பள்ளர் சமூகத்தின் கூட்டு மனப்பாங்கையும், கூட்டு முயற்சிகளையும் பள்ளு நூல்கள் உணர்த்துவதைக் காட்டுகின்றன.

மேலும், பள்ளு இலக்கியத்தில் இடம்பெறும் பாத்திர உரையாடல்கள் உயிரோட்டம் உடையனவாக அமைவதற்கு, அவற்றிற் காணப்படும் பேச்சு மொழியை ஒட்டிய வழக்குச் சொற்கள், பழமொழிகள் முதலானவையும் காரணமாகின்றன.

''குச்சுக்குள்ளே பள்ளனையும்
வைச்சுக்கொண் டதட்டாதேவாய்
தைச்சுப்போடு வேன்மருதூர்க்
கச்சற்காய்ப் பள்ளி'' 26

போன்ற பாடல்கள் இதற்கு உதாரணமாகும். பழந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றிற் காணப்படாத அளவுக்குப் பேச்சு வழக்குப் பயன்பாட்டினைப் பள்ளு இலக்கியங்களிற் காணலாம். நயினார், நயினாத்தை, குண்டுணிக்காரி, வந்தல்லோ, என்னத்தை, விண்ணாணம், ஆறுமாத்தைக்கொரு நாள், சாலக்காரன், கண்டியளோ, பூராயக்காரி, கள்ளுத்தண்ணீர், வக்கணை, ராசியம், ஆண்டை, செம்பட்டை, சாஞ்ச, சூத்தில், சொறித்தலை, உறுமிக்கொண்டு, வாங்கிக்கொ போன்ற பல பேச்சு வழக்குச் சொற்கள் பள்ளு இலக்கியங்களிற் பயில்கின்றன. இதேவேளை, நாட்டார் இலக்கியங்களும் பேச்சுவழக்கை அடியொற்றியே அமைந்துள்ளமையை நினைவு கூருவது பொருத்தமானது. இவ்வகையிலும், பள்ளு இலக்கியம் நாட்டார் இலக்கியங்களுக்குப் பெரிதும் கடன்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

இவற்றோடு, பள்ளு இலக்கியத்திற் பயன்படுத்தப்படும் யாப்பு வகைகளை நோக்குமிடத்தும், நாட்டார் இலக்கியத்தின் பாதிப்பினை உணரமுடிகின்றது. இவ்விலக்கியத்திற் பயன்படுத்தப்படும் பல்வேறு சிந்துவகைகள், கண்ணிகள், கப்பல் தரு, தக்கை, ஏசல் முதலான இசைத் தொடர்பான யாப்புகள், நாட்டார் இலக்கிய யாப்பு வகைகளினின்றும் தோன்றியவை என்பதும் இவ்விடத்து நினைவுறுத்தக்கது. நாட்டார் இலக்கியங்கள் பாமர மக்களுடைய வாழ்வியல் நிலைகளை எடுத்துக்காட்டுவனவாக அமைந்துள்ளன. அதற்கேற்ப, எளிமையான யாப்பமைதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று, பள்ளு இலக்கியத்திலும் சமுதாயத்தின் அடிநிலை மக்களான பள்ளர் சமூகத்தின் வாழ்வியல் நிலைகளே புனையப்பட்டுள்ளன. அதனால், அவற்றை இயல்புடன் எடுத்துக்காட்டத்தக்க வகையில், நாட்டார் இலக்கியத்துக்குரிய யாப்பமைதிகளும் பின்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு நாட்டார் இலக்கியக் கூறுகளைப் பள்ளு இலக்கியம் தன்னகத்தே இணைத்துக் கொண்டு வளர்ந்து வந்துள்ளது. இவ்விடத்து நாட்டார் இலக்கியத்துக்கும், பள்ளு இலக்கியத்துக்கும் இடையிலான தொடர்பினைப் பற்றிப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுவன நோக்கத்தக்கன:

> ''உழவருழத்தியரது வாய்ப்பாட்டாக நின்று விடாது புலவர்களாலியற்றப்பெற்ற பிரபந்த வடிவாயமைந்ததாலே இந்நூற் பொருளுக்கு நூதனமான இயல்புகள் சில ஏற்பட்டன; முதலாவது கொச்சைத் தன்மை நீங்கி ஓரளவிலே நாகரிகத்தை இது பெற்றது. இரண்டாவதாக பிரபந்தவிலக்கணத்திற்கேற்பக் குறிப்பிட்டவொரு நெறியை மேற்கொண்டு தொடங்கி இடைநிகழ்ந்து சென்று, முடிவுபெற்று அமைந்தது, மூன்றாவதாக தமிழ் மக்களுட் பெரும் பாலாரிடை இது பரவத்தொடங்கியது. இப்பிரபந்த வகையினை மக்கள் கற்றுப் பாடி இன்புறத்தொடங்கினர். நான்காவதாக பிரபந்தவமைப்பிலே நாடகச் சுவை பலபடியாகப் பெருகுவதாயிற்று. இதனாலே இப்பிரபந்தம் நடித்துக் காட்டத்தக்கதாய் முடிந்தது. ஆகவே, இதனைக் கற்றுப் பாடியின்புற்று தமிழ்மக்கள் நடித்துக் கண்டும் இன்புறுவாராயினர். 'பள்ளு நாடகம்' என்ற வழக்கும் இப்போது எழுந்தது. மேற்கூறிய நல்லியல்புகளால் பள்ளுப் பிரபந்தம் தமிழ் நாட்டிற் பெரிதும் பிரசாரம் எய்துவதாயிற்று.'' [27]

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, தமது விளக்கமான கூற்றின் மூலம், நாட்டார் இலக்கிய அமைப்பினின்றும் தோன்றிய பள்ளு இலக்கியத்தின் நான்கு இயல்புகளைக் குறிப்பிட்டுள்ளார். நாட்டார் பாடல்களுக்குரிய கொச்சைத்தன்மை நீங்கிப் புதுமெருகு பெற்றமை, சிற்றிலக்கிய வடிவம் பெற்றமை, மக்களைச் சென்றடைந்தமை, சிற்றிலக்கிய

அமைப்புக்குள் நாடகச்சுவை ஏற்பட்டமை ஆகியவை, பள்ளு இலக்கியத்தின் தோற்றத்துக்குரிய சிறப்புப் பண்புகளாக அவராற் குறிப்பிடப்பட்டுள்ளன. இதிலிருந்து, பள்ளு இலக்கியம் நாட்டார் இலக்கிய அம்சங்களைத் தன்னகத்தே கொண்டு வளர்ந்த இலக்கியம் என்பது தெற்றெனப் புலப்படும்.

இவையனைத்தையும் தொகுத்து நோக்குமிடத்து, பள்ளு இலக்கியம் நாட்டார் இலக்கியக் கூறுகளையும் இணைத்து வளர்ந்த ஒரு செந்நெறி இலக்கியம் என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது. இதில் இடம்பெறும் முக்கிய பாத்திரங்கள் அடிநிலைச் சமுதாயத்தைச் சார்ந்தவையாக விளங்கும் அதேவேளை, பாட்டுடைத் தலைவர்களாகத் தெய்வங்களோ, குறுநிலத்தலைவர்களோ, நிலக்கிழார்களோ இடம்பெறுவதைக் காணலாம். அத்தோடு, பள்ளு நூல்களைப் பாடியோர் நிலப்பிரபுத்துவத்திற்குச் சார்பானவர்களே என்பதும் கருதத்தக்கது. அதனால், அடிநிலைப்பாத்திரங்களைத் தமது இலக்கியத்திற் பயன்படுத்தியபோதிலும், சந்தர்ப்பம் ஏற்படும்வேளைகளில் அவர்களைக் கொச்சைப்படுத்தவும் அவர்கள் முயல்வதைக் காணலாம். கோ. கேசவன் குறிப்பிடுவது போன்று, ''பள்ளுப் பாடல்களில் வரும் நாற்று நடுகைப் பகுதி பள்ளரின் பால் உணர்வுகளைக் கொச்சைப் படுத்தும் ஒன்றாகவே இருப்பதைக் காணலாம்.''[28] இதே போன்று, பண்ணைக்காரனும் வேறொரு வகையிற் கொச்சைப்படுத்தப்படுகின்றான் (இதுபற்றி இக்கட்டுரை ஆசிரியர் வேறிடத்தில் விபரமாக நோக்கியுள்ளார்). இவையனைத்தையும் உளங்கொண்டு நோக்குமிடத்து, பள்ளு இலக்கிய ஆசிரியர்கள் அடிநிலைப் பாத்திரங்களைப் பயன்படுத்தி நாட்டார் இலக்கியக் கூறுகளையும் இணைத்து நாடகப் பாங்கினையும் அமைத்துப் புதுவகை இலக்கியம் செய்தபோதிலும், மரபுரீதியாக வழிவழி வந்த செந்நெறி இலக்கிய அம்சங்களைப் பேணுவதிலும் அக்கறை செலுத்தியுள்ளனர். ஆயினும், பள்ளு இலக்கியத்தில் இடம்பெறும் நாட்டார் இலக்கியக் கூறுகள், அவ்விலக்கியத்திற்கு ஒரு புதுப் பொலிவை ஏற்படுத்தியுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

சான்றாதாரம்


1) Tamil Lexicon (1982) Vol. IV, Part I, Madras, University of Madras (Reprint). P. 2551.

2) சுப்பிரமணியன், ச. வே. (1983) திராவிட மொழி இலக்கியங்கள்-அறிமுகம், சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். ப. 212.

3) வெங்கடராமன், சு. (1981) ''அரையர் சேவையில் பள்ளுப்பாட்டு,'' பதின்மூன்றாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை (தொகுதி - 3) சிதம்பரம், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு. ப. 390.

4) வித்தியானந்தன், சு. (1962) (பதிப்பு) மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள், இரண்டாம் பதிப்பு, கொழும்பு. பக். 9, 10 (தோற்றுவாய்).

5) காண்க: (அ) மலையருவி (1958) கி. வா. ஜகந்நாதன் பதிப்பு, தஞ்சாவூர், தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியீடு. பக். 12-22 (கி. வா. ஜகந்நாதனின் ஆராய்ச்சி உரை).

(ஆ) அழகப்பன், ஆறு. (1980) நாட்டுப்புறப்பாடல்கள் - திறனாய்வு. சென்னை, திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (மறுபதிப்பு), பக். (170 - 182).

(இ) சண்முகசுந்தரம், சு. (1980) நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு, இரண்டாம் பதிப்பு, மணிவாசகர் நூலகம். பக். 1 - 50.

6) சிலப்பதிகாரம், நாடுகாண்காதை. வரி: 127 - 137.

7) நாசீர் அலி, மீ அமு (1979) "திருச்சி மாவட்டம்," தமிழ்நாட்டுப்புற இயல் ஆய்வு, ச. வே. சுப்பிரமணியன் பதிப்பு, சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். ப. 56.

8) முக்கூடற் பள்ளு, செய். 35

9) அய்யாசாமி, ர., "சென்னை", தமிழ்நாட்டுபுற இயல் ஆய்வு. பக். 22.

10) முக்கூடற்பள்ளு, செய்: 125.

11) இராமநாதன், ஆறு. (1982) நாட்டுப்புறப்பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், சிதம்பரம், மணிவாசகர் நூலகம். 270, 271. (மூன்றாம் இயலின் அடிக் குறிப்பு: 40)

12) மேலது. பக். 301, 302 (அடிக்குறிப்பு: 210).

13) சக்திவேல், சு. (1983) நாட்டுப்புற இயல் ஆய்வு, சிதம்பரம், மணிவாசகர் பதிப்பகம். ப. 254.

14) இராமநாதன், ஆறு. மு. கு. நூ. ப. 271 (மூன்றாம் இயலின் அடிக்குறிப்பு)

15) மேலது. பக். 74, 75.

16) குருகூர்ப்பள்ளு. செய். 47.

17) சண்முகம், குருவிக்கரம்மை, "திருமணப் பரிகாசப் பாடல்கள்," தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு. ப. 350.

18) வித்தியானந்தன், சு. மு. கு. நூ. ப. 60.

19) வளவன், சா., "செங்கற்பட்டு மாவட்டம்," தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு ப. 210.

20) முக்கூடற்பள்ளு செய், 53.

21) சண்முகானந்தம், சொ., "தஞ்சை மாவட்டம்," தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு. ப. 134.

22) முக்கூடற்பள்ளு செய். 57.

22) (அ) கைலாசபதி, க. (1979) சமூகவியலும் இலக்கியமும் சென்னை, என்.சி.பி. எச். (ப. 159)

23) திருமலை முருகன் பள்ளு. செய் 133

24) கண்ணுடையம்மன் பள்ளு. செய். 86

25) செங்கோட்டுப்பள்ளு செய். 785

26) முக்கூடற்பள்ளு செய். 63

27) குருகூர்ப்பள்ளு (1932) வெ. நா. ஸ்ரீநிவாஸய்யங்கார் பதிப்பு, ஆழ்வார் திரு நகரி, பக். VI - VII (பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையின் முன்னுரை).

28) கேசவன், கோ. (1981) பள்ளு இலக்கியம் ஒரு சமூகவியல் பார்வை, சிவகங்கை, அன்னம் வெளியீடு ப. 128.

# சிங்கள நாடகமரபில் 'கலைப்பாணி'யின் செல்வாக்கு

- ஜனாப். எம். எஸ். எம். அனஸ். -
[ முதுநிலை விரிவுரையாளர், மெய்யியற்றுறை ]

★ ஸ்டைலைஸ்டு

சமகால சிங்கள நாடக உரையாடல்களில் ஸ்டைலைஸ்டு என்ற சொல் அடிக்கடி இடம் பெறுகிறது. சிங்கள மொழியில்இது ''ஷைலிய'' அல்லது ''ஷைலிகத்த நாட்ய'' எனப்படும், இதனை ''மோடி நெறி'' அல்லது 'மோடியுற்ற' என்று தமிழில் கூறலாம் என கலாநிதி சி. மௌனகுரு கருதுகிறார். 'பத்ததி' என்ற சொல்லால் வெ. சாமிநாதன் குறிப்பிடுவது இதனையே என்று கொள்ளலாம். இக்கட்டுரையில் 'கலைப்பாணி' என்ற சொல் ஸ்டைலைஸ்டையே குறிக்கிறது.

சிங்கள நாடக மரபில் கலைப்பாணி நாடகம் என்பது 'கோலம்' அல்லது 'நாடகம்' அல்லது 'தொயில்' (பேய்விரட்டு) முதலியவற்றில் பயிலப்படும் ஏதாவதொரு பாணியைப் பின்பற்றி உருவாக்கப்படும் நாடகம் எனலாம். ஆயினும் இவற்றுள் ஏதாவதொரு நாடக மரபை பிரதானமாகவும் ஏனைய மரபுகளைப் பொதுவாகவும் தழுவி உருவாகும் நாடகங்களே அதிகமாகும்.

பேராசிரியர் சரச்சந்திரா நிர்மாணித்த ''மனமே'' நாடகம் சிங்களக் கிராமிய நாடகங்களில் ஒன்றான ''நாடகம்'' பாணியைப் பிரதானமாகக்கொண்டு உருவானதாகும். கிராம மக்கள் நன்கு பரிட்சையம் பெற்றிருந்த ''நாடகம்'' வின் சங்கீதம், நடனம், எடுத்துரைப்போன், உத்திகள், குறியீடுகள் முதலியனவற்றை சரச்சந்திரா 'மனமே' நாடகத்தில் பயன்படுத்தினார்.

இயற்பண்பு நாடகத்தில் இருந்து மிகவும் வேறுபட்ட பாணியில் அமைந்த 'மனமே' தற்கால சிங்கள நாடக உலகில் ஒரு புது மாறுதலையும் காத்திரமான நாடக உரையாடலையும் உருவாக்கியது.

★ நடப்பியல்.

நடப்பியலை நாடகமாக்குவதில் இயற்பண்பு நாடகங்களும் கலைப்பாணி நாடகங்களும் வித்தியாசமான போக்கினையுடையன. நடப்பியலில் உள்ளவாறே மேடையில் தருவதிலும் பல்வேறு கலைக் கூறுகளின் பாரம் பரிய போக்கினையும் மனோதர்மத்தையும் இணைத்து இலட்சியப்படுத்தப்பட்ட வடிவாகத்தருவது கலைப்பாணி நாடகங்களின் பண்பெனக் கூறலாம்.

நடப்பியலுக்கு எதிரானது போல் காணப்படும் இக்கலைப்பாணி மரபு இந்திய ஓவியம், சிற்பம் முதலிய எல்லாக் கலை வடிவங்களிலும் வியாபித்துள்ளது. இந்தியக் கலை வடிவங்களில் மட்டுமன்றி ஆசியக் கலைமரபினுக்கே இது பொது அம்சமாகும். இது பற்றி பேராசிரியர் சரச்சந்திரா இவ்வாறு கூறுகிறார்.

''ஆசிய நாகரிகத்தில் நாடகத்தைப் பொறுத்தவரை மட்டுமன்றி ஏனைய கலைகளைப் பொறுத்தும் அடிப்படைக் கருத்து ஒன்று உண்டு. எக் கலையானாலும் நடப்பியலை அல்லது யதார்த்தத்தைக் கைவிடல் என்பதே அது. நடப்பியலுக்கு

எதிரான அணியிலேயே இந்திய, சீன, ஜப்பானிய நாடகங்களைச் சேர்க்க வேண்டும்.''

'கலைப்பாணி' முறை யதார்த்தத்திற்கு எதிரானது என்பதோ அல்லது யதார்த்தத்தைக் கைவிடுகிறது என்பதோ ஒரு விசேட பொருளிலேயே கொள்ளப்பட வேண்டும்.

மொகலாய சிற்றோவியங்களில் வரையப்பட்டுள்ள ஒரு மரம் யதார்த்தத்தில் காணும் எந்த ஒரு மரத்தையும் குறிப்பிடுவதில்லை. அது வேம்போ அலோ அல்ல. ஆனால் அவை மரம் என்ற பொதுத் தன்மையைக் கை விடவில்லை. யதார்த்தம் இங்கு கைவிடப்பட்டுள்ளமை நாமறிந்த அந்தப் பிள்ளையார் கோவில் சந்தி அரச மரம் அங்கு வரையப்படவில்லை என்பது தான். ஆனால் மரங்களின் பொதுமைப் படுத்தப்பட்ட பண்புகளை அல்லது மரம் பற்றி கலைஞன் 'சுய' மாகப் பெற்ற அனுபவத்தை அதில் படைக்க முயற்சித்துள்ளான்.

நாடகக்கலையிலும் இப் பண்பே முக்கியம் பெறுகிறது. நாடகம் அதன் பூரண வடிவிலும் பாத்திர அமைப்பிலும் யதார்த்தத்தின் நேரடிப் பிரதிவிப்பாக அன்றி ஒரு குறிப்பிட்ட கலையொழுங்கில் நிறைவேறுகிறது. நாடக பாத்திரம் நாமறிந்த அந்த கந்தசாமியைக் காட்டவில்லை. ஒரு மன்னனைப் பொறுத்தும் அவ்வாறுதான். ஆடுவதும் பாடுவதும் அபிநயங்கள் செய்வதும் சாதாரணனுக்கோ மன்னனுக்கோ இயல்பான செயல்கள் அன்று. கூத்தின் ராஜா, யதார்த்த ராஜா பெற்றிராத பல புதிய பண்புகளைப் பெற்றிருந்த போதும் அவன் 'ராஜா' என்ற வர்க்கத்தின் தன்மைகளைக் கொண்டவனே.

ஒரு கருத்தில் கலைப்பாணி நாடக கர்த்தா யதார்த்தத்தை கைவிடுவதாகவே தோன்றுகிறார். நடப்பியலோடு ஒவ்வொன்றும் சரிவரப் பொருந்த வேண்டும் என்ற கவலையில் உழைக்கும் இயற்பண்பு நாடக கர்த்தாவினது போக்கினை கலைப்பாணி நாடக கர்த்தாவிடம் காணமுடியாது. அவன் கவனமும் கடின உழைப்பும் நடப்பியலை தன் மனோதர்மத்திற்கியையவும் குறிப்பிட்டக் கலைப்பாணி மரபுகளைச் சம ஒழுங்குடன் நாடகமயமாக்கல் என்ற முக்கிய பணியில் இணையச் செய்வதிலும் முழுமையாக ஈடுபடுத்தப்படுகிறது.

கலைப்பாணி நாடககருத்தா நடப்பியலை உண்மையான வாழ்க்கைபோல அன்றி ஒருவகைக் கற்பனை முறையில் கூறுகிறான் என்ற கருத்தையும் இங்கு நோக்கலாம். 'இயல்பான உலகை அவன் கலைக்கண்ணால் தரிசிக்கிறான்' என்று தயானந்த குணவர்தன கூறுகிறார்.

மொத்தத்தில் நடனம், சங்கீதம், அபிநயம், கவிதை மொழி, முத்திரை ஒவ்வொன்றும் நாடகப்படைப்பில் கலைப் பாணி நாடக கர்த்தாவால் பயன் படுத்தப் படுகிறது. நாடக மயமாக்கலிலும் அதன் வடிவை செழுமைப் படுத்துவதிலும் பல்வேறு கலைக் கூறுகளை ஒரு உயர்ந்த நிலையில் அவன் பொருந்தச் செய்கிறான். 'ஒவ்வொரு அம்சமும் ஒரு ஆதார நிலையில் ஒன்றிற் கொன்று இசைவான எல்லாம் சேர்ந்த முழுமையில் இணைந்த ரூபத்தை அனுபவத்தை தருவன' என்று ஜப்பானிய 'கபூக்கி' நாடகம் பற்றி வெ. சாமிநாதன் கூறுவதை இங்கு கவனத்தில் கொள்ளலாம்.

★ துர்ஷய காவ்ய

கீழைத் தேய நாடக ரசனை தனித்துவமான சில இலட்சணங்களைக் கொண்டது. சங்கீதம், நாட்டியம், அபிநயம், கவிதை மொழி ஒவ்வொன்றும் அவ்விரசனையில் பங்கு கொள்கின்றன. நூல்களின் வாயிலாக அறியக் கிடைக்கும் சமஸ்கிருத நாடகங்களின் ரசனை கீழைத்தேயத்தின் இப் பொதுப்பண்பினை ஒத்ததே. சமஸ்கிருத அல்லது ஹிந்து நாடகம் பொதுவாக 'நிர்த்திய' (ஆடல்) 'கீத' (பாடல்) 'வாத்ய' (வாத்ய இசை) என்ற மூன்றிலும் தங்கியதாகும்.

இவ்வகை நாடகங்களின் விசேட பண்பு நாடக அனுபவத்தில் பார்வைக் குரிய பங்காகும். பல்வேறு கலைகளின்

சங்கமிப்பு 'கட்புலனுக்கினிய' நிலையை உறுவாக்குகிறது. இந்தியன் மிக ஆதிகாலந் தொட்டே நாடகத்தை பார்வைக்குரியதெனக் கருதி வந்துள்ளான். இந்தியனுக்கு நாடகம் 'காணும் காவியமாகும்' நாட்டிய சாஸ்திரம் இதனை 'துர்ஷ்யகாவ்யம்' எனக் கூறும்.முகப்பூச்சு முகமூடிகள், எழுதப்பட்ட முகமூடிகள், பலவித வண்ண ஆடைகள், நடனம், ஒருங்கிசைந்த அங்க அசைவுகள் என்பன கட்புலனுக்கினியதாகின்றன.

★ **மாயை:**

இயற்பண்பு நாடகங்களில் உரையாடல், மேடையலங்காரம், உபகரணங்கள் யாவும் யதார்தத்தை அப்படியே பிரதிபலிக்கும் வகையில் அமைக்கப்படுகின்றன. உடைப் பொருத்தம்; முது பருவத்தைக் காட்டும், நரைமுடி, முகச்சுருக்கங்கள், முதலியன மிக நுணுக்கமாக இங்கு கவனிக்கப்படுகின்றன. வீடு, கந்தோர் என்பன அப்படியே தத்ரூபமாகக் காட்டப்படுகின்றன. யதார்த்த உலகை அப்படியே மேடையில் காட்டும் பகீரதப் பிரயத்தனத்தை இதில் காணலாம். இருந்த போதும் இதுவும் ஒரு மாயையை உருவாக்குமிடந்தான். மேடையலங்காரம், ஒப்பனை போலித் தலை முடி, ஹார்ட் போட் மாளிகை, கென்வஸ் வனாந்தரங்கள் என்பன ஒரு போலியதார்த்தத்தை மேடையில் உருவாக்கும் சாதனங்களே எனக் கூறலாம்.

போலி யதார்த்தத்தை கலைப்பாணி நாடக கர்த்தா உருவாக்குவதில்லை. படச்சட்டக மேடையை அவன் தவிர்கிறான். ஆடுகளத்தின் மூன்று பக்கங்களிலும் பார்வையாளர் அமர அனுமதிக்கப்படுகின்றனர். இயற் பண்பு நாடகத்திற் போல பார்வையாளரும் மேடையும், பார்வையாளரும் நடிகரும் இங்கு அந்நியமாவதில்லை. மாறாக நடிகருக்கும் பார்வையாளருக்கு மிடையில் ஒரு அந்நியோன்ய நிலை பேணப்படுகிறது. நடிகர் சபையிலிருந்தே மேடைக்கு வருவதும் சபையிலிருந்தே மேடை நடிகரோடு இயைந்து நாடகத்தை நகர்த்திச் செல்வதும் கலைப்பாணி நாடகங்களில் சாதாரண நிகழ்ச்சிகளாகும். ஷேக்ஸ்பியருக்குப் பின்னர் மேலை நாட்டு நாடக உலகில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியவரெனக் கருதப்படும் பிரெஃட் மேடையில் உருவாக்கப்படும் போலியதார்த்தத்திற்கு எதிராகச் செயற்பட்டவராகும்.

★ குறியீட்டுத் தன்மை

கலைப்பாணி நாடகங்களே குறியீட்டுத் தன்மைக் குரியன என்று கூறப்படுகிறது. ஆனால் இயற்பண்பு நாடகமும் அதன் எல்லாப் பிரயத் தனங்களையும் கடந்து குறியீடாகவும் போலச் செய்வதாகவும் அமைவதையும் இங்கு நினைவு கொள்ளல் வேண்டும். வாழ்க்கையை உள்ளவாறே மேடையிற் காட்டமுயலும் இயற்பண்பு நாடகம் இடம்பெறும் மேடையும் அரங்கமும் உண்மை வாழ்வைப் பிரதிபலிக்கும் இடமெனக் கொள்ள முடியாது. செயற்கை ஒளியூட்டப்பட்ட மேடை, இருள் கவிந்துள்ள அரங்கம் என்பது மட்டுமல்ல 100 வருட வாழ்வு 2 மணி நேரத்துள் காட்டப்படுவதும் 18 வயதுடையவன் 2 மணிநேரத்துள்ளேயே பேரன் பேத்திகள் காண்பதும் என்று பல உதாரணங்களைக் காட்ட முடியும். 100 வருடத்தையும் அப்படியே காட்டல் வேண்டும் என்ற கவலையே தோன்றாவண்ணம் இரண்டு மணி நேரத்துக்குள் அதன் பூரணத்துவம் இங்கு பிரதி நிதித்துவம் செய்யப்பட்டு விடுகிறது.

பேராசிரியர் சரச்சந்திராவின் பின் வரும் கருத்துக்களை இதனோடு நோக்கலாம். "ஒரு நாடக கர்த்தா மக்களிடம் தானே போவதில்லை. அவரின் நாடக ஆக்கத்தை மக்களின் முன் கொண்டு செல்பவன் நடிகனே. நடிகன் பேசுவது நடிகனின் வசனமன்று. அது நாடக கர்த்தாவின் ஆக்கம் ஆயினும் நாடகத்தை காண்போரின் மனதைப் பிணிக்கும் வகையில் பாவத்தோடும் குரலினை உயர்த்தியும் தாழ்த்தியும் அவ்வசனங்களுக்கு உயிர்த்துடிப்பைத் தருபவன் நடிகனே நடிகன் வெளிப்படுத்தும் உணர்ச்சிகளும் பாவ மாற்றங்களும் பல்வேறு மெய்ப்பாடுகளும் குறியீடுகள் என்று சொல்லத்தக்கனவே."

உண்மையில் அந்த நடிகன் யார் "டொம்" (கண்ணாடி வார்ப்புகள்) என்பவனா? சுட்டே (கெலனிப்பாலம) என்பவனா? மேடையில் ஆடும் நடிகன் இப்பாத்திரங்களை ஏற்றிருப்பவன் மட்டுமே. அவன் டொம் அல்ல சுட்டேயும் அல்ல அவனது வாழ்க்கை வேறு எண்ணங்கள் வேறு. தன் வாழ்க்கைப் பிரச்சினைகளின் அழுத்தம் தாங்காது தலை வெடிக்கும் நிலையில் நின்று குமுறும் டொம்மாக நடிப்பவன் வசதியாக வாழும் முதலாளியாக இருக்கலாம்.

எங்கோ வாழ்ந்த அல்லது வாழ்கின்ற சுட்டேயையும் டொம்மையுமா நாடக கர்த்தா படைத்துள்ளான். அப்படியொரு பெயரில் அப்படியொரு பாத்திரம் வாழ்ந்திருக்குமா? டொம் யாரைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறான். இங்கு காணப்படும் நேரடி யதார்த்தம் என்ன? ஆனால் நடப்பியல் வாழ்வில் சுட்டேயும் டொமும் காணப்பட முடியாதோர் அல்ல. அப்பாத்திரங்கள் வகை மாதிரிகளின் தேர்வுகள் அவர்களின் வாழ்க்கை சமூக வாழ்வின் நகல்கள் குறியீடு என்றும் கூறலாம்.

★ கலைப்பணி மரபில் சங்கேதங்கள்

ஒரு முத்திரை, கையில் பிடித்திருக்கும் ஒரு தடி, ஒரு பாடல் வரி என்பன பிரமாண்டமான செற்களையும் கென்வஸ் வனாந்திரங்களையும் தேவையற்றதாக்கி விடுகிறது. வாகனங்களில் சவாரி செய்வதும் ஆற்றை நீந்திக் கடப்பதும் அபிநயங்களினாலோ பாடல் வரிகளினாலோ உணர்த்தப்படுகிறது - சீன நாடகங்களில் மேடையில் போடப்பட்டிருக்கும் மேசையும் கதிரையும் கொடியும் பல்வேறு காரியங்களைக் குறிக்கும். சங்கேதப் பொருட்களால் பயன்படுத்தப்படுவதாக அறியமுடிகிறது. அங்கு பெரும் புயலும் யுத்தமும் கொடியின் மூலம் காட்டப்படுகிறது. குதிரை வாலையொத்த ஒரு பொருளைக் கொண்டு வருவது குதிரைச்சவாரி செய்வதைக் குறிக்கிறது. இம்மரவில் பயின்று வருவோரை இவை எவ்வித சங்கடத்திலும் ஆழ்த்துவதில்லை.

அரங்க அலங்காரமும், ஒப்பனைகளும் உடையலங்காரமும், கூட கலைப்பாணி மரபில் குறிப்பிட்ட நடப்பியல் நிலைகளுக்கு மாறாக நாடக கர்த்தாவினால் தன் கருத்துக்களையும் இலட்சியங்களையும் பூடகமாக உணர்த்தும் குறியீடுகளாகவே பயன்படுத்தப்படுகின்றன.

நாடகக்கதையை வளர்ப்பதற்கும் நாடகத்தில் உணர்ச்சி பூர்வமான கட்டங்களை உருவாக்குவதற்கும் வசனம் இயற்பண்பு நாடகத்தில் முக்கிய கருவியாகச் செயல்படுகிறது. கலைப்பாணி மரபில் வசனத்தின் முக்கியத்துவம் மிகக் குறைந்ததாகும். முகபாவமும் அபிநயமும் ஆட்டமும் வாத்திய இசையும் உரையாடலின் பணியைச் செய்கின்றன. கவிதை மொழியும் பாடற்குழுவினரின் பாடலும் உணர்ச்சி மயமான சூழலை உருவாக்கி விடுகின்றன. சரச்சந்திராவின் "மனமே", "சிங்கபாகு" என்ற இரு பிரபல நாடகங்களையும் இதற்குரிய உதாரணங்களாகக் கொள்ளலாம்.

சமகால சிங்கள நாடகங்களில் 'மனமே' மேடையேறியதிலிருந்து கலைப்பாணி நாடகங்கள் சிங்கள நாடக உலகில் பெரும் செல்வாக்கைப் பெற்றன. இயற்பண்பு நாடகங்கள் முற்றாகச் செல்வாக்கிழக்காதபோதிலும் கலைப்பாணி மரபின் தேசிய பண்புகளையும் கலை நுணுக்கங்களையும் பெற்றுகோஷனை பெற்றுக் கொண்டது என்று கூறலாம். கிராமிய அல்லது தேசிய நாடக மரபுகளைத் தழுவாது தூய இயற்பண்பு மரபில் உருவான நாடகங்கள் நாடளாவியரீதியில் மக்கள் ரசனையில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்பது இங்கு முக்கியமாகச் சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும். கலைப் பணி மரபினை ஏற்று காவியமாக 'மனமே' மேடையேறியமை நீண்ட கால சிங்கள மக்களின் தேசிய நாடகத்தேடலில் ஒரு சாதனையும் திருப்புமுனையுமாக அமைந்தது.

★ ★ ★

# ஓ... தென்றலே

செல்வன் எஸ். வை. ஸ்ரீதர்.
(விடுகை வருடம், தமிழ்த்துறை, கலைப்பீடம்.)

உன் பார்வை ஒன்றே
போதும்!
என்
உள்ளத்தை தீயாய்
எரிப்பதற்கு !
உன் கண்களை.
இறுக மூடிவிடு !
இல்லை யென்றால்
ஊமை என்னிதயம்
கருகி விடும் !

★ ★

உன் வார்த்தையில்
புதுமை நாட்டமில்லை !
இருந்தாலும்
உன்னால்
உரைக்க முடியவில்லை !
உன் இதயத்தின்
வாசல் திறக்கவில்லை !
திறந்திருந்தால்
உதயத்தில்
எனக் கோர்
இடமிருந்திருக்கும்!

★ ★

மடல்கள் உனக்கு
நான்
வரையவில்லை !
இருந்தாலும்
இதயத்தில்
முட்கள் தைக்கின்றது !
மடக்கி உன்னை நான்
பிடிப்பதற்கு
நானொன்றும்
மரியாதை யில்லாத
கேடியில்லை !

★ ★

அன்று நீ
தென்றலாக
இருந்திருந்தால் – என்
உயிருடன் அல்லவா
இணைந்திருப்பாய் ?
தீயாக நீயிங்கே
இருப்பதனால்
உன்னை
தூரத்தில் இருந்தே
பார்க்கின்றேன் !

★ ★

ஓ... தென்றலே
என்னை
எரிக்காதே - நம்
கடந்த கால
நிகழ்வுகளை
மறந்து விடு !
இல்லையென்றால்
புதைகுழியில் மெதுவாகப்
புதைத்துவிடு !
இது
என் வாழ்வு
மலர வழியாகலாம் !

★ ★

# விபுலாநந்த அடிகளாரின் மானிட நோக்கு

- பேராசிரியர் சி. தில்லைநாதன் -
( தமிழ்த்துறை )

மானிட நோக்கு என்ற சொற்றொடரால் இங்கு கருதப்படுவது யாதென்பதை முதற்கண் கூறிவிட வேண்டும். மனிதனை மதிப்பதையும் அவனுடைய நலத்தில் ஆர்வம் கொள்வதையும் அவனது மேம்பாடுகருதிய காரியங்களை மேற்கொள்வதையும் அது குறிப்பதாகும். மானிட நோக்குடைய பெரியோர் மனித சமுதாயத்தின் சீரான வாழ்க்கைக்கு அனுகூலமானவை எனத் தாம்கருதும் சூழ்நிலைகளைத் தோற்றுவிக்க முயற்சிகளை எடுப்பர்.

பொதுவாக மனிதருக்கு ஏனையவர்களுடன் சேர்ந்து வாழும் இயல்பும், காலத்துக்கும் சூழலுக்கும் ஏற்றவாறு மாறும் திறனும், அபிவிருத்தியடைந்து பண்படும் ஆற்றலும் உண்டென்பர். மனிதநலத்தை மனங்கொண்ட சான்றோர் பலர் உலகின் பல பாகங்களிலும் தோன்றிச் சமுதாய வாழ்வினைச் செம்மை செய்வதற்குகந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். அந்தவகையில் மனிதாபிமான அல்லது மனிதநேய உணர்வின் மூலங்களை உலகின் பண்பாடுகள் பலவற்றிற் காணவியலும். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில்,

> "உண்டா லம்மவிவ் வுலகம் . . . .
> தமக்கென முயலா நோன்றாட்
> பிறர்க்கென முயலுந ருண்மை யானே."[1] என்ற சங்கச் சான்

றோர் இளம்பெருவழுதியின் செய்யுளும்,

> ' மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப
> தன்னுயிர் அஞ்சும் வினை.''[2]

> "தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
> காமுறுவர் கற்றறிந் தார்.''[3]

முதலான குறள்களும் மனிதநேயம் நீண்டகாலமாக வேர்கொண்டிருந்தமைக்கான ஒருசில எடுத்துக்காட்டுகளாகும்.

ஆயினும், மானிடநோக்கு என்று இன்று பொதுவாகக் கருதப்படுவது ஐரோப்பாவிலே பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்க முதல் கலை, இலக்கிய, சிந்தனைத் துறைகளைத் தழுவி வளர்ந்த இயக்கங்களின் விளைவான ஒன்றாகும். வர்த்தகத்துறையில் ஏற்பட்ட பெருமாற்றங்களின் காரணமாகச் சிலரிடத்துச் செல்வம் பெருகியது; வங்கித் தொழில் வளர்ச்சி பெற்றது. அரசுகள் வரிகளை அறவிடலாயின. ஓய்வு நேரம் கிடைத்தவர்கள் கிரேக்க, இலத்தீன் பண்டை இலக்கியங்களைப் பயில்வதிலும், அவற்றின் வடிவநயங்களை வாதிடுவதிலும் சுதந்திரமான சிந்தனைப் பரிமாறல்களிலும் ஆர்வம்கொண்டவராயினர். கல்வி பலரிடையே பரவலாயிற்று. பேரிலக்கியங்களும் முடங்கிக் கிடந்த ஏட்டுச்சுவடிகளும் மக்கள் மத்திக்குவரக் காலான அச்சுயந்திரம் இக்காலத்தில்

ஏற்படுத்திய மாபெரும் புரட்சி மனங்கொள்ளப்பட வேண்டியது. 15ஆம் நூற்றாண்டுக் குப்பின் கல்வியும் இலக்கியமும் மக்களிடையே பெருகிப் பரவியதில் அச்சுவாகனத்தின் பங்கு முக்கியமானதாகும்.

இக்காலப்பகுதியில் பெருவாரியான மக்கள் எதிர்நோக்கிய அநீதிகளையும் கொடுமைகளையும் இன்னல்களையும் புறங்காணத் தலைப்பட்டவர்கள், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தவனாகவும் அனைத்துத் தாபனங்கள் தத்துவங்களினதும் அங்கீகாரத்துக்குரியவனாகவும் மனிதனை நோக்கலாயினர்; மானிட முயற்சிகளிலும் செம்மையிலும் நம்பிக்கை வைத்தனர். மனிதனை மையமாகக் கொண்டு அவனது இன்பங்களைப் பெருக்குவதையும் அவனை உயர்த்துவதையும் குறிக்கோள்களாகக் கொண்டனர். வசதிவாய்ந்தவர்களின் வசதிகளைக் கூட்டுவதைக் காட்டிலும் வசதியற்றவர்களுக்கு வசதிகளை வழங்குவது முக்கியமானதும் அவசியமானதும் ஆகும் என்ற எண்ணம் மேலோங்கியது. அதற்குத் தடையாகக் காணப்பட்ட நம்பிக்கைகளும் பிரிவினைகளும் எதிர்க்கப்பட்டன.

''வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்;
பயிற்றிப் பலகல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்''[4] என்றும்,

''மனிதரில் ஆயிரம் ஜாதி - என்ற
வஞ்சக வார்த்தையை ஒப்புவ தில்லை[5]

என்றும் மகாகவி பாரதி பின்னர் பாடக்காரணமாயிருந்தது மேலைத்தேயச் சிந்தனை வளர்ச்சியின் தாக்கமே என்பதை மறுக்கவியலாது.

மனிதனிடத்திலான தீவிர அன்பு அவனை மகேஸ்வரனின் வடிவமாகக் காணுமளவுக்குப் பலரிடத்துப் பரிணமித்தது. இறைவனையே அவர்கள் அன்பின் வடிவமாகக் காணத் தலைப்பட்டனர். இன்னொரு விடயம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதாவது, தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வல்லமை மனிதருக்கே உண்டு என்ற நம்பிக்கை வளர்ந்தது.

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.''[6]

என்று இரந்துவாழும் இன்னல் வந்தெய்தியதற்கு இறைவனின் மீது பழிபோடும் நிலைக்கும்,

''இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழையராகி யினிமண்ணிற் றுஞ்சோம்
தன்னலம் பேணி யிழிதொழில் புரியோம்''[7]

என்றும்,

''இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்''[8]

என்றும் மானிட சக்தியின் மகத்துவத்தில் நம்பிக்கைவைத்துச் சவால்விடும் நிலைக்கும் இடையே எத்துணை வேறுபாடு உண்டென்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

நவீன மானிட நோக்குப் 18ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் வளர்ந்ததாகும். புதிய வளர்ச்சியும் பலமும் பெற்ற மத்தியதர வர்க்கமே அக்காலச் சிந்தனைப் போக்கைப்

பெரிதும் நிர்ணயித்தது. போருக்குப் பயிற்றப்பட்ட உயர்குடி மக்களைப் போலன்றி மத்திய தரவர்க்கத்தினர் சமாதானத்தை விரும்புவோராக விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

இக்காலப் பகுதியில் மக்களுக்குள் உயர்வுதாழ்வுகளைக் கற்பித்த மூடநம்பிக்கைகள் வலுவிழக்கவும் முற்போக்கான சிந்தனைகள் வளரவும் விஞ்ஞான வளர்ச்சியும் பெருமளவுக்குக் காரணமாயிற்று. 19 ஆம் நூற்றாண்டில் விஞ்ஞான வளர்ச்சி மனிதவாழ்க்கை வசதிகளைப் பரந்த அளவில் அதிகரிக்க உதவியது. மருத்துவத்துறையில் ஏற்பட்ட வளர்ச்சிகள் மனித துன்பங்களைக் குறைக்க உதவின. உற்று நோக்குமிடத்து விஞ்ஞான அபிவிருத்தியானது மானிடநோக்குக்குச் சாதகமான நிலைமைகளை மட்டுமன்றிப் பாதகமான நிலைமைகளையும் தோற்றுவித்தமை புலனாகும். கைத்தொழிற் புரட்சியானது கீழ் மட்டத்து மக்களை இக்கட்டான ஒரு நிலைமைக்கு உள்ளாக்கிற்று. விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள், சிலரிடத்துப் பொருள் குவியவும் ஆக்கிரமிப்புப் போர்கள் வெடிக்கவும் காரணமாகி மனித இன்னல்களைப் பெருக்கவும் செய்தன. இத்தகைய ஒரு சூழ்நிலையில் மனிதாபிமான இயக்கங்கள் மிகுதியாக வேண்டப்படுவனவாயின. அவற்றின் மானிட நோக்குச் சாதி, சமய, இன, அரசியல், கட்சி வேறுபாடுகளைக் கடந்து முக்கியத்துவம் பெற்றது.

சுரண்டலுக்கும் பொல்லாங்குக்கும் எதிரான போராட்டங்களிற் பலமீட்டிய மனிதாபிமான இயக்கங்கள், மனிதகுலத்தின் ஓர் அங்கமாகத் தன்னைக் காண்பதன் மூலமே மனிதன் அமைதி காணலாம் என்னும் கருத்தினை வலியுறுத்தின. மனித குலத்துடனான தனது உறவினைப் பற்றிய மனிதனின் உணர்வே சமயங்களுக்கும் ஒழுக்கவிழுமியங்களுக்கும் சமுதாயங்களுக்கும் அடிப்படையாக அமைந்தது என்பதும் இங்கு அவதானிக்கத்தக்கது.

மனிதவாழ்வை மேம்படுத்துவது சம்பந்தமாக இக்காலத்தில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களுள் இரண்டு முக்கியமானவையாகும். ஒன்று, அரசியல் பொருளாதார அமைப்புக்களை மாற்றுவதன் மூலமே சுரண்டலும் பொல்லாங்கும் ஒழிந்த சமுதாயத்தை உருவாக்கலாம் என்பது. மற்றது, உண்மையையும் உயரும் வழியையும் மனிதருக்கு உணர்த்துவதன் மூலம் மனுக்குலத்தைச் சீர்திருத்தி அறியாமை, அடிமைத்தனம் முதலானவற்றை ஒழிக்கலாம் என்பது. சீர்திருந்திச் செம்மைபெற்று முன்னேறும் உள்ளார்ந்த ஆற்றல் மனிதனுக்கு உண்டென்பது இரண்டாவது வகையினரின் வாதமாகும். அதையே பண்பாடு என்றும் போற்றினர். பண்பாடு என்பதை விளக்கப் புகுந்த மத்தியூ ஆர்னோல்ட், ''ஒருவன் தன் குணநலன்களை நிரப்புவதிலும் தன்னைச் சூழ்ந்திருக்கும் சமுதாயத்தின் நலன்களைப் பேணுவதிலும் பேரார்வம் கொண்டிருக்கும்'' நிலையே அதுவென்றார்.[9]

ஏனைய மனிதர்களை மதிக்காதவன் தனது மதிப்பினையும் இழந்தவனாவான் என்று மனிதாபிமான இயக்கத்தினர் வலியுறுத்தினர். மனிதகுலத்தின் ஒருமைப்பாட்டை அங்கீகரிக்கும் அதேவேளையில் வேறுபட்ட பண்பாடுகளைப் பரஸ்பரம் மதிப்பதே உயர்ந்த மனிதாபிமானப் பெறுமானமென்றும் அவர்கள் கூறினர்.

இன்றைய நிலையினை நோக்கினால், உலகின் பல பாகங்களிலும் பகைமைகள் மோசமாகி மனிதவாழ்வை அச்சுறுத்துவதாய்த் தெரிகிறது. மனிதன் உருவாக்கிய விஞ்ஞான தொழில்நுட்ப சாதனங்கள் மானிடத்தின் கட்டுப்பாட்டில் இல்லை. இன, சமய, பொருளாதார, அரசியல் துறைகளில் புதிய பிரச்சினைகள் தோன்றியுள்ளன. பழைய முரண்பாடுகளும் பிரச்சினைகளும் புத்துருப் பெற்றுள்ளன. புலப்பெயர்ச்சிகளும் விழுமிய மாற்றங்களும் வேகமாக இடம்பெறுகின்றன. விருப்பங்களையும் அவற்றை நிறைவேற்றும் வழிவகைகளையும் ஆற அமர ஆராயுமுன் அடையும் வாய்ப்புகள் கைகூடிவிடுகின்றன.

தொடர்புக்குத் தயாராகுமுன் புதிய பொதுசனத் தொடர்புகள் வளர்ந்து விடுகின்றன. பழையன கழிதலும் புதியன புகுதலும் திம்மாரவாரம், அவசர அவசரமாக நடைபெறுகின்றன. எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சக்திகளால் எங்கள் வாழ்வு நிர்ணயிக்கப்படுகிறதோ என்ற அச்சம் மேலோங்கிக் காணப்படுகிறது. நல்லதையும் தீயதையும் தன்னையும் பிறரையும் புரிந்துகொள்ளும் வாய்ப்புக்கள் அருகிவருகின்றன.

இந்நிலையில், ஏற்றபெறுமானங்களை எங்களுக்கு அளிக்க வல்லவர்களான விபுலாநந்த அடிகளார் போன்றவர்களின் சிந்தனைகளையும் பணிகளையும் நோக்குதல் பயனுடைத்தாகும். பிறர்காணத் தயங்கிய அல்லது தவறிய வாழ்க்கை வளங்களையும் வரலாறுகளையும் விண்டுகாட்டும் வல்லமை பெற்றவர் பொதுப்பணிக்குத் தம்மை அர்ப்பணித்த விபுலாநந்தர். மனித நலனை மனங்கொண்டவிடத்து, பழைய மரபுகளுக்கும் தாபனங்களுக்கும் மாறாகச் சில வேளைகளில் அவரது உள்ளொளி அவரைச் செலுத்தியது. அதற்கு இன்றியமையாத துணிவினையும் பொறுப்புணர்வினையும் அவர் பெற்றிருந்தார். அவர் விண்டுரைத்தவையும் வேண்டியவையும் மானிட நோக்கில் அமைந்தவாற்றைக் காண்போம்.

வாழ்ந்த காலச் சமுதாயத்தின் குறைகளையும், மானிட விருத்திக்கு உகந்த வழிகளையும் பற்றிய தெளிவோடு தொண்டு செய்ய உறுதிபூண்ட விபுலாநந்தரின் குறிக்கோள்கள் பரந்த மானிட நோக்கினை அடிப்படையாகக் கொண்டமைந்தன. 1925 ஆம் ஆண்டு கீரிமலையில் நடைபெற்ற இரண்டாவது மாணவர் காங்கிரஸ் மகாநாட்டிலே தீண்டாமையைக் கண்டித்துப் பேசிய விபுலாநந்தர் வேதங்களிலோ சாஸ்திரங்களிலோ அதற்கு அங்கீகாரம் இல்லை என்றார்.[10] இலங்கைத் தமிழ்மக்கள் மத்தியில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சாதிவழக்கு அன்று பெற்றிருந்த வலுவை எண்ணிப்பார்க்குங்கால் விபுலாநந்தரின் மகோன்னத மனிதாபிமானம் துலங்கும்.

1928 ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது மாணவர் காங்கிரஸ் மகாநாட்டில் மக்களை எதிர்நோக்கிய சமூக, அரசியல், கல்வி, பொருளாதாரப் பிரச்சினைகளைக் குறித்துப் பேசினார். இந்துக்களும் கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் பௌத்தர்களும் ஒன்று சேர்ந்து தேசத்தின் பொதுப்பிரச்சினைகளைத் தீர்க்க உழைக்கவேண்டுமென்பதை வலியுறுத்தினார். கல்வி வசதிக் குறைவுகளையும் பள்ளிசெல்ல வேண்டிய சிறுவர்களில் ஐம்பது சதவீதமானோர் பள்ளிசெல்லாததையும் சுட்டிக் காட்டினார். ஏழைகள் வரி செலுத்த நேர்ந்த அநீதியைக் கண்டித்தார். தமிழ்த்தொழிலாளரின் பிள்ளைகள் கல்வி வசதி அளிக்கப்படாது கூலிவேலைக்குப் பயிற்றப்படும் பிரதேசங்களிற் கல்விப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியமையின் அவசியத்தை வலியுறுத்தினார். பொருளாதார சுதந்திரமற்ற நிலையினையும், வங்கித்தொழிலும் வர்த்தகமும் நாட்டின் பெரும்பகுதிச் செல்வமும் அந்நியர் வசமிருந்ததையும் அவர்கண்டித்தார்.[11]

''நமது இழிவு, இத்தகையதென்று உணருகிற உணர்ச்சி தானும் நம்மவருக்கில்லை. இத்தகைய பரிதபிக்கத்தக்க நிலையினிற்போராகிய யாம் எமது தெய்வமாகிய முருகனிடம் முறையிட்டு அவனுடைய பெருங்கருணையினால் மனத்தில் உற்சாகமெய்தப்பெற்று நம்மையுஞ் சீர்ப்படுத்தி நம்மைச் சார்ந்த பிறரையுஞ் சீர்ப்படுத்துவோமாக.''[12] என அவர் கூறியிருப்பதையும் பார்க்கும்போது மக்கள் குறைகளையும் இன்னல்களையும் அவர் அறிந்து கொண்டமையும் அவற்றை ஒழிக்க முனைந்த விதமும் விளங்கும்.

விபுலாநந்தரின் தொண்டுள்ளம் அவர் ஆற்றிய பல்வகைப் பணிகளால் விளங்கும். ''கூழுணவுதான் கிடைத்தாலும் தமிழ்த் தாயின் அருளெனக் கருதி ஏற்றுக்கொண்டு விரிந்த முறையிலே தொண்டாற்ற வேண்டும்.'' என்ற விபுலாநந்தர் தொண்டு புரிவதைத் தாம் குறிக்கோளாகக் கொண்டதாகக் கூறுகின்றார்.[13] அண்ணாமலை நகருக்கு

வடகிழக்குப் பகுதியிலிருந்த திரு வேட்களச் சேரியிலே தீண்டாதாரிடைத் தொண்டாற்றியதையும் அதனால் தமக்கேற்பட்ட அல்லல்களை அவர் சகித்துக்கொண்ட சிறப்பினையும் பற்றிப் பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் குறிப்பிட்டுள்ளார். [14] மானிப்பாய் இந்துக் கல்லூரியிலே விபுலாநந்தர் தலைமையாசிரியராக இருந்த ஒருநாள், சிவபெருமான் நேரிலே தோன்றினால் என்னவரம் கேட்கலாம் என்ற பேச்சு எழுந்த போது அவர், "நானென்றால் முத்தி தரும்படி கேட்கமாட்டேன். முத்தி என்னளவில் நின்றுவிடும். அதிலும் பார்க்க எல்லோரும் இன்புறும்படி சேவை செய்வதனால் அதிலுள்ள இன்பமோ ஒப்பற்றது." என்று கூறினாராம். [15]

விபுலாநந்த அடிகள், "உணவின்றித் துன்புற்ற தொழிலாளிகளும் ஏழை மக்களும் முதலாளிகளையும் பிரபுக்களையும் அரசகுடும்பத்தையும் அழித்து, விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் என்னும் முழக்கத்தோடு நாட்டிலே புரட்சி செய்தார்கள்......பிராஞ்சிய நாட்டில் எழுந்த "விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம்" என்னும் ஒலியானது எவ்விடத்தும் பரவியது." [16] என்று பிரெஞ்சுப் புரட்சியைப்பற்றி வெகு உற்சாகத்தோடு எழுதுகிறார். "பூவுலகத்துக் கொடுங்கோல் மன்னர்களையும், ஏழைகளை வருத்தும் பிரபுக்களையும், மன்னருக்கும் பிரபுக்களுக்குஞ் சார்பாக வானுலகத்திலேயிருந்து அரசாளுந் தெய்வத்தையும் ஒருங்கு வையத்தொடங்கிய" ஷெல்லியின், "எங்கும் பரந்து உயிர்க்குயிராக விளங்கும் கருணைக் கடலாகிய மெய்க்கடவுளிடத்திலே நிறைந்த பக்தியுள்ள," [17] தன்மையை விதந்துகாட்டுகிறார்.

"வகுப்பு வேற்றுமை காட்டாது, 'எல்லோரும் ஓர்குலம்' என்னும் உண்மையினைக் கடைப்பிடித்து வாழ்ந்து வந்தனர்." [18] என்று இறையடியார் சிறப்பினைப் போற்றுகிறார். "பழைமையும் புதுமையும் துவைதமும் அத்வைதமும் பௌதிக விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானக் காட்சியும், மேற்றிசையறிவும் கீழ்த்திசைச் சமயமும் மன மொடுங்கிய தியான நிலையும் மன்பதைக்குத் தொண்டு புரிதலும் சமரசப்பட வேண்டிய காலம் இது." [19] என்று கருத்துரைக்கிறார். இவற்றையெல்லாம் பார்க்கும்போது விபுலாநந்த அடிகளின் பரந்த மானிட நோக்கு விளங்கும்.

சமயம், கல்வி, நாடு, பண்பாடு ஆகிய துறைகளிலான விபுலாநந்தரின் சிந்தனைகளும் சேவைகளும் எவ்வளவு தூரம் மானிட நோக்கில் அமைந்தன என்பதைத் தனித்தனியே பார்த்தல் வேண்டும். தெய்வங்களை அவர் பலவாறாகப் பரவியபோதிலும், இறைவன் எல்லா உயிர்களிடத்தும் உறைபவன், அன்புருவானவன், அருளுருவானவன், ஆனந்த வடிவானவன், அறிவுவடிவானவன் என்ற உணர்வு இழையோடியிருப்பதையும் சமய சமரச நோக்கு வெளியாவதையும் அவதானிக்கலாம். இறைவனை வேண்டுமிடத்தும் அவர் தன் ஈடேற்றத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்டாரல்லர்.

"மழைவளஞ் சுரந்து மன்னுயி ரோங்குக" [20]

என்று விநாயகரிடத்தும்,

"இனிமை யாகிய யிறைவ நின் னடியிணை
சென்னியின் வாங்கிப் பன்னாள் பரவுதும்
மலர்தலை யுலகின் மன்னுயிர்க் கெல்லாம்
நிலவிய பிறவியை நீத்தல் வேண்டி." [21]

என்று திருமாலிடத்தும் வேண்டுகிறார். "யாம் நற்செயல்களையே புரியுமாறு இறைவனெம்மோடு உடனிருந்து அருள்புரிக. அன்புவெள்ளம் யாண்டும் பரவுக. அனைத்துயிருக்கும் ஆறுதலுண்டாகுக." [22] என்கிறார்.

இந்துமதத்தைப் பற்றிக் கூறுமிடத்து அது "தன்னைக் கைக்கொண்டொழுகும் மானிடரைத் தேவராக்குவது"[23] என்று விபுலாநந்தர் கூறுகிறார். தேவர் நிலை என அவர் கருதியது, 'பொய், கயமை, சினம், சோம்பல், கவலை, மயல், வீண் விருப்பம், புழுக்கம், ஐயம் என்னும் பேய்களையெல்லாம் வெட்டிவீழ்த்தி, எஞ்ஞான்றும் ஆனந்தத்தோடு வாழ்ந்து எல்லா உயிர்கட்கும் இனிது,[24] செய்யும் நிலையினையே.

சத்தியம், பொறுமை, தயை ஆகியவற்றைப் பெருக்கிக் கொள்பவரிடம் தோன்றும் ஆற்றலைத் தேசத்து முன்னேற்றத்துக்கு இன்றியமையாத ஆன்ம சக்தி என்று வர்ணிக்கிறார்.[25] தயைக்கு அழுத்தம் கொடுக்கும் விபுலாநந்தரின், "ஜீவதயையில்லாதோன் சிவனிடத்து அன்புடையவனாகான். தயையுடையவனிடத்துத் தந்நலமறுப்புத் தோன்றும்."[26] என்ற கூற்று ஊன்றி அவதானிக்கத் தக்கது.

இடையறா முயற்சியினையே தவமெனக் கொண்டமையும்,[27] தம்மை மட்டுமன்றிப் பலரைக் கைகொடுத்துக் கரை சேர்க்க வல்லவரையே அவதார புருஷர் என மதித்தமையும்[28] கூட மானிட நலநோக்கோடு இசைந்தவையே.

1922 ஆம் ஆண்டு இராமகிருஷ்ண இயக்கத்தை நோக்கிச் சென்ற மயில்வாகனனே 1924 இல் துறவு பூண்டு விபுலாநந்தர் ஆனார். அவர் தேர்ந்தெடுத்த மார்க்கம் இராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடரான சுவாமி விவேகாநந்தரால் உருவாக்கப்பட்டது. புத்தகங்களையோ தத்துவங்களையோ விட்டுச் செல்லாவிட்டாலும், உள்ளொளியும் மதிநுட்பமும் வாய்க்கப்பெற்ற இராமகிருஷ்ணர் சமயவரலாற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவர்; உண்மையையே தெய்வமாகவும் மனித சேவையையே மகேஸ்வர சேவையாகவும் கண்டவர். அவரிடத்தும் அவரது போதனைகளிலும் விபுலாநந்தர் கொண்ட மதிப்பும் பற்றும் குருதேவர் வாக்கியம் என்ற கவிதைப் பகுதியில் நன்கு விளங்குகிறது.[29]

அடிமைத்தனம், அறியாமை, வறுமை, ஒடுக்குமுறை, சமுதாய ஏற்றத் தாழ்வுகள் முதலானவற்றுக் கெதிராக வெகுண்டெழுந்த விவேகாநந்தர் ஏழைகளிடத்தும் தாழ்த்தப்பட்டவர்களிடத்தும் மெலியோரிடத்தும் பேரன்பு கொண்டவர்; "உலகின் அனைத்துச் செல்வங்களைக் காட்டிலும் பெறுமானம் மிகுந்தவர்கள் மனிதர்கள்"[30] எனக்கொண்டு மனிதனின் துயர் துடைக்கப் புறப்பட்டவர். விவேகாநந்தரிடத்து விபுலாநந்தர் கொண்ட ஆத்மார்த்த ஈடுபாட்டினைப் பலவிடங்களிலே துலாம்பரமாகக் காணமுடியும். இராமகிருஷ்ண மடத்துக்கும் சிறப்பாயுரிய மானிடநோக்கு விபுலாநந்தரிடத்து விளக்கம் பெற்றது.

கல்வியின் அவசியத்தையும் கல்லாமையினால் உண்டாகும் கெடுதிகளையும் விபுலாநந்தர் திரும்பத்திரும்ப வற்புறுத்தினார். சமூக, அரசியல், பொருளாதார, ஆன்மீக விடுதலைகளுக்கெல்லாம் கல்வி அடிப்படையாக அமைவதென்பதை அவர் உணர்ந்திருந்தார். கல்வி மக்களிடையே கட்டுப்பாடுகளின்றிப் பரவவேண்டுமென்றும் அறியாமை ஒழியவேண்டுமென்றும் விரும்பியதால் அதற்கு உகந்த பணிகளில் அவர் ஈடுபட்டார். பல்கலைக்கழகத்தை வாழ்க்கை முன்னேற்றத்துக்கு இன்றியமையாத சாதனமாகவும், குடியியல் அரசியல் பொறுப்புள்ளவர்களை உருவாக்க உதவும் ஒன்றாகவும் அவர் வரவேற்றார்.[31]

தமிழிலக்கியத்தையும் தமிழர் வரலாற்றையும் தமிழ்மக்கள் கற்றுணரவேண்டுமென்று விபுலாநந்தர் விரும்பினார். பண்டைச் சிறப்புக்கள் குறித்துச் சிலர் பேசுவது மக்களை மகிழ்விப்பதற்கும், அவர்தம் உணர்ச்சிகளைத் தூண்டி அவர்களது ஆதரவையோ தமது புகழையோ வளர்ப்பதற்குமே. ஆனால், விபுலாநந்தர் நிகழ்காலச் செம்மையையும்,

எதிர்கால நன்மையையும் கருத்திற் கொண்டார். ''......... எதிர்காலத்தில் நம் குலத்து திப்போர் எய்தப் போகின்ற சிறப்பினையும், ஆங்கவர் சிறப்பெய்தும் வண்ணம் இன்று நாம் செய்தற்குரிய தமிழ்த் தொண்டினையும் வகுத்துக் கூறுமியல்பினதாகல் வேண்டும். சென்ற காலத்துச் சீரினை எதிர் காலத்தாருக்கு இயைவிக்கும் நிகழ் காலத்து வினையாகிய தமிழ்த் தொண்டானது மும்மையினையும் தழுவி நின்றது.'' 32 என்று அவர் கூறினார். சென்ற காலத்து முன்னோர் வாழ்ந்த சீரினை அறிதல் எதிர்காலத்தில் சீருடன் வாழவேண்டுமென்ற உணர்வினைத் தூண்டுவதாக இருக்கவேண்டுமென்று அவர் விரும்பினார். பண்பாட்டு, வரலாற்று, இலக்கிய, கலை மரபுகளை இனங்கண்டு பேணுவது சமுதாயத்தினைப் பொறுத்தவரை தேவையும் மதிப்பும் வாய்ந்த ஒன்று என்றே கருதப்படுகின்றது. ஏனெனில், தாம் யாரென்பதையும் எங்கிருந்து வந்தவர்கள் என்பதையும் எத்தகைய அனுபவங்களையும் மாறுதல்களையும் கண்டவர்கள் என்பதையும் அறிந்து கொள்வதில் மக்களுக்கு இயல்பான ஆர்வம் உண்டு.

தாய்மொழி மூலமான கல்வி பற்றிய அவரது கருத்து அவருடைய மானிட நோக்கினைத் தெளிவாகக் காட்டுவதாகும். கல்வியின் மூலமாக அறிவினைப் பெருக்குவது பற்றியும், அறிவு வளர்ச்சிக்கும் ஆராய்ச்சி வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்வது குறித்தும் பேசுவார் உளர். விபுலாநந்தரைப் பொறுத்தவரை அறிவு மக்களிடைப் பரவிச் சுவறிப் பயன்பட வேண்டுமென்பதே முக்கியமானது ஆகும். தன் தாய் மொழியிற் கல்விகற்ற ஒருவனைப்பற்றி அவர் பின்வருமாறு கூறுகிறார். ''தாய்மொழியிற் கல்வி பயின்றவனாதலாற்றன்னூர்க்குச் சென்றதும் தான் பெற்ற செல்வத்தைப் பிறரும் அனுபவிக்கும்படி கொடுக்கிறான். இதனால் இவன் பயின்ற கல்வி ஆயிரமடங்கு பயன்தருகிறது. நம்நாட்டில் வறியோர் கொடுக்கும் வரிப்பணத்தைக் கொண்டு உயர்தர கல்விச் சாலைகள் நடத்தப்படுகின்றன. ஆதலால் இக்கல்விச் சாலைகளினின்று பிறக்கும் கலையறிவு அனைவர்க்கும் பயன்தருவதன்றோ நீதியும் மரபுமாகும்.''33

இக்காலத்துக்கு வேண்டிய கலைச்செல்வங்கள் யாவும் எம்மக்கள் மத்திக்கு வர வேண்டுமென்ற வேட்கை மிகுந்தவர் விபுலாநந்தர். ''......மேற்றிசைக் கலைத் துறைகளின் சிறப்பினையுணர்ந்து அவை எப்பாலாரிடத்தும் பரவவேண்டுமென விழைந்து நிற்பது முறையேயாம்.'' 34 என்று அவர் கூறியதை நோக்கவேண்டும். பிற மொழிகளைக் கற்று அவற்றின் வாயிலாகத் தேடக்கூடிய அறிவுச் செல்வங்களை எல்லாம் தேடவேண்டுமென்று கருதிய விபுலாநந்தர், அவற்றைத் தம்மக்களுக்கு அவர்களுடைய மொழி மூலம் கிடைக்கச் செய்யவேண்டுமென்பதில் கவனம் மிகுந்தவராக விளங்கினார்.

சுவாமி விபுலாநந்தர் இசை, கவிதை, நாடகம், நடனம் முதலான கலைகளில் புலமையும் ஈடுபாடும் ஆற்றலும் மிகுந்தவராக விளங்கினார். உயர்ந்த உணர்வானுபவங்களையும் பெறுமானங்களையும் மக்களிடையே வளர்க்கும் வீறார்ந்த வல்லமை கலைகளுக்கு உண்டு. சமுதாய முக்கியத்துவம் வாய்ந்த உயர்கருத்துக்களுக்கு எக்காலத்திலும் கலைத்துறையில் மதிப்பிருக்கும். அழகினைத் தேடிக் காண்பதற்கு உதவுவதோடு, மானிடவாழ்வுக்கு வளமூட்டவும் கலைகளால் முடியும். மனிதநேயமற்றவன் அழகினை எதிலாவது காண்பானோ என்பது சந்தேகத்துக்கிடமானது. ஆனால், மனித உள்ளங்களிலே பெறுமதிமிக்கவற்றைப் பாதுகாக்கவும், சினம், அச்சம், கவலை, கசப்பு, நம்பிக்கையீனம் முதலான சிறுமைகளைப் போக்கவும் உறுதிபூண்ட ஒரு மனிதாபிமானிக்குக் கலைத்துறை பெரிதும் உதவக்கூடியது.

சுவாமி விபுலாநந்தர் இயலிசை நாடகம் என்ற தமது கட்டுரையிலே தமிழ் நூற் பரப்பினைப் பற்றிப் பேசுமிடத்து, ''சமண பௌத்த முனிவர்களும் சைவ வைணவப் பெரியார்களும் செய்தது போலவே அண்மையிலே இந்நாட்டினரோடு கலந்த இஸ்லாமிய கிறிஸ்தவ சகோதரர்களும் தத்தம் சமயவுண்மைகளைப் பொதிந்த நூல்களைத் தமிழ்

மொழியிலே எழுதி வெளியிட்டனர். அங்ஙனமாதலின் தமிழ்வளர்க்கும் மா நா டு க ளு ம் உண்மை ஞானிகளைப் போலவே சாதி மத வேறுபாடின்றி மன்பதையோ ரனைவரையும் ஒப்பநோக்கு மியல்பினவாதல் வேண்டுமென்பது வெளிப்படை."[35] என்கிறார். இப்பகுதியில் விபுலாநந்தரின் விசாலமான மானிடநோக்குத் துலாம்பரமாகத் தெரிகிறது.

உண்மையினையும் அழகினையும் செம்மையினையும் காண விழைந்தவர் விபுலாநந்தர்.[36] எனவே, மனிதவாழ்வில் அவை வாய்ப்பதற்கு வேண்டிய பணிகளுக்கு அ வ ர் தம்மை அர்ப்பணித்தார்.

அடிக்குறிப்புக்கள்

01. புறநானூறு — 182

02. திருக்குறள் — 244

03 திருக்குறள் — 399

04 முரசு — 30

05. உயிர்பெற்ற தமிழர் பாட்டு, 1

06. திருக்குறள் — 1062

07. மகாகவி பாரதி, எங்கள் நாடு, 3

08. மகாகவி பாரதி, பாரதஸமுதாயம், 2

09. எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழர் பண்பாடு, சென்னை (ஐந்தாம்பதிப்பு) 1961, பக். 2.

10. Kadirgamar, Santasilan, **Handy Perinbanayagam-A Memorial Volume**, Jaffna. 1980, p. 22.

11. அதே நூல், பக். 42-44.

12. அம்பிகைபாகன், ச. (தொகுப்பாசிரியர்) விபுலாநந்தர் உள்ளம், யாழ்ப்பாணம், 1976. பக். 8, 9.

13. அதே நூல், பக். 62.

14. சற்குணம், எம். (மலர் ஆசிரியர்) அடிகளார் படிவமலர், காரைதீவு, 1969, பக். 26.

15. சரவணபவன், சோம, ஈழமணி (விபுலாநந்தர் நினைவுமலர்), கொழும்பு, 1948, பக். 46.

16. விபுலாநந்த அடிகள், இலக்கியக் கட்டுரைகள், கொழும்பு 1973, பக். 97.

17. அதே நூல், பக். 97.

18. அதே நூல், பக். 165.

19. அதே நூல், பக் 176.

20. செல்வநாயகம், அருள். (தொகுப்பாசிரியர்) விபுலாநந்தக் கவிமலர், யாழ்ப்பாணம். 1965, பக். 5.

21. அதே நூல், பக். 11.

22. விபுலாநந்தர் உள்ளம், பக். 20.

23. அதே நூல், பக். 37.

24. அதே நூல், பக். 39.

25. அதே நூல், பக். 43-45.

26. அதே நூல், பக். 46.

27. அதே நூல், பக். 1.

28. விபுலாநந்தக் கவிமலர், பக். 66.

29. அதே நூல், பக். 55-83.

30. Vivekananda, On India and Her Problems, Himalayas, 1946, p. 17.

31. விபுலாநந்தர் உள்ளம், பக். 25.
Kadirgamar, S. op. cit. P. 42.


32. இலக்கியக் கட்டுரைகள், பக். 68.

33. அதே நூல், பக். 109 - 10.

34. அதே நூல், பக். 153.

35. அதே நூல், பக். 76 - 77.

36. அதே நூல், பக். 68, 77.



# மௌன ராகம்!

செல்வன் எம். ராஜன் நசூர்தீன்
(விடுகை வருடம், கலைப்பீடம்)

நந்தவனங்கள்
நகர்ந்து போக
பார்வை வாகனம்
முட்டி மோத
மௌன முத்தங்கள்
முகவரி தேடும் !

● ●

உணர்ச்சிப்
பிரளயத்தின் கொடூரம்
பாவம் !
ராத்திரிகள் இங்கே
ரணமாகிப்போகும் !

● ●

பருவப் போராளிகளின்
படையெடுப்பு -
'பக்குவம்'
தூள்தூளாகிப்போகும் !

● ●

ஆசைகளின்
அத்திபாரம்
சில நேரம்
அவமானமாளிகைகளைக் கூட
கட்டியெழுப்பிவிடும் !



● ●

நேச முகவரிகள்
அஞ்சல் செய்த
அழகோவியங்கள்
இதயச் சுவரில்
சாகாவரத்தைப்
பெற்றுக்கொள்ளும் !

● ●

கனவுக்கடலில்
காதல் முத்து
தேடல் முடிய
கவிதை மாலை
கையில் சேரும் !

● ●

காலக் கவிஞன்
கண்களுக்குள்
காதலை விதைத்து
கண்ணீரை
அறுவடை செய்ய
நெஞ்சக் களஞ்சியம்
சேமிப்புக்கு
ஆயத்தமாகும் !

● ●

# இலங்கையில் தமிழ்த் தேசிய வாதத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

கலாநிதி அம்பலவாணர் சிவராஜா
முதுநிலை விரிவுரையாளர்
(அரசறிவியற்றுறை)

## 1. தோற்றம்:-

இலங்கைத் தமிழ் தேசியவாதத்தின் தோற்றம் சிங்கள தேசிய வாதத்தின் எழுச்சியோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள போதிலும் அதன் வேர்களை 19ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற இந்து மத மறுமலர்ச்சி இயக்கத்திலும், பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்கெதிராகத் தோற்றம் பெற்ற யாழ்ப்பாணச் சங்கம், தமிழர்மகா ஜன சபை, யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்பவற்றிலும் குறிப்பாக பதின்மூன்றாம் நூற்றாண்டில் இலங்கையின் வட பகுதியில் தோன்றிப் பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பம்வரை ஆட்சி செலுத்திய சுதந்திர யாழ்ப்பாண இராச்சியத்திலும் காணக்கூடியதாகவுள்ளது. உண்மையில் சுதந்திரத்துக்கு முற்பட்ட காலத்தில் ஆங்கிலம் கற்ற தாராண்மை வாத உயர்ந்தோர் குழுவினரால் முன்வைக்கப் பட்ட பல் இன தேசம், மதசார்பின்மை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட இலங்கையர் தேசியவாதம் என்பதற்குப் பதிலாக சிங்கள மொழி, பௌத்த மதம் என்பவற்றை வற்புறுத்தும் சிங்கள தேசிய வாதத்தின் தோற்றத்தின் பிரதித்தாக்கமாகவே தமிழ்த்தேசிய வாதம் தோற்றம் பெற்றது. இது தொடர்பாகப் பேராசிரியர் அரசரத்தினம் அவர்கள் குறிப்பிடும் போது ''சிங்களத் தேசிய வாதத்தின் எழுச்சியின் தவிர்க்க-முடியாத விளைவு தமிழர்கள் அந்நிய மயப்படுத்தப் பட்டமையும் இத்தகைய தேசியவாதத்திலிருந்து அவர்களைத் தள்ளி வைத்ததுமாகும் அதனால் அவர்கள் தமது சொந்தத் தேசிய வாதத்திற்கும் பிரிவினைக்குமான ஒரு மரபுரீதியான சட்டத்தினைக் கட்டியெழுப்புகிறார்கள்...... எதிர்பார்த்தபடி தமிழ்த்தேசிய வாதம் சிங்களத் தேசிய வாதத்தின் எதிர் விளைவாகவும் பலத்திலுமே வளர்ந்தது.[1]

## 2. தேசிய - வாதம் என்ற எண்ணக் கரு:-

தேசிய வாதம் என்பது உள்ளத்தின் ஒரு நிலை. தனிப்பட்டவன் தனது உயர் பணிவினைத் தேசிய அரசுக்கு அளிக்கும் நிலையே அதுவாகும். ஒருவன் தன் சொந்த மண்ணின் மீதும் உள்ளூர் மரபுகள் மீதும், வரலாறு முழுவதும் பல பட அமைந்த எல்லைகளுக்குட்பட்ட நிறுவப் பட்ட அதிகாரம் என்பவற்றோடும் கொண்டுள்ள ஆழமான பற்றுதலே அதுவாகும். இருந்தும் 18ம் நூற்றாண்டுக்குப் பின்னரே தேசிய வாதம் என்பது மனிதரின் பொது, பிரத்தியேக வாழ்க்கையினை ஒழுங்கு படுத்தும் அங்கீகரிக்கப்பட்ட உணர்வாக வளர்ச்சியடைந்தது. மிகவும் அண்மைக்காலம் அளவிற்றான் ஒவ்வொரு தேசிய இனமும் தமக்கெனச் சொந்தமான அரசினை உருவாக்க வேண்டும்; அவ்வரசு முழுத்தேசிய இனத்தையும் உள்ளடக்கியிருக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

ஆரம்பத்தில் குலமரபுக்குழு, உறவினர்கள் அடங்கிய குழு, நகர அரசு. மானியப் பிரபுக்கள் போன்றவற்றுக்கே மனிதனது பணிவு இருந்துவந்தது. வர

லாற்றின் உயிருள்ள சக்திகளின் வெளிப் பாடே தேசிய இனங்களாகும். ஆகவே அவை தளம்பலுள்ளவையாகவும், மிகக் கூடிய சிக்கலும் கலப்பும் நிறைந்த குழுக் களாகவும் இருந்தன. பெரும்பாலான இத்தகைய குழுக்கள் புலனால் அறியக் கூடிய அம்சங்களைக் கொண்டனவாயிருந் தன. இவையே அவற்றை மற்றைய தேசிய இனங்களிலிருந்து வேறுப டுத்திக் காட்டின. பொதுவான பாரம் பரியம், மொழி, பிரதேசம், அரசியல் ஸ்தாபனங்கள், மரபுகள், மதம் போன்ற வையே அவையாகும். ஆனால் மேற்கூறிய அம்சங்களில் ஒன்று கூட தேசிய இனத்தின் வாழ்வுக்கு அல்லது வரைவிலக்கணத்துக்கு அத்தியவசியமாகப் படவில்லை. உதார ணமாக அமெரிக்கர்களை ஒரு தேசிய இனமாகக்கொள்வதற்கு அவர்கள் ஒரு பொதுவான பாரம்பரியத்தைக் கொண்ட வர்களாய் இருக்கவில்லை. சுவிற்சர்லாந்து மக்கள் மூன்று அல்லது நான்கு மொழிக ளைப் பேசியபோதும் சிறப்பான ஒரு தேசிய இனமாக ஒன்று சேர்ந்துள்ளனர். ஆகவே புலனால் அறியக்கூடிய அம்சங்கள் தேசிய இனங்கள் உருவாவதற்கு முக்கிய காரணிகளாக அமைந்த போதிலும் ஒன்று கூடி வாழ்வதற்கான தீவிரமான விருப் பமே மிக முக்கிய காரணியாக அமைந்துள் ளமை தெரிய வருகிறது. இந்த விருப்பத் தையே நாம் தேசிய வாதம் என அழைக் கிறோம்.

நவீன உலகில் பெரும் ஊக்குசக்தியாக தேசியவாதம் விளங்குகின்றபோதிலும் எல் லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதொரு வரைவிலக்கணம் அதற்கு இல்லை. கான் ரன் ஜே. கெய்ஸ் என்பவர் தேசியவாத மென்பது "நாட்டுப்பற்று தேசிய உணர் வுடன் ஒன்றினைவதாகும். மற்றைய எல் லாப் பணிவுகளையும் விட நாட்டுப்பற் றுக்கு முக்கியத்துவம் வழங்குவதே இது"[2] என வரைவிலக்கணப் படுத்தினார். தேசிய வாதம் பின்வரும் இயல்புகளைக்கொண்டி ருக்கும் எனலாம்.

(1) நீண்ட கால சமூகத் தொடர் புகள், ஒரு தேசம் உருவாதல் என்ப வற்றின் காரணமாக "நாம் ஒரே குழு" என்ற உணர்வினைக் கொண்டிருத்தல்.

(2) "நாம் ஒரே குழு" என் எண் ணும் குழு ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தி னைத் தனக்கெனக் கொண்டிருப்பதோடு அதனை வெளியார் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்க முயலும்.

(3) அக்குழு தனியொரு மொழியினை அல்லது தொடர்புள்ள பேச்சு வழக்குக ளைக் கொண்டிருக்கும்.

(4) மதம் ஒரு தேசிய இனத்தை ஒன்றினைக்கும் அம்சமாக இருக்கும்.

(5) கடந்த காலங்களில் ஒன்றி ணைந்து பல சாதனைகள் செய்ததாகவும் வருங்காலத்தில் அத்தகைய சாதனைக ளைச் செய்ய விரும்புவதாகவும் இருக்கும்,

(6) பல தேசிய வீரர்களை உருவாக் கக் கூடியதாக இருக்கும்.

(7) மேற்சொன்ன அம்சங்களோடு ஒற்றுமைப்படுவதற்கான உந்துதல் அல்லது திட்டவட்டமான மனோநிலை.

மேலைத் தேச தேசியவாதம், ஆசிய தேசிய வாதம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்கிய யோன் கென்னடி என்பவர் மேலைத் தேசத்தின் செல்வாக்கு களற்றதோடு ஆசிய சமூகத்தின் மரபுரீதி யான பெறுமதிகளையும் சாதனைகளையும் ஆசிய தேசிய வாதம் வற்புறுத்துகி றது என்றார். மார்க்சியவாதிகள் தேசிய வாதம் என்பது முதலாளித்துவ யுகத்துக் கேயுரிய பிரத்தியேகமான ஒரு அம்சம் எனவும் முதலாளித்துவத்தின் வீழ்ச்சியு டன் தேசிய வாதம் அழிந்து விடும்: என வும் வாதிடுகின்றனர். ஆகவே தேசிய வாதம் என்பது இடத்துக்கிடம் வேறுபடு வதோடு ஒரு சிந்தனையாளர் குழுவின் விளக்கத்திலிருந்து இன்னொரு சிந்தனை யாளர் குழுவின் விளக்கம் வேறுபடுகின் றது என்பதும் தெரிகின்றது. பொதுவாக தேசிய வாதம் என்பதை பொதுவரலாறு, மதம், பொதுப்பிரதேசம், இனத்துவம், மொழி என்பவற்றின் பல்வேறு அளவி லான சேர்க்கைகளினால் ஆன ஒரு கூட்டு

அடையாளத்தையும் ஒரு குழு உணர்வினையும் ஏற்படுத்தும் ஒரு உணர்வு எனலாம். இக்கூட்டுக்குழுவினை மேற்சொன்ன அம்சங்கள் காரணமாக மற்றைய தொகுதி மக்களிடமிருந்து பிரித்துக்காட்ட முடியும்.

3. வளர்ச்சி

தென் இலங்கையில் எழுந்த பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தைப் போல இந்து மறுமலர்ச்சியும் கிறிஸ்தவ மிசனறி நடவடிக்கைகளுக்கு எதிரானதாகவே தோற்றம் பெற்றது. இந்த இயக்கத்தினைத் தனி ஒருவராக நின்று வழிப்படுத்தியவர் ஆறுமுகநாவலர், அவர் சைவ சித்தாந்த இந்து சமயத்தின் பெறுமதிகளை உணர்த்திய பெருமகன், தமிழ் அறிஞர், அவர் தமிழ் வசன நடைக்கு ஆற்றிய தொண்டு போல அவருக்கு முன்னரும் பின்னரும் எவரும் இது வரை தொண்டாற்றவில்லை; நடைமுறையில் வடமாகாணத்தில் நவீன தமிழ்க் கலாச்சாரத்தை ஒரு உயிருள்ள சக்தியாக ஆக்கியவர் அவரே. நாவலர் கிறிஸ்தவ சமயத்துக்கு எதிராகத் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டது, மாத்திரமல்லாது பாலர் வகுப்பு, இரண்டாந்தர பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தேவையான பாடநூல்களையும் எழுதி வெளியிட்டார். அவர் சைவ பரிபாலன சபை என்ற ஒரு இந்து அமைப்பினை ஏற்படுத்தி சமய விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்தினார். இச்சபை இந்துப் பிள்ளைகளுக்கு சமயப் பின்னணியில் கல்வி போதிப்பதற்காக பல இந்துப் பாடசாலைகளை ஆரம்பித்தது, நாவலர் தனியே மத, கல்வி விடயங்களுடன் மாத்திரம் கட்டுண்டிருக்கவில்லை. 1876 இல் ஏற்பட்ட தீவிரமான பஞ்சத்தின் போது நிவாரண நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தார். வடக்கில் கலால் இயக்க நடவடிக்கைகளைக்கொண்டு நடத்தினார், 1879 இல் திரு. (பின்னர் சேர்) பீ. இராமநாதனை இலங்கைச் சட்ட சபைக்குத் தமிழ் பிரதிநிதியாகத் தெரிவு செய்வதற்குப் பிரச்சாரம் செய்தார்; இவ்வாறு நாவலர் மத ஈடுபாட்டில் மறுமலர்ச்சியினை ஏற்படுத்தியதோடு சமூக - அரசியல் விடயங்களிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இவரது நடவடிக்கைகள் பின் எழுந்த தமிழ்த் தேசியவாத உணர்வுக்கு முன்னோடியாக அமைந்தது.

பிரித்தானியரின் ஆட்சிக் கெதிராக அரசியல் சீர்திருத்தம் கோரிப் பின்வரும் மூன்று தமிழர் இயக்கங்கள் கிளர்ச்சிகள் செய்தன.

(1) யாழ்ப்பாணச் சங்கம் (2) தமிழர் மகாஜன சபை (3) யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்; இவற்றுள் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் என். எச். பேரின்ப நாயகம், சீ. பாலசிங்கம், எம், என். பாலசுந்தரம், வீ. கந்தையா, ரி. சீ. இராசரத்தினம், பீ. நாகலிங்கம் போன்ற பிரமுகர்களைக் கொண்டிருந்ததோடு டொனமூர் அரசியல் யாப்பின் கீழ் நடந்த முதலாவது அரசாங்க சபைக்கான தேர்தல்களை வடக்கில் பகிஸ்கரிப்புச் செய்வதனை ஒழுங்கு செய்வதில் வெற்றியும் கண்டது.

அம்பலவாணர் கனகசபை, பீ. இராமநாதன் என்போரால் உருவாக்கப்பட்ட தமிழர் மகாஜன சபை உள்ளூர் தமிழரின் கலாச்சாரத்தினை வரையறை செய்து பரப்பும் நோக்குடனேயே ஆரம்பிக்கப்பட்டது. இராமநாதன், வாக்குரிமை கட்டுப்பாடற்ற முறையில் விஸ்தரிக்கப் படுவதனை எதிர்த்ததோடு டொனமூர் ஆணைக் குழுவின் சிபார்சுகளையிட்டும் அதிருப்தி கொண்டிருந்தார்.

இவ்வாறு சிங்களத் தேசியவாதத்துக்கு எதிராகத் தமிழ்த் தேசிய வாதம் வளர்வதற்கான அரங்கு உருவாக்கப் படலாயிற்று. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப கட்டத்தில் தமிழ் தேசிய வாத உணர்வினை வளர்ப்பதில் பல ஒழுங்கமைப்புக்கள் எழுந்ததோடு சஞ்சிகைகளும் நூல்களும் வெளியிடப் பட்டன. செல்வாக்குமிக்க தனிப்பட்ட வர்களும் இதில் சேர்ந்து கொண்டனர். பின்வரும் ஒழுங்கமைப்பு புதினத்தாள்களும் தமிழர்களின் ஒரு தனியார் கலாச்சாரக் குழு என்பதை பராமரித்து வளர்ப்பதில் முன்னிடம் வகித்தன.

1. தமிழர் மகாஜன சபை.

2. வடக்கில் இருந்த கிராமச் சங்கங்கள்.

3. வடமாகாண ஆசிரியர் சங்கம்.

4. உதய தாரகை

5. கத்தோலிக்க பாதுகாவலன் (புதினத்தாள்)

6. சைவ பரிபாலன சபையினால் வெளியிடப்பட்ட "இந்து தருமம்"

1944 ல் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் தலைமையின் கீழ் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டு ஐம்பதுக்கு ஐம்பது என்ற கோரிக்கை முன் வைக்கப் பட்டதோடு தமிழ்த் தேசிய வாதம் துரிதவளர்ச்சி கண்டது. இருந்தபோதிலும் 1949 இல் சமஸ்டிக் கட்சி ஆரம்பிக்கும் வரை தமிழ்த் தேசிய வாதம் சிங்கள மக்களிலிருந்து மொழி, மத, கலாச்சார ரீதியில் தமிழர் வேறுபட்டவர்கள் என்ற கருத்துகள் முன்வைக்கப் பட்டபோதும் அது முரண்பாடுகளற்ற ஒன்றுடன் ஒன்று இணைவான கருத்துகளாக அமையவில்லை.

தமிழரசுக் கட்சி என அழைக்கப்பட்ட சமஸ்டிக் கட்சி 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி மருதானையிலிருந்த அரசாங்க எழுது வினைஞர் சேவைகள் சங்கக் கட்டிடத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இக்கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தனது தலைமையுரையின் போது "இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களின் சுதந்திரத்தைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டு உழைப்பதற்கான ஒரு அமைப்பினை உருவாக்கும் பொது இலக்குடன் ஒன்று கூடியிருக்கிறோம்." எனக் குறிப்பிட்டார். இவ்வாறு 1949இல் உருவாக்கப்பட்ட சமஸ்டிக் கட்சி வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் பேசும் மக்களின் தேசிய உணர்வினை விழிப்புறச் செய்யும் விதத்தில் பிரச்சாரம் செய்தது. உதாரணமாக 1951 இல் நடந்த கட்சியின் முதலாவது தேசிய மாகாநாட்டில் பின்வரும் கருத்து முன் வைக்கப்பட்டது;

ஒரு தேசிய இனத்துக்கு இருக்க வேண்டிய எல்லா அடிப்படைச் சோதனைகளையும் உள்ளடக்கியிருக்கும் இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்கள் சிங்கள மக்களிலிருந்து வேறுபடும் ஒரு தனியான தேசிய இனமாகும். முதலாவதாக சிங்கள மக்களளவு பழமையும் புகழ் மிக்கதுமான ஒரு தனியான வரலாற்றுப் பின்னணியினைக் கொண்டிருக்கிறது. இரண்டாவதாக சிங்கள மக்களிலிருந்து முற்றாக வேறுபடும் ஒரு மொழியினைக் கொண்டிருக்கிறது..........

இறுதியாக இத்தீவின் மூன்றில் ஒரு பகுதியை உள்ளடக்கும் திட்டவட்டமான நிலப்பரப்பினைத் தமது பாரம்பரிய இருப்பிடமாகக் கொண்டிருக்கிறது.[3]
1956 ஆம் ஆண்டு திருகோணமலையில் நடத்திய தேசிய மகாநாட்டில் சமஸ்டிக் கட்சியின் கொள்கைகள் வகுக்கப்பட்டன. இம்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம் பின்வரும் நான்கு கோரிக்கைகளைத் தனது இலக்காக முன்வைத்தது.

(i) தற்போதைய அரசியல் யாப்பினை நீக்கி விட்டு அதற்குப் பதிலாக சமஸ்டித் தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரு அறிவு சார்ந்த ஜனநாயக அரசியல் யாப்பினை வரைதல்.

(ii) சிங்கள மொழியோடு தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.

(iii) இந்தியத் தமிழருக்கு எதிராகப் பாரபட்சம் காட்டும் குடியுரிமைச் சட்டங்களை நீக்கி விட வேண்டும்.

(iv) தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதனை உடனடியாக நீக்குதல்.
மேற் சொன்ன இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு சமஸ்டிக் கட்சி 1956க்கும் 1976க்கு மிடையில் நடத்திய அரசியல் நடவடிக்கைகள் அல்லது போராட்டங்கள் இலங்கைத் தமிழர்களிடையே தேசியவாதத்தினை வளர்ப்பதில் பெரிதும் பங்கு கொண்டன.

III (அ) பொதுவான வரலாறு :

இலங்கைத் தமிழர்கள் தமக்கும் இலங்கைக்குமிடையேயான தொடர்பு சிங்கள மக்களுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்பளவு பழமை வாய்ந்ததாகக் கொள்கிறார்கள். பேராசிரியர் சீ. ஆர். டி. சில்வா அவர்கள் இது தொடர்பாக ''சில தமிழர்கள் சிங்களவர்கள் இலங்கைக்கு வந்த போது அல்லது வருவதற்கு முன்னரே இங்கு வந்திருக்கலாம்''4 என்று குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்து பிறப்பதற்கு இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னரே இங்கு தமிழர்கள் வாழ்ந்தனர் என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. அநுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட குடியிருப்பாளர் பற்றிய கல்வெட்டு ஆறு தமிழர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. அவர்களில் ஒருவர் ஒரு கப்பலின் மாலுமியாகும். அது போன்று பெரிய புளியங் குளத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு தீவின் வர்த்தக நடவடிக்கைகளில் தமிழர் பிரதான பங்கு வகித்தமை பற்றிக் குறிப்பிடுகிறது. மகாவம்சம் கூட விஜய மன்னன் மதுரையிலிருந்து தனக்குரிய இளவரசியினை மணம் புரிய வரவழைத்த போது பல தோழியரும் 18 வகைத் தொழில் புரியும் குழுக்களைச் சேர்ந்த 1000 குடும்பங்களும் இலங்கைக்கு வந்தனர் எனக் குறிப்பிடுகிறது.

கி பி. 10 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியளவில் சோழர்கள் இலங்கைத் தீவு முழுவதையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர் தமிழர்கள் தமது தனியான அடையாளத்தை உருவாக்குவதற்குச் சோழர் இலங்கையினைக் கைப்பற்றி ஆண்டமை பெரிதும் உதவி செய்தது. சோழர் ஆட்சியின் போது சைவ சமயம் அரச ஆதரவு பெற்றதோடு பல சைவ வைஸ்ணவ ஆலயங்களும் கட்டப்பட்டு மென் மேலும் தமிழ்க் குடியிருப்பாளர்கள் இலங்கையை வந்தடைந்தனர். இவர்கள் வட இலங்கையிலும் கிழக்குக் கரையோரங்களிலும் குடியமர்ந்தனர். இருந்தும் வரலாற்று ரீதியில் இலங்கைத் தமிழர்களின் தனியான அடையாளத்தை வளர்ப்பதிலும் உறுதிப்படுத்துவதிலும் யாழ்ப்பாண இராச்சியம் பெரிதும் பங்களிப்புச் செய்தது. ஆகவே, இலங்கைத் தமிழர்களின் பொதுவான வரலாறு இலங்கையில் மிகவும் பழமையானதாகும். அது கி. மு 2ஆம், 3ஆம் நூற்றாண்டளவில் ஆரம்பித்து இன்றுவரையும் தொடர்ந்து வருகிறது.

(iii) (ஆ) மொழி:

இலங்கைத் தமிழர்களதும் இலங்கை வாழ் இந்திய வம்சாவழித் தமிழர்களதும் தாய் மொழியான தமிழ், உலகில் பேசப்படும் மிகவும் பழமை வாய்ந்த மொழிகளுள் ஒன்றாகும். திரு. எஸ். பொன்னம்பலம் அவர்கள் குறிப்பிட்டது போல்,

> முதல் தமிழ் இலக்கணமான தொல் காப்பியம் கி. மு. முதலாவது 1000 வருடங்களுக்கு முன்பு இயற்றப்பட்டதாகும். சிறப்பு மிக்க சங்க இலக்கியங்களின் காலம் கி. பி. 1ஆம் நூற்றாண்டு தொடக்கம் 4ம் நூற்றாண்டளவு பழமையானதோடு எட்டுத் தொகை பத்து பாட்டு என்பவற்றை உள்ளடக்கிய செய்யுள்களோடு சம்பந்தப்பட்ட இலக்கியங்களையும், திருக்குறள் நாலடியார் என்ற நீதிகளைப் போதிக்கும் செய்யுள்களையும் கொண்டது. 5

வண றோபேட் கால்டுவல் என்ற மதகுருவும் ஜீ. யு. போப் என்ற கிறிஸ்தவ அடிகளாரும், தமிழ் மொழியின் மறுமலர்ச்சியின் முன்னோடிகளாக இருந்தனர். இவர்களைத் தொடர்ந்து சி. வை. தாமோதரம் பிள்ளை, யு. வி. சுவாமிநாத ஐயர், பீ. சுந்தரம்பிள்ளை, ஜே.எம். நல்லசுவாமிப்பிள்ளை என்போரும் தமிழ்மொழியின் மறுமலர்ச்சிக்குத் தொண்டாற்றினார்கள்.

19ஆம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் இந்தியாவில் இடம்பெற்ற தமிழ் மறுமலர்ச்சி தமிழ் நாட்டில் மட்டு

மல்லாது இலங்கைத் தமிழர்களிடையேயும் தேசிய உணர்வு வளர உதவியது. 1950 களில் இலங்கைத் தமிழர் தமது தனித்துவத்தினை வற்புறுத்தலாயினர். பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, சி. எஸ் நவரத்தினம், கே. நவரத்தினம், வண. தனிநாயக அடிகளார் முதலியோர் இலங்கையில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றினர். இவை இலங்கையின் தமிழ் தேசிய வாத வளர்ச்சிக்கும் பெரிதும் உதவின.

1956 ஆம் ஆண்டில் பதவிக்கு வந்த மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் சிங்களத்தை மாத்திரம் தனியொரு உத்தியோக மொழியாக ஆக்கும், சட்டம் ஒன்றை நிறை வேற்றியதோடு உத்தியோக மொழி இலங்கை அரசியலில் பிரச்சினைக் குரிய தொன்றாக ஆகியது. சிங்கள மொழியோடு தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் அதனைப் பெறுவதற்காக சமஸ்டிக் கட்சி நடத்திய சாத்விகப் போராட்டங்களும் தமிழ்த் தேசிய வாதம் வளரத் தூண்டுகோலாயிற்று

## (ii) (இ) பாரம்பரியப் பிரதேசம்

இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய தாயகம் எது என்பதை நிர்ணயிப்பதில் கி. பி. 13ஆம் நூற்றாண்டில் வட இலங்கையில் யாழ்ப்பாணத்தைத் தலைநகராகக் கொண்டு தோற்றம் பெற்ற தமிழ் அரசு அரசோச்சிய நிலப் பகுதிகளே பெரும்பாலும் கவனத்துள் எடுக்கப்படுகின்றன. இரா. சிவசந்திரன் அவர்கள் குறிப்பிட்டது போல் ''யாழ்ப்பாணப் பட்டினமென வழங்கிய தமிழரசிலே யாழ்ப்பாணக் குடா நாட்டுப் பகுதி மாத்திரமன்றி பிரதான நிலப்பகுதியின் வடக்கு, வடகிழக்கு, வடமேற்குப் பகுதிகளும் உள்ளடக்கப் பட்டிருந்தன. காடடர்ந்து காணப்பட்ட இவ்வறண்டபகுதிகள் வன்னி என அழைக்கப் பட்டன''

தமிழர் பாரம்பரிய பிரதேசமாகிய வடகிழ்மாகாணம் 7068 சதுர மைல் பரப்பை அடக்கியுள்ளது. இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் இது 28.3 வீதமாகும். இவை ஏழு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு என்பன வடமாகாணத்தினுள்ளும், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை என்பன கிழக்கு மாகாணத்திலும் அமைகின்றன.[6]

இப்பாரம்பரிய தமிழர் பிரதேசங்களில் 1930 களில் இருந்து நடந்து வந்த அரச உதவியுடனான திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்களின் காரணமாகக் கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்களின் எண்ணிக்கை அதிகரித்ததோடு திருகோணமலையில் தமிழரின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைந்துள்ளது. நிலப்பயன்பாட்டில் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் கடைப் பிடித்து வந்த பாரபட்சமான கொள்கைகள் காரணமாகவும் தமிழ்த் தேசிய வாதம் வளர்ச்சியடையலாயிற்று.

## (iii) தனியான கலாச்சாரம்

இலங்கைத் தமிழர், இலங்கை வாழ் இந்திய வம்சாவழித் தமிழர் என்போருக்குப் பொதுவான தமிழ் கலாச்சாரப் பாரம்பரியம் உண்டு என்றாலும் இலங்கைத் தமிழர்களுக்கென சில தனியான கலாச்சார பண்புகளுமுண்டு. அவற்றுள் யாழ்ப்பாணத்தில் வழக்கிலிருக்கும் தேச வழமைச் சட்டம் பிரதானமானதாகும். இது பற்றி பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடும் போது ''1707இல் இந்த நிலையில் அது கொண்டிருந்தவற்றை நோக்கும் பொழுது அக்கால யாழ்ப்பாணச் சமுதாயத்தின் அமைப்பு மிகத் துல்லியமாகப் புலப்படுகின்றது. 1707இல் தொகுக்கப் பெற்ற பொழுது, தேச வழமைச் சட்டம் ஒன்பது பிரிவுகளைக் கொண்டதாக விளங்கிற்று. அந்த ஒன்பது பிரிவுகளையும் அவை ஒவ்வொன்றிலும் இடம் பெற்றவற்றையும் அறிவது யாழ்ப்பாணத்தின் வரலாற்றுச் சமூகவியல் அம்சமொன்றினை அறிவதாக அமையும்.''[7]
அடுத்து யாழ்ப்பாணத்தமிழர்களின் தனித்துவமான கலாச்சாரத்தினைக் கந்தபுராண கலாச்சாரம் எனவும் கூறுவர்.

மட்டக்களப்புப் பகுதியில் நிலவும் முக்குவர் வழமை என்பதும் ஒரு தனித்துவமான அம்சமாகும்.

இலங்கைத் தமிழர்கள் அனைவருக்கும் உரித்தான கிராமிய நாடகக்கலை யானது முற்காலத்தில் யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, சிலாபம் ஆகிய பிரதேசங் களில் ஆடப்பட்டன. இவை நாட்டுக் கூத்து களாகவே இருந்தன. இவை சமகா லத்தில் மிகக் குறைவாகவே ஆடப்படு கின்ற போதிலும் இலங்கைத்தமிழ்க் கலாச் சாரத்தில் இவற்றுக்கு ஒரு இடமுண்டு. கோலாட்டம், கும்மி, குரவைபோடுதல் என்பனவும் தமிழ் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாகவே விளங்குகின்றன.

இந்தியாவைப் போல் இலங்கையிலும் இசைக்கலைஞர்களை வளர்ப்பதிலும் சிற்பம், ஓவியம், கட்டிடக்கலை, என்பவற்றை வளர்ப்பதிலும் இந்துக் கோயில்கள் முன்னணி வகிக்கின்றன. உண்மையில் தமிழ் கலாச்சாரத்தின் ஒரு பகுதியான நாட்டியம், நாதஸ்வரம், சின்னமேளம் என்பவற்றை ஊக்குவிப்பதிலும் கோயில்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. ஆகவே இலங்கைத் தமிழ்த் தேசிய வாதத்தினை வளர்ப்பதில் தமிழரின் தனியான கலாச்சாரத்துக் கொரு இடமுண்டு.

IV முடிவுரை:-

இலங்கையில் தமிழ் தேசிய வாதம் தோன்றி வளர்ச்சி அடைவதற்குப் பல்வேறு காரணிகள் உதவியிருப்பதை நாம் அறிகிறோம். அவற்றுள் தாராண்மை வாத அடிப்படையில் பல்லின சமூகம், மதசார்பின்மை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட இலங்கையர் தேசிய வாதத்திற்கு எதிராக சிங்கள தேசிய வாதம் எழுச்சியடைந்தமை முக்கியமானதொரு காரணியாகும். மேலும் இந்து மறுமலர்ச்சி இயக்கம், உத்தியோக மொழியில் பிரச்சினை, பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களில் அரச உதவியுடன் ஏற்பட்டு வந்த திட்டமிட்ட குடியேற்றங்கள் என்பனவும் தமிழ் தேசிய வாதம் வளர உதவின. ஆனால் தேசிய வாதம் வளர்வதற்கு அவசியமான முன் நிபந்தனைகள் பலவற்றையும் இலங்கைத் தமிழர்கள் கொண்டிருக்கிறார்கள் என்பதே பிரதானமாகும். அவை பொதுவானதொரு நீண்ட வரலாறு, பொதுவான மொழி, பாரம்பரிய பிரதேசம், தனியானதொரு கலாச்சாரம் மதம் என்பனவாகும்.

1970களில் தமிழ்த் தேசிய வாதம் என்பது மாற்றங்களுக்குட்பட்டது, என்பதை இங்கு சுட்டிக் காட்டுதல் அவசியம். அது வரை காலமும் சிங்கள தேசியவாத கொள்கைகளினால் பாதிக்கப்பட்ட தமிழர் தமது உரிமைகளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டிருந்தனர். ஆனால் அதன் பின்பு பாரம்பரிய பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்டதாகவும் பொருளாதாரப் பின்னணியினை முக்கியத்துவப் படுத்துவதாகவுமான தேசிய வாதக் கோரிக்கை முன்வைக்கப் படலாயிற்று. இதற்குப் பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்களுக்குப் பாரபட்சம் காட்டப்பட்டமை, தொழில் பெறுவதில் தமிழ் இளைஞர்கள் பெற்ற மாற்றங்கள் என்பவற்றோடு பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களைப்பாதுகாக்க வேண்டுமென்ற உணர்வு முக்கியத்துவம் பெற்றமையும் முக்கிய காரணங்களாகும்.

## உசாத்துணை நூல்கள்

1) S. Arasaratnam 'Tradition Nationalism and Nation Building in Southern Asia' The Sri Lanka Journal of South Asian Studies Vol. 1 No, 1 January 1976 P.8

2) Carlton J. Hayes, The Historical Evolution of Modern Nationalisn (New York Macmillan 1948)

3) **The Case for Federal constitution for Ceylon Resolutions Passed at the First National convention of the Ilankai Tamil Arasu Kadchi. (Colombo I A TK 1951) P. 4.**

4) **C. R.** de Silva "The Sinhalese - Tamil **Rift** in Sri Lanka in eds" A. J. Wilson and D. Dalton states of South Asia (London C. Hurst & Company 1979) P. 156

5) Sauchi Ponnambalam Sri Lanka The National question and the Tamil Liberation Struggle (London: Led Books Ltd. 1983) P. 31

6) *இரா. சிவச்சந்திரன், இலங்கையில் தமிழர் பாரம்பரியப் பிரதேசத்தின் குடித்தொகைப் பண்புகளும் பொருளாதார வளங்களும் (யாழ்ப்பாணம்; அகிலம் சமூக அறிவியலாய்வு வெளியீடு - 2. 1981) ப; 6*

7) *கார்த்திகேசு சிவத்தம்பி யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல் (கொழும்பு: தர்சனா பிரசுரம், 1993) ப. 8.*

மெய் சொல்லல் நல்ல தப்பா! தம்பி,
மெய் சொல்லல் நல்ல தப்பா!

கண்டதைச் சொல்லென்று சொன்னாலும், நீ
உள்ளதைச் சொல்லென்று சொன்னாலும்
மண்டை யுடைத்திட வந்தாலும் - பொருள்
கொண்டுவந் துன்னிடம் தந்தாலும்,

மெய் சொல்லல் நல்ல தப்பா! தம்பி,
மெய் சொல்லல் நல்ல தப்பா!

பாரதிதாசன் -

# குறை விருத்தியும்
# குறைந்த வாழ்க்கைத் தரத்தின் பரிமாணங்களும்

- மா. செ. மூக்கையா -
முதுநிலை விரிவுரையாளர்,
புவியியற்றுறை.

ஆபிரிக்க, ஆசிய, இலத்தீன் அமெரிக்க நாடுகளிடையே காணப்படும் சில அபிவிருத்தி சார்ந்த பண்புகளை அடிப்படையாகக் கொண்டு பொதுமைப்படுத்துவதில் சில பிரச்சினைகள் உள்ளன. இருந்த போதிலும், இந்நாடுகளின் பொதுவான பொருளாதாரப் பண்புகள் காரணமாக, அவற்றினை ஒரு பொது நோக்கில் அவதானிக்க முடிகின்றது. இத்தகைய பொதுவான பண்புகள் பல உள்ளன. அவற்றில் அந்நாடுகளில் காணப்படும் குறைந்த வாழ்க்கைத் தரமானது குறிப்பிடத்தக்கதும் முக்கியமானதுமான ஒரு பண்பாகும். குறைந்த வாழ்க்கைத்தரம் இந்நாடுகளிடையே பொதுவான ஒரு பண்பாகக் காணப்படும். அதேவேளையில், அதற்குப் பொறுப்பான தலைக்குரிய மொத்தத் தேசிய வருவாய் (த. மொ. தே. வ.) அதன் வளர்ச்சி வீதம், வருமான பரம்பல் முறை, வறுமை நிலை, சுகாதாரம், கல்வி வளர்ச்சி, தொழிலின்மை, குறைதொழில் புரிவோர், என்பன குறிப்பிடத்தக்க வகையிலும், அதே வேளையில் குறைவிருத்தி நாடுகள் பின்தங்கிய இப் பொது இயல்புகளைக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பெரும்பான்மையான மக்களது வாழ்க்கைத்தரம் குறைநிலையில் இருப்பதனை அவதானிக்க முடிகிறது. இத்தரங்கள் விருத்தியுற்ற நாடுகளில் காணப்படும் மக்களது வாழ்க்கைத்தரங்களை விடக் குறைவாய் இருப்பது மாத்திரமன்றி, அவ்வவ் நாடுகளில் வாழும் சிறுபான்மையினரான உயர்தரவர்க்கத்தினருடன் ஒப்பிடும் போதும் மிகவும் குறைந்த வாழ்க்கைத்தரத்தினையே கொண்டுள்ளன. இதனை அவர்களுடைய குறைந்த வருமானங்கள், தரம் குறைந்த வீட்டு வசதி, போதிய சுகாதார வசதியின்மை குறைந்த, அல்லது வரையரைக்குட்பட்ட கல்வி வாய்ப்புக்களும் வசதிகளும், அதிக சிசுமரணவீதம், குறைந்த வாழுங்காலம், குறைந்த தொழில் புரியும் காலம், உடல் நலம் குன்றிய நிலை, நம்பிக்கையின்மை போன்ற நிலைமைகளில் இருந்தும் இனங்காண முடிகின்றது.

ஒரு நாட்டினுடைய த. மொ. தே. உற்பத்தியினை ஒரு குறிகாட்டியாகக் கொண்டு, வேறுபட்ட நாடுகளில் வாழும் மக்களிடையேயான பொருளாதார சுபீட்சத்தினை இனங்காணமுடியும். ஒரு நாட்டின் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளினதும் பெறுமானத்தினை அளவிடும் ஒரு முறையாக மொ. தே. உ என்னும் கோட்பாடு பயன்படுத்தப்படுகின்றது உதாரணமாக, 1991 ஆம் ஆண்டு உலக நாடுகள் அனைத்தினதும் மொ. தே. உ. 21,639 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக இருந்தது. இதில் 17,053 பில்லியனான எழுபத்தியொரு (71) வீதமான உற்பத்தி, உலகின் அபிவிருத்தி அடைந்த நாட்டினரது உற்பத்தியாகும். அவர்கள் உலக மக்கள் தொகையில் 15 வீதத்தினராவர். அதே வேளையில் உலகின் 29 வீதமான பெறுமதியினைக் கொண்ட உற்பத்தியினை மாத்

திரம் ஏனைய நாடுகளில் வாழும் உலக மக்களில் 85 வீதமானோர் உற்பத்தி செய்கின்றனர். இதனால், விருத்திபெறும் நாடுகளில் வாழ்வோர், விருத்தியுற்ற நாடுகளில் வாழ்வோரது சராசரி வருவாயினைவிட ஆறில் ஒரு பங்கிற்கும் குறைவான வருவாயினையே பெறுகின்றனர். 1991 ஆம் ஆண்டு சுவிற்சர்லாந்து (33,610 டொலர்) பங்களா தேசத்தினை (220 டொலர்) விட 152 பங்கு அதிக த. மொ. தே. வருவாயினைப் பெற்றிருந்தது. உலகின் மிகப் பெரிய மக்கள் தொகையைக் கொண்ட நாடுகளான சீனா, இந்தியா ஆகிய இரண்டினதும் த. மொ. தே. உ. சுவிற்சர்லாந்தின் வருவாயில் 96 இல் ஒரு பங்கு மட்டுமேயாகும்.

த. மொ. தே. உ. குறைந்ததாய் இருக்கும் அதே வேளையில், பல விருத்தியுறும் நிலையில் உள்ள நாடுகளில் மொ. தே. உற்பத்தியானது மிக மெதுவாகவே வளர்கின்றது. உதாரணமாக, ஐக்கிய நாடுகள் சபையினால் மிகக் குறைந்த வளர்ச்சியினையே பெற்றதாக வகைப்படுத்தப்பட்ட 31 நாடுகளில் த. மொ. தே. உற்பத்தியின் வளர்ச்சியானது 1965-1985 ஆண்டு காலப்பகுதியில் -0.3 வீதமாக இருந்தது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் அனைத்திலும் இக்காலப்பகுதியில் இது 3.7 வீதமாயிருந்தது. பெற்றோலிய உற்பத்தியில் ஈடுபடாத குறைவிருத்தி நாடுகள் யாவற்றினதும் வருடாந்த மொ. தே. உ. 2.8 வீதமாகவே இருந்தது.

மறுபுறத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளில் வருடாந்த சராசரி த. மொ. தே. உ. 1.7 வீதத்தால் பெருகியது. இதனால், மிகக்குறைந்த வளர்ச்சியினைக் கொண்டிருந்த நாடுகளுக்கும் இவற்றிற்கும் இடையே வருடாந்தம் 2 வீத வித்தியாசம் ஏற்பட்டு வந்தது. அதேவேளையில் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் விருத்தி பெறும் நாடுகளுக்கும் இடையே வருடாந்தம் 1.1 வீதத்தால் இடைவெளி குறைந்து வந்தது. (2.8 - 1.7) விருத்தி பெறும் நாடுகள் விருத்தி பெற்ற நாடுகளை விட விரைவாக வளர்ந்த போதிலும், முன்னையவை மிகவும் குறைந்த வருமான நிலையில் இருந்ததால், இவை இரண்டிற்கும் இடையேயான இடைவெளியும் தொடர்ந்தும் பெருகியே செல்கின்றன. ஒப்பளவிலான இச்சாதனையின் மீது குறைவிருத்தி நாடுகளில் ஏற்பட்ட விரைவான மக்கள் தொகைப் பெருக்கமானது கூடியபாதிப்பினை ஏற்படுத்தி விட்டது. இதனால், செல்வந்தர்கள் குபேரர்களாவதும் ஏழைகள் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதும் (Rich Become Richer While Tue Poor get Childr ey) என்ற நிலைமையே காணப்படுகின்றது. 17 விருத்தியுறும் நாடுகளில் 1980 - 91 ஆண்டுகளுக்கிடையேயான த. மொ. தே. உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தின் பரம்பலை அட்டவணை I இல் காணலாம்.

## அட்டவணை - I

குறைவிருத்தி நாடுகளின் மொத்தத்தேசிய வருவாய் வளர்ச்சி வீதம் — 1980-1991

| ஆபிரிக்கா | | ஆசியா | | இலத்தீன் அமெரிக்கா | |
|---|---|---|---|---|---|
| தன்சானியா | -0.8 | பங்களாதேசம் | 1.9 | மெச்சிக்கோ | -0.5 |
| கெண்யா | 0.3 | இந்தியா | 3.2 | கௌதமாலா | -1.8 |
| நைஜீரியா | -2.3 | இந்தோனேசியா | 3.9 | கொலம்பியா | 1.2 |
| யுகண்டா | -2.6* | பிலிப்பைன்ஸ் | - 1.2 | பிறேசில் | 0.5 |
| சயர் | -2.2* | இலங்கை | 2.5 | பேரு | 2.5 |
| | | தென்கொரியா | 8.7 | வெனிசுவெலா | -1.3 |

*1965-86 ஆம் ஆண்டிற்கான தரவுகள் மூலம்: உலக வங்கி, உலக அபிவிருத்தி அறிக்கை 1993, ப. 238 — 242

வறுமையான நாட்டினருக்கும் செல்வந்த நாட்டினருக்கும் இடையேயான இடைவெளி அதிகரிக்கின்றது. அதனைப்போன்றே வறுமையான நாடுகளுக்குள்ளேயே வறுமையானவர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் இடையே இடைவெளி அதிகரிக்கின்றது. இதனால், உலகில் இவ்விரு குழுக்களுக்கும் இடையேயான ஏற்றத்தாழ்வு அதிகரிப்பதற்கான இன்னுமொரு பின்னணி உருவாகின்றது எனலாம். முதல் பார்வையில், உலக நாடுகளிடையே சமமின்மையினை அவதானிக்க முடிகிறது. அதே வேளையில், விருத்தியுற்ற நாடுகளிலும், குறைவிருத்தி நாடுகளிலும் வறுமையானவர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் இடையிலும் பெரும் இடைவெளியினை அவதானிக்க முடியும். (ஆயினும், விருத்தி பெற்ற நாடுகளில் வறுமையானவர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் இடையே காணப்படும்) இடைவெளி குறைவிருத்தி நாடுகளில் காணப்படுவதனை விடக் குறைவேயாகும்.[1] உதாரணமாக, நாடுகளில் ஆகக் குறைந்த வருமானம் பெறுகின்ற 40 வீதத்தினரும், ஆகக் கூடிய வருமானத்தைப் பெறுகின்ற 20 வீதத்தினரும் மொ. தே. வருவாயில் பெறுகின்ற பங்கினை நோக்கினால், பிறேசில், ஈக்குவடோர், கொலம்பியா, பேரு, மெக்சிக்கோ, வெனிசூவெலா, கென்யா, சியாரோ, லியோன், பிலிப்பைன்ஸ், மலேசியா என்பவற்றில் பெருமளவு வருமான ஏற்றத்தாழ்வு கொண்டிருப்பதனைக் காணமுடிகின்றது. அதேவேளையில், இந்தியா, தன்சானியா, சிலி, பிரான்ஸ், டென்மார்க் என்பனவற்றில் ஓரளவிற்கே ஏற்றத்தாழ்வுகாணப்பட்டது. ஆனால், தைவான், லிபியா, இஸ்ரேல், கனடா, யப்பான், ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளிலோ ஏற்றத்தாழ்வு மிகக் குறைவாகவே காணப்பட்டது. தனி நபர் வருவாய் மட்டங்களுக்கும் வருமான ஏற்றத் தாழ்வுக்கு மிடையே எதுவித தொடர்புகளும் இருப்பதாகத் தெரியவில்லை. பிலிப்பைன்ஸ், தைவான் இரண்டும் குறைந்த வருமானமுள்ள நாடுகளாகும். ஆனால், பிலிப்பைன்சில் உயர் வருமான 20 வீதத்தினருக்கும் குறைந்த வருவாய் பெறும் 40 வீதத்தினருக்கும் இடையேயான ஏற்றத்தாழ்வு தைவானை விட மிக அதிகமாகும். அதே போன்று, வெனிசூவெலாவில் குறைந்த வருவாய் பெறும் 40 வீதத்தினர் அந்நாட்டின் மொ. தே. வருவாயில் 14.3 வீதத்தினையே 1991 ஆம் ஆண்டில் பெற்றிருந்தனர். ஆனால், இது யப்பானில் 21.9 வீதமாகக் காணப்பட்டது. பாகிஸ்தான், இலங்கை ஆகிய இரண்டு நாடுகளினதும் த. மொ. தே. வருவாய் ஒரேயளவினதாக இருந்தது. ஆனால், இலங்கையில் 10 வீதத்தினரே வறுமைக் கோட்டிற்குக் கீழ் காணப்பட, பாகிஸ்தானில் அது 34 வீதமாகக் காணப்பட்டது. எனவே, பொருளாதார அபிவிருத்தி என்பது, பொருளாதாரத்தின் வளர்ச்சி, மட்டம் என்பவற்றினை மாத்திரம் கருத்திற்கொண்டு நிர்ணயிக்கப்படும். ஒன்றல்ல மாறாக, அது எவ்வாறு நாட்டின் மக்கள் அனைவருக்கும் இடையே நியாயமான அளவில் பகிரப்பட்டுள்ளது என்பதனைக் கொண்டே தீர்மானிக்கப்பட முடியும்.[2]

ஒரு நாட்டினது வறுமை நிலையினை, இரண்டு பிரதான காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இனங்காண முடியும். ஒன்று, தலைக்குரிய தேசிய வருமானம், இரண்டாவது, அதன் பரம்பல் முறையில் காணப்படும் சமனற்ற, அல்லது ஏற்றத்தாழ்வுகள் என்பனவாகும். வருமானத்தின் அளவு எதுவாயிருந்தாலும், அங்கே அதன் பரம்பலில் எந்தளவுக்கு ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றனவோ, அந்தளவிற்கு வறுமையும் காணப்படும். அது போன்றே, எவ்வகையான வருமானப் பரம்பல் இருந்தாலும், தலைக்குரிய வருமானம் எந்தளவில் குறைவாயிருக்கின்றதோ, அந்தளவிற்கு வறுமையும் அதிகமாகவே காணப்படும். இதனை எவ்வாறு கணிப்பிடலாம் என்பதே பெரும் வினாவாக உள்ளது.

1970 ஆம் ஆண்டுகளில் வறுமைப் பிரச்சினை பற்றி உலகளாவிய வகையில் நிறுவன ரீதியான ஆர்வங்கள் வளர்ந்திருந்தன. ஐக்கிய நாடுகள் சபையின் கிளை நிறுவனங்கள் வளர்ச்சியடைந்த, குறைவிருத்தி நாடுகளின் அரசாங்கங்கள், அரசாங்கமற்ற தொண்டர் நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்ற இன்ன பிற நிறுவனங்கள் இத்துறை சார்ந்து பல ஆய்வுகளை மேற்கொள்வதில், முன்னர் எப்போதையும் விடக் கூடிய ஆர்வத்தினைக் காட்டின. அதற்காக, நாடுகளுக்கிடையேயும், நாடுகளுக்குள்ளேயும் நிலவும் பொதுவான நிலவரங்களுக்கேற்ப, பொதுவான, 'வறுமைக் கோட்டை' நிர்ணயிக்கும் முயற்சிகளும் தோற்ற முற்றன. இதனைச் சார்ந்ததாக 'முழுமையான வறுமை, (Absolvte Poverty) என்னும் கோட்பாடும் உருவாக்கப்பட்டது. அதன்படி, அடிப்படைப் பௌதீகத் தேவைகளான உணவு, உடை, உறையுள் என்பவற்றை வழங்குவதற்குத் தேவையான குறைந்தபட்சவருமானத்திற்குச் சமனான பணத்தொகை நிர்ணயிக்கப்பட்டது. இத்தகைய குறைந்த பட்சத் தேவையின் அளவு, நாட்டுக்கு நாடு, பிரதேசத்திற்குப் பிரதேசம், வேறுபட்ட மனோதத்துவ சமூக, பொருளாதார தேவைகளுக்கு ஏற்ப வேறுபடலாம். எனவே, 1980 ஆம் ஆண்டில் 125 ஐக்கிய அமெரிக்கடொலரது சீரான பெறுமதிக்குச் சமனான தொகை சர்வதேச வறுமைக்கோடாக நிர்ணயிக்கப்பட்டது. அத்தொகைக்கும் குறைந்த வருவாயினைப் பெறுபவர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழான வர்கள் என இனங்காணப்பட்டனர். இத்தகைய நோக்கின்படி ஏற்பட்ட தீர்மானங்களின்படி, ஒவ்வொரு நாடும் அதற்கேற்பத் தமது சொந்த நாணய அலகின் அடிப்படையில் 125 அமெரிக்க டொலருக்குச் சமனான பெறுமதியினை வறுமைக் கோட்டு எல்லையாக அனுமானிக்கலாம்.

ஆபிரிக்க, ஆசிய, இலத்தீன், அமெரிக்க நாடுகளிலிருந்து, 35 விருத்தி பெறும் நாடுகள், முழுமையான வறுமை நிலையிலுள்ள நாடுகளாக இனங்காணப்பட்டன.[3] அவ்வாய்விற்கு 1988 ஆம் ஆண்டு மக்கள் தொகை தரவுகளும், 1975 ஆம் ஆண்டு வறுமை பற்றிய மதிப்பீடுகளும் பயன்படுத்தப்பட்டன. அவற்றின் மூலம் விருத்திபெறும் நாடுகளில் வாழும் 3931 மில்லியன் மக்களில் 35 வீதமானோர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்வதாக மதிப்பீடு செய்யப்பட்டது. பங்களா தேசத்தில் 60 வீதமானோரும் இந்தியாவில் 46 வீதமானோரும், இந்தோனேசியாவில் 62 வீதமானோரும் இவ்வாறு வறுமைக் கோட்டிற்குக் கீழ்க்காணப்பட்டனர். கண்டங்கள் ரீதியாக, ஆசியாவில் 40 வீதத்தினரும், இலத்தீன் அமெரிக்காவில் 19 வீதத்தினரும், அனைத்துலகில் 36 வீதமானோரும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்வதாக மதிப்பீடுகள் கூறுகின்றன. இதனால், 1988 ஆம் ஆன்டின் உலக மக்கள் தொகையில் 36 வீதமான 1537 மில்லியன் மக்கள் முழுமையான வறுமையால் துன்புற்றனர். உலக வங்கியின் அறிக்கையின் படியும், சீனா தவிர்ந்த உலக நாடுகளில் 730 மில்லியன் மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்வதாக அறிய முடிகிறது. இதனை மனதிற் கொண்டே, டெல்லி பல்கலைக் கழகப் பொருளியற் பேராசிரியை பத்மாதேசாய், "மூன்றாம் உலக நாடுகள், அவற்றின் பாரிய வறுமை காரணமாகவே உலகில் முக்கிய நாடுகளாகக் கருதப்படவேண்டியுள்ளன" எனக் குறிப்பிடுகிறார்.

குறைவிருத்தி நாட்டு மக்கள் குறைந்த வருமானத்துடன் போராடும் அதே வேளையில், போஷாக்கின்மை, நோய்கள் என்பவற்றினாலும் தொடர்ந்து இன்னல்களுக்காளாகின்றனர். மிகக் குறைந்த விருத்தியினையே பெற்றுள்ள நாடுகளில் 1988ஆம் ஆண்டில் மக்கள் சராசரியாக 49 வருடங்களே வாழ்ந்தனர். இவை தவிர்ந்த ஏனைய குறைவிருத்தி நாடுகளில் மக்களின் சராசரி வாழுங்காலம் 57 வருடங்களாகவும் அது குறைவிருத்தியுற்ற நாடுகளில் 73 வருடங்களாகவும் இருந்தது. பிறந்து ஒரு வருடத்திற்குள்

இறந்து விடும் குழந்தைகளின் எண்ணிக்கை ஆயிரம் பிறப்புகளுக்கு 124 ஆக, மிகக் குறைந்த விருத்தியினையே பெற்ற நாடுகளில் காணப்பட்டது. இது ஏனைய குறைவிருத்தி நாடுகளில் 96 ஆகவும் விருத்தி பெற்ற நாடுகளில் 15 ஆகவும் காணப்பட்டது. இது மனிதாபிமானத்தின் அடிப்படையில் கவலைக்குரியதாகும். அபிவிருத்தி நோக்கில், இடப் பட்ட மூலவள முதலீட்டிற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட உற்பத்தித் திறனில் பாதிப்பை இது ஏற்படுத்தும். மேலும், ஒரு வருடம் வரை வளர்க்கப்பட்ட குழந்தை மீதும் இளம் பரா யத்தில் (18 வயது) இறப்பவர்கள் மீதும் சமூகங்கள் மேற்கொண்ட செலவினங்களுக்கு எதுவித வருவாயும் கிடைக்காமல் போகிறது.

குறைவிருத்தி நாடுகளில் ஒரு பில்லியன் மக்களுக்கு மேலானோர் தமக்குத் தேவை யான உணவிலும் குறைந்தளவான உணவினையே 1975 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் பெறக்கூடியவராயிருந்தனர்.

## அட்டவணை - 2

தேவையான உணவை விட குறைந்தளவான உணவினை மட்டும் பெறும் மக்கள் தொகை -1975

| பிரதேசம் | மக்கள் தொகை (மில்லியனில்) | மக்கள் தொகையின் வீதம் |
|---|---|---|
| இலத்தீன் அமெரிக்கா | 112 | 36 |
| ஆசியா | 707 | 63 |
| மத்தியகிழக்கு | 61 | 33 |
| ஆபிரிக்கா | 193 | 61 |
| மொத்தம் | 1,073 | 55 |

மூலம், Reutlinger and Others Malnutrition and Poverty Magnitude and Policy, Option 1976. (Baltimore), P. 16

இவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் இரண்டு வயதிற்கும் குறைந்த குழந்தைகளாவர். இவர்கள் வறுமையான நாடுகளில் அங்கு குறை வருமானம் பெறும் வகுப்பினரிடையே காணப்பட்டனர். 1980 ஆம் ஆண்டை அடுத்த காலப்பகுதிகளில் இந்நிலை உபசகாரா நாடுகளில் மிக மோசமாக நிலவியது. அங்கே உணவு நுகர்ச்சி பெருமளவு குறைந்ததுடன், பெருமளவில் காணப்பட்ட பஞ்சம் காரணமாக நிலைமை மிகவும் கவலைக்கிடமாகியது. ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் 60 வீதமான மக்களே தமது ஆரோக்கியத்தை பேணத் தேவையான குறைந்த பட்ச உணவினையாவது பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. மறுபுறத்தில் இப்பிரச்சினையைப் பற்றிக் கவனித்தால், இவ்வாறு உணவுப்பற்றாக் குறையினது அளவினை எடுத்துப் பார்த்தால் அது உலக உணவு உற்பத்தியில் இரண்டு வீதமேயாகும். எனவே, உலகில் போசாக்கின்மை ஏற்படுவதற்கு உலக மக்கள் தொகைக் கும் உணவு நிரம்பலுக்கும் இடையே காணப்படும் சமமின்மையே காரணம் என்னும் விளக்கம், இத்தகைய பற்றாக்குறை பற்றிய அளவுடன் (2%) ஒப்பிடுகையில் முரண்பா டாகவே காணப்படுகிறது. இத்தகைய முரண்பாடு காரணமாக, இப்பற்றாக் குறைக்கு

மிகவும் பொருத்தமான விளக்கம், இந்நாடுகளில் காணப்படும் வருமானப் பரம்பலில் ஒழுங்கின்மை என்பதேயாகும். இந்நிலையில், குறைவிருத்தி நாடுகளில் போஷாக்கின்மை, சுகாதாரச் சீர்கேடு என்பன நிலவுவதற்கு, அந்நாடுகளில் உணவு உற்பத்தியில் பற்றாக் குறை காணப்படுவதனைக் காரணமாகக் கூறுவதனைவிட, அந்நாடுகளில் காணப்படும் வருமானப் பரம்பலில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளினால் தோன்றும் வறுமையே முக்கிய காரணமெனலாம்.

போஷாக்கின்மையின் இன்னுமோர் அம்சம், தலைக்குரிய நாளாந்த புரத நுகர்ச்சியில் காணப்படும் குறைபாடாகும். இது ஐக்கிய அமெரிக்காவில் 97 கிறாமாகக் காணப் பட, பிறேசிலில் 63 கிறாமாகவும் இந்தியாவில் 48 கிறாமாகவும் கானாவில் 43 கிறாமாக வும் காணப்பட்டது. உலக தலைக்குரிய தானிய நுகர்ச்சி 1980 ஆம் ஆண்டுக் காலப்பகுதி யில் வருடம் ஒன்றிற்கு வளர்ச்சியடைந்த நாடுகளில் 670 கிலோவாகவும், குறைவிருத்தி நாடுகளில் 185 கிலோவாகவும் காணப்பட்டது,

குறை விருத்தி நாடுகளின் ஆரோக்கிய மின்மைக்கும். கூடிய இறப்பு வீதத்திற்கும் போஷாக்கின்மை ஒரு காரணமானாலும் சுத்திகரித்த நீரைப்பெற முடியாமை இன்னுமொரு முக்கிய சுகாதாரப் பிரச்சினையாகும். நீரினால் பரவும் நோய்களான நெருப்புக் காய்ச்சல், காலரா, மற்றும் வயிற்றுப் போக்கு போன்ற நோய்கள் காரணமாகவே ஆபிரிக்கா, ஆசியா, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இறந்த குழந்தைகளில் 35 வீதமானோர் கொல்லப்பட்டுள்ளனர். சுத்திகரித்த நீரின் பயன்பாட்டினால் இக்குழந்தைகளின் இறப்பினைத் தவிர்த்திருக்கலாம். ஆனாலும், 1980 ஆம் ஆண்டு தசாப் தத்தின் இறுதிப் பகுதியிலும் கூட, குறைவிருத்தி நாடுகளில் ஏறத்தாழ 30 வீதத்தினரே சுத்திகரித்த நீரினைப் பெற வசதிகளைப் பெற்றிருந்தனர்.

மருத்துவ வசதி பெரும்பாலான குறைவிருத்தி நாடுகளில் மிகக் குறைவாகும். அண்மைக்காலத் தரவுகளில் இருந்து (1980) மிகக் குறைந்த வளர்ச்சியினையே கொண்ட நாடுகளில் ஒரு இலட்சம் மக்களுக்கு 9.4 மருத்துவ நிபுணர்களோ சிகிச்சை வழங்கினர். ஆனால், வளர்ச்சியடைந்த நாடுகளில் இதனை விட 16 பங்கு மருத்துவ நிபுணர்கள் (160 பேர்) காணப்பட்டனர். இதனைப் போன்றே மருத்துவ மனை வசதிகளும் குறை விருத்தி நாடுகளில் மிகக் குறைவாகவும், விருத்தியுற்ற நாடுகளில் கூடுதலாகவும் காணப் பட்டன.

இவை மாத்திரமின்றி, குறைவிருத்தி நாடுகளில் காணப்படுகின்ற மருத்துவ வசதி கள் அவ்வவ் நாடுகளில் காணப்படும் பிரதேசங்களிடையேயும் கூட, பெரும் வேறுபாடு களைக் கொண்டிருந்தன. உதாரணமாக, இந்தியாவில் நகரப்பகுதிகளில், நாட்டின் மக்கள் தொகையில் 25 வீதமானோரே வாழ்கின்றனர். ஆனால், இந்தியாவின் மருத்துவ நிபு ணர்களில் 80 வீதமானோர் நகரப் பகுதிகளிலேயே சேவை புரிகின்றனர். இதன் காரண மாக. 75 வீதமான மக்கள் வாழும் கிராமப் பகுதிகளில் மருத்துவ சேவைகளை வழங்க நாட்டின் 20 வீதமான மருத்துவ நிபுணர்களே காணப்படுகின்றனர். அதே போன்று, பொலிவியாவிலும் அதன் 35 வீதமான மக்கள் வாழ்கின்ற பெரும் நகரங்களிலேயே நாட்டின் 90 வீதமான சுகாதார வசதிகள் மையம் கொண்டுள்ளன. கென்யாவின் நகரங்களில் 672 மக்களுக்கு ஒரு மருத்துவ நிபுணர் காணப்படுகையில், கிராமப்பகுதிக ளிலோ 20,000 மக்களுக்கு ஒரு மருத்துவ நிபுணரே காணப்பட்டனர். கென்யாவின் மக்களில் 87 வீதமானோர் கிராமிய மக்களாவார்கள். இவற்றிலிருந்து, இந்நாடுகளில் காணப்படும் மருத்துவ வசதிகளின் ஏற்றத் தாழ்வுகளையும் அறிய முடிகின்றது.[4]

குறைவிருத்தி நாடுகளில் காணப்படும் மிகவும் குறைந்த வாழ்க்கைத் தரங்கள் அந்நாடுகளில் காணப்படும் கிடைக்கக் கூடியதாயுள்ள குறைந்த அளவேயான கல்வி வாய்ப்புக்களுடனும் நெருங்கிய தொடர்புகளை கொண்டிருப்பதனையும் அவதானிக்க முடிகிறது. அனைத்துக் குறைவிருத்தி நாடுகளுமே தமது மக்களுக்கு ஆரம்பக் கல்வியினை வழங்குவதற்குப் பெரிதும் முயலுகின்றன. பெரும்பாலான நாடுகளினது வரவு செலவுத் திட்டங்களில் கல்விக்கான செலவினங்கள் முக்கியத்துவம் வகிக்கின்றன.

லெசத்தோ (21.9%) கென்யா (19.9%) சியாரோலியோன் (13.3%) பொலீவியா (18.7%) பேரு (21.1%) பராகுவே (12.7%) தாய்லாந்து (20.2%) கொரியா (15.8%) நேபாளம் (10.9%) பாகிஸ்தான் (1.6%) இலங்கை (8.3%) என்பனவற்றின் மத்திய அரசுகளினது மொத்தச் செலவினங்களில் கல்விக்காக ஒதுக்கப்படும் வீதாசாரம் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. இதன் காரணமாக, அந்நாடுகளில் பாடசாலை செல்வோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்பட்டாலும், எழுத்தறிவு வளர்ச்சியினைப் பொறுத்த மட்டில், வளர்ச்சி பெற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில், மிகவும் பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன. கென்யா (31%) சியாரோலியோன் (79%) நைகர் (72%) மொசாம்பிக் (67%) நேபாளம் (74%) பாகிஸ்தான் (65%) சூடான் (73%) கௌத்தமாலா (45%) பொலீவியா (23%) போன்ற நாடுகளில் எழுத்தறிவற்றோர் நிலை 23 வீதம் முதல் 79வீதம் வரையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க குறைபாடாகும். பொதுவாகக் கூறுவதானால், மிகவும் குறைந்த விருத்தியினையே பெற்றுள்ள நாடுகளில் எழுத்தறிவு 34 வீதமாகவும், ஏனைய விருத்தி பெறும் நாடுகளில் அது 65 வீதமாகவும் காணப்பட, விருத்தியுற்ற நாடுகளில் 99 வீதம் வரையில் அதிகரித்துக் காணப்படுகின்றது. அத்துடன், பெரும்பான்மையான குறைவிருத்தி நாடுகளில் வழங்கப்படும் கல்வி பொருத்தமற்றதாகவும், அது அந்நாடுகளின் அபிவிருத்திக்குப் பொருத்தமற்றதாக இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.[5] எனவே, இவற்றினைக் கவனத்தில் கொண்டுதான் யுனிசெப் நிறுவனத்தின் பதில் இயக்குநர் நாயகம் ரிச்சர்ட் ஜொலி குறைவிருத்தி நாடுகளின் குறைவிருத்தி நிலை பற்றி குறிப்பிடும் போது,

> ''குறை விருத்தி நாடுகளில் ஏற்பட வேண்டிய சீர் திருத்தம் பற்றி உண்மையான அக்கறையுடன் விமர்சிப்பவர்கள் அந்நாடுகளின் கல்வித் துறையில் ஏற்பட வேண்டிய சீர்திருத்தங்கள் மிகவும் காலம் தாழ்ந்ததாகக் காணப்படுகின்றமையினை கவனத்தில் கொள்ள வேண்டும்'' எனக் கூறுகிறார்.

வறுமை, நோய்கள், அறிவு வளர்ச்சியின்மை என்பனவற்றின் விளைவாகவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் மந்தப் போக்கு என்பன காரணமாகவும் தொழில் வாய்ப்புக்களில் பற்றாக்குறை காணப்படுகின்றமையும் குறைவிருத்தி நாடுகளில் காணப்படும் மற்றுமோர் குறைபாடாகும்.

தொழிலின்மை, குறைதொழில் புரிதல் என்பன அதிக அளவிற் காணப்படுவதுடன், வறுமையும் சமனற்ற வருமானப் பரம்பலும் அவற்றுடன் தொடர்புற்றுக் காணப்படுகின்றன. போதிய தொழிலில்லாமலும், பகுதி நேரத் தொழில் வாய்ப்புக்களை மாத்திரமே கொண்டவர்களில் பெரும் பான்மையினர் மிகவும் வறியவர்களாக உள்ளனர். போதிய தொழில் வாய்ப்புக்களுடன் ஊதியம் பெறும் பொதுத்துறை, அல்லது தனியார் துறைகளில் தொழில் புரிபவர்கள் மத்திய, உயர் வருவாய் பெறும் பிரிவினர்களாவார்கள். இதற்காக, தொழில் இல்லாதவர்கள் அனைவரும் வறியவர்கள் என்றோ, அல்லது முழு நேரத்தொழில் புரிபவர்கள் அனைவரும் வசதிபடைத்தவர்கள் என்றோ கூறிவிட

வும் முடியாது. நகரப் பகுதிகளில் வாழும் சில கல்வி தொழிற் தகுதி பெற்றவர்கள் தமது பெயர் எதிர்பார்ப்புக்கள் காரணமாக, சில குறித்த தொழில்களையே எதிர்பார்ப்பதால், அத்தகைய தொழில்கள் கிடைக்காத போது, ஏனைய தொழில்களை ஏற்பதில்லை. அதனால், அவர்கள் தொழிலற்றுக் காணப்படுவதுண்டு. இவர்களுக்கு உறவினர்கள், அல்லது பெற்றோரது நிதி ஆதரவு கிடைப்பதால், அவ்வாறு தொழிலற்ற நிலையிலும் சுகமாக வாழ முடிகிறது. வரைவிலக்கணத்தின் படி, அவர்களும் தொழிலற்றவர்களானாலும், அவர்கள் வறுமையானவர்கள் அல்ல.

அதே வேளையில், வேறு சிலர் முழுநேரத் தொழில் புரிபவர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் பெறுகின்ற ஊதியங்கள் மிகக் குறைந்ததாக இருக்கும், நகரப்பகுதிகளில் வாழும் நடைபாதை வியாபாரிகள், சாதாரண சேவைகளைப் புரிவோர், பழுது பார்க்கும் தொழில்கள் புரிவோர், சிறு வியாபாரம் புரிவோர் போன்ற சுய தொழில் புரிவோர்களை இத்தகைய பிரிவில் சேர்க்கலாம். வரைவிலக்கணத்தின் படி முழுநேரத் தொழில் புரிந்தாலும், பெரும்பாலும் வறுமையானவர்களாகவே உள்ளனர்.

இத்தகைய வரைவிலக்கணக் குறைபாடுகளுடனும் கூட, குறைவிருத்தி நாடுகளில் காணப்படும் வறுமை, வருமான ஏற்றத்தாழ்வு என்பனவற்றைக் குறைக்க வேண்டுமானால், அங்கே போதிய ஊதியத்தை வழங்குவதான, உற்பத்தித் திறன் மிக்க தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் மிக அவசியமாகும். அதற்காக, வறுமையினை ஒழிக்கத் தொழில் வாய்ப்பு ஒன்றே இறுதித் தீர்வு என்றும் கூறி விட முடியாது. அதனை விடக் கூடியதான பொருளாதார சமூக நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட வேண்டியுள்ளன. எவ்வாறாயினும், கூடிய தொழில் வாய்ப்புக்கள் வறுமைப் பிரச்சினையினைத் தீர்ப்பதில் கூடிய பங்கினை வகிக்கும் என்று நம்ப இடமுண்டு. எனவே, தொழில் வாய்ப்பு என்பது, வறுமை ஒழிப்பினை குறியாகக் கொண்ட அபிவிருத்தி உபாயத்தில் பிரதான அம்சமாகும்.

எனவே, இதுவரை குறிப்பிட்டவற்றை மனதில் கொண்டு பார்க்கும்போது, குறைவிருத்தி நிலையில் உள்ள நாடுகளின் பொதுவான பிரச்சினைகளில் ஒன்றான பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ளமையினைப் பொறுத்து, பின்வரும் நிலைமைகளை இனங்காண முடிகின்றது.

(அ) இந்நாடுகளின் தேசிய வருமானம் ஒப்பளவில் குறைவாகக் காணப்படுவதுடன், மிகவும் மெதுவான வளர்ச்சியினையே கொண்டுள்ளன.

(ஆ) பெரும்பாலான குறைவிருத்தி நாடுகளில், தலைக்குரிய மெய்வருமானம் தேங்கியதாகவும், குறைந்த நிலையில் உள்ளதாகவும் காணப்படுகின்றன.

(இ) இந்நாடுகளின் வருமானப் பரம்பலில் பெரும் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன துர்ப்பாக்கிய சாலிகளான கீழ்மட்ட 40 வீதமானமக்கள், அதிர்ஷ்டசாலிகளான மேல் மட்ட 20வீதமானவர்கள் பெறுகின்ற சராசரி வருமானத்தில் 10 முதல் 20 வீதமான வருவாயினையே பெறுகின்றனர்.

(ஈ) இக்காரணங்களால், விருத்தி பெறும் நாட்டு மக்களின் கணிசமானவர்கள், முழுமையான வறுமையால் துன்புறுகின்றனர். இவ்வாறு, 650 முதல் 1300 மில்லியன் வரையான மக்களது வாழ்க்கை, வருடாந்த தலைக்குரிய வருவாயான 125 அமெரிக்க டொலருக்குக் குறைந்த வருவாயினையே கொண்டதாக உள்ளது.

(உ) பெரும்பாலான மக்கள் சுகவீனம், போசாக்கின்மை, சோர்வுறும் நோய்கள் என்ப

வற்றால் துன்புறுவதுடன், விருத்தியுறும் நாடுகளைவிடப் பத்துப்பங்கு அதிகமான சிசு மரணத்தைக் கொண்டும் காணப்படுகின்றனர்.

(ஊ) கல்வியில் குறைந்து, மிகக் குறைந்த எழுத்தறிவுடையதும், குறிப்பிடத்தக்க அளவில் பாடசாலையினை இடையிலேயே விட்டு விடுதலும் காணப்படுகிறது. அத்துடன், கிடைக்கப் பெறும் கல்வி வசதிகள் பற்றாக்குறையினதாகவும், பொருத்தமற்றனவாகவும் உள்ளன.

(எ) தொழிலின்மை, குறைதொழில் புரிதல் என்பன அதிகளவில் காணப்படுவதுடன், அவற்றுடன் தொடர்புடையதாக வறுமையும் வருமானத்தின் சமனற்ற பரம்பலும் காணப்படுகின்றன.

இத்தகைய பண்புகளின் ஒன்று சேர்ந்த விளைவாக ஏற்படும். வறுமை, அறியாமை, நோய்கள் என்பன குறைவிருத்தி நாட்டு மக்களில் மூன்றில் ஒரு பங்கிற்கும் மேற்பட்ட மக்களை, அவர்கள்வளர்ச்சிப் பாதையில் முன்னேறிச் செல்வதனைக் கட்டுப்படுத்துவனவாக உள்ளன.[6]

இவை மாத்திரமன்றி, குறைந்த உற்பத்தித்திறன், கூடிய மக்கள் தொகை வளர்ச்சி கூடியளவினர் ஏனையோரின் உழைப்பில் தங்கியிருத்தல் காரணமாக ஏற்படும் சுமை விவசாய உற்பத்தியிலும் முதனிலை உற்பத்தியிலும் பெரிதும் தங்கியிருக்கும் நிலைமை, சர்வதேச உறவுகளைப் பொறுத்துப் பிறரில் தங்கியிருத்தல், அவர்களால் கட்டுப்படுத்தப்படல், இதனால் இலகுவில் பாதிப்புக்குள்ளாகுதல் போன்ற பண்புகள் குறைவிருத்தி நாடுகளிடையே பொதுவாகக் காணப்படுகின்றன. இவற்றின் காரணமாக, இந்நாடுகள் தொடர்ந்தும் குறைவிருத்தி நிலையிலேயே இருக்கும் நிலைமைகளிலிருந்து மாற்றம் பெற, மேற்குறித்த அனைத்துக் கட்டுப்பாடுகளில் இருந்தும் விடுவிக்கப்படல் வேண்டும்.

## அடிக் குறிப்புகள்:-

(1) Todaro M. P, Economic Development in the Third World (Longman) 1991 P. 30

(2) Agrawal, A. N., Indian Economy, Problems of Development and Planning (1988) P. 14

(3) Ahuluwalia and others, "Growth and Poverty in Developing Countries," Journal of Development Economics, (Sep. 1977), Table I and (ii).

(4) World Bank, World Development Report - 1993, (Oxford University Press) p.292

(5) Ibid., p. 294

(6) Agrawal, A. N., Indian Economy, Problems of Development and Planning (1988) P. 12

# மனிதா உன்னைத்தான்....!

உடுதெனிய, செல்வன் ரஷீத் எம். றியாழ்
விடுகை வருடம் ( கலைப்பீடம் )

ஆறறி வுள்ள உயிராய்
அகிலமே போற்றும் மனிதா
சீரறம் கொண்ட வாழ்வை
சொல்லினில் முழங்கும் மனிதா
பேரணி யோடு இந்தப்
பார் வலம் சூழும் மனிதா
ஓரணி சேர்ந்து வாழும்
இன் வழி மறந்த தேனோ?

★

நறுமணம் கமழும் அழகின்
நல்லெழில் பூங்கா வனமோ
செருக் கதுகொள்ளா தென்றும்
சுகந் தமே வீசு தங்கே
கருவினில் இருந்து இந்தக்
காசினி வந்த மனிதன்
கர்வமே கொண்டு பகையின்
குணமதில் வீழ்வ தேனோ?

★

கானகம் எங்கும் பறந்து
'காகா' என்று கரைந்து,
கானமே இசைக்க நாளும்
காக்கை கள் திரிந்து மாலை,
வான தில் ஒன்றாய்க் கூடி
வாகுற பறக்கு தங்கே;
மானமே கொண்ட மனித
மனதிலே பிளவு ஏனோ?

★

உருவினில் சிறிய உயிராம்
எறும்பு கள் கூட்டமங்கே
பெரு மன தோடு ஒன்றாய்ப்
படை யெடுக் கின்ற காட்சி
பெருமைசேர் ஒற்று மைக்குப்
புவியினில் சிறந்த சாட்சி!
அருமையாய்ப் பிறந்த மனிதா,
உன்னிலே பேதம் ஏனோ?

★


யுத்தமே செய்து சொந்த
இரத்தமே சிந்தி தானும்
உத்தம வீரன் என்று
உயர்வுறப் பேசும் மனிதா
சத்திய மாக நீயோ
சிந்திய இரத்த நிறமோ
இத்தரை எங்கும் ஒன்றே
என்று ஏன் உணரவில்லை?

★

குண்டுகள் வெடிக்கும் யுகமாய்
குவலயம் ஆன தேனோ?
மண்ணுடன் மனித உயிரோ
மாண்டிடும் நிலையும் ஏனோ?
சண்டைகள் பெருக் கெடுத்து
சாதித்த தேது முண்டோ?
கண்ட தோ ஒன்றும் இல்லை
காண்பதோ பேதம் ஒன்றே!

★

கண் இமை போலே நன்றே
காத் துனை வளர்த்த அன்னை
வெண் மையின் பாலைத் தானே
வாகுற அருந்தத் தந்தாள்;
பண்பெலாம் பாலைப் போலே
பரிவுடன் வெண்மை கொண்டாள்
உண்மையாய் உந்தன் பேதம்
அகன்றுளம் விழிப்பு காணும்!




# பாதை மாறிய பயணங்கள்....

செல்வன் மு. விஜேந்திரா

இரண்டாம் வருடம்
பொறியியற்பீடம்

ரமா அந்த உயர்தர 'ப்பெபியூம்' ஐ எடுத்து 'ஸ்பிறே' பண்ணிக்கொண்டாள். அவள் அணிந்திருந்த அந்த 'ரீசேர்ட்' 'கிஸ் மீ' என்று அழைத்தது, ஜீன்ஸ் அணிந்திருந்தாள். அவளின் 'கூலிங்கிளாஸ்' அவளின் அழகை இன்னும் மெருகூட்டிக் கொண்டிருந்தது. அவசர அவசரமாக கார்ச்சாவியை எடுத்துக்கொண்டாள்.

ரமாவின் ஒவ்வொரு செய்கையிலும் ஒரு அவசரம் துல்லியமாகத் தெரிந்தது! அவளுக்கு அவசரம் 'அங்கே' போக வேண்டும்! கைகளெல்லாம் அவளுக்கு நடுங்குவது போலிருந்தது! தலைக்குள் ஒரே இரைச்சலாக இருந்தது. ரமாவின் ஒவ்வொரு நரம்புகளும் அவளை விரட்டிக் கொண்டிருந்தன.

அவளுக்கு 'அது' இப்போது அவசரமாக வேண்டும்! ஒருவித உபாதை அவள் உடலெங்கும் வியாபித்திருந்தது; வியர்த்துக் கொட்டியது. தான் செத்துக்கொண்டிருப்பது போன்றதொரு உணர்வு அவளுக்கு ஏற்பட்டது! உடம்பின் ஒவ்வொரு அணுக்களும் தா...! தா...! என்று ஓலமிட்டுக்கொண்டிருந்தது.

ஹப்பி நைட் கிளப்பிற்குப்போனால் அவளின் அவதி தீர்ந்து விடும். அங்கு நித்தி இருப்பான். ''ப்ளீஸ்...ப்ளீஸ் நித்தி கெதியில தாவன்...! ஐயோ கெதியில போடு நித்தி ...ப்ளீஸ்!. ரமா அவனின் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சுவாள். நித்தி சிரித்துக் கொண்டு, இவளை அலட்சியம் செய்வான். ரமா தாங்க முடியாது அழத்தொடங்குவாள். மீண்டும் மீண்டும் கெஞ்சுவாள். இது அங்கு தினசரி நடக்கும் நிகழ்ச்சி!

பின்பு ''பணம் கொண்டு வந்திருக்கிறியா..?'' கண்களில் ஆசை மின்ன அவன் கேட்கப் போகிறான். தேவையான பணம் ரமாவிடம் இருக்கிறது. வரும் போதே 'ஜீன்ஸ்' இல் அந்தப் பணத்தை அடைந்து வைத்திருந்தாள். பிறகு அவளுக்கு அது கிடைத்துவிடும். ஒரு மூலைக்கு அழைத்துச் செல்வான். அந்த ஊசியைப் பார்த்தவுடன் ரமாவிற்குப்பதறும். ''ப்ளீஸ் நித்தி... ஐயோ என்னால் தாங்க முடியேல... கெதியில போடன்... ப்ளீஸ்! ''இவளின் பதறலை நித்தி ரசிப்பான். தாமதப்படுத்தி ரமாவை அழவைப்பான். பின்பு ஊசி போடும் சாட்டில் இவள் உடம்பெங்கும் தொடுவான்.

அந்தக் கணங்களில் மட்டும் ரமாவிற்கு நெருப்பிற்குள் நிற்பது போன்றிருக்கும். உடம்பெல்லாம் அருவருப்பாகக் கூசும். நித்தியின் கழுத்தைப் பிடித்து நெரிக்க ஒரு வெறி எழும். அந்த வெறியைக் கட்டுப்படுத்திக் கொள்வாள். அவளுக்குத் தேவை அந்த 'ஹெறொயின்' தான். அது கிடைத்

தால் போதும். அது இல்லாமல் ரமாவால் வாழவே முடியாது. அது இல்லாவிடின் உடம்பெல்லாம் சோர்ந்துவிடும். யாரோ தலைக்குள் நின்று ஆணி அடிப்பது போலி ருக்கும். அதிலிருந்து; அந்தவேதனைக ளின்று விடுதலையை அந்த ஊசிதான் வாங் கித் தரமுடியும்.

எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு அழுவாரைப் போல நிற்பாள். ஆனால் நித்தியோ அவளின் அந்தரத்தைச் சிரித் துக்கொண்டே ரசிப்பான். பிறகு அந்த ஊசியை எடுத்து மெதுவாக ஏற்றுவான். கொஞ்சம் நோகும். பிறகு ...

ரமாவிற்குள் வர்ணவர்ண மத்தாப் புக்கள் வெடித்துச் சிதறும். இறக்கைகள் முளைத்தது போல மெதுவாகப் பறப்பது போன்றிருக்கும். இருந்த உடல் வேதனை கள் எல்லாம் மாயமாக மறைந்துவிடும்! காற்று அவளை மெதுவாகத் தூக்கிச் செல் வது போலிருக்கும். உடம்பின் ஒவ்வொரு பகுதியில் இருந்தும் சந்தோஷம் பிறந்து கொண்டிருக்கும்.

ரமாவின் கார் 'ஹப்பி நைட்'' கிளப் இற்குள் சென்று நின்றது. அவசரவவசரமாக இறங்கிக்கொண்டாள். அவளின் கண்கள் நித்தியைத்தேடின. எங்குமே நித்தியைக் காணவில்லை! தலைக்குள் யாரோ நின்று துள்ளுவது போல அவளுக்கு வலிக்க ஆரம் பித்தது! கைகால்கள் சோர ஆரம்பித்தன!

''எக்ஸ் கியூஸ் மீ!'' என்ற குரல் கேட்டு மெதுவாகத் திரும்பினாள் ரமா. அங்கு ஒரு இளைஞன் நின்றிருந்தான். ''ஐ ஆம் வினோத் நித்தியின்ர ஃப்ரெண்ட், நித்தி வெளிநாடு போயிட்டான். இப்ப, ஐ கான் ஹெல்ப் யூ' என்னோட வந்திங்களெண்டா ... உங்களுக்கு வேண்டியதை நான் தரு வன்!''

ரமாவிற்கு கடவுளைக் கண்டது போல இருந்தது. ''இப்பவே வாறன் எவ்வளவு பணம்வேணுமெண்டாலும் தாறன்.''ப்ளீஸ் வினோத் ... ஒரு ஊசி ... ஒரேயொரு ஊசி ...'' அவளின் விழிகள் அழ ஆரம்பித்தன. ''எனக்கு உங்கட பணம் வேண்டாம்! எனக்கு ..., நீங்கதான் வேனும். ஓமெண் டால் சொல்லுங்கோ!'' அவனின் பேச்சில் இருந்த அர்த்தம் அவளுக்குள் இடியாக வந்திறங்கியது, ஒரு கணம் அவள் அதிர்ந்தே போனாள். அருகே இருந்த கதிரையில் தொப்பென விழுந்தாள். குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

ரகு அவளின் ஞாபகத்துக்குள் வந்து போனான். யாழ்ப்பாணத்தில் அவள் வாழ்ந்த நாட்கள் ஞாபகத்துக்கு வந்தன. அவளுக்கு அழுகையாக வந்தது. ''அப்பா'' . . . என்னை ஏனப்பா யாழ்ப்பாணத்தில் இருந்து இங்க கொழும்புக்குக் கூட்டிக் கொண்டு வந்தனீங்கள்? ஏனப்பா இந்தக் கேவலமான நாகரிக வாழ்க்கையை எனக் குக் காட்டினீங்கள் . . ஐயோ அப்பா! என்ர படிப்பு வாழ்க்கை எல்லாமே பாழாப் போச்சேப்பா . . . ! இங்க உங்கட மகளின்ர நிலைமையைப் பாருங்கோப்பா . . . நான் எவ்வளவு கேவலமாப் போனனப்பா . . . உங்கட மகள் சீரழிஞ்சு போய்க் கொண் டிருக்கிறாளப்பா . . . கடவுளே . . . கட வுளே'' என்ற சிந்தனைகள் அவள் விழி களை நனைக்க ஆரம்பித்தன. யாழ்ப்பா ண்த்தில் அவள் படித்த அந்த இனிமை யான காலத்தின் நினைவுகள் வந்து அவ ளின் கரம்பிடித்து அழைத்துச் சென்றது.

யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு மூலை யையும் யுத்தம் வந்து சூழ்ந்திருந்த அந்தக் காலம் - வாழ்விற்கும் சாவிற்கும் இடையில் சனங்கள் அந்தரப் பட்டுக்கொண்டிருந்த நேரம் - பொருளாதாரத் தடைகளினால் யாழ்ப்பாணம் பொலிவு இழந்திருந்த வேளை.

''ரகு . . .'' நாங்க எல்லாரும் குடும் பமா கொழும்புக்கே போகப் போறம்! அப்பா கடிதம் போட்டிருக்கிறார் எதையோ வெறித்துப் பார்த்தபடி சொன்

னாள் ரமா. ரகு அவளை மெதுவாக நிமிர்ந்து பார்த்தான். அவள் கண்களில் கலக்கம் தெரிந்தது.

ரகுவிற்கு ரமாவைச் சிறுவயது முதலே தெரியும். அந்த ரியூசன் வகுப்பில் அனேகமாக ரமாதான் முதலாவதாக வருவாள். ரகுவும் அவளை வெல்ல எத்தனையோ முறை முயன்றிருக்கிறான். முடிந்ததில்லை அதனாலோ என்னவோ அவள்மீது ஒரு மரியாதை வைத்திருந்தான்.

''அப்ப உங்கட படிப்பு...! உங்களுக்கும் கொழும்பு போக விருப்பமோ ...? எனக்கெண்டா நீங்க இப்பிடிப் படிப்பை இடையில குழப்பி அங்க போறது விருப்பமில்லை'' ஆதங்கத்துடன் சொன்னான்.

ரமா அவனின் முகத்தையே பாத்துக் கொண்டு நின்றாள். அவள் சாதாரணமாக எந்த வெளி ஆணுடனும் கதைக்க மாட்டாள். ஆனால் ரகு மட்டும் அதற்கு விதிவிலக்காகிப்போனான். ரகுவுடன் கதைக்கும் போதுமட்டும் அவளினுள் இனம்புரியாத ஒரு இன்பம் பிறந்து வரும். இப்படியான ஒரு இனிய நண்பனை இழந்து, தூரப் போகப் போகிறோமே என்ற கவலை அவளை ஆக்கிரமித்துக் கொண்டது.

''எனக்கும் விருப்பம் இல்லைதான். அதுவும் உங்கள் எல்லோரையும் விட்டுட்டுப்போறது மனசுக்கு என்னவோ மாதிரி இருக்கு...! ஆனா அப்பாதான்..., இங்க படிக்க ஒண்டும் வசதி இல்லை எண்டு அங்க வரட்டாம்!''

ரகுவிற்குத் தெரியும். ரமாவின் தகப்பன் ராஜாராம் பட்ட கஷ்டங்கள் எல்லாம். 'ஹயறிங்' கார் ஓடி ஏதோ குடித்தனம் செய்து வந்த அவர், பிரச்சனைகள் நாட்டில் எழுந்த போது பட்ட கஷ்டங்கள்; வேதனைகள், ஒரு லீற்றர் பெற்றோல் 1500 ரூபாவிற்கு வாங்கி ''ஹயர்'' ஓட முடியுமா என்ன? வாழ வழி தெரியாது திகைத்துப்போன ஆயிரமாயிரங் குடும்பங்களில் அவரது குடும்பமும் ஒன்றாகப் போனது.

இந்நிலையில்தான் அவர் தொழில் தேடிக் கொழும்புக்குப் புறப்பட்டார். அவரின் அதிஸ்டமோ என்னவோ, அவரின் நண்பர் ஒருவருடன் சேர்ந்து செய்த 'ஏஜன்சி' வேலையில் இன்று இந்த இரண்டு வருடத்தில் கொழும்பில் சொந்த வீடும் காருமாக வசதியானவராக மாறிப் போனார். அவர் வாழ்ந்த யாழ்ப்பாணம் இப்போது அவருக்கு வசதியற்ற இடமாகத் தோன்றியது.

''அப்ப இங்க இருக்கிறவை எல்லாரும் வசதி இல்லாமல் படிப்பை விடப் போயினம் எண்டோ உங்கட அப்பா நினைக்கிறார். இங்க பாருங்கோ ரமா..., படிக்கிறதுக்கு ஆர்வம் இருந்தாப் போதும். பெரிசா வசதி ஒண்டும் அவசியம் இல்லை. அதோட படிக்கிற சூழல் திடீரென மாறுறதும் அவ்வளவு நல்லதில்லை''.

அவனின் கதையில் இருந்த உண்மைகளை அவளால் புரிந்துகொள்ள முடிந்தது. ஆனால் தன் தந்தையால் அவைகளைப் புரிந்துகொள்ள முடியும் என்று அவளுக்குத் தோன்றவில்லை. தகப்பனின் முடிவுக்கு மறுப்புச் சொல்லும் துணிவும் ரமாவிற்குத் துளியும் இருக்கவில்லை.

''இல்லை ரகு... யாழ்ப்பாணத்து எல்லா நல்ல 'சேர்' மாரும் இப்ப கொழும்புக்கு வந்திட்டினமாம். இனிக் கொழும்பிலேயே படிக்க ஏலுமாம். அதுதான் என்னையும் அம்மாவையும் உடன வரச்சொல்லி அப்பா எழுதியிருக்கிறார்''

''அப்ப 'சேர்' மார் மாதிரி நீங்களும் 'பொத்' எண்டு யாழ்ப்பாணத்தைக் கைவிட்டிட்டுப் போறதெண்டு முடிவு பண்ணீட்டீங்கள் எண்டு சொல்லுங்கோ. ஏதோ... புதிய சூழல்...! புதிய ஆட்கள்...! கவனம்!'' அந்தக் குரலில் இருந்த அன்பை அவளால் கண்டுகொள்ள முடிந்தது. ஆனால் அதில் இருந்த எச்சரிக்கையை அவள் கருத்தில் எடுக்க மறந்து போனாள்!

கொழும்பு சென்று ரமா இறங்கிய போது மிகவும் பிரமித்து போனாள் புதியதொரு உலகத்துக்குள் புகுந்தது போல இருந்தது! கொழும்புக்கு அவள் இதுதான் முதல்முறை வருகிறாள். இரு வருடங்களாகக் காணக்கிடைக்காத மின் ஒளி கொழும்பில் வர்ணஜாலம் காட்டிக் கொண்டு இருந்தது. எல்லாமே அவளுக்குப் புதுமையாக இருந்தது. கடைகளில் பர்ண் தாராளமாக இருந்தது! வீதிகளில் நிறைய பஸ் ஓடித்திரிந்தது!

இந்த ஆச்சரியங்களைவிட அவளுக்கு அதிக ஆச்சரியமானது அவளின் அம்மா தான். அவளின் தாய் கொஞ்ச நாட்களுக்குள்ளேயே நிரம்பவும் மாறிப்போனாள்! நாகரிகம் என்ற போர்வையில் தாயின் நடை உடை பழக்கவழக்கம் எல்லாமே மாறிப்போனது. முன்னர் சின்னச்சின்ன விடயங்களுக்கு ரமாவைக் கண்டிக்கும் அம்மாவை அவளால் காணமுடியவில்லை! உடை விடயங்களில் ரமா அம்மாவிடம் எத்தனை ஏச்சுக்களை வாங்கியிருப்பாள். அதே அம்மா இன்று உடை விடயத்தில் தாராளமாக... ஆரம்பத்தில் ரமாவிற்கு எதுவுமே பிடிக்காமல் போயிற்று.

''மகள்...... மகள்......'' என்று ஆசையோடு அழைக்கும் அப்பாவையும் அவளால் காணமுடியவில்லை. அவருக்கு ரமாவோடு ஆறுதலாகக் கதைக்கக் கூட நேரம் இருப்பதில்லை. '(B)பிஸ்னஸ்' என்று அலையவே அவருக்கு நேரம் போதவில்லை. வீட்டில் 24மணிநேரமும் 'போன்' அலறியது. சிலநேரம் ரமாவிற்கு அவற்றையெல்லாம் போட்டு உடைக்க வேண்டும் போல இருக்கும். அவளுக்கு வேண்டிய பணம் கிடைத்தது; வசதிகள் இருந்தது. எல்லாம் இருந்தும் அம்மா அப்பாவின் அன்புக்காக ஏங்கத் தொடங்கியது அந்த உள்ளம்.

''அப்பா...... ஊரில் இருக்கக்குள்ள இருந்த சந்தோஷத்தில கொஞ்சங் கூட இங்க இல்லையப்பா...... அங்க 'கரண்ட்' இல்லாட்டிலும் பறவாயில்லை; பட்டினியாகக் கிடந்தாலும் பறவாயில்லை; செத்தாக் கூட பறவாயில்லை திரும்பி ஊருக்கே போயிடுவம் அப்பா..... ! எனக்கு இங்க எதுவுமே பிடிக்கலே!'' அவள் மனதுக்குள் தினசரி அழுவாள். ஊரில் அவள் வாழ்ந்த இனிய நாட்கள் ஞாபகத்துக்கு வரும்; படித்த பாடசாலையும் கூடவே ரகுவின் நினைவுகளும் வரும்; ரமா அக்கா......... ரமா அக்கா'' என்று அவளையே சுற்றிச்சுற்றி வரும் முன்வீட்டு மழலை சுஜியின் ஞாபகம் வரும்; அந்தப் புளிய மர நிழலும் பின் வீட்டு அக்காவுடன் அடிக்கும் அரட்டையும் ஞாபகத்துக்கு வரும். இறுதியில் ஏதோ எல்லாவற்றையும் இழந்து விட்டோம் என்பது போன்ற உணர்வு தோன்றும். தன்னை விட்டுத் தாயும் தந்தையும் விலகி வெகுதூரம் செல்வது போல இருக்கும். வெளியில் சொல்லி ஆறுதல் அடையக்கூட ஆட்களில்லாமல் அந்தப் பிஞ்சு உள்ளம் மெல்ல மெல்ல உடைந்து போனது.

இந்நிலையில்தான் சுபா அவளுக்கு அறிமுகமானாள். சுபாவும் அவளோடு பாடசாலையில் கூடவே படிக்கும் நண்பி. அவள் தான் ரமாவுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக நாகரிக வாழ்க்கையைப் பழக்கிக்கொடுத்தாள். ரமாவும் விரும்பியோ விரும்பாமலோ நாகரிக உலகத்துக்குள் மெதுவாகச் சிக்குப்பட்டுக் கொண்டாள். தாய் தந்தையின் அன்புக்காக ஏங்கிய அவள் சுபாவின் நட்பில் ஆறுதல் அடையத் தொடங்கினாள்.

சில மாதங்கள் கழிய ரகு கடிதம் போட்டிருந்தான். அவள் அங்கு இல்லாததால் ''ரியூசன்'' பரீட்சைகளில் தான் முதலாவதாக வரமுடிந்தது என்று எழுதியிருந்தான். தவணைப் பரீட்சைப் புள்ளிகள் எல்லாம் எழுதியிருந்தான். அவற்றைத் தனது 'மார்க்ஸ்' உடன் ஒப்பிட்டுப் பார்த்த ரமாவிற்குத் தலையைச் சுற்றியது. தான் கல்வியில் ஒரு பாதாளத்தை நோக்கி விழுந்து கொண்டிருப்பது அவளுக்குப் புரிந்தது. ரகுவிற்கும் தனக்கும்

இடையில் பெரியதொரு இடைவெளி ஏற்பட்டு விட்டது போல உணர்ந்தாள். இனம்புரியாத சோகம் ஒன்று அவளை இறுக்கிக் கொண்டது.

அடுத்த முறை நன்றாக முயன்று பார்த்தாள். ஆனால் முற்றிலும் மாறிப் போன அவளது வாழ்க்கை முறை அவள் படிப்பைக் குழப்பியே தீருவேன் என்று அடம் பிடித்தது. தொடர்ந்து வந்த அந் நிலமை A/L பரீட்சையில் அவளுக்குப் படுதோல்வியைத் தர, ரகு மருத்துவ பீடத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருந் தான். ரமா உடைந்து நொருங்கியே போனாள்.

அந்த நேரத்தில்தான் நித்தி அவளுக்கு அறிமுகமானான். அவனைச் சுபாதான் அவளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். தனித்துப் போன தனக்கு ஒரு ஆறுதல் தரும் நண்பனாக அவனை நினைத்துக் கொண்டாள் ரமா. மூவரும் ஒன்றாகப் பொழுது போக்கத் தொடங்கினார்கள். நித்தியோடு அவள் நட்புடன் இயல்பாகத் தான் பழகினாள். ஆனால் நித்தியோ... தான் ஏமாற்றிக் கைவிடும் மற்றப் பெண் களின் 'லிஸ்ட்' இல் ரமாவையும் சேர்க்கத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தான்.!

இப்படித்தான் ஒரு நாள் ரமாவைப் 'பிக்னிக்' ஒன்றுக்கு அழைத்துச் சென் றான் நித்தி. அந்த நேரத்தில் அவளின் கையை மெதுவாகப் பிடித்துக் கொண் டான். ரமாவிற்கு ஏதோ போல் இருந் தது; அந்தரமாக இருந்தது. அவளின் மௌனம் அவனைச் சற்று வரம்பு மீற வைக்க, ரமா திகைத்துப் போனாள். அவ ளுக்கு நித்தி மீதிருந்த அபிமானம் சிதைந்து போனது. ஓங்கி அவன் கன்னத்தில் அறைந் தாள் ''ரூ மச்!'' என்று அவள் வாய் முணுமுணுத்துக் கொண்டது. தான் காரில் ஏறி அங்கிருந்து விலகிச் சென்றாள்.

நித்தி திகைத்துப் போய் நின்றான். அவளை இலகுவாக அடைந்து விடலாம் என்று நித்தி எண்ணியிருந்தான். அவமா னத்தால் அவனின் முகம் கறுத்துப் போனது. அவளை எப்படியும் பழிவாங்க வேண்டும் என்று அவன் மனம் எண்ணிக் கொண்டது!

அடுத்தநாள் 'கிளப்' இல் ரமாவிடம் நித்தி வந்தான். ''ரமா... ! ஐ ஆம் வெரி சொறி! ஏதோ...... உணர்ச்சிவசத்தில .. உங்களோடு...... அப்பிடி......!'' அதிகம் கவலைப்படுபவன் போலக் கதைத்தான். அவனின் முகத்தில் பரிதாபம் இருந்தது. எங்கே அழுது விடுவானோ என்பது போல இருந்தான்.

ரமாவிற்கு அவனைப் பார்க்கப் பாவ மாக இருந்தது. ''ஓகே நித்தி .. ! நடந் ததை நான் மறக்கிறன். ப்ளீஸ் நித்தி, எங்கட இந்த நட்பில் காமத்தை வந்து கலங்காதீங்கோ! உங்களுக்கு நேற்று அடிச் சதில எனக்கும் சரியான கவலை - உங்கட மனசைச் சலனப்படுத்திற மாதிரி எங்க நடந்துகொண்டிற்றனே எண்டு ஒரே யோசனை. அந்த யோசனையால அப்ப இருந்து ஒரே தலையிடி!'' அவள் தன் தலையைக் கைகளால் பிடித்துக்கொண் டாள்.

உடனே நித்தி அவள் மீது இரக்கப் படுபவன்போல நடித்தான். ''ரமா..., எல்லாம் என்னாலதான். உந்தத் தலை யிடிக்கு என்னட்ட ஒரு வெளிநாட்டு 'பில்ஸ்' இருக்கு. உடனேயே மாறிடும்!'' என்று ஒரு குளிசையை எடுத்துக் கொடுத் தான்.

ரமா அதைப் போட்டுக்கொண்ட கொஞ்ச நேரத்தில் தலையிடி இருந்த இடம் தெரியாமல் ஓடி மறைந்தது! அவளுக்குச் சந்தோஷம் சந்தோஷமாக வந்தது! எங்கோ பறப்பது போலிருந்தது! உடம்பெல்லாம் இலேசாகி விட்டது போன்றதொரு உணர்ச்சி ஏற்பட்டது! ''நித்தி ! அற்புதமான 'பில்ஸ்' இன்னு மொண்டு இருக்கா ''? அவள் ஆவலுடன்

கேட்க, நித்தி மேலும் ஒன்றை எடுத்துக் கொடுத்தான்.

அடுத்த நாள் அந்த நேரத்திற்கு ரமாவிற்குத் தலையெல்லாம் வலித்தது.! அவளுக்கு ஏனென்று விளங்கவில்லை! உடம்பெல்லாம் சோர்ந்தது. நித்தி தந்த அந்தப் 'பில்ஸ்' ஐத் தா தா... என்று உடம்பு கேட்டது! நித்தி யிடம்... ஓடினாள்.

அந்தப் 'பில்ஸ்' ஐப் போட்டவுடன் அவள் தவிப்பு எல்லாம் அடங்கிப் போனது. மீண்டும் ஒரு இனிய சுகம் அவளை ஆக்கிரமித்துக் கொண்டது. அந்தரத்தில் நித்தி விளையாடுவது போலிருந்தது!

பிறகு வந்த நாட்களில் அவள் அந்தப் போதை மாத்திரைக்கு அடிமையாகிப் போனாள். நித்தி அவளுக்குப் போதை ஊசி ஏற்றியும் பழக்கினான். அவளை ஒரு கைப்பொம்மையாக ஆட்டுவித்தான். அவளிடம் இருந்து அதிக பணம் கறக்க ஆரம்பித்தான்.

இதே நித்திதான் இன்று எங்கோ காணாமல் வெளிநாடு போய் விட்டான். அவனின் நண்பன் என்று வந்த வினோத், அவளின் கற்பை விலையாகக் கேட்கிறான். ரமாவிற்கு வாழ்க்கையே வெறுத்துப் போனது. நேரஞ்செல்லச் செல்ல அவளால் உடல் வேதனைகளைத் தாங்க முடியாது போனது. அந்தப் போதை மருந்தைக் காணாதபேதை தவிக்கத் தொடங்கினாள். அவளால் அந்த உடல் உபாதைகளை தாங்க முடியாது என்ற நிலை வந்த போது....... ...

வீடு வந்து சேரும் வழியில் ரமாவிற்குள் ஒரு தீர்மானம் உருவாகியிருந்தது. அவளால் இனி இந்த உலகத்தில் வாழ முடியும் என்று தோன்றவில்லை. தற்கொலை ஒன்றுதான் தன் பிரச்சனை எல்லாவற்றிற்கும் நிரந்தரமான முடிவு என்று தீர்மானித்தாள்.

ஆனால்......! வீடு வந்து சேர்ந்த பொழுது, அவளைச் சந்திக்க ரகு வந்து காத்துக் கொண்டிருந்தான். இவளைக் கண்டதும் ரகுவின் முகத்தில் புன்னகை பூத்தது. இவளும் பதிலுக்குப் புன்னகைக்க முயன்று தோற்றாள். அவனின் முகத்தைக் கூட நிமிர்ந்து பார்க்கத் துணிவில்லாதவளாகத் தலையைக் குனிந்துகொண்டாள்'

"என்ன ரமா........ ஏதோ மாதிரி இருக்கிறீங்க......! உங்களைக் காண எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா..... ஆனா நீங்க...... எதையோ பறிகொடுத்த மாதிரி..... !" அவனின் அந்தச் சூடான கதையில் அடிபட்டுப்போன ரமா, அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவளையும் மீறிக் கண்கள் உடைப்பெருக்க ஆரம்பித்தன. அதற்கு மேலும் அவளால் உண்மைகளை ஒளித்து வைக்க முடியவில்லை! அவள் அழுதழுது தனது கதை முழுவதையும் சொன்ன போது, ரகுவால் தன் காதுகளையே நம்பமுடியவில்லை திகைத்துப் போய் நின்றிருந்தான்.

"ரமா...... எவ்வளவு துணிவா சாகிற தெண்டு முடிவு எடுத்திட்டீங்க ஆனா...... உங்களையே நினைச்சுக் கொண்டு நானொருத்தன் இங்க வாழுறது உங்களுக்கு விளங்கேல...... நீங்கள் இல்லாத ஒரு. வாழ்க்கையை என்னால் கற்பனை பண்ணிககூட பாக்க ஏலாமல் இருக்கு! ரமா!, ஒண்டு மட்டும் சொல்லுறன் உங்களுக் கொண்டு ஆச்சுது எண்டா......... பிறகு ரகுவை நடைப்பிணமாத்தான் எல்லாரும் காணுவினம்!"

"ஐயோ...... என்ன இது ரகு! இந்தப் பாவப்பட்ட என்னையா போய்க் காதலிக் கிறனெண்டு சொல்லுறீங்க...... 'நோ'...... ரகு 'நோ'! எனக்கு அந்தத் தகுதியே இல்லை!" ரமா குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

"ரமா...... உங்களுக்கே தெரியும். உங்களில எனக்கு அன்பு இண்டைக்கு நேற்று வந்ததில்லை, இப்ப உங்கட நிலைமையைக் கண்டு எனக்கு ஒண்டும்

வெறுப்பு ஏற்படலே, மாறா இன்னும் அன்பு கூடித்தான் இருக்கு என்ன காரணத்துக் காண்டியும் என்ற ரமாவை இழக்க நான் தயாரா இல்லை! எங்க, என்னில உங்களுக்கு உண்மையான அன்பிருந்தா, இனித் தற்கொலை அது இது எண்டு போக மாட்டன் எண்டு சத்தியம் பண்ணுங்கோ'' அவன் கைகளை நீட்டினான்.

அவனையே பாத்துக்கொண்டு நின்ற ரமா, மெதுவாக அவளது கையை எடுத்து அவனது கைமேல் வைத்தாள். ரகு அவளின் அந்தக் கையை ஆதரவுடன் பற்றிக் கொண்டான். ரமா அவனின் தோளில் முகம் புதைத்து விசும்பத் தொடங்கினாள்.

அடுத்த சில மணித்தியாலங்களுக்குள் ரகு அநேக அலுவல்களைச் செய்து முடித்தான். முதலில் ரமாவின் பெற்றோர்களைச் சந்தித்து நிலைமையின் தீவிரத்தை விளக்கினான். தங்கள் ஒரே மகளை இழக்க இருந்த பயங்கர நிலைமையை அவர்கள் விளங்கிக்கொண்டார்கள். உடனடியாக ரமா ஒரு உயர்தர வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டாள்.

ரமா அந்த வைத்தியசாலையே இரண்டு படும்படி ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தாள்! தன்னை அங்கிருந்து போக விடும்படி சிப்பந்திகளைக் கெஞ்சிக்கொண்டிருந்தாள். அவர்கள் மறுக்கவே, அருகே இருந்த கண்ணாடிக் குவளைகளை போட்டு உடைத்தாள், அப்போது அங்கு வந்த ரகுவின் கையை பிடித்துக்கொண்டு, ''ப்ளீஸ் ரகு... என்னால தாங்க முடியேல! ஒரேயொரு அந்த ஊசி வாங்கித் தாங்கவேன் ப்ளீஸ்!'' அழுது குழறினாள்.

ரகு அவளின் தலையை ஆதரவாகத் தடவினான். ''ரமா... கொஞ்சம் பொறும்மா... இன்னும் கொஞ்ச நேரத்தில டொக்டர் இங்கு வருவார். நிச்சயமா 'அது' உனக்குக் கிடைக்கும்!'' அவன் ஒருமையில் உனக்கு என்று கதைக்க ஆரம்பித்திருந்தது ரமாவிற்குள் சந்தோஷத்தைக் கொடுத்தது.

சில நிமிடங்களின் பின், அங்கு வந்த டொக்டர் அவளுக்கு போட்ட பெத்தடின் ஊசி அவளின் வேதனைகளைக் குறைக்கக் கொஞ்சம் உதவியது. சற்று நேரத்திற்கெல்லாம் ரமா தூங்கிப் போனாள். அவள் குழந்தை போல உறங்கும் அந்த அழகை அப்படியே நின்று ரசித்துக்கொண்டிருந்தான் ரகு.

ரகுவின் அன்பு கலந்த கவனிப்பும், அந்த வைத்தியசாலை தந்த சிகிச்சையும் ரமாவைப் போதை அரக்கனின் பிடியில் இருந்து விடுவிக்க உதவியது. ரகு அவள் மீது கொண்ட காதல் அவளுக்கு ஒரு நல்ல மருந்தாக அமைந்து போனது. தன்னில் அன்பு காட்ட ஒரு ஜீவன் இருப்பது கண்டு மகிழ்ந்துபோனாள். அவனுக்காகவாது அந்தப் போதைப் பழக்கத்தை மறக்கவேண்டும் என்று பெரிதும் முயன்றாள். ரகு பற்றிய இனிய சிந்தனைகளால் மனதைத் திசை திருப்ப முயன்றாள்.


அவள் ஏறக்குறையச் சுகமாகிவிட்ட ஒருநாள் ராஜாராம் அன்பொழுக அவளிடம் ''மகள்... உன்னை ஊரில் இருந்து இங்க கூப்பிட்டு உன்ர வாழ்க்கையை நான் பாழாக்கிப் போட்டன். இனியும் நீ இலங்கையில இருக்கிறதை நாங்கள் விரும்பேல உன்னையும் அம்மாவையும் கனடாவுக்கு அனுப்பப் போறன் - அங்க நீ உன்ர படிப்பைத் தொடரலாம் - அகதி எண்டு போனாலும் அங்க வசதியா இருக்கலாம்....''

அவரின் கதையைக் கேட்ட ரமாவிற்கு. கோபம் கோபமாக வந்தது. ஒரு கணம் ரமாவிற்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. ''நோ . !'' அன்று அந்த வைத்தியசாலையே அதிரும்படி கத்தினாள்.'' நான் ஒண்டும் அகதி இல்லை! எனக்கு இங்க நாடு இருக்கு! என்னில

அன்பு காட்ட நீங்கள் இல்லாட்டிலும் என்ற ரகு இருக்கிறார் - உங்களுக்கு வசதி; சொகுசான வாழ்க்கை வேணுமெண்டால் எந்த நாட்டிற்கெண்டாலும் அகதியாகப் போங்கோ! நான் வரேல - அந்த இயந்திர வாழ்க்கை எனக்கு வேண்டாம்! எங்க போனாலும் எங்கட மண் மாதிரி ஒண்டைக் காணமாட்டியள்...!'' அவளின் கோபம் அழுகையாக வெடித்தபோது ராஜாராம் செய்வதறியாது நின்றார். சுதாகரித்துக்கொண்ட அவரின் கை ரமாவின் தலையை மொதுவாகக் கோதிக் கொடுத்தது.

''அப்பா... எனக்குத் திரும்பி யாழ்ப்பாணத்தில போய் படிக்கோணும் போல இருக்கப்பா... விளக்கெண்டாலும் பரவாயில்லை - என்னை அங்க கொண்டு போய் விடுங்கோப்பா .. ஊரில் முன்வீட்டு சுஜியை தூக்கிக் கொஞ்சோணும் போல இருக்கப்பா... பிறகு... அந்தப் புளிய மர நிழல்... பின் வீட்டு தீபா அக்கா... எல்லாத்தையும் பாக்கோணும் போல இருக்கப்பா... ப்ளீஸ் என்னைக் கொண்டே யாழ்ப்பாணத்தில விடுங்கோப்பா.'' அவள் அடக்கி வைத்திருந்த கலக்கங்கள் எல்லாம் பீறிட்டெழ, கேவிக் கேவி அழ ஆரம்பித்தாள். ●

( யாவும் கற்பனை )



# தத்துவ முத்துக்கள்

வாழ்வின் லட்சியம் இன்பம் அன்று, நம்மையும் பிறரையும் நல்லோ ராக்குவதே.

- மாஜினி -

துக்கத்தை அடக்காதே; மொழிந்து விடு, இல்லையெனில் அது இதயத்தை உடைந்து விடச்செய்யும்.

- ஷேக்ஸ்பியர் -

அழகு மதுவினும் தீயதே. உடையவர், பார்ப்பவர் இருவர்க்கும் வெறியூட்டும்.

- ஜிம்மர்மென் -

முதுமை வயதைப் பொறுத்ததன்று, உணர்ச்சியைப் பொறுத்ததாகும்.

- கர்ட்டிஸ் -


கிழவரை மூடரென்று இளைஞர் நினைப்பர். ஆனால் இளைஞரே மூடரென்று கிழவர் அறிவார்.

- சாக்மென் -

நாம் நேசிக்கும் ஒருவருக்கு மரணம் நேரிடும் பொழுதே நாம் மரணத்தை முதன் முதலாக உணர ஆரம்பிக்கிறோம்.

- ஸ்டேல் -

# முதற் பரிசு பெற்ற கார்ட்டூன்




செல்வன் எம். ஐ. முகமட் மர்சூன்

விடுகை வருடம்,
**கலைப்பீடம்.**

# குருதி அழுத்த அதிகரிப்பிற்கான காரணிகள்

- கலாநிதி இரா. சிவகணேசன் -
முதுநிலை விரிவுரையாளர்,
(மருத்துவபீடம்.)

உயர் குருதி அழுத்தம், ஆங்கிலத்தில் Hypertension என அழைக்கப்படும். இது ஒரு நோயின் அறிகுறியேயன்றி, ஒரு நோய்வாய்ப்பட்ட நிலையைக் குறிப்பதொன்றல்ல. குருதி அழுத்தமானது, குருதிச் சுற்றோட்டத்தின் பொழுது நாடிச் சுவர்களின் மேல் குருதியினால் பிரயோகிக்கப்படும் விசையாகும்.

முதிர்ச்சியடைந்த ஒருவரின் சாதாரண குருதி அழுத்தம் 120/80 என்ற இரு எண்களினால் குறிக்கப்படுகின்றது. இதில் முதலாவது எண் இதயத்துடிப்பின் போது நாடியில் ஏற்படக்கூடிய அழுத்தத்தின் உயர் பெறுமானத்தைக் குறிப்பதாகும். இதனை இதயச் சுருங்கலுக்குரிய அழுத்தம் (Systolic Pressure) என அழைப்பர். இரண்டாவது எண் இதயத்துடிப்புகளுக்கிடையே உருவாகும் ஆகக் குறைந்த அழுத்தத்தின் பிரதி பலிப்பாகும். இதனை இதயவிரிவுக்குரிய அழுத்தம் (Diastolic Pressure) என்றழைப்பர். குருதி அழுத்தத்தினை அளவிடும் அலகு மில்லி மீற்றர் பாதரசமாகும் (mmHg). மேற்கூறிய அளவுகளிலிருந்து 160/95 அளவுகளுக்கு இடைப்பட்ட குருதி அழுத்தத்தினை, உயர் குருதி அழுத்தத்திற்கும், சாதாரண குருதி அழுத்தத்திற்கும் இடையேயுள்ள எல்லைகளாகக் (Borderline) கணிக்கலாம். இவ்விரு எல்லைகளுக்குமிடைப்பட்ட குருதி அழுத்தத்தினைக் கொண்டிருப்பவர்களை சாதாரண குருதி அழுத்தத்தினைக் கொண்டவர்களோடு ஒப்பிடும் பொழுது, மாரடைப்பு ஏற்படக்கூடிய அபாயம் ஏறத்தாழ இரண்டரை மடங்காகும்.

உயர் குருதி அழுத்தத்தின் ஆரம்ப நிலையில் அப்படி ஒரு நிலை தனக்கு ஏற்பட்டிருப்பதை ஒருவரால் புரிந்து கொள்ளக்கூடிய குணாதிசயங்கள் பெரும்பாலும் இல்லை என்றே கூறலாம். இந்நிலை மிகவும் அபாயகரமானது. ஏனெனில், இந்நிலையானது காலப்போக்கில் பாரிசவாதம், மாரடைப்பு, சிறுநீரகபாதிப்பு போன்ற பாரிய சுகயீனங்களை ஏற்படுத்துவதன் மூலம், ஒருவரை அவரை அறியாமல் மரண தேவதையின் பிடிக்குள் அகப்பட வழி கோலுகின்றது. எனவே ஒருவர் தனது இரத்த அழுத்தத்தினை கிரமமான முறையில் அளவிட்டுப் பார்த்துக் கொள்வது பாரதூரமான நோய்கள் ஏற்படக்கூடிய அபாய நிலையிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள உதவுகிறது. குருதி அழுத்தத்தினை மிகவும் எளிய முறையில் அளவிடலாம். மேற் புயத்தினைச் சுற்றி இடப்பட்ட ஒரு இறப்பர் உறையினுள் காற்றினைச் செலுத்தி, அதன் கீழுள்ள நாடியில் குருதி பாய்வதை நிறுத்த எவ்வளவு அழுத்தம் தேவையென பாரமானி போன்ற ஒரு கருவியின் மூலம் (Sphygmomano meter) அறிந்துகொள்ளும் அதே வேளையில், நாடியினூடாக குருதி பாயும் ஒலியினை "ஸ்ரெதஸ்கோப்" (Sththescope) கருவி மூலம் கேட்கலாம். இறப்பர் உறையுள்ளே அழுத்தம் படிப்படியாகக் கூடும் போது, ஓர் நிலையில் குருதி பாயும் ஒலி கேட்காமல் போய்விடும். அத் தருணத்தில் கிடைக்கும் இரத்த அழுத்தம்

இதய சுருங்கலுக்குரிய அழுத்தம் எனப்படும். அதன் பின் இறப்பர் உறையின் அழுத்தத்தினைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டு செல்லும் போது குருதி பாயும் ஒலியினைக் கேட்கக் கூடியதாகவிருக்கும். இறப்பர் உறையுள் அழுத்தம் படிப்படியாக குறையும் போது, மீண்டும் குருதி பாயும் ஒலி படிப்படியாக குறைந்த ஒரு நிலையில் இல்லாமல் போய்விடும். அப்போது கிடைக்கும் இரத்த அழுத்தமானது இதயவிரிவுக்குரிய அழுத்தம் எனப்படும்.

இரத்த அழுத்தத்தினை அளவிடும் நம்பிக்கையான ஒரு முறை முதன் முதலாக 1905ம் ஆண்டிலேயே உருவானது. முதன் முறையாக உயர் இரத்த அழுத்தத்தினைக் குணப்படுத்தவல்ல மருந்துகள் 1951ம் ஆண்டிலே தான் உபயோகிக்கப்பட்டது. தற்பொழுது ஏராளமான பலவகையான மருந்துகள் பாவனையில் இருப்பதால், உயர் இரத்த அழுத்தத்தினைக் குணப்படுத்துவது ஒரு இலேசான விடயமாகி விட்டது. இளவயது ஆண்களே பெண்களைப் பார்க்கிலும் உயர் இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்படுவதை அவதானிக்கமுடிகின்றது, எனினும், பெண்கள் தம் மாதவிடாய்ப் பருவத்தைத் தாண்டிய பின்னர் இந்நிலை மாறி ஆண்களை விடப் பெண்களில் அநேகரில் இரத்த அழுத்தம் உயர்வாக இருப்பதனைக் காணலாம். இளம் பெண்களை உயர் இரத்த அழுத்தம் பீடித்திருக்கும் பொழுது, அது பெரும் தலையிடியாகவிருக்கும். ஏனெனில், அப்படிப்பட்டவர்கள் கருத்தடை மாத்திரைகளைப் பாவிக்க முடியாமல் போவதும் கர்ப்பக் காலத்தில் இது பல சிரமங்களை ஏற்படுத்துவதுமாகும்.

பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த மக்களிடையே அவர்களின் வயது கூடிக்கொண்டு போகும் பொழுது இரத்த அழுத்தமும் கூடிக்கொண்டே செல்கின்றது இப்படிப்பட்ட வயது சார்ந்த இரத்த அழுத்த அதிகரிப்பு வீதம் சமூகங்களிடையே வேறு படலாம். இருந்தும் ஒருவரின் வயதுடன் நூறைக் கூட்டி வரும் எண் அவரின் இதயசுருங்கலுக்குரிய அழுத்தத்திலும் மேலாக இருந்தால், அவருக்கு உயர் இரத்த அழுத்தம் உள்ளதெனக் கொள்ளலாம். உதாரணமாக நாற்பது வயதுடைய ஒருவரின் இதயசுருங்கலுக்குரிய அழுத்தம் 140 ஐத் தாண்டும் பொழுது அவர் உயர் இரத்த அழுத்த நிலைக்குத் தள்ளப்படுகிறார்.

சிறுவர்களில் உயர் இரத்த அழுத்தம் ஏற்படுமாவென சிலர் கேட்கலாம். நிச்சயமாக ஆம் எனத் தயங்காமல் பதில் கூறமுடியும். சிசு நலம் பேணும் மருத்துவர்கள் சிறுபிள்ளைகளிலும் உயர் இரத்த அழுத்த நிலை காணப்படுகின்றதெனவும் அதற்கு தகுந்த பரிகாரம் உள்ளதெனவும் கூறுவதை நாம் கேட்டிருக்கிறோம். எனவே, பெற்றோர்கள் இவ்விடயத்தைக் கவனத்திற் கொள்வது சாலச் சிறந்தது. சிறுநீரக கோளாறுகளே பெரும்பாலும் சிறுவர்களில் உயர் இரத்த அழுத்தத்திற்கான காரணியாக விளங்குகிறது. இது மட்டுமல்லாமல், வேறு பல காரணிகளும் இதற்குக் காரணமாகலாம்.

உயர் இரத்த அழுத்தமானது ஐக்கிய அமெரிக்க இராச்சியத்திலுள்ள வெள்ளையர்களுடன் ஒப்பிடும் போது, அங்கு வாழும் கறுப்பின மக்களிடையே 4 மடங்கு அதிகமாக இருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வித்தியாசமானது, உயர் இரத்த அழுத்தம் காரணமாக மரணமடைவோரின் எண்ணிக்கையிலும் பிரதிபலிக்கின்றது. உதாரணமாக, கறுப்பினத்தவரில் உயர் இரத்த அழுத்தம் காரணமாக இறப்பவர்களின் தொகை, வெள்ளையர்களைவிடப் பத்து மடங்கு அதிகமாகும். எமது நாட்டில் வாழும் சமூகங்களைப் பற்றி இப்படிப்பட்ட தகவல்கள் அரிதாகவே உள்ளதால், இத்துறையில் பாண்டித்துவம் பெற்றவர்கள் ஆய்வுகள் நடாத்தி மக்களுக்கு உதவ முன்வர வேண்டும்.

இனி உயர் இரத்த அழுத்தத்திற்கான காரணிகளைப் பற்றி சிறிது கவனிப்போம். கடந்த 60 ஆண்டுகளாக மருத்துவ ஆய்வாளர்களால் இவ்விடயம் கவனத்திற்கெடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும், ஆய்வின் பெறுபேறுகள் இதனை தெளிவுபடுத்தியதாகத் திட்டவட்டமாக கூறமுடியாதுள்ளது. எமது உடம்பானது இரத்த அழுத்தத்தை எவ்வாறு சீரான நிலையில் பேணுகின்றது என்பதற்கு ஆதாரமாக அநேக விடயங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அத்தோடு, உயர் இரத்த அழுத்தத்தைத் தோற்றுவிக்கும் சில நோய்களும் அறியப்பட்டுள்ளன. அநேக மருத்துவர்கள், மனிதரிடையே காணப்படும் உயர் இரத்த அழுத்த நிலை ஒரு பிறப்புரிமைக்குரிய அல்லது பரம்பரைக்குரிய விடயமென நம்புவதாகத் தெரிகின்றது. இருந்தும், பிறப்புரிமை இயல்பு மட்டுமே காரணியாக அமைது விடமுடியாது. ஒருவர் வாழும் சூழல், உட்கொள்ளும் ஆகாரம், வேலைச் சுமை, பொருளாதார நிலை போன்ற பல்வேறு காரணிகள், பிறப்புரிமை இயல்போடு கூட்டுச்சேரும் பொழுதே பெரும்பாலும் உயர் அழுத்த நிலை உருவாகிறது. எப்படியிருந்தும் உயர் இரத்த அழுத்தம் குடும்பச் சொத்தெனக் கூறினால் மிகையாகாது. உயர் இரத்த அழுத்தத்தில் இரண்டு வகைகள் உள்ளன. அதில் முதலாம் வகைக்கான காரணங்கள் எதுவுமில்லை எனலாம். இது பிறப்புரிமை இயல்போடு சம்பந்தப்பட்டது. ஆங்கிலத்தில் இதனை Essential Hypertension எனக் கூறுவர். இரண்டாம் வகை அல்லது "Secondary Hypertension" எனப்படுவது வேறு நோய்களின் நிமித்தம் ஏற்படுவதொன்றாகும்.

இரண்டாம் வகையான உயரமுத்தம், சிறுநீரகக் கோளாறுகளினால் ஏற்படுகின்றது. தொடர்ச்சியான சிறுநீரகத் தொற்றுத் தன்மை, சிறுநீரகத்தில் கற்கள் காணப்படுதல், சிறுநீரக அழற்சி, சிறுநீரக நாடி சுருங்குதல் போன்ற பல்வேறு காரணங்கள் இரத்த அழுத்தத்தினை அதிகரிக்கக் கூடியன.

இனி சிறுநீரக நோய்கள் எவ்வாறு உயரமுத்தத்தினை ஏற்படுத்துகின்றதென கூர்ந்து கவனிப்போம். சிறுநீரகம் குருதி அழுத்தத்தினைப் பராமரிக்கும் ஒரு முக்கிய உறுப்பாகும். அத்துடன் உடலில் உள்ள நீர், சோடியம், பொற்றாசியம், அயன்கள் போன்றவற்றின் அளவினையும் கட்டுப்படுத்தும் உறுப்பாகவும் விளங்குகின்றது. அதைவிட, சிறுநீரகத்தினால் சுரக்கப்படும் "ரெனின்" (Renin) என்ற அகஞ்சுரப்பானது இரத்த அழுத்தத்தினை அதிகரிக்கின்றது. ஒரு சிறுநீரகத்தின் நாடிகள் சுருங்கிக் காணப்படும் நோயாளிகள், சிலரின் மற்றைய சிறுநீரகமானது கூடியளவு "ரெனின்" ஐத் தாயரித்து சுரக்கின்றது.

அடுத்ததாக, உணவின் பங்கு என்னவென பார்ப்போம். உயர் இரத்த அழுத்தத்திற்கும், உடற் பருமனுக்குமிடையே நேரடியான சம்பந்தமிருக்கின்றது. ஆதலால் மிகவும் பருத்த சரீரம் கொண்டவர்கள் எடையைக் குறைப்பதன் மூலம் உயரமுத்தத்தினைச் சாதாரண நிலைக்குக் கொண்டுவரலாம். எடைக் குறைப்பு என்பது பேச்சளவில் எளிதான ஒன்றாகத் தோன்றினாலும், செயலளவில் கடினமானதொன்றாகும். மிகவும் பருமனானவர்கள் குறைந்த அளவிலேயே ஆகாரம் உட்கொள்ளுவதாக கூறுவதைக் கண்டிருக்கிறோம். இது சில வேளைகளில், உண்மை எனத் தோன்றுகின்றது. இப்படிப்பட்டவர்களிடையே உணவின் கலோரிகளை, கொழுப்பாக மாற்றும் திறன் மிக அதிகமாக இருப்பதே இதற்குரிய காரணம். ஆதலால், உண்ணும் உணவின் கலோரிப் பெறுமானத்தைக் குறைத்து தேகப் பயிற்சி போன்ற வழிகளைக் கடைப்பிடித்து உடல் நிறையைக் குறைக்க எத்தனிக்கலாம்.

உணவில் உள்ள உப்புக்கும், உயர் குருதி அழுத்தத்திற்கும் இடையேயுள்ள தொடர்பானது, இன்னுமே சர்ச்சைக்குரிய விடயமாகவே இருந்து வருகின்றது. சிலர் அதிகளவில் உப்பு சேர்ந்த உணவை காரணியாகக் கருதினாலும், வேறு சிலர் உப்பின் அளவிற்கும் இரத்த அழுத்தத்திற்கும் எதுவித தொடர்பும் இல்லை என ஆணித்தரமாகக் கூறுகின்றனர். உப்பின் அளவு ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகக் கருதப்படுகின்ற போதிலும், அதன் கட்டுப்பாடு, இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் ஒரு வழியாக இன்று வரை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. சோடியம் குளோரைட்டை (கறிஉப்பு) அதிகளவில் உணவில் சேர்த்துக் கொள்ளும் சமூகத்தவரின் மத்தியில் .உயர் இரத்த அழுத்தம் அதிகரித்துக் காணப்படுகின்றது. உதாரணத்திற்கு யப்பானைக் குறிப்பிடலாம். யப்பானின் வடபகுதியில் வாழும் மக்கள் நாளொன்றிற்கு 25 கிறாம் சோடியம் குளோரைட்டை உள்ளெடுக்கின்றனர். இவர்களிடையே தான் உயர் இரத்த அழுத்த வீதமும், ஆகக் கூடிய அளவில் இருக்கின்றது. ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்களால், நாளொன்றுக்கு உள்ளெடுக்கும், சோடியம் குளோரைட்டின் அளவு 7 அல்லது 8 கிறாமாக இருக்க வேண்டும் என சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

இறுதியாக, ஆராயப்படவிருக்கும் காரணி தகைப்பு (Stress) ஆகும். குருதி அழுத்தம் பெரும்பாலும் ஒருவரின் நாளாந்தச் செயற்பாடுகளுடன் வேறுபடுகின்றது. ஒருவர் பூரண ஓய்வெடுக்கும் போதே, இரத்த அழுத்தமும் ஆகக் குறைந்த நிலையில் இருக்கும். இதனை வெகுவாகப் பாதிக்கும் நிகழ்வுகள், உதாரணமாக, எதிர்பார்ப்புகள், அங்கலாய்ப்புகள், குழப்பங்கள், ஏமாற்றங்கள், துன்பகரமான சூழ்நிலைகள், பரீட்சைகள், பிரயாணங்கள், இது போன்ற பிறவும் ஒருவரைத் தகைப்புக்கு உள்ளாக்குவதனால் அவருடைய இரத்த அழுத்தம் அதிகரிக்கின்றதெனலாம். மேலே குறிப்பிட்ட நிகழ்வுகள் சிலருக்கு வாழ்வின் ஒரு பகுதியாக அமைவதால் அப்படிப்பட்ட சூழ்நிலைக்கு உட்படுபவர்கள், தமது குருதி அழுத்தத்தினை அளவிட்டுக் கொள்வது சாலச் சிறந்தது. இப்படிப்பட்டவர்களுக்கு சாதாரண வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளை எவ்வாறு முகம் கொடுத்துச் சமாளிப்பது என்பது பற்றி அறிவுரைகளை வழங்குவதும் சிறந்த பலனைத் தருவதாகும்.

(இக்கட்டுரையில் உயர் இரத்த அழுத்தத்திற்கான சில காரணிகள் ஆராயப்பட்டன. பிறிதொரு தருணத்தில் இதன் விளைவுகள், அறியும் முறைகளின் விளக்கம், அதனைக் குணப்படுத்தக் கையாளும் முறைகள் என்பன பற்றி விரிவாக ஆராயப்படும்).

### இனிய சுவைகள்

திட்டமிட்டது போதும். கூடிப் பேசியதும் போதும்.
அனைத்துக்கும் சுருக்கமான பதில், செய்து முடிப்பதுதான்.
எந்தக் காரியமாக இருந்தாலும் அதை உடனே
செய்து முடியுங்கள்.

— இங்கிலாந்துப் பழமொழி —

தளராத இதயத்தை உடையவனுக்கு இவ்வுலகில்
'முடியாது' என்பது எதுவுமில்லை!

— பிரெஞ்சுப் பழமொழி —

# வாசகனின் நடுநிலைப் போக்கு

— எம். ஏ. அப்துல் சக்காப் —
பொருளியற்றுறை
(விடுகையாண்டு, கலைப்பீடம்)

வாசிப்பதானது ஒரு வாசகனின் செய்முறை ரீதியான ஒரு வினையாக இருக்கின்றமையினால், அது மனிதனைப் பூரணத்துவமாக்கும் என்ற கருத்து பொதுவாகவே முன்வைக்கப்படுகிறது. வாசகனைப் பொறுத்தவரையில், அவன் எந்தளவுக்கு நூல்களை உசாவிக் கொண்டு - அதாவது வாசித்துக் கொண்டு -செல்கிறானோ, அந்தளவு அவனுக்கு அறிவு ஏற்பட்டுக் கொண்டே போகும். ஒருவன் பரந்தளவானதும், ஆழமானதுமான அறிவைப் பெற்றுக் கொள்ளக் கிடைக்கக் கூடிய சாதனங்களுள் வாசிப்பும் ஒன்றாக இருக்கிறது. அதேவேளை, வாசிப்புப் பழக்கத்தைத் தனதாக்கிக் கொண்ட ஓர் ஒழுங்கான வாசகன், வாசிப்பின் மூலமாகப் பெற்றுக்கொண்ட தகவல்களையும், தரவினையும் கொண்டு, ஒரு நடு நிலைமைப் போக்கையே கடைப்பிடிக்க வேண்டுமேயொழிய, ஒரு பக்கம் சார்ந்தவனாக இருக்கக் கூடாது என்ற கருத்தையும் நல்லறிஞர்கள் முன்வைப்பர். அதேவேளை, வாசகன் வாசிக்கின்ற வேளை, ஒரு பக்கம் சார்ந்திருந்து கொண்டவனாக வாசிப்பை முன்னெடுத்துச் செல்வதும் முறையல்ல என்ற ஒரு கருத்தும் முன் வைக்கப்பட்டுள்ளது. ஆதலால், வாசகன் தனக்குத் தேவையான அத்தனையையும் வாசித்து முடித்து விட்டு, அதன் பிறகு ஒரு நடு நிலைப் போக்குள்ளவனாக இருக்க வேண்டுமென்பதும், அதே போல வாசிக்கும் போதே நடுநிலையாளனாக இருந்தே வாசிக்க வேண்டுமென்பதும் இதன் மூலம் தெளிவாகின்றது. இத்தகைய ஒரு வாசகனே பரிபூரணமான வாசகன். இவன் தனது வாசிப்பின் மூலமாக முன்னெடுத்துச் செல்கின்ற கருத்தே பரிபூரணமானதாகும்.

வாசிப்புக்கு மிகத் துணை புரிகின்ற காரணியே, நூல்[1] ஆக்கமும், அதனை அச்சேற்றி வெளியிடுதலுமாகும். நூலை ஆக்குவோரும் அதனை அச்சேற்றி வெளியிடுவோரும் பல வேறுபட்ட நோக்கங்களைத் தமதாக்கிக்கொண்டு காணப்படுகின்ற வேளை, வாசகனைப் பொறுத்தவரையில், அவனது நோக்கம் குறிப்பாக ஒன்றேயாகும். அதன் காரணமாக, நூல் ஆக்கியோரும், அதனை வெளியிடுவோரும் தமது நோக்கத்திற்கு ஏற்றாற் போன்று செயற்பட முயற்சிக்கின்ற வேளையில், வாசகனின் நோக்கம் ஒன்றாக இருக்கின்றமையினால், அந் நோக்கத்திலிருந்து திசை திரும்ப அவன் முயற்சிப்பதில்லை. நூல் ஆக்கியோனின் பல நோக்கங்களுள் ஒன்றாக, தனது பிரபல்யம் என்ற கருப்பொருள் இருக்குமானால், பிரபல்யத்தை அவன் எந்த வழியில் அடைய முடியுமோ, அந்த வழியைத் தேர்ந்தெடுத்துத் தனது நூலை ஆக்கிக் கொண்டு செல்லவே அவன் நாடுவான். நூல் ஆக்கியோனின் நோக்கம், நூல் ஆக்கத்தின் மூலம் தனது வருமானத்தை அதி

1. வாசிக்கக் கூடிய அத்தனை சாதனங்களையும் குறிப்பிடலாம்.

கரிப்பது என்பதாக இருக்குமானால், வருமான வழி மீது விழி வைத்தவனாக அவன் தனது நூலை உருவாக்குவான். ஆனால் வாசகனின் நோக்கம், வாசகனாக இருக்கும் வேளையில் பிரபல்ய மடைவதோ, வருமானத்தை அதிகரித்துக் கொள்வதோ, அல்லது வேறு எதுவாகவோ இருக்க மாட்டாதாகையால், அவனது இலக்கில் மாற்றமேற்படாது இருப்பதை காணலாம். அதன் காரணமாக, அவனது நோக்கம் பூர்த்தி நிலையை அடைந்து கொள்வதற்கு, அவனது நடுநிலைப் போக்கானது மிகவும் அத்தியாவசியமானதாகக் காணப்படுகிறது.

நூல் ஆக்கம் மூலமான எழுத்தாளனின் சுதந்திரமும், அத்தோடு எழுத்துச் சுதந்திரமும் பொதுவாக எல்லா நாடுகளிலும் கடைப்பிடிக்கப் படுவதன் காரணமாக, நூல்களை எழுதுகின்ற வேளையில் நடு நிலைமைக் கொள்கையைக் கடைப்பிடித்தே எழுத வேண்டும் என்று பன்னெடுங்காலமாக வலியுறுத்தப்பட்ட போதிலும் கூட, அவ்வலியுறுத்தல் எவ்வளவு தூரத்திற்கு வெற்றியளித்தது என்று நோக்கும் போது, ஏமாற்றமே ஏற்படுகின்றது. நூல்களை ஆக்கும் போது, சிறிய சிறிய வழுக்களை ஓரளவு அனுமதித்துப் பார்த்தாலும், பொதுவாக மிகக் கூடுதலான எழுத்தாக்கங்கள் நடு நிலைமைத் தன்மையிலிருந்து விலகி விடுவதாகவே இருக்கின்றமையினால், வாசகனின் நிலைமையும் பெருந் திண்டாட்டமாகி விடுகிறது. மிகச் சரியான தகவல்களை, வாசிப்பதனூடாக வாசகன் பெற்றுக் கொள்வதற்குத் தவறிவிடுகின்ற போது, அவனது போக்கும் ஒரு பக்கம் சார்ந்ததாக அமைய முயற்சிப்பதைக் காணலாம். இந்நிலை வாசகனைப் பொறுத்தவரையில் மிகவும் பாதிப்பினை ஏற்படுத்து மாதலின், எழுத்தாளன் சரியான தகவல்களையே முன் வைக்க வேண்டும். இதனை எழுத்துத் துறையில் ஈடுபட்டோர் உணர்ந்து கொள்வது மிக அவசியமாகும். இக்கருத்துக்கு ஒத்ததாக ஹரய பத்திரிகை ஆசிரியர் சந்தண கீர்த்தி பண்டா பேசிய பேச்சு, வீரகேசரி நாளிதழில், "பத்திரிகைகள் சில வற்றில் சுதந்திரம் பேணப்படுவதில்லை" என்ற தலைப்பில் பிரசுரமாகியிருந்தது. அவர் கூறுகிறார் "வெளிநாடுகளில் குற்றம் செய்பவர்கள் பற்றி செய்தி வெளியிடும் போது செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாமல் அந்த குற்றத்தை எந்த இனத்தைச் சேர்ந்தவர் செய்தார் என்பது பற்றியே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்......" தொடர்ந்து மேலும் சில விடயங்களைக் கூறி, பத்திரிகைத் துறையின் மீது சாடுகிறார். இவ்வாறு ஒரு பத்திரிகை ஆசிரியரே அவர் சார்ந்துள்ள துறைமீது சாடுவதானது, அத்துறை ஒரு நேரிய போக்கினைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவே அமைகின்றது. அதற்கு மிக ஒத்துழைப்பு நல்கக் கூடியவன் ஓர் எழுத்தாளனே ஆவான். ஆயினும், எழுத்தாளர்கள் நடு நிலைமைப் போக்கிலிருந்து அநேகமாகத் தவறி விடுகின்றார்கள் என்பதை சுட்டிக்காட்டும் வண்ணம் என். ஸ்ரீகாந்தாவின் கருத்து காணப்படுகிறது. இவர் வீரகேசரியின் 17 - 09 - 1993 நாளிதழில், "இனவாத அரசியல் அன்று முதல் இன்று வரை" என்ற தொடர் கட்டுரைக்கு விமர்சனம் தெரிவிக்கும் வகையில் ஓர் எழுத்தாளரைப் பற்றிக் கூறுவதாவது: "........பாரபட்சமற்ற ஓர் நடுநிலையாளராக கடந்த காலத்தை திரும்பிப் பார்க்க தவறியுருக்கிறார் என்பதை மட்டுமல்லாது, சில வரலாற்றுத் தகவல்களை தவறாக தெரிவித்திருக்கிறார்...... சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இச்சம்பவம் கோர்வைகளை ஒழுங்கு படுத்திக் கூறத் தவறியதன் மூலம் ஓர் குழப்பத்தை இளைய தலைமுறை வாசகர்கள் மத்தியில் ஏற்படுவதுடன் சில முக்கிய விடயங்களையும் கூறாமல் விட்டுள்ளார்...... கட்டுரையாளர் தேர்தல் வரலாற்றைத் திருப்பி எழுத முயற்சிக்கின்றாரா........" இதிலிருந்து, ஓர் எழுத்

தாளன் பாரபட்சமற்ற நடு நிலையாள னாக இருக்க வேண்டும் என்பது தெளிவா கின்றது. ஆயினும், இதற்கான சமிக்ஞை கள் வெகு தூரத்திலும் புலப்படுவ தாக இல்லை.

ஆகவே தான் எழுத்தாளர் மீதும் அவர்களது துறையின் மீதும் வழங்கப் பட்டிருக்கின்ற சுதந்திரமானது, ஒரு நாடு நிலைப்போக்கினை அத்துறைகள் ஏற்ப் டுத்திக் கொள்ளத் தடைக் கல்லாக அமைந்து காணப்படுவதாகச் சிலர் சுட்டிக் காட்டுகின்றனர். ஆயினும், இவைகளின் சுத ந்திரப் போக்கின் மேல் கைவைப்பது கூட அநாகரிகமானதாகவே இருப்பதனால், இந்நிலையை எவ்வீர றாயினும் அனுமதிக்க வேதான் வேண்டியுள்ளது. ஆகவே தான், படைப்பாளனின் நடு நிலைமைப் போக்கு பொதுவாகச் சந்தேகமானதாகவுள்ளது. இலங்கையின் வரலாற்றைக் கூறுவதற்கு அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட மகாவம்சம் கூட நடு நிலைத் தன்மையி லிருந்து விலகி விட்டதாக ஆய்வாளர் விமர்சிப்பர்.

ஆகவே, ஒரு பாரபட்சமற்ற நடு நிலையாளனாக ஓர் எழுத்தாளன் மாற வேண்டுமாயின், அவன் பாரபட்சமற்ற நடு நிலைமையான வாசகனாகவும் இருக்க வேண்டும். அப்போது தான் அவன் நடு நிலை எழுத்தாளனாக இருப்பான். ஏனெ னில், அவன் வாசித்து, தகவல்களை சேக ரித்தே எழுத ஆரம்பிக்கிறான். எழுத் திற்கு முன்பே வாசிப்பு இடம் பெறுவ தால், அதனையே திருத்திக் கொள்ள வேண்டுமென்ற கருத்து பலமானதாகும். ●

---

எவர் உடம்பினிலும் – சிவப்பே
இரத்த நிறமப்பா.
எவர் விழி நீர்க்கும் - உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா.

நெற்றியில் நீறும் - மார்பில்
நீண்ட பூணூலும்
பெற்றிவ் வுலகுதனில் - எவரும்
பிறந்த துண்டோ அப்பா.

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா.

— கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை —

இரண்டாம்
பரிசு பெற்ற
சிறுகதை

# சொந்தங்கள் சுமையானபோது !

செல்வி மரீனா இல்யாஸ்,

தமிழ்த் துறை,
( விடுகை வருடம், கலைப்பீடம் )

அந்தப் பாடசாலையில் இடைவேளை மணியடித்ததும் தன் வகுப்பைவிட்டு வெளியேறி 'ஸ்டாப் ரூமுக்குள்' நுழைந்த சசிகலா 'ரீச்சர்', தன் சக ஆசிரியைகளுள் ஒருத்தியும், நெருங்கிய தோழியுமான புஷ்பாவுடன் 'கன்ரீ'னுக்குள் நுழைந்தாள். இருவரும் தாம் கொண்டுவந்திருந்த காலை ஆகாரப் பொதிகளைப் பகிர்ந்துகொண்டு சாப்பிட ஆரம்பித்தனர். அதேவேளை 'கன்ரீ'னுக்குள் நுழைந்த சதீஷ் மாஸ்டரைக் கண்டு சசிகலா முகம்மாறினாள். சதீஷ் அதைப் புரிந்துகொண்டவன்போல் மௌனமாக வெளியே வந்தான்...

'சசீ... என்னோட வா... இந்த ஊரை விட்டே ஓடிப் போயிடுவோம்..'' எப்போதோ ஒருநாள் சதீஷ் விடுத்த அழைப்பு இப்போதும் சசிகலாவின் காதுக்குள் ஒலித்துக்கொண்டே இருந்தது. அவள் வெறுமனே சாப்பாட்டைக் கைகளால் அளைய ஆரம்பித்தாள்.

''ஏய் சசி, என்ன இது ?'' என்று புஷ்பா அவளை உலுக்கியபோது, ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்த சசிகலா, ''நான் இன்னிக்கு 'ஷோட் லீவி'ல வீட்டுக்குப் போவதாக இருக்கேன் புஷ்பா...'' என்றாள்.

''ஆஹ.. இன்னிக்கும் பெண்பார்க்கும் படலமோ..? என்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டு புஷ்பா கேட்டபோது சட்டென்று சசிகலாவின் கண்களில் நீர் கோத்துக் கொண்டது.

''சே...... இது எத்தனையாவது பெண் பார்க்கும் படலம்.....? பதினாறு வயதில் ஆரம்பித்து முப்பத்திரெண்டு வயதுவரை தொடர்கிறதே......'' சசிகலாவின் மனம் ஆதங்கத்துடன் அலுத்துக்கொண்டது

''இதுவரைக்கும் உன்னப் பொண்ணு பார்க்க வந்தவனெல்லாம் குருடனாடி......? தொழில் வேற செய்ற...... உனக்கென்ன குறை?'' புஷ்பா சற்று ஆத்திரமாகவே கேட்டாள்......

''அப்பா இல்லாத குறை. அந்த இடைவெளியை நிரப்ப ஒரு ஆண்துணை இல்லாத குறை......'' அமைதியாகப் பதில் சொல்ல முயன்ற சசிகலாவின் உள்ளம் ஆர்ப்பாட்டமாய்க் கொந்தளித்துக் கொண்டிருந்தது...

''என்னப் புடிக்காட்டியும் நான் வாங்குகிற சம்பளம் யாருக்கும் கசக்காது புஷ்பா ஆனா, ஆண் துணையில்லாத குடும்பத்துல மூத்தவளாய்ப் பிறந்திட்டேனேங்கிற விஷயம் தான் எல்லார் கண்ணயும் உறுத்துது. ஒரு விதவைத்தாய், கல்யாண வயசில ரெண்டு தங்கச்சிமார்...... இதுதான் என் குடும்பநிலை. என்னைக் கட்டிக்கிட்டா மூத்த மருமகன் என்ற விதத்துல குடும்பப் பொறுப்பு எனக்குக் கணவனா வாறவனோட தலையில ஏறுங்கிற பயத்துலதான் பலபேர் என்னைத் தட்டிக்கழிக்கிறாங்க '' வலிக்கின்ற இதயத்திலிருந்து புறப்பட்டு வந்த இந்த வார்த்தைகள் புஷ்பாவையும் வதைத்தன. அவளும் பாதிச்சாப்பாட்டுடனே கையைக் கழுவிக்கொண்டாள்.

இருவரும் 'கன்ரீனை' விட்டு வெளியே வரும்போது, முதலாம் ஆண்டு மாணவர்கள் பாடசாலையை விட்டுப் போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களை அழைத்துச் செல்ல வந்திருந்த பெற்றோரும் வேலைக்காரரும் 'கேட்'டுக்கு வெளியே காத்திருந்தனர். சதீஷ் மாஸ்டரும் தன் மகனின் கையைப் பிடித்தவாறு வெளியே சென்று கொண்டிருதார். சசிகலா அந்த சிறுவனை ஏக்கத்தோடு பார்த்தாள். இவன் 'என் வயிற்றில் பிறந்திருக்க வேண்டியவன்......' என்ற எண்ணம் ஒரு கணம் அவளைத் துடிக்க வைத்தது. குழந்தையை அழைத்துச் செல்ல வந்திருந்த சதீஷின் மனைவியை ஒருவித ஆற்றாமையோடு பார்த்தாள்......

அவள் பார்வையின் அர்த்தம் பக்கத்தில் நின்ற புஷ்பாவுக்கு புரிந்திருக்க வேண்டும். ''சத்தியமா உன் அழகு அவகிட்ட இல்லடி......'' என்றாள். 'அழகு மட்டுமென்ன அவளிடம் படிப்பறிவு கூட இல்லை. நானொரு பட்டதாரி ஆசிரியையாக இருந்தும் சதீஷின் குடும்பம் என்னை ஏற்க மறுத்தது ஏன்......?' சசிகலாவின் சிந்தனையை மணியோசை கலைத்தது. இடைவேளை முடிந்ததால் மாணவர்கள் அவசர அவசரமாக வகுப்புகளுக்குள் நுழைந்தனர். புஷ்பாவும், சசிகலாவும் பிரிந்து தங்களுக்குரிய வகுப்புக்களை நோக்கி நடந்தனர்.

நண்பகல் பன்னிரண்டரை மணியளவில் 'ஷோட் லீவு' பெற்று, வீடு செல்வதற்காக வெளியிறங்கிய சசிகலாவின் முன்னால் சதீஷ் எதிர்ப்பட்டான். இருவர் கண்களும் நேருக்கு நேர் சந்தித்து மீண்டன. 'விஷ் யூ குட் லக் ...' சதீஷின் வாழ்த்தைக் கேட்டதும் உறங்கிக் கிடந்த உணர்வலைகள் பொங்கி எழுந்தன. 'தாங்யூ .....' என்று சொல்லக்கூட நா எழாமல் அவசர அவசரமாய் நடக்கத் தொடங்கினாள். சதீஷ் சார்ந்த நினைவுகளும் அவளைப் பின்தொடர்ந்து வந்தன....

சதீஷ், தன் பெற்றோர் விதித்த தடைகளைத் தாண்டி, சசிகலாவையும் கூட்டிக் கொண்டு ஓடிவிடத் தயாராகத்தான் நின்றான். ஆனால், சசிகலா அதற்கு உடன் படவில்லை.

''சட்டப்படி, சம்பிரதாயப்படி சேர்ந்துவாழ வாய்ப்பில்லன்னா நாங்க பிரிஞ்சிருப்போம் சதீஷ், ஓடிப்போக என்னால முடியாது. அது என் குடும்பத்தைப் பாதிக்கும். ஒழுக்கங் கெட்டவளோட தங்கச்சின்னு சொல்லி இந்தச் சமூகம் என் தங்கச்சிமாரையும் ஒதுக்கி வைக்கப் பார்க்கும். அந்த அவமானத்தைத் தாங்கிட்டு அம்மா உயிரோட

இருக்கமாட்டாங்க. நான் ஒருத்தி வாழணுங்கிறதுக்காக, மூணு உயிர்களைப் பதற வைக்க என்னால முடியாது...... என்ன மறந்திடுங்க சதீஷ்......'' சசிகலா சதீஷோடு பேசிய கடைசி வார்த்தைகள் இவைதாம்.

அதன் பிறகு சதீஷின் கல்யாணம் அவள் கண்முன்னாலேயே நடந்து முடிந்தது. சசிகலா தொடர்ந்தும் அதே பாடசாலையில் கடமையாற்ற விரும்பவில்லையாயினும், அந்த ஊரைவிட்டு வெளியே செல்ல அவளுக்கு வசதி இருக்கவில்லை. ஆயினும் சதீஷை நேருக்கு நேர் சந்திப்பதையும் பேசுவதையும் கூடுமானவரையில் தவிர்த்து வந்தாள். பலவருடங்களுக்குப் பிறகு இன்றுதான் அவன் குரலை மிக அருகிலிருந்து கேட்டாள். ''எனக்குக் கணவனா வந்திருக்க வேண்டியவர், இன்றைக்கு ஒரு அன்னியன் மாதிரி இருந்து, என் கல்யாணத்துக்கு வாழ்த்துத் தெரிவிக்கிறாரு.... !'' என்று எண்ணிய போது சசிகலாவின் கண்களிலிருந்து கரகரவென்று கண்ணீர் சுரந்தது.

வீட்டை நெருங்கிவிட்டதை உணர்ந்தபோது, கைக்குட்டையால் கண்களை அழுத்தித் துடைத்துக்கொண்டாள். வழக்கம் போல வீட்டுக்குள் நுழையும் போதே ''அம்மா......'' என்று குரல்கொடுக்க அவளால் முடியவில்லை. நா வரண்டு போயிருந்தது. தொண்டையைச் செருமிக் கொண்டு நேராகச் சமையலறைக்குள் போய் நின்றாள். அம்மாவும் தங்கை கௌசல்யாவும் சமையலில் மும்முரமாக இருந்தனர். பாத்திரங்கள் ஒன்றையொன்று மோதும் ஓசையைத் தவிர, இங்கு வேறெந்தச் சத்தமுமே இல்லை.

''முகத்தைக் கழுவிட்டு ஒரு நல்ல புடவையா உடுத்திக்கோ. அவங்க வாற நேரம் தான்...'' அம்மாவின் கட்டளைக்கு சசிகலா உடனேயே அசைந்துகொடுக்கவில்லை. தங்கை கௌசல்யா வேலை செய்யும் அழகைக் கொஞ்சநேரம் ரசித்தபடி நின்றாள். பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே முறித்துக்கொண்டு வீட்டுவேலைகளில் அம்மாவுக்கு உதவியாக இருக்கும் கௌசல்யா அம்மாவைப்போலவே அமைதியான சுபாவமுடையவள். அதேவேளை அப்பாவைப்போன்ற முகச்சாயல் உடையவள். அவளைப் பார்க்கும்போதெல்லாம் சசிகலாவுக்கு இறந்துபோன தன் அப்பாவின் ஞாபகம்தான் வரும்...

மரணப்படுக்கையில் அவர் இருந்த அந்தக் கடைசி நிமிடத்தில், தலைமாட்டில் குந்தியிருந்த தன்னை ஒருமுறை அண்ணாந்து பார்த்துவிட்டு அமைதியாகக் கண்ணை மூடிக்கொண்ட காட்சி அடிக்கடி அவள் கண்ணுக்குள் தெரியும். மனைவியை விதவையாக்கிவிட்டு, மூன்று குமர்ப்பிள்ளைகளை அனாதரவாகத் தவிக்கவிட்டுப் போகிறேனே என்ற கலக்கமோ கவலையோ துளியேனும் அவர் முகத்தில் இருக்கவில்லை...

''அப்பா ... உங்க ஆத்மா அமைதியாப் பிரிஞ்சதுக்கு என்மேல நீங்க வெச்சிருக்கிற நம்பிக்கைதானே காரணம் ...'' ஆற்றாமைக்கு மத்தியிலும் பெருமிதமான எண்ணங்களோடு தனக்குள்ளே சிலிர்த்துக்கொண்டாள் சசிகலா. மீண்டும் அவள் கண்களில் நீர் கோத்துக்கொண்டது ...

''அம்மா ... நானும் வந்துட்டேன். இன்னும் 'அவங்க' வரல்ல ...?'' கடைசித் தங்கை கவிதாவின் குரல் வாசலில் கேட்டபோது சசிகலாவுக்கு 'திக்' சென்றது. ''அதுக்கிடையில 'ஸ்கூல்' விட்டாச்சா ... ?'' என்று அவள் மனதுக்குள் எழுந்த கேள்விக்கு விடைசொல்வதுபோல் கவிதாவின் குரல் தொடர்ந்தது.

''தலைவலின்னு 'கிளாஸ்' 'டீச்சர்' கிட்டச் சொல்லிட்டு 'நைஸா' வந்துட்டேம்மா இன்னிக்கு சசி அக்காவப் பொண்ணு பார்க்க வாறாங்கில்ல ...? நானும் இருந்து கவ

னிக்க வேணாமா ...?'' உயர்வகுப்பில் படிக்கும் ஒரு பெண்ணுக்குரிய மனமுதிர்ச்சி சற்றுமே இல்லாதவளாகக் கவிதா குதூகலித்தாள்.

'பெண்பார்க்க வருவதற்கே இத்தனை ஆர்ப்பாட்டமா?' என்று சசிகலா துணுக்குற்றாள். 'முதன்முதலாய் என்னைப் பெண்பார்க்க வந்தஅன்று எனக்கும் மனதுக்குள் எத்தனை பெரிய கொண்டாட்டமாக இருந்தது... ஆனால் ஒரு மாட்டை விலைக்கு வாங்க வந்தவர்களைப்போல் எடை பார்த்து, நடை பார்த்து, மூக்கு முழியெல்லாம் ஒழுங்காக இருக்கிறதா என்று பார்த்து, எல்லாம் சரி என்றானபின் தங்கைமாரை அரைக்கண்ணால் பார்த்துவிட்டு, அவர்கள் முகத்தைச் சுளித்த சுளிப்பில் என் கற்பனையெல்லாம் சுக்கு நூறா உடைஞ்சு போச்சுது ' ஒரு பெருமூச்சை விட்டவாறே அவள் தனக்குத்தானே பேசிக்கொண்டாள் ...

"கெதியா உடுத்திக்க புள்ள" அம்மாவின் கட்டளையைத் தொடர்ந்து, வெறும் ஜடமாக எழுந்துவந்தாள் சசிகலா. அவளுக்குள் எந்தவிதமான எதிர்பார்ப்பும் இருக்கவில்லை. சம்பிரதாயத்துக்காகத் தன்னை அலங்கரித்துக் கொண்டாள்......

பெண் பார்ப்பதற்காகக் குடும்பத்தோடு மாப்பிள்ளையும் வந்திருந்தார். சசிகலா அவர்கள் முன்னிலையில் முடுக்கி விடப்பட்ட பொம்மையாகவே நடந்து கொண்டாள். அவர்களை விழுந்து விழுந்து உபசரித்த அம்மா, எல்லோரும் விடைபெற்றுச் சென்றபின் ஆயாசத்துடன் கட்டிலில் சாய்ந்துகொண்டாள். சற்றே ஒதுங்கியிருந்து சகலவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த கவிதா, வந்தவர்கள் பார்வையில் இருந்து மறைந்ததும், கூவிக்கொண்டே ஓடிவந்து கௌசல்யாவிடம் சொன்னாள் ''அக்கா, நீ மாப்புள்ளயப் பார்த்தியா......? கண்ணிமைக்காம சசி அக்காவையே கவனிச்சிட்டு இருந்தாரு... அவருக்குப் பொண்ணப் புடிச்சிட்டுதுன்னு அவர் பார்வையே சொல்லிச்சு ..... நிச்சயமா இந்தச் சம்பந்தம் சரிவரும்...... எனக்கு நம்பிக்கை இருக்கக்கா . .'' அவள் குதூகலத்தில் பங்கெடுத்துக்கொண்ட கௌசல்யாவின் உதட்டில் ஒரு நிறைவான புன்னகை அரும்பியது. அம்மாகூடத் தன் ஆயாசத்தை மறந்து கட்டிலில் எழுந்து உட்கார்ந்து கொண்டார். அவர் கண்களில் ஒரு புதிய ஒளி பிறந்து மின்னியது. ஆனால் 'புரோக்கர்' கொண்டுவந்த பதில், அவர்களது நம்பிக்கை, எதிர்பார்ப்பு, சந்தோஷம் அனைத்தையுமே நொறுக்கிவிட்டது ... !

சசிகலாவில் மட்டும் எந்தவிதமான சலனமுமில்லை; அவள் எப்போதும் போல் பாடசாலைக்குப் போனாள். நடந்தவற்றைப் புஷ்பாவிடம் சொல்லித் தன் மனப்பாரத்தை இறக்கிவைத்து விட்டுத் தனக்குரிய வகுப்பில் போய் அமர்ந்தாள். அவள் பாடம் நடாத்திக் கொண்டிருக்கையில் புஷ்பா வந்து, ''உன்னைத் தேடி ஒரு ஆள் வந்திருக்காரு ... சசி . . .'' என்றாள். யார் என்ற கேள்வி சசிகலாவிடமிருந்து எழ முன்பே குறும்பாகச் சிரித்து விட்டு அவள் ஓடிவிட்டாள். மாணவர்களுக்குப் பாடப் புத்தகத்தில் வேலை கொடுத்துவிட்டுக் குழப்பத்துடன் வகுப்பறைக்கு வெளியே வந்தாள் சசிகலா.

'காங்கிராஜுலேஷன்ஸ் . . . ' என்று காதோரம் கேட்ட சதீஷின் குரல் அவளை மேலும் குழப்பியது. எதுவும் புரியாதவளாக 'ஸ்டாஃப் ரூமு'க்கு வந்து பார்த்த போது வாசலில் 'அந்த ஆள்' நின்று கொண்டிருந்தார். ஆம்! கடைசியாக அவளைப் பெண்பார்த்து விட்டுப்போன அதே ஆள் .....! எதுவும் புரியாமல் அதிர்ச்சியும் ஆச்சரியமுமாய் அவனை எதிர்கொண்டவள் என்ன பேசுவதென்றே தெரியாமல் சில கணங்கள் விழித்தாள்.

''உங்களோட தனியா ஒரு விஷயம் பேசணும் ......'' அவனே முதலில் பேச்சை ஆரம்பித்தபோது அவள் மௌனமாய் 'ஸ்டாஃப் ரூம்'க்குள் நுழைய, அவன் அவளைப் பின்தொடர்ந்தான். உள்ளே வேறு யாரும் இருக்கவில்லை. இருவரும் நேரெதிராய் உட்கார்ந்து கொண்டு மௌனமாய் ஒருசில நிமிடங்களைக் கழித்தனர் .........

''நான் உங்களைப் பொண்ணு பார்க்க வந்தேனே... ஞாபகம் இருக்கா...... ?'' திடீரென்று அவன் கேட்ட போது, ''அதுக்கென்ன இப்ப ......?'' என்பதுபோல் அவள் அவனைப் பார்த்தாள். ''எனக்கு உங்கள ரொம்பப் புடிச்சிருக்கு. உங்களக் கட்டிக்க எனக்கு மனப்பூர்வமான சம்மதம்...... ஆனா......'' அவன் பேச்சின் தொடர்ச்சியைக் கேட்கும் முன்பே அவள் மனம் சந்தோஷ இறக்கைகளை விரித்துக் கொண்டு ஆகாயத்தில் பறந்தது. கண்ணுக்குள் திடீரென்று கனவுகள் ஊற்றெடுத்தன ... ... !

''அம்மாவுக்குச் சம்மதமில்லைன்னு 'புரோக்கர்' வந்து சொல்லியிருப்பாரு ... ஆனா, அவரைச் சரிக்கட்ட ஒரு வழியிருக்கு. நீங்களும் ஒத்துழைச்சா ... '' அவன் கேள்விக் குறியோடு அவளைப் பார்க்க, அவள் ஆர்வத்தை முகம்நிறைய அப்பிக்கொண்டு அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் ... ...

''பொண்ணை ஏத்துக்கலாம். ஆனா, அவளோட ஒட்டிக் கொண்டிருக்கிற பொறுப்பையெல்லாம் ஏத்துக்க முடியாதுங்கிறதுதான் அம்மாவோட வாதம். அதனால முதலில் நீங்க உங்க குடும்பச் சுமைகளை மறக்கணும். கல்யாணத்துக்கப்புறம் எங்க வீட்டோட வந்திருந்தீங்கன்னாச் சரி. அதுக்கப்புறம் உங்க சம்பளத்துல அவங்க காலம் தள்ளுற நிலை மாறிடும். இதைத்தான் அம்மா விரும்புறாங்க. நானும் விரும்புறேன். ஏன்னா ... ...'' அவன் வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இடியாய்ச் சசிகலாவின் இருதயத்தில் இறங்கியது... !

'' 'ஸ்டாப் தட் நான்சென்ஸ் ப்ளீஸ்' ......'' தன்னையும் மீறிய வேகத்தில் அவள் கோபமாய்க் கத்திய போது, அவன் அதிர்ச்சியுடன் சடாரென்று இருக்கையை விட்டு எழுந்தான். '' 'மிஸ்டர்' ! உனக்கு உன் அம்மா எவ்வளவு முக்கியமோ, அதைவிட எனக்கு என் அம்மாவும் தங்கச்சிமாரும் முக்கியம். கல்யாணமே ஆகாம நான் வீட்டோட இருந்து கிழவியானாலும் சரி, குடும்பத்தோட இருந்து கஞ்சியாவது குடிச்சிட்டு இருப்பேனே தவிர, சொந்தபந்தங்களை அறுத்திட்டு, உன்னை மாதிரி ஈவிரக்கம் இல்லாத ஒருத்தனோட சேர்ந்து வாழ வரமாட்டேன் ... ... தூ ... ... உனக்கெல்லாம் குடும்பமும் ஒரு கேடா ... '' நிதானத்தை இழந்த நிலையில் அவள் ஆத்திரத்துடன் பொரிந்து தள்ள அவன் அவமானத்தில் கூனிக் குறுகிப்போய் அவ்விடத்தைவிட்டு வெளியேறினான். அவன் போனபின்பும் கூட, தனக்கு ஏற்பட்ட ஆத்திரமும் படபடப்பும் அடங்காத நிலையில் அப்படியே மேசைமேல் தலைவைத்து நீண்டநேரம் விசும்மிக் கொண்டிருந்தாள் சசிகலா ...

*

அவளைத் தேடிக்கொண்டு வந்த புஷ்பாவுக்கு அவள் இருந்த கோலத்தைப் பார்த்ததும், 'பகீர்' என்றது ! என்ன நடந்தது என்று கேட்காமலேயே எல்லா விஷயமும் அவளுக்குப் புரிந்துபோயிற்று. தோழியை எப்படித் தேற்றுவது என்று தெரியாமல் சற்றுநேரம் விக்கித்து நின்றாள்.

''என்னால் இனிமேல் 'கிளாஸு'க்குப் போகமுடியாதுடி '' கண்ணைத் துடைத்தபடி சசிகலா கூற, புஷ்பா ஆழமாய் அவளைப் பார்த்தாள். உண்மையில், அவளால் எந்த வகுப்புக்குள்ளும் நுழைய முடியாதுதான். முகம் சோர்ந்து, கண்கள் ஒளியிழந்து, மூக்குநுனி சிவந்து, தலைமயிர் கலைந்து ... ஓ! இந்த நிலையில் அவள் வகுப்புக்குப் போனால் மாணவர்கள் பாடத்தைக் கவனிப்பதற்குப் பதிலாக, அவளுக்கு என்ன நடந்திருக்கும் என்று ஆராய்வதில்தான் அதிக அக்கறை காட்டுவார்கள். எனவே, ''நீ 'லீவு' போட்டிட்டு வீட்டுக்குப் போறதுதான் நல்லது... '' என்று கூறித் தோழியை வழியனுப்பி வைத்தாள்.

சசிகலா விடைபெற்றுக் கொண்டு 'கேட்'டை அண்மித்தபோது ''கலா..... '' என்று பின்னால் கேட்ட குரல் அவளை அப்படியே உறைய வைத்தது. வீட்டாரும் நண்பர்களும் அவளைச் சசி என்று கூப்பிடுவதுதான் வழக்கம் கலா என்று அவளைச் செல்லமாக அழைத்த ஒரேயொரு நபர் சதீஷ்தான். மிக நீண்டநேரம் இடைவெளிக்குப் பின் தன்னைப் பெயர் சொல்லி அழைத்த சதீஷ், தன் அருகில் வந்து நின்றதைப் பார்த்தபோது அவள் உணர்ச்சிப் பிழம்பானாள்.

''என்ன நடந்தது ? ஏன் வீட்டுக்குப் போறீங்க ? 'எனி ப்ரொப்ளம் ?'' அவனது அன்பிலும் ஆதரவிலும் அப்படியே கரைந்துபோனாள் சசிகலா.

''சதீஷ் உங்கள மாதிரி நல்ல மனசுள்ள ஆம்புளய இனிமே நான் வாழ்க்கையில் சந்திக்கவே மாட்டேன் ? விம்மலோடு புறப்பட்ட வார்த்தைகளை வேகமாகக் கொட்டிவிட்டு விறுவிறுவென்று சென்றவளை அதிர்ச்சியுடன் பார்த்தான் சதீஷ் ? இத்தனை நாளும் ஊமையாய் இருந்தவள் இன்று பேசியது நிஜம்தானா என்று நம்ப முடியவில்லை. அதிர்ச்சியிலிருந்து விடுபட்டு ''கலா......'' என்று அவன் மீண்டும் கூப்பிடுவதற்குள் அவள் வெகுதூரம் போய்விட்டாள்.

சசிகலா வீட்டுக்குள் நுழையும்போதே வாசலில் எதிர்ப்பட்டது கௌசல்யாதான். இத்தனை நாளும் தங்கையாகப் பார்த்துப் பழகியவளை இன்று வேறு கோணத்தில் நோக்கினாள். ஒரு தாய் தன் மகளைப் பார்ப்பதைப்போல...... ! கௌசல்யாவை மணப்பெண்ணாக அலங்கரித்து மனக்கண்ணில் வைத்துப் பார்த்தாள். இனி துணை தேடவேண்டியது தனக்கல்ல, தங்கைக்குத்தான் என்று அவள் உள்மனம் உணர்த்தியது. கவிதாவையும் படிப்பித்து ஆளாக்கிவிட்டால் ... ! பாலையில் நின்று கொண்டிருந்த அவள் கண்களில் பசுமைக் காட்சிகள் படர்ந்தன ..... !

''என்னம்மா நேரத்தோடே வந்துட்டே ?'' என்ற கேள்வியோடு உள்ளேயிருந்து அவளை வரவேற்ற அம்மா ''இதென்ன சசி கண்ணெல்லாம் வீங்கி முகமெல்லாம் வெளுத்துப்போய் ?'' என்று கவலையும் கலவரமுமாய்க் கேட்டாள். ''வாழ்க்கையும் கூடத்தாம்மா வெளுத்துப்போச்சு !'' என்று உள்மனம் ஊமையாய்க் கதற, ''தலைவலி '' என்று சொல்லிக் கொண்டே, தன் அறைக்குள் போக முற்பட்டவள், பின் சட்டென்று திரும்பி, பல வருடங்களாய்ப் பார்த்துப் பழக்கப்பட்டுப் போன அம்மாவின் பொட்டில்லாத முகத்தைச் சில கணங்கள் வெறித்தாள் !

அடுத்து தன் அறைக்குள் நுழைந்தவள், நிலைக்கண்ணாடியின் முன் நின்று தோற்றத்தைக் கொஞ்சநேரம் பார்த்தாள். கண்ணீர் கண்களில் நிரம்பி வழிய, மெதுவாக இமைகளை மூடியவள், மனதுக்குள் தன்னையும் ஒரு விதவையாக வரித்துக் கொண்டாள்.....

தன்னைச் சுற்றி இருள்வட்டம் பரவப்போவதை உணர்ந்தாலும்கூட, குடும்பத்துக்கு ஒளி கொடுக்கம்போகிறோம் என்ற நினைப்பு அவள் நெஞ்சுக்கு நிம்மதியைக் கொடுத்தது. குழப்பமும் பதட்டமும் நீங்கி மனம் தெளிந்த பின்னர், மெல்ல இமைகளைத் திறந்தாள். அவள் முன்னிலையில் இருந்த நிலைக்கண்ணாடி அவளைத் தியாகச் சுடராகப் பிரதிபலித்துக் காட்டியது ...! அப்படியே விழிகளை உயர்த்தி சுவரில் மாட்டப்பட்டிருந்த தன் தந்தையின் புகைப்படத்தைப் பார்த்தாள். அவரது ஒரு கண்ணில் சோகமும் மற்றக் கண்ணில் நிறைவும் குடி கொண்டிருந்தது.. ........!

●



## கருத்துக் குவியல்கள்

நீ விரும்பும் வண்ணம் உன்னை ஆக்கிக் - கொள்ள உன்னால் முடியவில்லையானால், நீ விரும்பும் வண்ணம் பிறர் இருக்கவேண்டுமென்று எவ்வாறு எதிர்பார்க்க இயலும்?

**அக்கம்பீஸ் –**

பகைமை பாராட்டுவதைவிட பகைவனை மன்னித்து விடுதலே அதிகச்செலவு இல்லாததாகும். மன்னித்து விட்டால் கோபமாகிய செலவுமில்லை; துவேஷமாகிய விலை தரவேண்டியதுமில்லை; சாந்தியின்மை ஆகிய வியர்த்தமுமில்லை.

**- ஹானாமோர் -**

நிலத்தை அடமானம் வைத்தால் திருப்பிக் கொள்ளலாம்; நாணயத்தை இழந்துவிட்டால் ஒரு நாளும் திரும்பப் பெற முடியாது.

**- மில்டன் -**

# இரண்டாம் பரிசு பெற்ற கார்ட்டூன்



மூன்றாம் வருடம்
புவியியற்றுறை, (கலைப்பீடம்)

செல்வன் M. L. பௌசுல் அமீர்

# 'எயிட்ஸ்'

# மனித உலகுக்கு ஒரு சவால்

— எஸ். ஜெயசீலன் —
பட்டப்பின்படிப்பு மாணவன்,
நுண்ணுயிரியல்துறை, (மருத்துவபீடம்)

எயிட்ஸ் நோயைப் பற்றி எல்லோரும் விளக்கமாக அறிந்து கொள்வது அவசியம். ஏனெனில் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் மனநிலை உளவியல் ரீதியாக அபாரமாகப் பாதிக்கப்பட்டு இருப்பது மட்டுமல்லாமல் இந்நோயானது பொதுமக்களிடையே பெரிய பீதியையும் தப்பபிப்பிராயத்தையும் ஓங்கி வளரச் செய்துள்ளது. எனவே 'எயிட்ஸ்' நோயைப் பற்றிய தெளிவான அறிவைப் பொதுமக்களுக்குப் புகட்டுவதன் மூலமே அந்தக்கொடிய ஆட்கொல்லி நோயின் விரைவான பரவுதலைத் தடுக்க முடியும்.

**அறிமுகம்;-**

தற்போது உலகெங்குமுள்ள மக்களுக்குப் பாரிய பாதிப்பை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் மிகமுக்கியமான தொற்றக்கூடிய வைரஸ் நோய் எயிட்ஸ் - AIDS (Acquired Immune Deficiency Syndrome) ஆகும். இது "பெறப்பட்ட நோய் எதிர்ப்புச்சக்தி குறைவுக்கோளாறு" எனத் தமிழில் பொருள்படும். இந்நோயானது முதன் முதலாக ஆபிரிக்கக்காடுகளிலுள்ள ஒருவகைப் பச்சைக்குரங்கு இனத்திலிருந்து (African Green Monkey) மனிதனுக்குப் பரப்பப்பட்டதாக நம்பப்படுகின்றது. இந்த வைரஸ் உடலின் நோய் எதிர்ப்புத் தொகுதியைப் (immune System) படிப்படியாகச் செயலிழக்கச் செய்வதோடு உடலை மற்றைய தொற்று நோய்க்கிருமிகளான புறோட்டோசோவா (Protozoa) பற்றீரியா (Bacteria), வைரசு (Virus), பங்கசு (Fungus) ஆகியவற்றின் தொற்றுக்களுக்கு உள்ளாக்கி இறுதியில் நோயாளியை ஓர் இக்கட்டான நிலைக்கு ஆளாக்குகின்றது.

1985ம் ஆண்டு கார்த்திகை மாதம் வரைக்குமான காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்காவில் மாத்திரம் மொத்தமாக 15,000 எயிட்ஸ் நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டனர். ஆனால் இந்த எண்ணிக்கை எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்ட 500,000 இருந்து 1,000,000 பொதுமக்களில் ஒரு பகுதியினரே ஆகுமென அப்போது கருதப்பட்டது. இலங்கையில் இதுவரைக்கும் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மருத்துவ ஆராய்ச்சி நிலைய புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் அடையாளம் காணப்படாத நிலையில் மேலும் பலர் இருக்கலாமென்றும் உல்லாசப் பிரயாணிகளினால் பாரியளவில் நடாத்தப்படும் துர்நடத்தைப் பாலுறவுகளினால் இந்நோய் கணிசமான அளவில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்றும் மருத்துவ நிபுணர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

**வரலாறு:**

எயிட்ஸ் 1981ம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவின் நோய்த்தடுப்பு நிலையத்தினால் (Centers for Disease Control) கண்டுபிடிக்கப்பட்டது. விஞ்ஞானிகள் ஒரு வழமைக்கு மாறான ஒட்டுண்ணியான நியூமோசிஸ்ரிஸ் கரிணியினால் (Pneumocystis Carinii) ஏற்படுத்தப்பட்ட சளிச்சுரமும் (Pneumonia) அதேபோன்று அரிதாகத் தோற்றுவிக்கப்படும் புற்று நோயான கபோசிசர்கோமாவும் (Kaposis Sarcoma) ஒரு சில நோயாளிகளுக்கு இருப்பதைத் தொடக்கத்தில் கண்டுபிடித்தனர். மேலும் இவர்கள் யாவரும் இளவயதினராகவும் (young) முன்னர் சுகதேசிகளான தன்னினச் சேர்க்கைக்காரர்களாகவும் (homosexuals) இருக்கக் காணப்பட்டனர். அதன் பின்னர் இவர்களின் நோய் எதிர்ப்புத் தொர்குதியில் குறைபாடுகளிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் இந்த நோய்க் காரணியைக் (causative Agent) கண்டு பிடிப்பதற்காக ஆராய்ச்சிகள் போட்டாபோட்டியாகத் தொடர்ந்தன.

அவ்வேளையில் வெளியிடப்பட்ட தகவல்களிலிருந்து முன்னர் கூறிய அதே குணங் குறிகள் இரத்தத்தினுள் போதைவஸ்து ஏற்றுபவர்களிடமும் (intravenous drugabusers) குருதிப் பொருட்கள் (blood Products) பெற்றுக்கொண்டவர்களிடமும் இருப்பதாகத் தெரிய வந்தது. இந்த அவதானிப்பு தொற்று நோய்க்காரணி (Infectious Agent) இரத்தத்தின் ஊடாகவும், சுக்கிலத்தினூடாகவும் (Semen) தொற்றுதல் அடையலாம் என்ற புதிய நம்பிக்கையை விஞ்ஞானிகளுக்கு ஏற்படுத்தியது. பின்னர் பல கோணங்களில் முடக்கிவிடப்பட்ட ஆராய்ச்சிகளின் பலனாக 1983ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த றொபர்ட்காலோ (Robert Gallo) என்பவரினால் இந்த வைரசு கண்டுபிடிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இது HTLV (Human T - Lymphotropic Virus) எனப்பெயரிடப்பட்டாலும் இப்போது எச். ஐ. வி. (HIV) என அழைக்கப்படுகின்றது.

**வைரஸ்;-**

இது மிகவும் நுண்ணிய 10-300 nm அளவுடைய Retroviridae குடும்பத்தைச் சேர்ந்த எச். ஐ. வி. (Human Immune Deficiency Virus) ஆகும் மற்றைய வைரசுக்களைப்போல் இதுவும் மிகச்சிறியதாக இருப்பதனால் இலத்திரன் நுணுக்குக்காட்டியினூடாக மாத்திரமே பார்க்கமுடியும். இந்த வைரசானது நோய்க்கிருமிகளின் தாக்கத்திலிருந்து உடலைப்பாதுகாக்கின்ற நிணநீர்க்குழியங்களைத் (T - Lymphocyte) தாக்கியழிப்பதன் மூலம் நோய் எதிர்ப்புச்சக்தியைச் செயல் இழக்கச் செய்கின்றது.

இந்த வைரஸ் தொன்றுகின்ற சகலருக்கும் எயிட்ஸ் ஏற்படுவதில்லை. இவர்களுள் 60-65 சதவீதத்தினர் ஏனையோருக்கு நோயைத் தொற்றச்செய்யக்கூடிய வைரஸ்காவிகளாக இருப்பினும் ஆறு ஆண்டுகளின் பின்னரும் கூட நோய் அறிகுறிகள் தோற்றுவிக்கப்படாமலிருக்கலாம். மேலும் 20-25 சதவீதத்தினருக்கு எயிட்ஸ் தொடர்பான குணங்குறிகள் தெட்டத்தெளிவானதாக ( [illegible] (AIDS Related Complex) ஏறத்தாழ 5 - 10, சதவீதத்தினருக்கு மாத்திரமே இந்நோய் மாறாமல் இறுதியில் மரணம் சம்பவிக்கும். இந்த வைரஸ் பொதுமக்களிலுள்ள வித்தியாசமான வகுப்பினரை எவ்வாறு வெவ்வேறுவிதமாகத் தாக்குகின்றது என்பதைப்பற்றி அறிவதற்கான ஆராய்ச்சிகள தொடர்ந்து நடாத்தப் படுகின்றன.

**தொற்றும் முறைகள்:-**

இந்த வைரஸ் ஆனது எயிட்ஸ் நோயாளிகளின் இரத்தம், உமிழ்நீர், கண்ணீர் சுக்கிலப்பாய் பொருள் (seminal fluid) யோனிச்சுரப்பு (vaginal fluid), மூளை முண்ணான் பாய்பொருள் (cerebrospinal fluid), தாய்ப்பால் ஆகிய திரவங்களில் மட்டுமே

உயிர் வாழ்கின்றது. வைரசு மிகமிகக் குறைந்தளவில் காணப்படும் உமிழ்நீர், கண்ணீர், தாய்ப்பால் என்பவற்றினூடாக இதுவரை எவருக்கும் எயிட்ஸ் தொற்றுதல் அடைய வில்லை. எயிட்ஸ் நோயாளிகள் என்று இன்று வரை நிச்சயப்படுத்தப்பட்ட யாவருக்கும் சுக்கிலத்தின் ஊடாகவோ அல்லது இரத்தத்தினாலேதான் நோய் ஏற்பட்டது என்பது டன் யோனிச்சுரப்புக்களும் சாத்தியமான காரணமாக இருக்கலாமெனக் கூறப்படுகின் றது. எனவே ஒருவருக்கு வைரசு தொற்றக்கூடிய வழிகளாவன பின்வருமாறு அமையலாம்.

* நெருக்கமான பாலுறவு:-

ஏற்கனவே எயிட்ஸ் வைரசு தொற்றிய ஒருவருடன் பாலுறவு கொண்டால் நீங் களும் வைரசுவைப் பெறலாம். பாலுறவுகளிற் சில முறைகள் ஏனையவற்றிலும் மிக ஆபத்தானவை. பலருடன் பாலுறவு கொள்ளும் போது நோய்தொற்றிய ஒருவருடன் உறவுகொள்ளும் சாத்தியம் ஏற்படும் எனவே, ஆண் பெண் உறவினால் அல்லது தன்னினச் சேர்க்கையினால் வைரசு ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குத் தொற்றலாம்.

மலவாசல் பாலுறவு (Anal Inter-Course) முறை பெரும்பாலும் கணவன் மனைவி மார் கருத்தரிப்பதைத் தடைசெய்வதற்காகவும் மேலும் ஆண் தன்னினச் சேர்க்கைக் காரர்களாலும் கையாளப்படும் ஓர் வழிமுறையாகும். இம்முறை பாலுறவின் போது மலவாசல் மேற்பரப்பில் பெரும்பாலும் உரசல்கள், காயங்கள் ஏற்படுவதனால் சுக்கிலத்தி லுள்ள வைரஸ் ஆனது மற்றையவரின் குருதித் தொகுதியை அடையலாம். இம்முறை தான் வைரசின் மிகவும் முக்கியமான தொற்றுதல் பாதையாகக் கருதப்படுகின்றது.

வாய்வழிப் பாலுறவு (Oral Sex) பொதுவாக ஆபத்துக்குறைந்தது. ஆனால் ஒருவர் ஆண், பெண் சுரப்புக்களை, குருதிக்கசிவுகளை உறிஞ்சும் போது மற்றையவரின் வாயில் சிறுகாயங்கள், இரத்தக்கசிவுகள் என்பன இருக்குமானால் அதன் மூலம் வைரசு தொற்றப்படச் சந்தர்ப்பமுண்டு. இவ்வேளையில் இந்த முறைப்பாலுறவு ஆபத்தானதாக அமையலாம்.

பாதுகாப்பான யோனி வழிப் பாலுறவு (Vaginal Sex) மூலமாக வைரசு கடத் தப்பட மிகமிகக் குறைந்தளவே சந்தர்ப்பமுண்டு.

* எயிட்ஸ் வைரசுவினால் பாதிக்கப்பட்டவரின் இரத்தத்தை உடலில் ஏற்றிக் கொள்ளுதல்.

எயிட்ஸ் வைரசு தொற்றியுள்ள ஒருவருக்கு மருந்தேற்றும் ஊசி, இரத்தமேற்றும் குழல்கள், (Syringes) அவற்றிற்குப் பாவிக்கப்பட்ட ஊசி என்பவற்றை சரியான முறை யில் கிருமியழிக்காமல் (sterilization) உபயோகித்தால் அந்த வைரசு எமக்கும் தொற் றலாம். ஊசி மூலம் குருதியினுள் போதைவஸ்து ஏற்றுபவர்கள் வைரசு தொற்றிய வரின் ஊசிகள் மற்றும் ஏற்றுக்குழல்களை உபயோகித்தாலும் இந்நோய் தொற்றலாம். நோய் தொற்றிய குருதி இந்நொருவருக்கு குருதி உட்பாய்ச்சல் (blood transfusion) மூலம் செலுத்தப்பட்டால் இரத்தம் பெற்றவருக்கு நோய் தொற்றலாம்.

* நோய் தொற்றிய தாயிலிருந்து பிள்ளைக்கு:-

நோய் தொற்றப்பட்ட தாய்மார்களிலிருந்து அவர்களது குழந்தைகளுக்கு, பிள்ளை கருப்பையிலிருக்கும் போதும் மற்றும் பிள்ளை பிறக்கும்போதும் இந்த வைரசு தொற்ற லடையலாம். இப்படித் தொற்றுதலுக்கு உள்ளான பிள்ளைகள் பிறந்து பெரும்பாலும் ஆறுமாத காலத்தினுள் நோய் அறிகுறிகளைக் காட்டுவர்.

**குறிப்பு:-**

இந்த வைரசானது வழக்கமான சமுதாயப் பழக்கவழக்கங்களான தொடுதல், கட்டியணைத்தல், நோயாளி உபயோகிக்கும் பாத்திரங்களான கோப்பை, கண்ணாடிக் குவளை, உணவு, துவாய் என்பவற்றினை உபயோகித்தல் ஆகியவற்றின் மூலம் தொற்ற மாட்டாது. அத்துடன் காற்றினாலும் தொற்ற மாட்டாது. எனவே ஒரு எயிட்ஸ் நோயாளி தும்மும் போதோ இருமும் போதோ இந்த நோய் தொற்றமாட்டாது. மேலும் இந்த நோயானது தொற்றப்பட்ட பிள்ளைகள் ஒரே வகுப்பறையில் படிக்கும் போது மற்றைய பிள்ளைகளுக்குத் தொற்றுதல் அரிது.

**நோயாளியைக் கண்டு பிடித்தல்:-**

ஏனைய உடல் வியாதிகளைப் போலவே எயிட்ஸ் நோயாளியையும் அதற்கான சிறப்பான குணங்குறிகள் மூலம் கண்டுபிடிக்கலாம். எயிட்ஸ் நோயாளியின் குணங்குறிகள் ஒருவருக்கொருவர் வேறுபடலாம். இதற்குக் காரணம் அவர்களுக்கு ஏற்படும் சில்லறை நுண்ணங்கித் தொற்றுதல்களின் (Minor Infections) வேறுபாடேயாகும். உடல் முழுவதும் பரவியிருக்கும் ''கபோசி சர்கோமா'' எனும் புற்று நோயும் கிறிப்ரொகொக்கசு (Cryptococcus) எனும் பங்கசுவினால் தோற்றுவிக்கப்படும் மூளை மென்சவ்வு அழர்ச்சியும் (meningitis) நோயைக் கண்டுபிடிக்கப் போதுமான ஏதுக்களாகும். மேலும் குறைந்தது இரண்டு பாரிய குணங்குறிகளும் (Major Signs) ஒரு சிறிய அளவிலான குணங்குறியும் (Minor Signs) நோயைக் கண்டு பிடிக்கப் போதுமானவையாக இருந்த போதிலும் நோயாளிகள் இதற்கு முன்னர் வேறு எதுவித காரணத்தினாலும் உடலின் நோய் எதிர்ப்பு வலிமையை (Immunosuppression) இழந்திருக்கக் கூடாது.

**பாரிய குணங்குறிகள்;-**

01). ஒரு மாதத்திற்கு மேலான காய்ச்சல்.

02) எதிர்பாராத 10 சத வீதத்திற்கும் மேலான உடலின் நிறைக்குறைவு.

03) வயிற்றோட்டம் ஒரு மாதத்திற்கு மேலாக நீடித்திருத்தல்.

**சிறியளவிலான குணங்குறிகள்:-**

01) ஒரு மாதத்திற்கும் மேலாக இருக்கும் வரண்ட இருமல்.

02) உடல் பூராகவுமுள்ள சொறியும் தோல் வியாதிகள். (Pruritic dermatitis)

03) திரும்பத்திரும்ப ஏற்படும் இளஞ் சிவப்பு நிறமான கொப்புளங்கள் (Herpes Zoster)

04) வாய், வாய்க்குழியில் Candida எனும் பங்கசுவினால் ஏற்படுத்தப்படும் வெண்மைப்படை

05) சுரப்பிகளின் வீக்கம் குறிப்பாகக் கழுத்து, அக்குள் என்பவற்றில் காணப்படுதல்.

**ஞாபகத்திற் கொள்ளவும்......**

01) எயிட்ஸ் அரிதாக ஏற்படுவதொன்றாகும்.

02) இவ்வறிகுறிகளிற் பல உமக்கு நெடுநாளாக இருப்பின் மட்டுமே எயிட்சைக் காரணமாகக் கொள்ளலாம்.

03) பெரும்பாலான இவ்வறிகுறிகளுக்குப் பல்வேறு காரணங்களிருக்கலாம். உதாரணமாக காய்ச்சல், நிறைகுறைதல் என்பனவும் காசநோயால் கூடப் பெரும்பாலும் ஏற்படலாம்.

04) ஒரு நபருக்கு எயிட்ஸ் இருக்கலாமெனச் சந்தேகமேற்பட்டால் தொலைபேசி மூலம் 695183 அல்லது 692520 இல் தொடர்பு கொண்டு கொழும்பிலுள்ள மேகநோய்ப்

பிரிவு ஆலோசகரிடமோ அல்லது 584153, 588131 இல் உள்ள குடும்பத்திட்டப் பிரிவு ஆலோசகரிடமோ ஆலோசனை பெறலாம். இந்தப் பிரிவுகளில் தகவல்கள் யாவும் அந்தரங்கமாக வைக்கப்படுவதனால் எதுவித பயமுமின்றித் தொடர்பு கொள்ளலாம்

ஆய்வு கூட ரீதியில் நோயாளியின் குருதியில் எயிட்ஸ் வைரசுக்கான பிறபொருளெதிரிகளை (antibody) கண்டுபிடிப்பதற்குப் பல வகையான இலகு சோதனை முறைகள் (Diagnostic kits) இப்போது நடைமுறையிலுள்ளன. இந்தச் சோதனைகளை கொழும்பிலுள்ள மேகநோய் வைத்தியப் பிரிவிலும் (Venereal Disease Clinic) அல்லது கொழும்பு 7-இல் உள்ள குடும்பத்திட்டமிடற் பிரிவிலும் (Family Planning Association) முற்றிலும் இலவசமாகச் செய்து கொள்ளலாம். இந்தச் சோதனைகள் மூலம் நோயை உருவாக்கும் HIV வைரசினைக் கண்டுபிடிக்க முடியாது. வைரசுக்கு எதிரான பிறபொருளெதிரிகள் குருதியில் இல்லாவிடின் அவர் பிறபொருளெதிரி இல்லாதவர் (antibody negative) எனக்கருதப்படுவர். ஆனால் ஒருவர் அண்மையில் எயிட்ஸ் வைரசுத் தொற்றுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பாரானால் இவரின் குருதியில் பிறபொருளெதிரிகள் இருக்காது. ஏனெனில் ஒருவருக்கு நோய் தொற்றியதிலிருந்து பிறபொருளெதிரிகள் உடலில் உருவாகும் வரைக்கும் ஏறத்தாழ ஆறு மாதமளவில் செல்லும். இந்தக்காலப் பகுதி வைரசின் மறைவுக்காலம் (Window Period) என அழைக்கப்படும். மேலும் இச்சோதனை மூலம் நாளடைவில் எயிட்ஸ் நோய் ஏற்படுமா என்பது பற்றி எதுவும் கூறமுடியாது.

**எச். ஐ. வி. க்கு எதிரான மருந்து:- (Anti HIV - drugs)**

இப்போதைய நிலையில் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் எயிட்ஸ் நோய்க்கு எதிரான பல மருந்துகள் நடைமுறையில் உள்ளன. முதன்முதலாக 1987-ம் ஆண்டு Retrovir எனும் வர்த்தகப் பெயரைக் கொண்ட AZT (Zidovudine) குளிகைகள் (capsules) ஐக்கிய அமெரிக்காவில் நோயாளிகளைக் குணப்படுத்துவதற்கு அரசினால் அதிகாரமளிக்கப்பட்டுப் பாவிக்கப்பட்டது. இப்போது இந்த மருந்து ஏறத்தாழ 150 உலக நாடுகளில் பாவனையில் உள்ளபோதிலும் மிகக் குறைந்த அளவிலேயே பயனை அளிக்கின்றது. இது ஒரு எயிட்ஸ் நோயாளியின் உடலிலுள்ள HIV வைரசின் எண்ணிக்கையைக் குறைப்பதாக இல்லை. இம்மருந்தைத் தொடர்ந்து நீண்ட நாட்களுக்கு உள்ளெடுக்கும்போது தொடக்கத்தில் நோயாளி குணமடைவது போலத் தோற்றினாலும் ஒருசில மாதங்கள் அல்லது வருடங்களில் இம்மருந்தினாலேற்படும் முன்னேற்றங்கள் தடைப்பட்டு விடுகின்றன. மேலும் இந்த மருந்தைத் தொடர்ந்து உள்ளெடுத்தால் தலையிடி, தலைவலி, குமட்டல் (Nausea) ஆகிய பக்க விளைவுகள் ஏற்படலாம், இதற்கும் மேலாக இம்மருந்து பல்வேறு உடல் இழையங்களின் கலப்பிரிவினை நிறுத்தி விடலாம். இதன் விளைவாக நோயாளிக்கு மேலதிகமாகக் குருதிச்சோகை (Anaemia), தசைச் சிதைவு என்பன ஏற்படலாம்.

இப்பொழுது பல புதிய மருந்துகளான ddI (Didanosine), ddc (Zalcitavine) ஆகியவை இன்னும் பரீட்சார்த்த நிலையிலேயே உள்ளன. ஆனால் இம்மருந்துகள் யாவும் மிகமிக விலை உயர்ந்தவை.

நோய்த்தடுப்பு:-

★ பலருடன் பாலுறவு கொள்வதைத் தடுத்துக்கொள்வதனால் வைரசு உள்ள நபருடன் தொடர்பு கொள்ளக்கூடிய ஆபத்தைக் குறைக்கலாம்.

★ நாம் பாலுறவு கொள்பவர் பலருடன் பாலுறவு கொள்ளும் பழக்கமற்றவரா யின் வைரசைப்பெறும் ஆபத்தைக் குறைக்கலாம்.

★ பாலுறவு கொள்ளும் விதமும் ஆபத்தையுண்டாக்கலாம். உறவு கொள்பவர் பற்றி நிச்சயமாக அறிந்திராவிட்டால் அவருடன் பாலுறவு கொள்ளும் சில வழிகள் மிகவும் ஆபத்தானவையாக இருக்கும்.

★ பாதுகாப்பற்ற யோனிப்பாதை வழியான பாலுறவும் ஆபத்தானது: பாலு றவின்போது கருத்தடையுறைகள் (Condoms) உபயோகித்தால் எயிட்ஸ் வைர சுவும் மற்றும் பாலுறவினால் தொற்றப்படும் ஏனைய நோய்களினதும் ஆபத் தைக் குறைக்கலாம்.

★ வாய் மூலமான பாலுறவு ஓரளவு ஆபத்தானது. ஏனெனில் ஒருவரின் சுக்கி லத்திலிருந்து மற்றையவரின் உடலுக்கு வைரசு செல்லும் சந்தர்ப்பமேற் படலாம்.

★ தோலைச் சேதப்படுத்தும் அல்லது யோனி, மலவாசல் என்பவற்றுக்குள்ளோ தோலின் மேலோ இரத்தக்கசிவை ஏற்படுத்தும். அவ்விதமான பாலுறவுச் சேர்க்கையும் வைரசுவைப் பெறும் ஆபத்தை அதிகரிக்கின்றது.

★ பாலுறவுக்கான செயற்கையான உணர்ச்சியூட்டிகள் போன்ற பாலியல் விளை யாட்டுப் பொருட்களை மற்றவர்களுடன் பகிர்ந்து உபயோகித்தல். ஆபத் தானதாகவிருக்கும். உறவுகொள்வோர் ஒருவரையொருவர் தடவுவதனாலோ அல்லது செயற்கைச் சிற்றின்பப் பழக்கவழக்கங்களினாலோ (masturbation) ஆபத்து ஏற்படுவதில்லை.

★ மருந்தேற்றும் குழல்கள், ஊசிகள், காதுகுத்தும் கருவிகள், அக்குப்பஞ்சர் ஊசிகள், பல்கழற்றும் உபகரணங்கள் (tooth extraction equipments) என்ப வற்றைச் சரியான முறையில் கிருமியழிப்புச் செய்யாவிடின் அவற்றை மற்ற வர்களுடன் சேர்ந்து, கலந்து, பகிர்ந்து உபயோகிப்பதனைத் தவிர்க்க வேண்டும்.

★ இரத்த தானம் செய்யும்போது பொதுவாக தானம் செய்யும் ஒவ்வொருவருக் கும் புதிய ஒரு தடவை மாத்திரமே பாவிக்கக்கூடிய குழல்கள், ஊசிகளே (disposable Syringes) உபயோகிக்கப்படுவதனால் அதன் பொருட்டு நாம் அஞ்சத்தேவையில்லை.

★ போதைப் பொருட்களைப் பயன்படுத்துவோர் வைரசுவைப் பெற்றுக்கொள் வதைத் தடுப்பதற்குரிய வழி போதைவஸ்துக்களை ஊசிமூலம் குருதியினுள் ஏற்றாதிருப்பதே ஆகும். ஊசி மூலம் தொடர்ந்து ஏற்றுவதனால் ஒருவர் சொந்த ஏற்றுக்குழல் ஊசி போன்றவற்றைப் பயன்படுத்தலாம். மற்றவர்க ளுடன் சேர்ந்து பகிர்ந்துகொள்ள வேண்டாம்.

★ முகச்சவரம் செய்யப் பாவிக்கும் சவரக்கத்திகள் (Razor), பற்தூரிகைகள் (tooth brush) ஆகியன மற்றவர்களுடைய பொருட்களுடன் கலந்துவிடாத படி வேறாக வைத்துக்கொள்ள வேண்டும்.

★ எயிட்ஸ் நோயாளியுடன் பழகும் சுகாதார ஊழியர்கள் (Health Workers) இரத் தச் சோதனைக்காகக் குருதியை எடுக்கும் போதும் அதனைக் கையாளும்போதும் ஊசிக்குத்துக்களிலிருந்து தகுந்த முற்காப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

மேலும் கட்டாயமாகக் கையுறைகளைப் பாவித்து குருதிச் சோதனையில் ஈடுபடுவதால் எயிட்ஸ் நோய் தொற்றும் ஆபத்தைக் குறைக்கலாம்.

எயிட்ஸ் வைரசுக்கு எதிரான மருந்துகள் நோயைக் குணப்படுத்துவதில் குறைந்த அளவிலேயே பிரயோசனத்தை அளிப்பதனாலும் வைரசுக்கு எதிரான தடுப்பு மருந்தைக் (Vaccine) கண்டுபிடிப்பதற்காக பலகோடி ரூபாய்களைச் செலவளித்து நடாத்தப்படும் ஆராய்ச்சிகள் இன்றும் சாதகமான பலனை எய்தாத நிலையிலும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளைத் திறம்படச் செவ்வனே நடைமுறைப்படுத்துவதன் மூலமே எயிட்ஸ் எனும் பாரிய நோயிலிருந்து எம்மைப் பாதுகாக்க முடியும். அதாவது **"PREVENTION IS BETTER THAN CURE".**

## REFERENCES


1 **Devita, V. T., JR., Hellman, S., Rosenberg, S. A, Aids: Etiology, Diagnosis, Treatment and Prevention, Philadelphia 1985.**

2 **Barbara J. Bastian.,**
**Aids: Education Against Fear. Burlington, North Carolina 27215**

3 **Centers for Disease Control, Reports on Aids Published in the Morbidity and Mortality Weekly Report 1985 ^ 34, 517 T 521**

4 **Aids Publications.**
**Ministry of Health: 1993**

5 **Talking Aids**
**International Planno Parenthood Federation U. S. A.**

6 **Aids Action**
**Ahrtag Publication: Issue 21: June - Aug 1993**

7 **Aids Action**
**Ahrtag Publication: Issue 20: March - May 1993**

8 **Aids Booklet**
**Family Planning Association 1992.**



# முடிவுரையும்... முன்னுரையும்!


— செல்வன் வே. இராஜகோபாலசிங்கம் —
இறுதி எந்திரவியல் - முதலாம் பாகம்,
(பொறியியற்பீடம்)


இந்த நூற்றாண்டுக்கு
ஒரு முடிவுரை எழுது!

புரட்டப் பட்டுப் போன
அத்தியாயங்களில் எல்லாம்
'புனிதம்' தொலைக்கப் பட்டிருக்
- கிறது!
பொய்மை கலக்கப்பட்டிருக்கிறது!

வினைகளை
வேரோடறுக்க விதி செய்!

ஒவ்வோர் மனிதனையும்
மனச் சாட்சி முன்
சத்தியப் பிரமாணம்
செய்து கொள்ளச் சொல்!
'மனிதாபிமானத்தைக்
காப்போம்' என்று!

மனிதக் கூடுகள்
உரமாகிப் போன
தெருக்களுக்குப்
புது வர்ணம் பூசு!

'மனித நேயம்' கற்றுக் கொடுக்க
மகாத்மாக்களை
உருவாக்குவதற்கான
முயற்சிகளைக்
கருப் பைக்குள்
நடாத்தக் கண்டுபிடி!

மங்கையர்கள்
வரதட்சணைக் கொடுமைக்குள்
- ளாகும்
நிலைகளுக்கு
நீண்ட எதிர்ப்புத் தெரிவி!

கொடும் புயலிலும்
அகதியாய்ப் போன
குடும்பங்கள்
சாதி பார்த்துச் சண்டை போடும்
விஷயத்துக்கு
முற்றுப் புள்ளி போடு!

முற்றிலும்
'பணம்' ஒன்றே வாழ்வென்று
பகருவோர்
சிரசைத் துண்டித் தெறி!

கல்வி கற்கப் போய்
காணாமல் போகும்
பத்து வயதுச் சிறுவர் கட்கு
தேச ஒற்றுமை பற்றிச்
செப்பு!

இந்த நூற்றாண்டுக்கு
ஓர் முடிவுரை எழுது!
அடுத்த நூற்றாண்டுக்கு
அதுவே
முன்னுரையாகட்டும்.

# கிராம அபிவிருத்தியும் அதில் கிராம மக்களின் பங்களிப்பும்

— நல்லதம்பி நல்லராஜா —
பொருளியற்றுறை
மூன்றாம் வருடம் (கலைப்பீடம்)

இலங்கையின் பிராந்தியங்களை வகைப்படுத்தி நோக்கும் போது, இங்கு நகரப் புறங்களும், பெருந் தோட்டத்துறை சார்ந்த பிராந்தியங்களும், விவசாயம் செய்யும் பிராந்தியங்களுமாகிய முப்பெரும் பிரிவுகள் அமைந்து காணப்படுவதை நாம் காணலாம். இவற்றுள் நகரப் புறங்களையும் பெருந் தோட்டத்துறை சார்ந்த பிரதேசங்களையும் தவிர்த்து நோக்கும் போது காணப்படுவது, விவசாயம் தொடர்பான கிராமப் பகுதிகள் என வரையறுக்கலாம். இப்பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், உற்பத்தித் திறனையும், அவர்களது, சேமநலத்தையும், தலாவருமானத்தையும் அதிகரிப்பதற்கு அல்லது உயர்ச்சியடையச் செய்வதற்கு முன் எடுத்துச் செல்ல கடைப்பிடிக்கும் நடைமுறையை கிராம அபிவிருத்தி என்று பெயர் கொண்டு அழைக்கலாம்.

இலங்கையில் ஏறக்குறைய 31,000, கிராமங்கள் அமைந்து காணப்படுகின்றது. இவற்றுள் குக்கிராமங்கள் உள்ளடக்கப்படுமாயின், கிராமங்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாகும். இலங்கை வாழ் மக்களில் 70 சதவீதமானோர் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர்.

விவசாயம் கால்நடை வளர்ப்பு போன்ற தொழில்களே கிராம மக்களால் பெரும்பான்மையாகச் செய்யப்பட்டு வரும் தொழில்களாகும். கிராம அபிவிருத்தியில் திட்டமிட்ட அபிவிருத்தியே முதன்மையாக வேண்டப்படுகின்றது. அண்மைக்கால புள்ளி விபரங்களில் இருந்து 10 இற்கு 6 பேர் விவசாய நடைமுறைகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும் போது, இலங்கையில் 60% மானோர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை அறியலாம். இப்பெறுமானம் 1901 ஆம் ஆண்டில் இருந்து 1981 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது, மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் 5%-10% இற்கு உற்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

1981 ஆம் ஆண்டு புள்ளிவிபரங்களின் படி, 59 வீதமானோர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது. இலங்கையின் கிராமங்களில் ஏற்படும் அபிவிருத்தியின் மூலமாகவே இலங்கை நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளவிட முடியும். எனவே இலங்கை வாழ் மக்களின் பங்களிப்பின்றி இலங்கை நாட்டின் அபிவிருத்தியைப் பெற்றுக் கொள்வது முடியாததாகும்.

இலங்கை வாழ் கிராமிய மக்கள் இவ்வகையான அபிவிருத்தி நடவடிக்கைகளில் எவ்வாறு பங்கெடுத்துக் கொள்ள முடியுமென்பதனை கருத்திற்கொண்டு நாம் ஆராய வேண்டும். கிராமிய மக்கள் பல சுரண்டல் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றார்கள். அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பல குறைபாடுகளுடன் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். படிப்பறிவின்மை,

சுகாதார வசதியின்மை, சத்துணவு இன்மை, போக்குவரத்து வசதியின்மை, குடிநீர் பெற்றுக்கொள்ள முடியாமை போன்ற இடர்பாடுகளின் மத்தியில் அபிவிருத்தி என்னும் செயற்பாடு உலகின் பல பாகங்களிலும் நடைமுறைப் படுத்தப் பட்டு வருகின்றது. இச்செயற்பாடு நாட்டுக்கு நாடு சமூக பொருளாதார வேறுபாடுகளின் மத்தியில் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. நாளுக்கு நாள் மாதத்திற்கு மாதம், வருடத்திற்கு வருடம் இதன் பெயர் பல கோணங்களில் இருந்து ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

இதனிடையில் மக்களால் மக்களுக்காக என்று பெயரளவில் பல கிராம அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டாலும், கிராமிய மக்களின் பங்களிப்பு இடம்பெறவில்லை. அரசியல் இலாபம் கருதுதலே மேலோங்கி நிற்கின்றது இதனாலேயே கிராம அபிவிருத்தித் திட்டங்கள் பல தோல்வியில் முடிவுற்றன. ஆனாலும் இன்னும் பல திருப்தியற்ற, பயனற்ற, முறையில் அமுல்படுத்தப்பட்டு பல கோடி ரூபாய்கள் செலவிடப்பட்டது. இருந்தும் குறித்த திட்டமிட்ட பயனை அடைய முடியவில்லை. இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொடக்கம் பல அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு, செயற்படுத்தப்பட்டது. அவற்றில் குறிப்பிடக் கூடியதாக அமைவது விவசாயத்துறை, கால்நடைவளர்ப்பு, கோழி வளர்ப்பு, பாற்பண்ணைகள், பலவகைப்பட்ட சிறுகைத்தொழில் அமைப்புகள் போன்றவையாகும்.

இவையாவும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியையும் வறுமை ஒழிப்பையும் அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டவையாகும். இதனால் சமூகச் சீரின்மையை அகற்றுவதும் தொழில்வாய்ப்பை ஏற்படுத்துவதும் குறை தொழில் மட்டத்தில் இருந்து நிவர்த்தி அடையச் செய்வதையும் பலனாகப் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதை அளவிட இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் (GNP) வளர்ச்சி வீதம் பயன்படுத்தப் பட்டது. இக் காரணியில் ஏற்பட்ட வளர்ச்சி வீதம் முற்றாக நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்ட அபிவிருத்தியை குறிப்பதாகக் காணப்படவில்லை. வறுமை ஒழிக்கப்பட்டதாகவோ அல்லது பங்கீட்டுச் சமநிலையின்மை குறைக்கப் பட்டதைக் குறிப்பதாகவோ அமையவில்லை.

கிராம அபிவிருத்தி என்பது சாதராணமாக இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் ஏற்படும் வளர்ச்சியைக் கொண்டு கூறிவிட முடியாது. கிராம மக்களின் மனித வள அபிவிருத்தியையும் அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும். அத்தோடு, இயற்கை வளங்களின் அபிவிருத்தியும் சூழல் பாதிப்பின்மையும் இணைந்து அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். சூழல் பாதிப்படையும் போது நமது அகவாழ்வும் பாதிப்படைகின்றது இங்கு இவை யாவும் ஒன்றிணைந்த அபிவிருத்திக்கே முக்கிய இடம் அளிக்க வேண்டும். இதைக் கருத்தில் கொள்ளாது மொத்த தேசிய உற்பத்திக் காரணியின் வளர்ச்சி வீதத்தை அளவிடுவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை குறிப்பிடுவது பொருந்தாததாகும்.

பொருளாதாரம் வளர்சசி அடைவதையும் வறுமை ஒழிப்பதையும் மட்டும் கவனத்தில் எடுக்காது, மனித வள அபிவிருத்திற்கே முக்கிய இடம் கொடுக்கப் படல் வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு ஆராயும் போது, அத்தியவசியமான நிவர்த்தி செய்யப்பட வேண்டியதான படிப்பறிவின்மையை அகற்றல், சுகாதார குறைபாடுகளை நிவர்த்தி செய்தல், சமூக சமச்சீர் இன்மையை அகற்றுதல், உற்பத்திக் காரணிகளின் சம பங்கீடு

போன்ற அடிப்படைக் காரணிகளில் அபிவிருத்தியைக் காணமுயல வேண்டும். அத்தோடு, நாம் வாழும் சூழலை மனிதனும் உயிரினங்களும் வாழத்தக்கதாக சுற்றாடல் மாசடையாமல் பேணபபடுதல் முக்கியமான ஒன்றாகும். ஒட்டு மொத்தமாகக் கூறுவோமாயின் மனிதவள அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒருவரையொருவர் சுரண்டி வாழாத நிலையிலும் ஒருவரையொருவர் இழிவுபடுத்தாத நிலையிலும் மனித உரிமைகள் மீறப்படாத நிலையிலும் கிராமமட்டத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதன் மூலமே நாட்டின் மொத்த சமூக, அரசியல், பொருளாதார ஒருமைப் பாட்டையும் வளர்ச்சியையும் அடைய முடியும்.

இவ்வகையான அபிவிருத்தியை பெறவேண்டுமாயின், அபிவிருத்தித் திட்டத்தின் ஒவ்வொரு அங்கத்திலும் அபிவிருத்தியை எதிர்நோக்கும் மக்களே நேரடியாக பங்கெடுத்தல் அவசியமாகும். இதற்கு அடிப்படையாக திட்டமிடுதல், ஆலோசனை வழங்குதல், அமுல் படுத்துதல், மேற்பார்வை செய்தல், பெறு பேறுகளை மதிப்பீடு செய்தல் போன்ற ஒவ்வொரு படிமுறைகளிலும் மக்களின் பங்களிப்பு அவசியமான ஒன்றாகும். இதன் காரணமாகவே அபிவிருத்தித் திட்டங்களின் பயன்கள் கிராமிய வறிய மக்களைச் சென்றடையவில்லை.

பொது மக்களின் பங்களிப்பு பொது நிர்வாக அமைப்பில் மட்டுமல்லாது, திட்டமிடலிலும், திட்டங்களை செயன்முறைப் படுத்துவதிலும், சமூக பொருளாதார, அரசியல் செயற்பாடுகளில் நேரடியாக பங்கேற்பதன் மூலமாக ஒரு நாட்டின் பொருளாதாரத்தையும் அபிவிருத்தியையும் செய்ய முடியும்.

இவற்றை நோக்குமிடத்து, கிராம மக்களின் பங்களிப்பை நேரடியாக பெறுவதன் மூலமாகவே இலங்கையின் கிராமங்களை அபிவிருத்தியடையச் செய்ய முடியும். அது மட்டுமல்லாது, தகுந்த பொது சனத்தொடர்பு சாதனங்களை பயன்படுத்துவதன் மூலமும் மக்களிடையே மறைந்து கிடக்கும் கிராமிய அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி உணர்வுகள் தூண்டப்படுதல் வேண்டும்.

கிராம அபிவிருத்தித் திட்டங்கள் எம்முடையவை, எமக்காகச் செயற்படுபவை எம்து பங்களிப்பு அவசியம் எண்ணும் உணர்வலைகள் கட்டியெழுப்பபட வேண்டும். அமுல் நடத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை தொடர்ந்து பேணுதல் அபிவிருத்தியினால் பெறப்படும் இலாபம் அனைவருக்கும் சமமாகப் பங்கிடப்படுதல் போன்ற செயற்பாடுகளிலும் கிராமிய மக்களின் கவனம் ஈர்க்கப்பட வேண்டும்.

இலங்கைபோன்ற சிறிய நாட்டின் கிராமிய அபிவிருத்தியின் கிராமிய மக்களின் நேரடி பங்களிப்பு மிகவும் இலகுவாகப் பெறக் கூடியதொன்றாகும். இதற்கு கிராமிய மட்டத்தில் திட்டமிட்ட அபிவிருத்தி முறைகளை விளங்க வைப்பதன் மூலம் பங்குபற்றுதலின் அவசியத்தை உணர வைத்து செயற்பட செய்வதன் மூலமே கிராமங்களை அபிவிருத்தியடையச் செய்ய முடியும்.

## உசாத்துணை நூல்கள்:


1. Alphabetical and Numerical Lists of Villages in Sri Lanka.
2. Central Bank of Sri Lanka Annual Reports ( 1988 - 1992 )




# இன்னொரு ஜனனம் . . .!

— செல்வி என். தாரணி —
தமிழ்த்துறை,
விடுகை வருடம், (கலைப்பீடம்)

**சுகந்தா** அழுதழுது ஓய்ந்து போயிருந்தாள். இனிமேல் கண்ணீரே இல்லை என்று சொல்லுமளவுக்கு அவளது கண்கள் வற்றிப் போயிருந்தன. இன்று என்ன நாள்? மறந்து போயிருந்தது. இன்று என்ன திகதி? மறந்து போயிருந்தது. எல்லாம் மறந்து போயிருந்தது. வீட்டில் இன்னும் வந்த உறவினர்கள் அனைவருமே போய்விடவில்லை. மிகவும் நெருக்கமானவர்கள் மட்டும் தங்கியிருந்தார்கள். அனைவரது பார்வையும் சுகந்தா மேல் விழும் போது அதில் அனுதாபம் கரைபுரண்டோடியது. சுகந்தாவுக்கு அவை ஒன்றும் தாக்கவில்லை. வெறுமனே வெறித்துக்கொண்டு ஒரு சுவரின் மூலையில் அமர்ந்திருந்தாள்.

வித்யா ஒரு கோப்பையில் தேனீருடன் சுகந்தாவின் அருகில் வந்தாள். மெதுவாக "சுகந்தா" என்றாள். சுகந்தாவின் பார்வை தூரத்தில் நிலைத்திருந்தது. அக்கா வித்யா கூப்பிட்டதுகூட கேளாமல் அப்படியே அமர்ந்திருந்தாள். வித்யா மெதுவாகத் தங்கையின் தலையை வருடி "சுகந்த^இந்தா இதைக் குடி என்றாள்" சுகந்தா வேண்டாம் என்பதுபோல் கையால் தள்ளி விட்டாள். வித்யா சுகந்தாவின் கையை ஒதுக்கி விட்டு "இப்படி ஒன்னுமே குடிக்காம இருந்தா எப்படி சுகந்தா. இந்தா இதைக் கொஞ் சமாவது குடி" என்றாள். சுகந்தா மீண்டும் மௌனமாக இருக்கவே வித்யா, "இப்படி எத்தனை நாளைக்குச் சுகந்தா இருக்கப் போற? ம். எல்லோருக்குமே இப்படித்தான். உலகத்தில் யாருக்குத் தான் கஷ்டம் வராம இருக்கு, இப்படியே அழுதிட்டிருந்தா திவாகர் வந்துடுவாரா என்ன? எழும்பு. எழும்பி முகத்தைக் கழுவிட்டு இதைக்குடி" என்றாள். திவாகர் என்ற பெயரைக் கேட்டதுதான் சுகந்தா மீண்டும் அழத் தொடங்கினாள். மெதுவாக விசும்பத் தொடங்கியவள், விசும்பல் சத்தம் கேட்டு அனைவரும் எட்டிப் பார்க்கவே ஓவென அழத் தொடங்கினாள். வித்யாவுக்கு என்ன செய்வது என்று புரியாமல் மௌனமாக நின்றாள்.

ஒருவாறாகச் சுகந்தாவின் அழுகை ஓய்ந்தது. மெதுவாக வித்யா சுகந்தாவின் அருகில் வந்து தேனீர்க் கோப்பையை எடுத்துச் சென்றாள். அதன்பின் சுகந்தா மீண்டும்

சுவரையே வெறித்துக்கொண்டு அமர்ந்திருந்தாள். மீண்டும் அவள் மனதில் திவாகரின் ஞாபக மூட்டம் வளையமிடத் தொடங்கியது. இன்றுடன் எத்தனை நாட்கள்? அவளுக்கு ஞாபகம் வரவில்லை. கடைசியாகத் திவாகரின் முனகல் ஒலி மட்டும் மனம் முழுக்க வியாபித்திருந்தது. எப்படி? ''திருமணம் முடிந்து ஒரு நாள்கூட அவன் நோய் என்று படுத்ததில்லையே. ஒரு நாள்கூடச் சோர்ந்து போய் உட்கார்ந்தது கிடையாதே. எப்படிச் சாத்தியம்? மூன்று நாட்களுக்கு முன்னதாகக் கூட முழுதாக இருந்தானே. அதற்குள் எப்படிப் போனான். எப்படி என்னை விட்டுப்போக அவனுக்கு மனம் வந்தது?'' இவ்வாறு திவாகரின் நினைவிலேயே மூழ்கிப் போயிருந்தாள் சுகந்தா.

ஸ்ரீநிவாசகத்தின் மூன்றாவது பெண் சுகந்தா. ஏற்கனவே இரண்டு பெண் பிள்ளைகளைத் திருமணம்செய்து கொடுத்து விட்டார். சுகந்தா துடிப்பான பெண். அழகும் நிறைந்தவள். எப்படியாவது நல்லதொரு இடத்தில் திருமணம் செய்து கொடுத்து விட வேண்டும் என்று ஸ்ரீநிவாசகமும், அவர் மனைவியும் நினைத்துக்கொண்டிருக்கையில் தான் தானாகவே ஒரு வரன் வந்தது. விசாரித்ததில் திவாகருக்கு இரண்டு சகோதரிகள் என்றும், இருவரும் திருமணமாகி விட்டார்கள் என்றும், திவாகரன் நல்லதொரு பிள்ளை எனவும் தெரிய வரவே உடனேயே திருமணத்திற்குச் சம்மதித்தார். சீதனம், வீடு என்ற கெடுபிடி இல்லாவிட்டாலும் ஸ்ரீநிவாசகம் பெண்ணுக்குத் தாராளமாகவே செய்தார். மேலும் சுகந்தாவும் மாதம் மாதம் கைநிறையச் சம்பளம் எடுக்கின்றாள் என்ற பெருமையும் இருந்தது. எனவே தனது மூத்த பெண்கள் இருவருக்கும் செய்ததைவிடச் சிறப்பாகச் சுகந்தாவின் திருமணத்தைச் செய்து வைத்தார்.

என்ன சிறப்பாகச் செய்தும் என்ன? இதோ இன்று அறுத்துக்கொண்டு நிற்கின்றாள். எத்தனை சிறப்பாக வாழ வேண்டும் என நினைத்தார். கடைசியில் என்ன நடந்தது? நினைப்பதா நடக்கின்றது. திருமணமாகி எட்டே எட்டு மாதங்கள்தான், கட்டியிருந்த கோட்டையெல்லாம் சரிந்தது. திடீரென ஒருநாள் திவாகரின் அலுவலகத்திலிருந்து டெலிபோன் மூலம் சுகந்தாவுக்குச் செய்தி விரைந்தது. திவாகரை அருகில் உள்ள வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றிருப்பதாக. சுகந்தாவுக்கு செய்தியைக் கேட்டவுடன் ஒன்றும் புரியவில்லை. ஒன்றுமே செய்யத் தோன்றவில்லை. சற்று நேரம் கழிந்த பின் தான் செய்தியின் சூடு நெஞ்சில் சுட்டது. பதறியடித்துக்கொண்டு வைத்தியசாலைக்குச் சென்றாள். அங்கே திவாகர் அவசர காலப்பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தான். திவாகரின் நண்பர்கள் நின்றிருந்தார்கள். சுகந்தாவைக் கண்டவுடன் சற்று விலகி நின்றார்கள். சுகந்தா ஓவென அழத்தொடங்கி விட்டாள். பின் ஒருவாறு சமாதானமாகி நண்பர்களிடம் விசாரித்தாள். வேலை செய்துகொண்டிருக்கும்போது திடீரென நெஞ்சு வலி வந்து துடித்ததாகவும், பின் வைத்தியசாலைக்குக் கொண்டு வந்ததாகவும் கூறினார்கள். தனியார் வைத்தியசாலை என்றபடியால், எந்த வேளையிலும் பார்ப்பதற்கு அனுமதித்தார்கள். அதனால் சுகந்தா அங்கேயே நின்றிருந்தாள். வைத்தியர் வந்து பார்த்துச் சென்றவுடன் சுகந்தாவைப் பார்ப்பதற்கு அனுமதித்தார்கள். உள்ளே திவாகர் நெஞ்சு வலியினால் முனகிக் கொண்டிருந்தான். சுகந்தாவைக் கண்டதும் அவனின் கண்களில் நீர் நிறைந்து வழிந்தது. சுகந்தாவின் கண்களும் நிறைந்தன. அவன் படும் வேதனையைச் சுகந்தாவினால் சகிக்கமுடியவில்லை. நேரம் செல்லச் செல்ல அவனின் வலி அதிகரித்துக்கொண்டே சென்றது. உடனே இரண்டு வைத்தியர்கள் வந்து திவாகரனைப் பார்த்தார்கள். சுகந்தா உட்பட அனைவரும் வெளியே அனுப்பப்பட்டார்கள். மீண்டும் சிகிச்சை ஆரம்பமானது. சற்று நேரத்தில் வைத்தியர்கள் வெளியே வந்தார்கள்.

அவர்களின் முகத்தைப் பார்த்தவுடனேயே சுகந்தாவுக்கு ஏதோ போல் இருந்தது. வைத்தியரின் அருகில் சென்று ''எப்படி இருக்கிறார் டொக்டர். உள்ளே போகலாமா?'' எனக் கேட்டாள். ''வெரி சொறி மிஸிஸ் திவாகர்'' என்று டொக்டர் கூறியதுமே சுகந்தா அழுகையுடன் உள்ளே பாய்ந்தாள். அங்கே திவாகர் தலைவரை அப்படியே போர்த்தப்பட்டிருந்தான். அப்படியே மயங்கி விழுந்தவள் தான் சுகந்தா. அதன்பின் திவாகரின் உடலை வீட்டிற்கு கொண்டுவந்த பின்னரும் விழிக்கவில்லை. விழித்தபோது அவளால் ஜீரணிக்க முடியவில்லை.

முழுசாக அலுவலகத்திற்கு போனானே. எப்படி இப்படியானான்? இல்லை அவன் சாகவில்லை. என்னோடுதான் இருக்கின்றான். முழுமையாக என்னுள் நிறைந்திருக்கின் றான். இல்லை அவன் செத்திருக்க முடியாது! முடியாது! முடியாது. அவளின் மனம் அவனின் நினைவில் கரைந்து போனது. இனி வாழ்நாளில் திவாகரைக் காணமுடியாது என நினைத்தபோது அப்படியே பிரமித்துப் போனாள். இப்படியே வாழ்நாள் முழுவ திலும் தனியாகப் பயணம் மேற்கொள்ள வேண்டியதுதானா? சாகும்வரை நான் மட் டும் தனியாக இருக்க வேண்டுமா? என்று மனம் அலைபாய்ந்தபோது, அடிவயிற்றிலி ருந்து ஏதோ ஒன்று நெஞ்சை அடைத்தது. பின் தொண்டை இறுகி, விசும்பலாக மாறி, சுயபச்சாதாபத்தின் காரணமாக அழுகையாக வெடித்தது. அவளின் அழுகைச் சத்தம் கேட்டு உறவினர்கள் ஒவ்வொருவரும் கட்டிப்பிடித்து அழத் தொடங்கினார்கள். இத னால் சுகந்தா மேலும் சத்தமாக அழத் தொடங்கினாள். ஒருவாறாகச் சுகந்தாவின் மாமா ஒருவர் வந்து அதட்டியபின் அவர்களின் அழுகை குறைந்தது. இப்படியே மூன்று நாட்கள் சுகந்தா அன்னம் தண்ணி எதுவுமில்லாமல் கிடந்தாள்.

இன்று வித்யா வற்புறுத்திக் கொடுத்த தேனீரையும் குடிக்காது விடவே, சற்று நேரத்தில் சுகந்தாவின் பெரியம்மா தேனீர்க் கோப்பையுடன் அருகில் வந்தாள். ''இந்தா சுகந்தா சூடா இருக்கு. ஒருவாய் குடி. உடம்பு தெம்பா இருந்தா தான் மனசு தெம் பாருக்கும். சும்மா இப்படியே அழுதிட்டிருந்தா எப்படி? அம்மாவைப் பாரு. நீ அழும்போதெல்லாம் எப்படி நொறுங்கிப் போறாங்கனு'' என்று இதமாகக் கூறினாள். சுகந்தாவுக்குத் தாயைப் பார்த்தவுடன் மனம் நொந்து போனது. எப்படி உடைந்து போய் விட்டாள் என்று உள் மனம் நினைத்துக்கொண்டது. மெதுவாகத் தேனீர்க் கோப்பையை வாங்கி இரண்டு முடக்கு குடித்துவிட்டு திரும்பக் கொடுத்தாள். அதன் பிறகு பெரியம்மா வற்புறுத்தவில்லை. அவள் எழுந்து சென்றவுடன் ஒருவகையான நிம்மதி கிடைத்தது போல சுகந்தா உணர்த்தாள்.

ஒரு கிழமை ஆயிற்று. வீட்டில் செய்யவேண்டிய காரியங்களெல்லாம் முடிவுற்றது. சுகந்தா மரக்கட்டையைப் போல் காணப்பட்டாள். இனிமேல் தொடர்ந்து இப்படித் தான் இருக்க வேண்டுமோ எனும் எண்ணம் மனதில் எழுந்தபோது எதிர்காலம் கண் முன்னே இருண்டு காணப்பட்டது. சுகந்தாவின் வெறுமையான நெற்றியும், வாடிப் போன முகமும் மற்றவர்கள் அவள் மேல் ஓர் அனுதாபப் பார்வையை வீசத் தோன் றிற்று. அப்படி மற்றவர்கள் சுகந்தாவைப் பார்க்கும் போதெல்லாம் அவள் தனக்குள்ளே நொறுங்கிப்போனாள். ஏன் இப்படி என்னைப் பார்க்கின்றார்கள்? கணவனை இழந்து விட்டால் நான் என்ன இவ்வளவு கேவலமாகிப் போனேனா? இனிமேல் இப்படியேதான் பார்ப்பார்களா? சுகந்தா இவ்வாறு தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டாள்.

அன்று கணவன் இறந்ததற்குப் பிறகு முதன் முதலாக அலுவலகம் செல்ல தீர்மானித் தாள் செல்ல மனம் ஒப்புக்கொள்ளவில்லை. முதல் நாள் மாலை தோழி மீரா சுகந்தாவைப்

பார்த்துச் செல்வதற்காக அலுவலகத்திலிருந்து நேரே வந்திருந்தாள். சுகந்தா அவளிடம், தான் இனிமேல் அலுவலகம் வரப்போவதில்லை எனக் கூறினாள்.''பைத்தியக் காரத்தனமாக நடந்துகொள்ளாதே சுகந்தா. இப்படியே மூலையில் முடங்கிக் கிடந்த நடந்ததெல்லாம் மறந்து போயிடுமா? இழந்ததெல்லாம் திரும்ப வந்திடுமா? சே, நீ எவ்வளவோ தைரிய மானவள் என்று நினைச்சேன். இப்படி கோழைத்தனமா நடந்துக்கிறியே. நீ இப்படி நடந்துக்கிறதுனாலே உனக்கு மட்டும் கஷ்டமில்ல சுகந்தா. வீட்டில இருக்கிற மற்றவங்களையும் கஷ்டப்படுத்திறா'' என்று மூச்சு விடாமல் கூறிமுடித்தாள். கூடவே சுகந்தாவின் தாயும் மீராவுடன் சேர்ந்துகொண்டாள். மீரா சென்றபின் சுகந்தா தனிமையில் யோசிக்கலானாள். கடைசியில் நாளையிலிருந்து அலுவலகம் செல்வதென முடிவுசெய்தாள்.

அன்று காலையில் சுகந்தா நீண்ட நேரப் போராட்டத்தின் பின் அலுவலகத்திற்குச் செல்வதென முடிவு செய்து வெளிக்கிடலானாள். வழமையாகவே சுகந்தா கண்ணைப் பறிக்கும் நிறங்களில் சேலை அணியாவிட்டாலும் கூட, கண்ணைக் கவரும் நிறங்களில் அணிவாள். அன்று அலுமாரியைத் திறந்தவுடன் திவாகர் அவளது பிறந்தநாளன்று பரிசளித்த சேலைதான் கண்முன்னாலேயே தெரிந்தது. அதையெடுத்து கண்ணிமைக்காமல் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். பின் அச்சேலையை இருந்தவிடத்தில் அப்படியே வைத்தாள். லேசான நீலநிறத்தில் வெள்ளைப் பூக்கள் சிதறிய சேலையை அணிந்து கொண்டாள். கண்ணாடியருகில் சென்று தலையை வாரியபின், பழக்க தோஷத்தில் குங்குமச் சிமிழை எடுத்தாள். விரலில் தொட்டு முகத்தை நிமிர்த்தியபோதுதான் நிஜம் நிதர்சனமானது. கை நடுங்கிற்று, எப்படி மறந்து போனேன்? ஏன் மறந்தேன்? உடனே அவளுக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்தது. எவ்வளவோ முயன்றும் முடியாமல் போகவே ஓவென அழத்தொடங்கினாள். உள்ளுக்குள் ஏதோ வேலையாயிருந்த மரகதம்மாள் என்னவோ ஏதோவென்று ஓடி வந்தாள். சுகந்தா குங்குமச்சிமிழ் சிதறிக் கீழே விழுந்து கிடக்க மடங்கி உட்கார்ந்து ஓவென அழுதுகொண்டிருந்தாள். மரகதம்மாவுக்கு எல்லாம் புரிந்து போயிற்று மெதுவாக வந்து மகளின் தலையை வருடியவாறு தானும் சேலைத்தலைப்பால் வாயை மூடிக்கொண்டு அழுதாள். அதன் பிறகு அன்று சுகந்தா அலுவலகம் செல்லவில்லை. இப்படியே இரண்டு நாட்கள் போயிற்று. மீரா மீண்டும் தோழியை வற்புறுத்தத் தொடங்கியதில் அடுத்த வாரத்திலிருந்து சுகந்தா வேலைக்குப் போகத் தொடங்கினாள்.

முதலில் அலுவலகத்திலிருந்தவர்கள் பார்த்த பார்வை அவளைச் சுட்டுப் பொசுக்கியது. சீ என்ன சமூகம்? இப்படி பார்வையாலேயே கொல்லுகிறதே. ஒரு ஆண் மனைவியை இழந்து வந்தால் இப்படியா அனுதாபப் பார்வை பார்க்கின்றார்கள்? ஒரு பெண் கணவனை இழந்து விட்டால் எப்படியெல்லாம் கேவலமாக்குகின்றார்கள். சுகந்தாவின் மனதில் பல எண்ணவோட்டங்கள் தோன்றி மறையும். அப்போதெல்லாம் கண்களில் தோன்றும் நீரை கீழே விழுந்து விடாமல் எச்சிலுடன் கூட்டி விழுங்குவாள்.

அன்று சனிக்கிழமை, சுகந்தாவின் அலுவலக விடுமுறை நாள். சுகந்தாவின் தமக்கையும் வந்திருந்தாள். அவளின் கணவனின் தங்கைக்குத் தேர்வுப் பரீட்சையொன்று இருப்பதால் அவளையும் அழைத்து வந்திருந்தாள். சற்று நேரத்தில் அவளையும் அழைத்துக் கொண்டு தான்போவதாகக் கூறினாள் வித்யா. வித்யாவின் கணவனின் தங்கை சுஜி பரீட்சைக்குச் செல்வதற்கு ஆயத்தமாகி வெளியில் வந்தபோது, ஏதோ வேலையாகவிருந்த சுகந்தா முன்னறையிலிருந்து வெளிப்பட்டு உள்ளே செல்வதற்குத் திரும்பினாள். அப்போது சுஜியின் பின்னால் வந்த வித்யா 'சுஜி' என்று அழைத்தாள். சுஜி உடனே

நிற்கவே சுகந்தா அவளைக் கடந்து செல்லும் வரையில் பேசாமலிருந்தாள். பின் சுஜியைச் சற்றுத் தாமதித்து அழைத்துக்கொண்டு சென்றாள். சுகந்தாவுக்கு அக்காவின் செயல் நன்றாகப் புரிந்தது. அக்காவா இப்படி? ஆச்சரியமாகவிருந்தது. கூடவே துக்கம் நெஞ்சை அடைத்தது. தான் சுஜியின் முன்னால் வந்தது அபசகுனமென்று கருதித்தான் அவளைத் தடுத்தாள் என்பது விளங்கியது. சே, எவ்வளவு கேவலமாக நடந்து கொண்டாள் அக்கா?. அவளுக்கு இப்படியொரு நிலமை வந்திருந்தால்......... என்று மனதின் ஒரு பக்கம் கேள்வி கேட்ட போது 'இல்லை வரவே கூடாது,' இப்படியான தொரு நிலை யாருக்குமே வரக்கூடாது. அதுவும் நமது தமிழ்ச் சமூகத்தில வரவே கூடாது. என மனதின் மறுபக்கம் ஓலமிட்டது. கூடவே மனதின் ஒரு மூலையில் சிறியதொரு அக்கினிப் பொறி தோன்றி மறைந்தது.


சுகந்தாவின் தோழி மீராவுக்கு அன்று திருமணம். நெருங்கிய தோழி என்று இருப்பது மீரா மட்டுமே என்ற படியால் சுகந்தா திருமணத்திற்குச் செல்லத் தீர்மானித் தாள். உடனே தான் அங்கே சென்றால் மனம் உடையும் படியான செயல்கள் ஏதும் நடைபெறுமோ என்ற எண்ணமும் தலை தூக்கியது. இருந்தும் வேறு வழியின்றித் திருமணத்திற்குச் சென்றாள். தான் வெள்ளைப் புடவை அணிந்து செல்லவில்லை என்பதைக் கூடச் சில கண்கள் அளவெடுப்பதைக் கண்டாள் சுகந்தா. உள்ளே சென்று ஓரிடத்தில் அமர்ந்து கொண்டதும் பல கண்கள் தன்னை மொய்ப்பதைக் கண்டாள் "ஏன் இப்படி ஒரு காட்சிக்குரிய பொருளைப் பார்ப்பது போல் என்னைப் பாக்கின் றார்கள்? கண்களில் உடனேயே ஏன் அனுதாபப் பூச்சைப் பூசிக் கொள்கின்றார்கள்? திவாகர் இறந்த நேரம் வார்தைக்கு வார்த்தை ஆறுதல் கூறினார்களே! அவர்களா இன்று இவ்வாறு பார்த்து என் அடி மனதில் புதைத்து வைத்திருக்கும் அந்தச் சோகத்தை மீண்டும் கிளறி விடுகின்றார்கள்? என்னை ஏன் ஒரு சராசரி மனுஷியைப் போல் பார்க்க மாட்டேன் என்கிறார்கள்?" இவ்வாறான கேள்விகளெல்லாம் மனதைக் குடைய சுகந்தா தன்னால் அதிக நேரம் அங்கு இருக்க முடியாதென உணர்ந்தாள். திருமணச் சடங்கும் அவ்வேளையில் முடிவுறவே தோழிக்கு வாழ்த்தி விட்டு பரிசையும் கொடுத்து விட்டுச் செல்லலாம் என்று நினைத்தாள். உடனே பரிசையும் எடுத்துக் கொண்டு எழும்பி மேடைக்கருகில் சென்றாள். உடனே "கொஞ்சம் பொறும்மா" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டு நின்றாள். திருமணச் சடங்கு செய்ய வந்திருந்த பிராமணர் தான் அவ்வாறு நிறுத்தினார். பின் ஒரு பெரியவரிடம் "ஒரு சுமங்கலியைக் கூப்பிடுங்கோ முதலில் அவள் வாழ்த்தட்டும்" என்றார், சுகந்தாவுக்கு என்ன செய்வதென்று புரிய வில்லை. மீரா அவளையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். சுகந்தாவின் கால்கள் நழுவி தரைக்குக் கீழே செல்வது போல இருந்தது. அருகிலிருந்த மேசை மேல் பரிசுப் பொட்டலத்தை வைத்தாள், விறு விறுவென வெளியே வந்து வீட்டுக்குச் செல்லளானாள்.

சுகந்தா அழுது ஓய்ந்து விட்டிருந்தாள். திருமண வீட்டிலிருந்து வந்து கட்டிலில் விழுந்தவள் தான். அப்படியே அழுதழுது நித்திரையாகிப் போனாள். விழிப்பு ஏற்பட் டவுடனேயே சம்பவம் கண் முன்னால் விரிந்தது. "நான், என்ன அத்தனை வக்கரிப்பான மனத்துடனா வாழ்த்துவேன்? எனக்குக் கிடைக்காத இந்தத் திருமண வாழ்க்கை மீராவுக்கும் கிடைக்கக் கூடாது என்று நினைப்பேனா? மீரா கூட பார்த்துக் கொண்டு சும்மா தானே நின்றிருந்தாள். நினைத்திருந்தால் அவள் கூப்பிட்டுருக்கலாமே, எத்தனை மோசமானவள்! இல்லை நான் இப்படி இருக்கக் கூடாது. இந்தக் கீழ்தரமான மனிதர் ளின் முன்னே நான் நிமிர்ந்து நிற்க வேண்டும். இவர்கள் என்னை வினோதமான

பொருளாகப் பார்ப்பதைத் தடுக்க வேண்டும். சொந்த உடன் பிறப்புகளே என்னை உதாசீனப் படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். இவர்களை விட எந்த விதத்தில் நான் இழிவானவள்.? இந்தச் சமூகத்தின் சொறி பிடித்த வக்கிரமான எண்ணங்களுக்கு நான் வடிகாலாக அமையக் கூடாது". இப்படியே எண்ணிக் கொண்டு படுத்திருந்ததில் அக்கினிப் பொறி சுடர்விட்டு மேலெழும்பியது. கொஞ்சம் கொஞ்சமாக அப்பொறி சுவாலை விட்டு எரியத் தொடங்கியது.

சுகந்தா படுக்கையை விட்டு எழுந்தாள். முகம் கழுவி விட்டு, நல்லதொரு சேலையை அணிந்து கொண்டாள். கண்ணாடியருகில் சென்று லேசாக பவுடர் பூசிக் கொண்டு குங்குமச் சிமிழைக் கையிலெடுத்தாள். இலேசாகக் கை நடுங்கிற்று. நிதானமாகத் தொட்டு நெற்றியில் இட்டுக் கொண்டாள். அறைக் கதவைத்திறந்து கொண்டு வெளியே வந்தாள், "அம்மா நான் கோயிலுக்குப் போயிட்டு வாறேன்" என்று சமையலறையை நோக்கிக் கூறினாள். மரகதம்மாள் வெளியே வந்தவள் மகள் நின்ற கோலத்தைப் பார்த்ததும் வாயடைத்துப் போனாள். சுகந்தாவுக்குக் கடைவாயிலில் இலேசான புன்னகை அரும்பிற்று. வெளியே வந்தவள் ரோஜாச் செடியிலிருந்த ஒற்றை ரோஜாவைக் கிள்ளித் தலையில் வைத்துக் கொண்டாள். சுகந்தாவுக்கு "இப்போது நான் விதவையில்லை" என்று உரக்கக் கத்த வேண்டும் போல் இருந்தது. இனிச் சுகந்தா அழ மாட்டாள்.

*( யாவும் கற்பனை )* ●



நதியிளைப் பாற ஆழியுண்டு - கொடும்
நஞ்சிளைப் பாற மருந்துமுண்டு
கதிரிளைப் பாற இரவுமுண்டு - எங்கள்
கவலை இளைப்பாற உண்டோ இடம்?


- கவிஞர் கம்பதாசன் -

மழைகூட ஒருநாளில் தேனாகலாம்
மணல்கூட சிலநாளில் பொன்னாகலாம்
ஆனாலும் அவையாவும் நீ யாகுமா?
அம்மாவென் றழைக்கின்ற சேயாகுமா?

- கவிஞர் கண்ணதாசன் -

# மூன்றாம் பரிசு பெற்ற கார்ட்டூன்

— செல்வன் ச. கண்ணன் —
இரண்டாம் வருடம், (பொறியியற்பீடம்)



# கணனிகளே வாழ்க்கையாக

செல்வன் மு. தாரகன்
செல்வன் பே. இராஜகுலசிங்கம்
இரண்டாம் வருடம், கணனியற்றுறை
(விஞ்ஞான பீடம்)

'நாளை விடியும் போது இன்றைய சிறந்த கணனிகள் அரும்பொருட்காட்சிச் சாலையில்'

இதுவே இன்றைய கணனிகளின் வளர்ச்சியின் வேகம். இந்த 20ம் நூற்றாண்டில் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தோமானால், கணனிகளின் வளர்ச்சியும், செயற்பாடுகளுமே பாரிய பங்கை வகிக்கின்றன எனலாம். இன்று உலகில் முக்கியமாக, மேற்குலக நாடுகளில் சாதாரண மனித வாழ்வில் கூட கணனிகள் பின்னிப் பிணைந்துள்ளன. இன்று ஐக்கிய அமெரிக்காவே கணனிகள் தயாரிப்பிலும் பாவனையிலும் முன்னணி வகிக்கின்றது. அடுத்தபடியாக, கனடா, ஐரோப்பிய நாடுகள், ஜப்பான் என்பன இடம் பெறுகின்றன. எனினும், மூன்றாம் உலகநாடுகளில் இன்றும் கணனி பற்றிய அறிவு மிகக் குறைவாகவே இருக்கின்றது.

பெரிய, தொடர்ச்சியான எண்களை கையாளுவதில் ஏற்பட்ட சலிப்பும், நேரவிரயமுமே கணனியின் கண்டுபிடிப்பிற்கு உந்துகோலாகவும், எண்கணித வளர்ச்சியே அடிப்படையாகவும் காணப்பட்டது. ஆரம்பகாலத்தில் மக்கள் தமது மந்தைகளின் எண்ணிக்கை, வேட்டையாடப்பட்ட மிருகங்கள், தமது கைவசமுள்ள ஆயுதங்கள் என்பவற்றை கற்கள், தடிகள் என்பன கொண்டும், கயிறுகளில் முடிச்சுகளையிட்டும், மணலில் குறிகளை இட்டும் கணித்துக் கொண்டனர். அதன்பின்னர், கைவிரல்களைப் பயன்படுத்திக் கொண்டனர். எனினும், மனித சமுதாயத்தின் முன்னேற்றமும் சிக்கலான சமுதாய உருவாக்கமும் எண்கணிதத்தில் வளர்ச்சியை வேண்டி நின்றது. எண்கணிதத்தின் ஆரோக்கியமான ஆரம்பம் எனக் கருதப்படுவது "Abacus' எனும் எண்கணித முறையாகும். தொடர்ச்சியாக பலவளர்ச்சிகள் காணப்பட்டாலும் 17 ஆம் நூற்றாண்டளவில் 'John Napier' எனும் 'Scottish' கணித மேதையால் கண்டுபிடிக்கப்பட்ட "Logarithms' எனும் கணித முறை எண்கணித வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாயிற்று. இம் முறையினால் மிகப் பெரிய எண்களை பெருக்குதல், பிரித்தல் என்பன இலகுவாக இருந்தன. எனினும், முதல் கணிதப்பொறி 1642 இல் பத்தொன்பது வயதான பிரெஞ் கணிதமேதையான Blaise Pascal ஆல் உருவாக்கப்பட்டது. பெருக்கலும் பிரித்தலும் செய்யத்தகுந்த கணிதப் பொறி ஜெர்மன் கணிதமேதையான GOTTERIED WILHELM LEIBNITZ ஆல் 1671 இல் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாறான, கண்டுபிடிப்புக்களே கணனியின் கண்டுபிடிப்புக்கு அடிப்படையாக அமைந்தனவெனலாம்.

கணனியின் தந்தை எனக் கருதப்படுபவர் பிரிட்டிஷ் கணிதமேதையான CHARLES BABBAGE (1792 - 1871) ஆவார். இவரே 1833 ம் ஆண்டளவில் 'ANALYTICAL ENGINE' எனப்படும். முதல் கணனியை வடிவமைத்தார். இவரது வடிவமைப்பின் படி, MEMORY 50,000

எண்கள் சேகரித்து வைக்க கூடியதாகவும், கூட்ட, கழிப்பதற்கு 1 செக்கனும், இரண்டு 50 எண்வரிசையை கொண்ட எண்களை பெருக்க ஏறக்குறைய 1 நிமிடமும் எடுக்கும் என குறிப்பிடப்பட்டது. இவரது கருத்துக்களும் முயற்சிகளும் கணனிதுறையின் துரித உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் பெருந்துணை புரிந்தன. அடி 2 உடன் தொடர்புடைய Complex CALCULATOR எனப்படும் ஓரளவு வளர்ச்சி பெற்ற கணனி 1940 இல் உருவாக்கப்பட்டது 1942 இலிருந்து இன்றுவரை கணனியின் வளர்ச்சி ஐந்து தலைமுறைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. கணனியின் வளர்ச்சி பின்வருவனவற்றை அடிப்படையாக கொண்டிருக்கின்றன. அவையாவன: கணனியின் அளவு, வெளிவரும் வெப்பத்தின் அளவு, கணிப்பிற்கான வேகம், தகவல்களை சேகரிக்கும் ஆற்றல், பாவனைக்காலம் என்பனவாகும். ஆரம்ப காலத்தில் வால்வுகளினால் உருவாக்கப்பட்ட கணனிகள் இன்று Silican CHIP எனும் சிறிய பொருளினால் உருவாக்கப்படுகின்றன. அத்துடன், இன்று இவற்றின் செயற்பாட்டு வேகம் 'Nano' செக்கன்களிலும் குறைவாகும்.

இன்று கணனிகள் பல்வேறு துறைகளில் எமக்கு உதவி புரிகின்றன. விஞ்ஞானம், மருத்துவம், வியாபாரம், போக்குவரத்து, குற்றவியற் தடுப்பு பிரிவு என்பன அவற்றில் சிலவாகும். விஞ்ஞானத்துறை எடுத்துக் கொண்டால், NASA போன்ற விண்வெளி ஆய்வு கூடங்கள், ஆராய்ச்சி நிலையங்கள் போன்றவற்றில் CRAY I எனப்படும் Super Computer பயன்படுகிறது. கணனிகள் மூலம் ஆய்வுகளை வேகமாகவும், சரியாகவும் செய்யக்கூடியதாக உள்ளது. அத்துடன், இவற்றுடன் தொடர்புடைய பல்வேறு தகவல்களை சேகரிக்கவும் ஆராய்ச்சிகளின் முடிவுகளை எதிர்வு கூறவும், நிர்வாகத்தை கொண்டு நடத்தவும் பயன்படுகிறது.

வியாபாரத்தை எடுத்துக் கொண்டால், வங்கிகளின் செயற்பாடுகளிலும், பெரிய விற்பனை நிலையங்களிலும் (Super Market) முக்கிய பங்கை வகிக்கின்றன. வங்கிகளில் வாடிக்கையாளரின் கணக்குகளை நாளுக்கு நாள் Update செய்வதன் மூலம் அவர்களின் தேவைகளை வேகமாக நிறைவேற்றவும், சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கவும் உதவுகின்றன. Electronic Teller Machine, Credit Card என்பன கணனிகளின் வரப்பிரசாதமே. வங்கிகள், விற்பனைநிலையங்களின் கடந்த கால நடவடிக்கைகளை கொண்டு கணனிகள் எதிர்காலத்தை சிறப்பாக திட்டமிடுகின்றன. மருத்துவ துறையை பொறுத்தவரையில், மேற்கத்திய நாடுகளே கணனிகளை அதிகளவில் பயன்படுத்துகின்றன. உதாரணமாக, கணனிகள் மூளையின் அலைவடிவங்களை கிரகித்து ஆராய்ந்து தரும் தகவல்கள் மூலம் நோயாளியின் மனோநிலை, மூளை சம்பந்தமான நோய்கள் அறியப்படுகின்றன. மேலும் ECG XRAY உபகரணங்கள் கணனிகளின் உதவியுடன் செயற்படுவதால், தெளிவான, திட்டமான அறிக்கைகள் பெறப்படுகின்றன. அத்துடன், இதயம், மூளை போன்ற உடற்கூறுகளின் முற்பரிமாண வடிவங்கள் கணனிகள் மூலம் திரையில் பெறப்பட்டு, இவை சம்பந்தமான அறிவு கற்பிக்கப்படுகிறது. இன்று சில மேலைத்தேய வைத்தியசாலைகளில் நோய்களின் அறிகுறிகள் கணனிக்கு அனுப்பப்பட கணனியானது அதோடு தொடர்பான நோய்களையும் ஒவ்வொரு நோயும் தெரிவு செய்யப்பட்டதற்கான காரணங்களையும் தெரிவிக்கின்றது. இன்னும் சில இடங்களில், வைத்தியரை சந்திக்கும் முன் நோயாளிகளுடன் கணனிகள் ஆரம்ப நேர்முகத்தேர்வை நடாத்துவதன் மூலம் அவர்கள் தொடர்பான தகவல்களை சேகரித்துகொள்கின்றது. இம்முறைகளினால் வைத்தியர்களின் நேரமானது மிச்சப்படுத்தப் படுகிறன. மேலும், மருத்துவ ஆராய்ச்சிகளிலும், வைத்தியசா

லைகளின் நிர்வாகத்துறையிலும் கணனிகள் கணிசமான பங்கை வகிக்கின்றன.

அடுத்ததாக, போக்குவரத்து துறையை எடுத்துக் கொண்டால், இன்று ஆகாயமார்க்கமே முக்கிய இடத்தை வகிக்கின்றது. விமானப் பயணங்களிற்கான ஆசனங்களை பதிவு செய்வது முதல் சகல முக்கிய செயற்பாடுகளும் கணனியின் துணையுடனே செய்யப்படுகிறது. பறக்கும் விமானங்களின் உயரங்களை கட்டுப்படுத்தல் திசையை தீர்மானித்தல் போன்றவை கணனிகளினாலேயே செயற்படுத்தப்படுகிறது. இன்று வடிவமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும், BOIENG 777 முழுவதும் கணனியின் துணை கொண்டே இயங்கவிருக்கிறது அதாவது, அமுக்கம், வெப்பநிலை போன்றவற்றை கட்டுப்படுத்தல் அடுத்ததாக, குற்றவியற் தடுப்புப் பிரிவில் குற்றவாளிகளின் தகவல்கள், கையடையாளங்கள் கணனிகள் மூலம் பதிவுசெய்யப்பட்டு, பின்னர் கொலை, கொள்ளை சம்பவங்கள் இடம் பெற்றால் அங்கு பெறப்படும் கைரேகைகளை ஒப்பிடுவதன் மூலம், குற்றவாளிகளை இனம் காணக்கூடியதாக உள்ளது. சில இடங்கலில் ROBOT எனும் இயந்திர மனிதனை குற்றத்தடுப்பிற்கு பயன்படுத்துகிறார்கள்.

எதிர்காலத்தில் இன்னும் கூடுதலாக மக்கள் கணனியின் துணையை நாடுவார்கள். அதற்கேற்றவாறு, கணனியின் உற்பத்தியும், வளர்ச்சியும் அதிகரிக்கும். எதிர் காலத்தில் கணனிகள் கையடக்கமானவையாகவும், குறைந்த விலையில் பெறத்தக்கவையாகவும் இருக்கும். அதன் வகையில் Palmtop எனும் கைப்பெட்டி அளவிலான கணனி வெளிவந்துள்ளது. எதிர் காலத்தில் கணனிகள் மனிதனுடைய குரல் அடையாளங் கண்டு அவரவர், விரும்பிய மொழிகளில் உரையாடக்கூடிய சக்தி வாய்ந்தவையாக இருக்கும். அம் முயற்சியில் விஞ்ஞானிகள் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளனர். அத்துடன் பெரிய தொழிற்சாலைகளிலும், விற்பனை நிலையங்களிலும் Robot எனும் இயந்திரமனிதனின் பாவனையும், அதிகரிக்கும். விரும்பிய நேரத்தில் குறைந்த வாடகையில் பெறத்தக்கதாகவும் இருக்கும். மேலும் எதிர் கால கணனிகள் தாமே சிந்தித்து செயலாற்றும் ஆற்றல் கொண்டவையாகவும் இருக்கும்.

ஆகவே, கணனிகள் வீடுகளில் வானொலி, தொலைக்காட்சி பெட்டி போன்று வீட்டுபாவனைப் பொருளாகும் காலம் வெகு தொலைவில் இல்லை. அந்த நாளிற்காக இன்றே நாம் எமது கணனி சம்பந்தமான அறிவை விருத்தி செய்வதன் மூலம், அந்த பிரமாண்டமான கணனி உலகினை நம்பிக்கையுடன் சந்திப்போம். கணனியின் பலன்களையும் அனுபவிப்போம்.



# வழி பிறக்காதா......?

— செல்வன் இ. ஸ்ரீதர் —
இரண்டாம் வருடம், (பொறியியற்பீடம்)

பாசத்தில் கட்டுண்டு
சாதத்தில் பங்கிட்டு - பின்
கல்விக்காய் வெட்டுண்டு
கடலிவன் கடந்தான்!

சொந்த மண்ணில் - இவன்
சொந்தங்கள் தொலைவில்!
வெந்த நெஞ்சில் - இவன்
பந்தங்கள் கனவில்!

பார்க்க இவன் துடித்தான்
வேர்க்க நட்ட மல்லிகையை!
யார்க்கு இவன் படித்தான் - வெறும்
சர்க்காரின் சல்லிக்கா!

கடல் கடவாதே - உனை
மடலில் காண்கிறோம்!
பணயம் வைக்காதே - உயிர்
பயணம் படு பயங்கரம்!

தடம் பதிக்க மண்ணில்
தடை போடும் தங்கை!
தரை மிதிக்காமல் - கண்ணில்
கரை புரண்டோடும் கங்கை

பொறிக்குள் தினம் கரணம்!
வெறியால் சனம் மரணம்!
சடங்கிற்கே சடலமின்றி
சங்கடப் படும் படலம்!

கற்றதனால் பெற்ற தென்ன?
சற்றேனும் பெற்றவளை
பற்றை மேட்டை கலட்டி வீட்டை
இற்றைக்கு காண வழி பிறக்காதா?

# இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறை தீர்வாகுமா?

செல்வன் எம். அப்துல் நாஹிப்
அரசறிவியற்றுறை,
விடுகை வருடம்,
(கலைப்பீடம்.)

**அறிமுகம்:-**

பல இன மக்கள் வாழுகின்ற ஒரு நாட்டில் இன முரண்பாடுகள் அல்லது இனப் பூசல்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். இன்று உலகில் உள்ள பெரும் பாலான நாடுகளில் இனப்பிரச்சினை முக்கிய பிரச்சினையாக உருவெடுத்து இருப்பதை காணக் கூடியதாக இருக்கின்றது.

இத்தகைய இனப் பிரச்சினைகள் நாடுகளின் அரசியலில் பாரிய தாக்கத்தை ஏற் படுத்துவதை அண்மைக் காலங்களில் பொதுவாக சர்வதேச மட்டத்தில் அவதானிக்க கூடிய ஒன்றாகும்.

ஒரு நாட்டில் வாழ வருகின்ற மக்களானவர்கள் தங்களது கலாசாரம், மொழி, மதம், பிரதேசம் போன்றவற்றில் தனித்துவமாகவே வாழ விரும்புகின்றனர். ஏனெனில், ஏற்கனவே வளர்ச்சியுற்ற பெரும் பாண்மை இனங்கள் ஏனைய சிறுபாண்மை இனங் களை ஆதிக்கம் செலுத்தும் இனமாகவே இருக்கின்றது. இந்த வேளையில், நசுக்கப்படு கின்ற இனங்கள் தனித்துவமாக வாழ வேண்டும் என்று நினைக்கின்றார்கள்.

இவ்வாறாக, ஏற்படுகின்ற இப்பிரச்சினைக்கு உலகில் உள்ள சோஷலிச நாடுகளும், முதலாளித்துவ நாடுகளும் தன்னாதிக்கம் கொண்ட நாடுகளாக வாழ்வதற்குரிய முறை யினையும் மற்றும் சமஷ்டி முறைகளை அடிப்படையாகக் கொண்டு பிரச்சினைகளை தீர்க்க முயன்றுள்ளதை காண முடிகின்றது.

ஆனால், இலங்கையானது அந்நியர் ஆதிக்கத்துக்கு உட்படாத கால கட்டத்தில் ரஜரட்டை, மாயரட்டை. ருகுனுரட்டை எனவும், கண்டி ராச்சியம், கோட்டை ராச்சியம், யாழ்ப்பாண ராச்சியம் எனவுமாக காணப்பட்டது.

ஆனால், பிரித்தானியர் இந்த நாட்டை 1815 ல் கண்டியை கைப்பற்றியதன் பின்னரே ஒற்றையாட்சி முறையின் கீழ் கொண்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

எனவே, இந்த வகையில் இலங்கையில் பல இன மக்கள் வாழுகின்றார்கள். இத னால் இனப் பிரச்சினை, இன முரண்பாடுகள் ஏற்படுவதென்பது மிக இலகுவாக இருக் கின்றது. இன்று இலங்கையில் இம்முரண்பாடு கூர்மையடைந்து சுய நிர்ணய உரிமையை பெற்றுக் கொள்வதற்காக போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இலங்கையின் இனப் பிரச்சினைக்கான போராட்டத்தில் படிப்படியாக சமஷ்டி முறை தீர்வாக முன் வைக்கப்பட்டு வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. இன்று இலங்கையில் தீவிரமடைந்திருக்கும் இனப்பிரச்சினைக்கு சகல மக்களாலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றினை முன் வைப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

இவ்வாறான நிலையில் இலங்கையின் இனப் பிரச்சினை என்றால் என்ன? அதற்கான காரணங்கள் யாவை? தீர்வுக்கான அவசியம் அதற்கு எந்தளவு சமஷ்டி முறை ஒரு தீர்வாக அமையப் போகின்றது என்பதை ஆராய்வது இங்கு மிக முக்கியமானதாகும்.

இதனை அடிப்படையாகக் கொண்டே சமஷ்டி முறை எந்தளவு தீர்வாக அமையும் என்பதை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்காகும்.

### இனப் பிரச்சினைக்கான காரணங்கள்

இப்பிரச்சினை எவ்வாறு உருவாகியது என்பதை ஆராய வருகின்றபோது அது ஆட்சியாளரின் அடக்குமுறையால் உருவாகியது என்பதை விளங்கிக் கொள்ளலாம். காலத்துக்கு காலம் மாறி மாறி பதவிக்கு வந்த அரசாங்கங்கள் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றிக் கொள்வதற்காகவும் தொடர்ந்தேர்ச்சியாக வைத்துக் கொள்வதற்காகவும் இப்பிரச்சினையை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி வந்துள்ளனர்.

இத்தகைய இனப்பிரச்சினையானது அரசியல் ரீதியில் அந்நியர் இலங்கையை ஆட்சி செய்த கால கட்டத்திலேயே உருப்பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவர்களது பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் இது வளரக் காரணமாயிருந்தது.

இவ் இனப்பிரச்சினையின் வளர்ச்சிக்கு பல்வேறு வகையான காரணிகள் தாக்கத்தை செலுத்திய போதிலும் அரசியல் பொருளாதார ரீதியான காரணங்களே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

இந்த வகையில், குறிப்பாக 1915ம் ஆண்டு சிங்கள முஸ்லிம் இனக்கலவரம் நடைபெற்றது. இது ஏற்பட்டதற்கு பிரதான காரணம் வர்த்தகத்தை முஸ்லிம்கள் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தமையே ஆகும். இம் முஸ்லிம் மக்கள் சிங்கள மக்களுடைய செல்வங்களை சுரண்டுகின்றார்கள் என்றும் பௌத்த மதத்துக்கு எதிரானவர்கள் எனவும் கருத்துப் பரப்பப்பட்டது.

இந்தப் பிரச்சினையானது இலங்கை அரசியலில் கூடியளவு தாக்கத்தை ஏற்படுத்தியது. பின்னர், இப்பிரச்சினையானது வேறோர் வடிவத்தை பெற்றது. அதாவது, இலங்கை தேசிய காங்கிரஸில் இருந்த சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான இனப்பிரச்சினையாக மாறியது. இதனால் 1919ல் தேசிய காங்கிரஸில் இருந்து தமிழர்கள் பிரிந்து சென்றனர். இப்பிரிவானது மேலும் இப்பிரச்சினையின் வளர்ச்சிக்கு வித்திட்டது.

மேலும், 1936ம் ஆண்டு அரசாங்க சபையில் அமைக்கப்பட்ட தனிச் சிங்களமந்திரி சபை இனப் பிரச்சினையின் வளர்ச்சியில் முக்கிய அடிப்படையாக இருந்தது. ஒரு நாட்டின் பிரதி நிதித்துவம் என்பது அந்த நாட்டில் வாழும் பல இன மக்களையும் பிரதிநிதித்துவப் படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். மாறாக, இம் மந்திரி சபையில்

பெரும்பான்மை இன மக்கள் மட்டும் பிரதி நிதித்துவப்படுத்தப்பட்டு சிறுபான்மை இன மக்கள் புறக்கணிக்கப்பட்டனர். இதனாலேயே ஐம்பதுக்கு ஐம்பது (50:50) என்ற கோரிக்கை உருப் பெற்றது. இதுவும் அப்போது வெற்றிபெறவில்லை, இதனால் மேலும் இன முரண்பாடு அதிகரித்த போக்கு காணப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பின்பு 1948, 1949ம் ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட இந்திய பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டத்தினால் பல ஆயிரக்கணக்கான இந்திய வம்சா வழி மக்கள் நாடற்றவர்களாக்கப்பட்டனர். இதனால் பாதிக்கப்பட்ட இந்திய வம்சா வழி மக்களில் பலர் இன்றும் நாடற்றவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

இதைத் தொடர்ந்து 1956ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தனிச்சிங்கள மசோதா இலங்கையின் இனப் பிரச்சினை வரலாற்றில் முக்கியமான இடத்தை வகித்தது. இதனால் தமிழ் பேசும் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப்பட்டனர்.

பேராசிரியர் ரொபர்ட் கேர்ணி இது பற்றிக் கூறும்போது, 1956ம் ஆண்டு தனிச் சிங்கள மசோதா நிறைவேற்றப்பட்டதன் மூலம் உருவாகிய முக்கியமான விளைவு யாதெனில், இனங்களுக்கிடையிலான (சிங்கள - தமிழ்) முரண்பாடே ஆகும். அன்றைய நிலை இன்றும் தொடர்ந்துள்ளதை நாம் நடை முறையில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதற்கு சிறந்த உதாரணம் இன்றைய அரசின் பெரும்பாலான நிர்வாக விடயங்கள் சிங்கள மொழியில் அமைந்துள்ளமை ஆகும்.

மேலும், 1972ம் ஆண்டு உருவாக்கப்பட்ட புதிய அரசியல் அமைப்பில் சிறு பான்மை இனத்தின் உரிமைக்கும் பாதுகாப்பிற்குமாக இருந்த ஒரு சில அம்சங்களும் நீக்கப்பட்டமை ஆகும்.

பின்னர், இக்காலப் பகுதியில் கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் முக்கிய இடம் பெற்றது. இக்காலப் பகுதியில் கூடியளவு உயர் கல்வியில் நாட்ட முடையோராக வட பகுதி தமிழ் மக்களே இருந்தனர். ஏனெனில், மிஷனறி கல்வி முறை இவர்களுக்கு ஆங்கில கல்வியை பெறுவதற்கு உரிய வாய்ப்பை அளித்திருந்தது.

விக்டர் ஐவன் என்பவர் பின்வருமாறு கூறுகின்றார். ''இப்பிரதேச மக்கள் புவியியல் ரீதியாக (நில வளப்பற்றாக்குறை) மோசமான நிலையில் இருந்தமையால் அவர்கள் முன்னேறுவதற்கு இருந்த ஒரே மார்க்கம் உயர் கல்வியே ஆகும்.''

இதனால் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திய தமிழ் மக்கள் ஆங்கில அறிவுடையவர்களாகவும் உயர்கல்வியைப் பெற்றவர்களாகவும் திகழ்ந்தார்கள். இதனால் இவர்களை பிரித்தானியர் தங்களது அரச நிறுவாக இயந்திரத்தை இயக்குவதற்கு சேர்த்துக் கொண்டனர்.

பேராசிரியர் கே. எம். டி. சில்வா இது பற்றிக் கூறுகையில், ''கல்வி என்பது தென் ஆசியாவைப் பொறுத்தவரையில் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. இதனை போட்டியிட்டே பெற வேண்டியுள்ளது.'' எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பேராசிரியர் அ. ஜெ. வில்சன் தனது நூல் ஒன்றில் பின்வருமாறு கூறுகின்றார். ''ஒரே பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு வெவ்வேறு புள்ளிகள் அடிப் படையில் பல்கலைக்கழக அனுமதி என்பது கிடைத்தது. மருத்துவபீடத்துக்கு சிங்கள

மாணவர்கள் 225 புள்ளிகளைப் பெற்று பல்கலைக் கழக அனுமதி பெற வந்த வேளையில், தமிழ் மாணவர்கள் 250 புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதி பெற வேண்டிய நிலையை தரப்படுத்தல் உருவாக்கியது" என்றார்.

1978ம் ஆண்டு அரசியலமைப்பில் எந்த அம்சங்கள் நீக்கப்பட்டு இருக்க வேண்டும் என சிறுபான்மையினர் எதிர்பார்த்தனரோ, அந்த அம்சம் உள்ளடக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும், 1983ம் ஆண்டு நடைபெற்ற ஜூலை கலவரத்தினால் பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் இறந்ததோடு மட்டுமன்றி, அவர்களது சொத்துக்கள் சூறையிடப்பட்டும் எரிக்கப்பட்ட சம்பவங்களும் இவ் இனப்பிரச்சினையின் வளர்ச்சிக்கும் உக்கிரப்பாட்டிற்கும் வழி வகுத்த காரணிகளாக அமைகின்றன.

காணிக்குடியேற்றத்திட்டம், சிறுபான்மையினரின் கல்விநிலை, வேலைவாய்ப்பு என்பன போன்றனவற்றில் நடத்தப்பட்ட அரசின் பாரபட்சமான நடவடிக்கையினாலும் இவ்வாறான பிரச்சினைகள் மட்டுமன்றி, இது போன்ற பல பிரச்சினைகளும் இனப்பிரச்சினையை தீவிரமடையச் செய்த காரணிகளாக காணப்படுகிறன.

## தீர்வுக்கான அவசியம்

இலங்கையின் இனப்பிரச்சினை என்பது இன்று நேற்று தோற்றம் பெற்றதல்ல. மாறாக, ஏற்கனவே தோற்றம் பெற்ற ஒன்றாகும். இன்று உக்கிரமடைந்துள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டியநிலை பல சக்திகளுக்கு பாரிய கடமையாக இருந்தாலும் குறிப்பாக அரசாங்கத்தைப் பொறுத்தவரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது.

இத்தகைய பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் இன்று மட்டுமன்றி, ஏற்கனவேயும் எடுக்கப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த வகையில், 1957ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம், 1965ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட டட்லி - செல்வா ஒப்பந்தம், 1981 களில் கொண்டுவரப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபைகள், 1983ல் பார்த்த சாரதியால் வரையப்பட்ட இணைப்பு சீ, 1984 களில் நடைபெற்ற திம்பு பேச்சுவார்த்தை, பின்னர் நடைபெற்ற சர்வகட்சி மாநாடுகள் 1987 ளில் மேற்கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்குட்பட்ட மாகாணசபை, பாராளுமன்றத் தெரிவுக் குழு போன்ற முயற்சிகள் குறிப்பிடத்தக்கனவாகும்.

இதில் இறுதியாக மேற் கொள்ளப்பட்ட மாகாண சபை முறையானது தற்போது வடக்கு கிழக்கில் செயல் இழந்துள்ளதோடு, இம்முறையினால் இலங்கை வாழ் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டு உள்ளனர் என்ற கருத்து தற்போது வலுவடைந்து இருப்பதன் காரணமாக, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக எவ்வாறான தீர்வை முன்வைக்கலாம் என்பதை பரீசிலிக்க வேண்டி உள்ளது.

அதாவது, இவ்வாறு ஏற்கனவே பல தீர்வு முயற்சிகள் ஏற்பட்ட போதிலும், அந்த முயற்சிகள் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காணமுடியவில்லை. இதனால் பல்வேறு வடிவிலான பரிகாரங்களை காண வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் தமிழ் மக்களை மாத்திரமே மையமாக வைத்து தீர்வு முயற்சிகள் எடுக்கப்பட்டு இருந்தன. ஆனால், இன்று முஸ்லிம்களும் இலங்கையின் இனப்பிரச்சினையின் ஒரு அங்கமாக மாறி விட்டதன் காரணமாக, அவர்களும் கருத்திற் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

இன்று இலங்கையின் இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வாக சமஷ்டி ஆட்சிமுறை பல்வேறு கோணங்களில் இருந்து எழுவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக, தமிழ் தீவிரவாதக் குழுக்கள் சமஷ்டி ஆட்சி முறைக்கு ஆதரவாக தங்களது கருத்தை அண்மையில் தெரிவித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாக இருந்துகொண்டு இருக்கின்றது.

சமஷ்டி ஆட்சிமுறை என்று கூறும்போது, அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்பட்ட ஒரு அரசாங்க முறை ஆகும். மத்திய அரசு ஒன்றின் தலைமையின் கீழ் அதன் அரசியலமைப்புக்கு உட்பட்ட வகையில் பல சிறிய மாநிலங்களோ அல்லது அரசுகளோ தமது சுதந்திரத்தையும் தனித்துவத்தையும் இழந்து விடாத வகையில், சில பொது நன்மைகளை நோக்காகக் கொண்டு இயங்கும் ஒருவகை ஆட்சி முறையாகும்.

அரசியலமைப்புச் சட்டம், இரண்டு அரசுகள் (மத்திய அரசு, மானில அரசுகள்) அதிகாரப் பங்கீடு, சுதந்திரமான நீதிமன்றம்போன்ற அடிப்படைப் பண்புகளை ஒரு சமஷ்டி முறையில் காணக்கூடியதாக இருக்கும். மிகப் பெரிய நிலப்பரப்பு கொண்ட நாடுகளுக்கும் இன, மத, கலாசார, பொருளாதார வேறுபாடுகளை பிரதி பலிக்கும் மக்கள் தொகையை கொண்ட நாடுகளுக்கும் பொருத்தமான ஆட்சி முறையாக சமஷ்டிமுறை கருதப்படுகின்றது.

இன்று சமஷ்டி நிலவும் நாடுகளான இந்தியா, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் காணப்படுகின்ற சமஷ்டி முறை நாட்டுக்கு நாடு வித்தியாசமானதாக இருக்கின்றது.

இந்தியாவை எடுத்துக்கொண்டால், அதனை பாதிச் சமஷ்டி முறை என்று தான் கொள்ளவேண்டும். இந்தியாவில் உள்ள மாநிலங்கள் தனித்துவமான சுயாட்சி முறையை கொண்டிருந்த போதிலும், அவ்வாட்சியினை மத்திய அரசு முழு நாட்டினதும் அல்லது, குறிப்பிட்ட மாநிலத்தின் அமைதிக்கு பங்கமாக காணப்படுகின்ற நேரத்தில் கலைக்கக்கூடிய அதிகாரம் பெற்றுள்ளது.

இச்சமஷ்டி முறையின் கீழ் மாநில அரசுகள் நிலம், சட்டம் மற்றும் ஏனைய அபிவிருத்தி துறைகளில் சுயாதீனமாக தீர்வினை அல்லது தீர்மானங்களை எடுக்கக்கூடிய அந்தஸ்த்தை கொண்டிருந்தபோதும் அவ்வரசுகளை கலைக்கக்கூடிய உரிமையை மத்திய அரசு கொண்டுள்ளமையினால், இதனை தன்னாதிக்கமும் இறைமையும் கொண்ட ஓர் சுயாட்சியாக கருத முடியாது.

இதற்கு மாற்றமாக அமெரிக்க சமஷ்டியில் மாநில அரசுகள் தனித்துவமுடையதாக செயற்படுகின்றது.

இத்தகைய சமஷ்டி ஆட்சி பற்றி இன்று மட்டு மன்றி, இலங்கையின் அரசியல் வரலாற்றை சற்று பின்னோக்கி பார்க்கின்ற வேளையில் சிங்களத் தலைவர்களாலும் சிங்கள அமைப்புக்களாலும் தமிழ் தலைவர்களாலும் கூறப்பட்ட கருத்தே இத்தகைய ஒன்றாகும்.

இந்த வகையில், வெளிநாட்டில் கல்வி பயின்ற எஸ். டப்ளியூ, ஆர். டி. பண்டார நாயக்கா இலங்கைக்கு திரும்பிய வேளையில், சமஷ்டி ஆட்சி பற்றி சிந்திக்கத் தொடங்கினார். இவர் 1927ம் ஆண்டு இலங்கையில் சமஷ்டி ஆட்சியானது மாகாண அடிப்படையாகக் கொண்டு அமைய வேண்டும் என்று கூறினார்.

அதற்கு மாறாக, கண்டி தேசிய அசெம்பிளி என்ற அமைப்பும் சமஷ்டி ஆட்சி பற்றி எடுத்துக்கூறி இருக்கிறது. இது இலங்கை தேசிய காங்கிரஸில் இருந்து பிரிந்த கண்டியச் சிங்களத் தலைவர்களால் உருவாக்கப்பட்ட அமைப்பாகும்.

ஒவ்வொரு இனத்தின் நலன்களும் பேணப்பட வேண்டுமானால், இலங்கை சமஷ்டி ஆட்சி முறையாக அமைய வேண்டும் என்று இவ்வமைப்பு கூறியது. இத்தகைய சமஷ்டி அமைப்பானது மூன்று பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்து இருந்தது.

1) கண்டிச் சிங்களவர்கள் என்றும்

2) கரையோரச் சிங்களவர்கள் என்றும்

3) வடக்கு கிழக்கு வாழ்பவர்கள் என்றும் ஆக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் தன்னாதிக்கம் உடையதாக விளங்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. ஆகவே, ஒரு புறம் பண்டாரநாயக்காவும் மறுபுறம் கண்டி தேசிய அசெம்பிளியும் இலங்கையின் இனத் தனித்துவத்தைப் பேண வேண்டுமாயின், இலங்கையின் ஆட்சிமுறையை சமஷ்டி ஆட்சியாக மாற்ற வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தனர். இக் கோரிக்கைக்கு அப்போது தமிழர்களில் எந்த ஒரு பகுதியினரும் ஆதரவாக இருக்க வில்லை.

இவ்வாறாக, சமஷ்டி ஆட்சிபற்றிய சிந்தனை வளர்ச்சி அடைந்து வருகின்ற வேளையில், தமிழர் பக்கத்தில் இருந்தும் சமஷ்டி ஆட்சி பற்றிய சிந்தனை ஊற்றெடுத்தது. அதாவது, எஸ். ஜெ. வி. செல்வநாயகம் தலைமையிலான குழு 1949ம் ஆண்டு தமிழரசுக் கட்சியை உருவாக்கியது. இக்கட்சியினுடைய கொள்கையில் முக்கியமான ஒன்றாக அமைந்தது சமஷ்டி ஆட்சியாகும். அதாவது, ஒவ்வொரு இனத்தின் நலன்களும் பேணப்பட வேண்டுமாயின், இலங்கையில் இதுவரையில் இருந்துவந்த ஒற்றையாட்சி முறை மாற்றப்பட்டு சமஷ்டி ஆட்சிமுறை கொண்டுவரப்பட வேண்டும் என்ற கருத்தை இக்கட்சி முன் வைத்தது. இக் கட்சியானது சர்வதேச அரசியலை அவதானித்து இக் கருத்தை அப்போது முன்வைத்தது. குறிப்பாக, பல இன மக்கள் வாழ்கின்ற நாடுகளில் எவ்வாறு இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டது என்ற வரலாற்று உண்மையை அடிப்படையாகக் கொண்டு அந்நாடுகளின் அனுபவங்களை அடிப்படையாகக்கொண்டு சிந்திக்கத் தொடங்கியது.

அந்நாடுகளில் (கனடா, சுவிஸ்) ஒவ்வொரு இனமும் சுதந்திரம், சமத்துவம் உடையதாக இருந்து வருகின்றது. அதேபோன்று இலங்கையில் வாழ்கின்ற ஒவ்வொரு இனமும் சமத்துவமுடையதாக இருக்க வேண்டுமாயின், சமஷ்டி ஆட்சிமுறை கொண்டு வரப்பட வேண்டும் என்று மிக ஆணித்தரமாக எடுத்துக் கூறியது.

ஆனால், ஒற்றையாட்சியை ஆதரிக்கும் சிங்கள தலைவர்களும் தமிழ் தலைவர்களும் சமஷ்டி முறைக்கு ஆதரவு கொடுக்க முன் வரவில்லை. ஒருபுறம் டி. எஸ். சேனநாயக்கா போன்றவர்கள் இத்தகைய ஆட்சிமுறை தனிப்பிரிவினைக்கு இடமளிக்கும் என்றும் மறுபுறம் ஜீ. ஜீ. பொன்னம்பலம் போன்றோர் சமஷ்டி ஆட்சி என்பது சிறு

பான்மை இனங்களுக்கு குறிப்பாக, தமிழருக்கு பாதகமாக அமையும் என்று கூறி அதற்கு எதிராக பிரசாரம் செய்தனர்,

இவ்வாறான சமஷ்டி ஆட்சிமுறை தீர்வினைக் காணாத காலகட்டங்களில் பிரி வினைமூலம் தீர்வு காணலாம் என்ற சிந்தனை தமிழர்களுக்கு ஏற்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும்.

அண்மையில் பேராசிரியர் அ. ஜெயரத்தினம் வில்சன் கூட இலங்கையின் இனப் பிரச்சினைக்கு தீர்வாக சமஷ்டி ஆட்சியை அடிப்படையாகக் கொண்டே அமையவேண் டும் என்று கூறி இருப்பதும் இங்கு கவனிக்கத்தக்க அம்சமாகும்.

மற்றும், பாராளுமன்ற உறுப்பினரான சிறினிவாசன் அவர்களும் ஒரு சமஷ்டி முறை யோசனையை பாராளுமன்றத் தெரிவுக் குழுமுன் சமர்ப்பித்திருந்தார். ஆனால் வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட வேண்டும் என்பதாக இவரது யோசனை இருந்ததால் ஏனைய தமிழ் குழுக்களால் இது நிராகரிக்கப்பட்டது.

எனவே, இவ் இனப் பிரச்சினைக்கு சமஷ்டி முறைமூலம் தீர்வு காணுகின்ற பட் சத்திலோ அல்லது வேறு எத்தீர் வினையும் எடுக்கின்ற போதும் இந் நாட்டில் வாழும் முஸ்லிம் மக்களையும் கருத்தில் கொண்டு இத் தீர்வு எடுக்கப்பட வேண்டியது இக் கால கட்டத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகும்.

எனவே, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக சமஷ்டி முறை முன்வைக் கப்படும் அதேவேளை உண்மையில் இச் சமஷ்டி ஆட்சிமுறை இலங்கைக்கு பொருந் துமா எனப்பார்க்க வருகின்ற போது இலங்கையை பொறுத்தவரையில், பொதுவாக இங்கு வளங்கள் குறைவாக இருப்பதனால் ஒவ்வொரு சமஷ்டியும் தன்னிச்சையாக செயற்பட வாய்ப்பு இல்லை. அத்துடன், ஒவ்வொரு இனமும் குறிப்பிட்ட பிராந்தி யத்தை கொண்டு சமஷ்டியை உருவாக்க முடியாது ஏனெனில், குறிப்பிட்ட சிறு பாண்மை மக்கள் தங்களது எல்லையை விட்டும் ஏனைய பிரதேசங்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.

மேலும், இச்சமஷ்டி ஆட்சிமுறையானது காலப்போக்கில் பிரிவினைக்கான அடிப் படையக அமையலாம். அதாவது, சமஷ்டியை அடிப்படையாகக் கொண்ட வட கிழக்கில் இருக்கின்ற இனக் குழுக்கள் பிரிவினைக்கான ஆயத்தக்களை செய்கின்ற ஒரு நிலைக்கு வித்திடலாம். இதே சந்தேகம் சிங்கள மக்கள் பால் வளர்ந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதற்கொரு எடுத்துக்காட்டாக அமைச்சர் எஸ். தொண்ட மான் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் வைத்த தீர்மானங்களுக்கு அப்போது தென் இலங்கையில் பலத்த கண்டனங்கள் எழுந்ததை காணக்கூடியதாக இருந்தது.

இத்தகைய அமைப்புக்கு பாரிய எதிர்ப்பு ஏற்பட்டதையும் ஏற்பட்டுக் கொண்டி ருப்பதையும் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது,

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக சமஷ்டி ஆட்சிமுறை பொருந்துமா பொருந்தாதா என்று சிந்திக்கின்ற இவ்வேளையில், சமஷ்டி ஆட்சி முறையினை பின் பற்றுகின்ற நாடுகளை எடுத்து நோக்குகின்றபோது, அவ் ஆட்சிமுறை செயலிழந்து செல்வதையும் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக,

தற்போது சோவியத் யூனியனில் சமஷ்டி ஆட்சியின் கீழ் இருந்த மாநிலங்கள் பிரிந்து சென்று சுயநிர்ணய பிரகடனம் செய்து தனித்துவமான நாடுகளாக ஆகி இருப்பதும் குறிப்பிடத்தக்கது மற்றும், இந்தியாவை எடுத்து நோக்கும்போது, இந்தியாவின் சமஷ்டி ஆட்சியில் இருந்து சில மாநிலங்கள் (பஞ்சாப், காஷ்மீர், நாகலாந்து) பிரிந்து செல்வதற்கு போராட்டங்கள் நடத்திக்கொண்டிருப்பதையும் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

ஆகவே, இத்தகைய நிலைமைகளை அவதானிக்கின்றபோது, சமஷ்டி ஆட்சிமுறை பொருந்தக் கூடிய ஒன்றாக அமைந்து விடவில்லை

எனவே, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி ஆட்சி முறை தீர்வாக அமைந்தாலும் ஓர் இடைக்காலத் தீர்வாக அமையுமே தவிர, நிரந்தரத் தீர்வாக அமையும் என்பது சந்தேகத்துக்குரியதே.

எவ்வாறாயினும், தற்போது நிலவும் காரணிகளை கருத்திற் கொண்டு ஒரு தீர்வினை காண்பதாயின், தற்போது நடைமுறையில் உள்ள மாகாணசபை முறையில் நிரந்தரமாக வடகிழக்கு இணைந்த மாகாணமாக ஏற்றுக்கொள்வதுடன், அவ்விணைந்த மாகாணத்தில் இன்னும் ஒரு மக்கள் பிரிவினரான முஸ்லிம் மக்களின் பாதுகாப்பையும் பிரதேசத்தையும் கலாசாரத்தையும் மற்றும் ஏனைய நல உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில், ஒரு தன்னாதிக்கமுள்ள ஒரு அரசியல் அலகு ஒன்றினை ஏற்படுத்துவதன் மூலமே இவ்விணைந்த மாகாணத்தை ஒரு தீர்வாகக் கணிக்க முடியும் என்று கூறின் மிகையாகாது.

எல்லாம் புதிதாக இருக்கிறது!
எந்த வெளிநாட்டில்
இருக்கிறேன்
நான்?
இந்த நொடிவரை
தாய்நாட்டை விட்டு
நான் எங்கும்
போகவில்லை.
இப்போது புரிகிறது......
தாய்நாடுதான்
என்னை விட்டுவிட்டு
எங்கேயோ போய்விட்டது
என்று!

சுதந்திரம் சுதந்திரம்
என்று
அடிக்கடி யாரும்
சொல்ல வேண்டாம்.
தேசத்தில்
சுதந்திரம் என்கிற
வார்த்தையாவது.
கொஞ்சம்
சுதந்திரமாய் இருக்கட்டும்!

- கவிஞர் மு. மேத்தா



# மஹாமேதை கலாயோகி
## ஆனந்தகுமாரசுவாமியின் கலை
### மெய்யியல் - பற்றிய ஓர் சிறு நோக்கு.

செல்வன் கே. கணேசராஜா மெய்யியற்றுறை, விடுகை வருடம்,
(கலைப்பீடம்)

ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஒவ்வொருசிந்தனையாளர்கள் தோன்றி தனது சிந்தனைக் கருத்துக்களை பலதுறைகளில் நுணுக்கமாக ஆய்வு செய்து வெளிப்படுத்தியுள்ளனர். இவ்வாறாக, தோன்றிய சிந்தனையாளர்களை நான்கு காலப்பகுதிக்குள் உள்ளடக்கலாம். அதாவது, ஆதிகால சிந்தனையாளர்கள், என்றும் மத்தியகால சிந்தனையாளர்கள் என்றும், நவீன கால சிந்தனையாளர்கள் என்றும், தற்கால சிந்தனையாளர்கள் என்ற பகுதிக்குள் வரலாற்றோடு ஒப்பிட்டு உள்ளடக்கிக் கூறலாம். இந்த அடிப்படையில் நோக்கும் போது, கலாயோகி ஆனந்தகுமார சுவாமி அவர்களும் சமகால அல்லது தற்கால மெய்யியல் சிந்தனையாளர் மரபில் சிறப்பானவராகக் காணப்படுகிறார்.

அறிஞர் ஆனந்தகுமாரசுவாமியை அறியாதவர்கள் இல்லை எனும் அளவுக்கு இவர் பலதுறைகளில் சிறந்து விளங்கியவர். குறிப்பாக, இவரின் இரசனையியல் சார்ந்த ஆய்வானது மெய்யியலில் முக்கியத்துவம் வாய்ந்தது. அதாவது, கலா மெய்யியலில் மிக முக்கியம் வாய்ந்தது எனலாம். இத்தகைய சிறப்புமிக்க ஆனந்தகுமார சுவாமி அவர்கள் இலங்கையிற் பிறந்தவர். இலங்கைத் தமிழ் மக்களின் திலகமாக விளங்கிய சேர். முத்துக்குமாரசாமி அவர்களின் புதல்வராக 1877ம் ஆண்டு ஒகஸ்டு மாதம் 22ம் திகதி கொழும்பில் பிறந்தார். இவர் பிறந்த எட்டாம் மாதம் அவர் அன்னையார் உடல் நலக்குறைவு காரணமாகத் தமது தாய் நாடாகிய இங்கிலாந்திற்கு பிரயாணமானார். அதேவேளை, தனது தகப்பனாரையும் சிறுவயதிலே இவர் இழந்ததனால், இங்கிலாந்தில் தனது தாயின் பாதுகாப்பில் வளர்ந்து லண்டன் சர்வகலாசாலையில் பி. எஸ். சி. (B. Sc) பட்டத்தை மண்ணியல் ஆய்வில் பெற்றார். பின்னர், பலரது உதவியால் தனது அறிவினை பல துறைகளில் ஈடுபடுத்தினார். இவரது தந்தையார் பலதுறைகளில் சிறப்பாக விளங்கியதோடு, கலையிலும் கூடியளவு பங்களிப்புச் செய்தார். இதே ஆய்வில் அவரது மகனும் ஈடுபட்டது இங்கு குறிப்பிடக்கூடியதாகும். இத்தகைய ஆனந்தகுமார சுவாமி சமயம், கலை, அழகியல் போன்றதுறைகளில் ஆய்வு செய்தது மட்டுமன்றி, தலைசிறந்த தத்துவஞானியாகவும், விஞ்ஞானியாகவும், ஆய்வாளராகவும் கலை விமர்சகராகவும் எழுத்தாளராயும் விளங்கினார். தனக்கென ஒரு கொள்கையை வகுக்காது வாழ்ந்த இவர், இலங்கை மண்ணிற்குப் பெரும் புகழைத் தேடிக் கொடுத்திருக்கிறார்.

கலை ஆர்வம் மிகுந்த தந்தைக்கு மகனாய்ப் பிறந்த இவரின் இளம் உள்ளம் இயல்பாகவே கலை உள் உணர்ச்சியில் ஈடுபடத் தொடங்கியது. இளமையில் இருந்து கலை ஆர்வம் கொண்ட இவர் கலை பற்றி ஆராய முயற்சித்தார். இத்

தகைய ஆராய்ச்சி விடயமாக இங்கிலாந்தில் இருந்து இலங்கைக்கு வந்து பணியை செய்வதற்காக ஆய்வில் ஈடுபடும் போது இலங்கையின் பல பாகங்களுக்கும் செல்ல வேண்டி ஏற்பட்டது. அப்போது ஆங்காங்கு மணற்கும்பங்களும் செடி கொடிகளும் மூடப்பட்டுகிடந்த பண்டைய பௌத்த விகாரைகளும், அரண்மனைகளும் செதுக்கப்பட்டிருந்த சிறந்த கலை வனப்பு வாய்ந்த சிற்ப உருவங்களும், மலைக்குகைகளின் சுவர்களிலே தீட்டப்பட்டிருந்த வர்ணச் சித்திரங்களும் கலைப்பண்பு நிறைந்த அவரது உள்ளத்தில் கலை ஆர்வத்தை எழுப்பின. இவரது ஆய்வில் தரையை கிண்டி உலோகங்களின் அமைப்பை அறிய முயற்சித்த இவரது மனம் இலங்கை, இந்திய மண்ணில் இருந்திருந்த கலைச் செல்வத்திற்கு புத்துயிர் கொடுத்தது. இதற்காக தனது உத்தியோகப்பற்றை விட்டு கலைப் பொருட்களை தேடுவதிலும் அவற்றை ஒன்று படுத்துவதிலும் ஆராய்வதிலும் ஈடுபட்டார். இலங்கையின் பூர்வீக கலைகளைப் பற்றி ஆராய்ந்தார். அக்கலை பற்றி வெளிநாட்டவரும் அறிய வேண்டும் என்ற பேரவா அவருக்கு இருந்தது.

மேலும், இவர் தனது ஆய்வில் கலை என்றால் என்ன வென்றும், கலை நடைமுறை சார்ந்தது என்றும், எல்லா கலையுமே வாழ்க்கையை பிரதிபலிக்கின்றன என்றும் விமர்சித்தார். அதே வேளை, ஒருவரிடம் கலை எவ்வாறு உருவாகிறது என ஆராய்ந்தார். ஒருவனின் உள்ளுணர்வின் வெளிப்பாடே கலை எனக் குறிப்பிட்டார். சிறந்தகலை இயற்கையை பிரதிபிம்பம் செய்வது அல்ல என்றார். இந்த வகையில், மேலைத்தேச சிந்தனையாளராகிய பிளேட்டோ, அரிஸ்ரோட்டில், காண்ட், ஹெகல் போன்ற சிந்தனையாளர்களை விட இவர் வேறு ஒருவகையாக கலையை விமர்சிக்கிறார். உண்மையில் கலை உள் உணர்வின் பிரதி பிம்பம் என்றார். கலைஞனின் மனதிலே உள் உணர்வைக் கொடுத்தல் கலையின் கருத்துப் பரிமாற்றத்துக்கு (மொழி போல்) ஒரு ஊடகமாக அமையுமெனக் கூறினார். அதே வேளை, இவர் இந்தியக்கலை என்றோ, தேசியக்கலை என்றோ, கிரேக்ககலை என்றோ, ஆங்கிலக்கலை என்றோ பாகுபடுத்தவில்லை. உண்மையில் கலை என்பது வாழ்க்கையின் வெளிப்பாடு என விபரித்தார். அதே நேரம் அவர் கலையின் செய்தி என்ன என ஆராய்ந்து, கலைக்கு ஒரு சமூக செய்தி உள்ளது என விளக்கினார். சமூகத்தை அறவழிக்கு இட்டுச் செல்லக்கூடிய திறமை கலைக்கு உள்ளது என்றார். இவர் கலை கலைக்காகவே எனும் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. கலையின் நோக்கம் மனிதனை அகரீதியாக மாற்றுவது தான் என உளவியல் ரீதியாக விளக்கினார்.

உதாரணமாக கவிதை; ஒரு மனிதனை மாற்றத்துக்கு உட்படுத்துகிறது. இவ்வாறே சிற்பம், நாடகம், ஓவியம், இசை, நாட்டியம் என்பனவும் என விளக்கினார். பிளேட்டோ கூறியதுபோல, உண்மை, நன்மை, அழகு என்பன கலையில் காணப்படுகின்றது என்றார். இதை கலாயோகி அவர்கள் இந்திய தத்துவ நோக்கில் சத், சித், ஆனந்தம் என அனுபவரீதியாக விளக்கினார்.

மேலும், இவர் தனது கலை பற்றிய ஆராய்ச்சியில் 1000க்கு மேற்பட்ட புத்தகங்கள் எழுதி உள்ளார். தனது உத்தியோகத்தில் இருந்து விலகி, இவர் கலை விமர்சனத்துறைக்கு தன்னை அர்ப்பணித்தார். இவருடைய நூல்களில் இவர் 'அபிநய தர்ப்பணம்' என்பதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அத்தோடு, இடைக்கால சிங்களக் கலைகள், சிவானந்த நடனம், கிறிஸ்தவக் கலைகள், கலையில் இயற்கையின் திரிபு, மத்திய கால கலை பற்றிய கோட்பாடு, பௌத்த விக்கிரக அமைப்பின் இலக்கணம், இந்திய இந்தோனேசியக் கலை வரலாறு, இந்தியக் கலையின் நோக்கம் என்பன சிறப்பாகக் குறிப்பிடக்கூடியவை.

மேலும், இவர் கலை பற்றி கூறும் போது கலையின் திறமையான வெளிப் பாட்டுக்கு 'யோகம்' (Yoga) அடிப்படை யாக அமைகிறது. கலையே யோகம் என்றகருத்து இந்தியாவில் உள்ளதாக எடுத்துக்காட்டுகிறார். கலை பற்றிய கோட்பாட்டில் மொழிக் கோட்பாடு, அறிவு முதல் வாதம், மாக்சிசகோட்பாடு, அனுபவ வாதிகளின் கோட்பாடு மிக முக்கியமானவை அதே நேரம் கலை மெய் யியல் துறையில் ஒப்பியல் ஆய்வினை செய் தார் எனலாம். இவரின் கலைப்பங்களிப்பு புளோட்டினஸ், ஆ. ஜி. கொலிங்வூட் போன்றோரை விட சிறப்பானது எனலாம். இவர் ஏனைய மரபை விட இந்திய கலையை சிறப்பாக விளக்கினார். இந்தி யக்கலை ஆத்மீக ரீதியானது. அது புனித மானது, அது சாஸ்திர விதிமுறைக்கு இணங்கவும் உள் உணர்வான புனிதத் துடன் படைக்கப்படுவதுதான் இந்தியக் கலை என மேலைத்தேசத்தவருக்கு எடுத்துக் காட்டினார். ஒரு கலைஞன் உள் உணர்வை அல்லது அகக்காட்சியை கலையாக படைக்கும் போது, அதற்கு எந்த அளவு கவர்ச்சி இருக்கின்றதோ அது ரசனைக்கு உட்படும் என்றார். அத்தோடு, இவர் மேலை நாட்டவருக்கு இந்தியக் கலையின் தார்ப்பரியத்தை நன்றாக விளக்கி போலிக்கலையில் இருந்து அது எவ்வாறு வேறுபடுகிறது என எடுத்துக் காட்டி னார்.

இவரது கலை பற்றிய ஆய்வுகளில் சில நுணுக்கமான உண்மைகள் காணப் படுகின்றன. அவையாவன, சைவசமயத் தெய்வ திருவுருவங்களில் சிறந்து விளங்கு கின்ற நடராஜ வடிவம் பற்றிய விளக்கம் குறிப்பிடத்தக்கது பல நூல்களில் இதன் தத்துவக் கருத்துக்கள் மிகத் தெளிவாக விளக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால், இவ்வடிவத்தின் கலைச்சிறப்பினையும், தத்துவ கருத்தினையும் உலகிற்கு மிக நயம் பெற எடுத்து விளக்கிய பெருமை இவரையே சாரும். ''சிவநடனம்'' எனும் ஆங்கில நூலில் அவர் நடராஜ வடிவத் தைப்பற்றி எழுதி வெளியிட்ட கருத்துக் கள் இன்னும் அறிஞர் தம் கருத்தைக் கவர்ந்து கொண்டே இருக்கின்றன.

மேலும், அவரது விமர்சன ஆய்வு கள் ஒரு சவாலாக அமைந்தன எனலாம். அதாவது, 19ஆம் நூற்றாண்டின் இறுதி யில் இந்திய சிற்பத்தினை சிறிது ஆராய்ந்த மேலைத்தேசத்தினரில் சிலர் புத்தபகவானது திரு உருவத்தை இந் திய சிற்பிகள் கிரேக்க உருவங்களை பார்த்தே கற்றுக்கொண்டனர் எனும் புதிய ஆராய்ச்சி முடிவை பரப்பினர். இதனை இந்திய கலைப்புலவர்களும் ஏற்றனர், ஆனால் மேதை ஆனந்தகுமாரசுவாமி அவர்கள் தக்க சான்றுகளுடன் அக்கருத் துப் பிழையென்றும் புத்தபகவான் திரு வடிவம் இந்திய நாட்டுப் பண்டைச் சிற்ப முறைகளைப் பின்பற்றியே அமைக கப்பட்டது என்றும் அறுதியிட்டுக்கூறி மேலைத்தேச ஆய்வாளர்களை வாய் மூடச் செய்தார். அதேபோல ''அபிநய தர்ப்பண'' நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, பாரதத்தின் ஆண்மீகத் தெய் வீகக்கலை அம்சங்களை உலகிற்கு எடுத் துக்காட்டிய பெருமை இவரையே சாரும். அதேபோல் இந்திய நாட்டின் 'முகமதி யர்' காலத்திலே காணப்பட்ட இந்து ஓவியங்கள் யாவும் முகமதியரால் நாட்டில் நிறுவப் பெற்ற கலை ஆக்கத்தின் பய னாகவே தோன்றின எனும் கொள்கை 19ம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் உல கில் பரவி இருந்தது. இக் கொள்கையை மறுத்து, இந்தியக் கலையின் வழிவந்த இந்து ஓவியங்களாகிய 'இராஜபுத்திர' ஓவி யம்கள் முகமதியர் கலைத் தொடர்பு இல்லாது வளர்த்தனவேயாகுமென பல சான்றுகளுடன் விளக்கிய பெருமைக்குரிய வரும் இவரேயாவார். அதேபோன்று, இந்தியாவில் தேசியம், சுதேசியம் எனும் கொள்கைகள் தோன்றுவதற்கு முன்னரே தேசியத்தைப் பற்றியும் சுதேசியத்தைப்

பற்றியும் விரிவான கட்டுரைகள் எழுதி வெளியிட்ட பெருமைக்குரியவரும் இவரேயாவார். இவருடைய ஆய்வுத் திறனை மதித்த மேலைநாட்டு சிந்தனையாளர்கள் இவரை ஒரு சிறந்த கலை விமர்சகராக மதித்தனர்.

எனவே, மேலே உள்ள சிறு ஆய்வில் இருந்து மேதை அவர்களின் கலை பற்றிய ஆய்வுத்தன்மையை ஓரளவு அறியக் கூடியதாக உள்ளதோடு, மேலைத் தேச சிந்தனையாளரைக் கவரும் வகையில், தனது ஆய்வுக் கருத்தினை விளக்கியுள்ளார். இருபதாம் நூற்றாண்டில் இத்தகைய அரிய பல கலை பற்றிய ஆய்வுகளை செய்த இவ்வறிஞரை தமிழ் பேசும் சமூகம் மறவாது போற்றுவது எமது கடமையாகும். திருவள்ளுவர் கூறியதுபோல "தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றின் தோன்றாமை நன்று" என்பதற்கு இணங்க இவர் இலங்கையில் பிறந்து உலகலாவிய ரீதியில் ஆய்வுக் கருத்தை வெளிப்படுத்தியதோடு, அமெரிக்காவிலே உள்ள 'பொஸ்டன்' நகரத்துக் கலைப் பொருட் காட்சி நிலையத்தில் கீழைத்தேச கலைப்பகுதிக்கு தலைவராக நியமனம் பெற்றது இவரது பெருமையை மேலும் உறுதிப்படுத்துகிறது. இத்தகைய மேதை தனது ஆய்வின் இறுதிப்பகுதியில் எழுபதாவது வயதில் பொஸ்டன் நகரில் இறைபதம் அடைந்தார் என கூறலாம். இத்தகைய இந்த மேதையுடைய கலை மெய்யியல் ஆய்வுகளை மேலும் எல்லோரும் அறியக் கூடியவகையில் ஆய்வு செய்வது இன்றியமையாத ஒன்றாக காணப்படுகிறது.

---

போர்ப் படைதனில் தூங்கியவன்
வெற்றியிழந்தான் - உயர்
பள்ளியில் தூங்கியவன்
கல்வியிழந்தான்!
கடைதனில் தூங்கியவன்
முதல் இழந்தான் - கொண்ட
கடமையில் தூங்கியவன்
புகழ் இழந்தான் - இன்னும்
பொறுப்புள்ள மனிதரின் தூக்கத்தினால் - பல
பொன்னான வேலையெல்லாம் தூங்குதப்பா!

- பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரம் -

முதற்
பரிசு பெற்ற
கட்டுரை

# பெண்நிலை வாதமும் மகளிர் நிலைப்பாடும்

— நல்லதம்பி நல்லராஜா —
பொருளியற்றுறை, மூன்றாம் வருடம் (கலைப்பீடம்)

ஒரு பெண்ணின் மூளைக்கு கரண்டியின் கைப்பிடிக்கு அப்பாலுள்ள எதுவும் எட்டாது என்று அன்று நாம் சிந்தித்து வாழ்ந்த காலத்தில், நாட்டுக்கு நாடு, சமூகத் திற்குச் சமூகம் வெவ்வேறு பரிமாணங்களை உள்ளடக்கியதாக பெண்களின் வாழ்க்கை முறைகள் அமைந்து காணப்பட்டது. பெண்கள் பரிதாபகரமான, துயர்தோய்ந்த நிலை யில் வாழ்க்கை நடத்தினர். பெண்களுக்கு சமூகத்தில் எதுவித உரிமையும் இல்லை. உயர் கல்வி இல்லை, சிறு வயதில் திருமணம், விதவையர்க்கு மறு மணம் இல்லை போன்ற அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் பெண்கள் பெரிதும் பாதிப்புக்கு உட்ப டுத்தப்பட்டிருந்தனர். ஆண்களைப் போன்ற சுதந்திரம் இல்லாதவளாகவும், ஆண்களுக் குக் கீழ்ப்பட்டவளாகவும் நமது சமூகத்தில் பெண் நோக்கப்பட்டாள். வளர்ச்சியடைந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளைப் போலல்லாது எமது நாடு உட்பட ஆசிய, ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளில் கூட பெண் நிலைவாதக் கருத்தும் பரிமாணமும் வேறுண்றி நிற்பதை நாம் காணலாம். இதுமட்டுமல்லாது, பெண்கள் தொடர்பான பிரச்சினை களில் தாம்பத்திய வாழ்க்கையில் கூட பெண்களின் பங்கும், குடும்பப்பொறுப்பு பற்றிய கருத்துகளும் கூட தாழ்வாக மதிப்பிடப் படுகின்றது. அத்தோடு கணவன், தந்தை, சமூகம் என்பவற்றிற்கு அடிமைப்பட்டு வாழ்ந்த நிலைமையை நாம் பெண்நிலை வாதத் தில் குறிப்பிடலாம்.

முற்காலத்தைப் போலல்லாது இன்றைய காலகட்டத்தில் பெண் கணவன், தந்தை முதலானோருடைய அதிகாரத்தில் இருந்து விடுதலையடைந்த நிலைமையையும், நவீன தொழில்நுட்ப முறைகளும், விஞ்ஞான கண்டுபிடிப்புகளும் இன்று பெண்களை உழைத்து வாழும் சுதந்திர புத்திஜீவிகளாக மாற்றியது மட்டுமல்லாது பல துறைகளிலும் முன்பி ருந்ததைவிட முன்னேற்றம் அடைந்தும் காணப்படுகின்றனர். இத்தகைய நிலைமையை நாம் மகளிர் நிலைப்பாடு என்றும் அறிமுகப்படுத்தலாம்.

பெண்கள் தங்கள் கலாசார சூழல், அவர்களது மதவாதம், தேசிய வாதம், குலத்தலைமைத்துவம், ஆணின் ஆட்சி என்பவற்றால் தான் வாழும் சமுதாயத்துக்குள்ளே தனது தலைவிதியை நிர்ணயித்துக் கொள்ளவேண்டியுள்ளது. அவர்கள் தமது வாழ்வை ஆண்களோடும் குழந்தைகளோடும் பகிர்ந்து கொள்ள வேண்டியுள்ளது. அவர்களில் இருந்து விலகி வாழ்வது அவளால் முடியாத காரியமாய் இருக்கின்றது. இவ்வாறு இணங்கி வாழ்வதைப் புறக்கணிப்பதும் பெண்விடுதலையை அல்லது தங்களை பெண்

கள் விடுதலைப் போராளிகள் என்ற நிலைப்பாட்டிற்கு உறுதிப்படுத்தவும் முடியாது. இச் செயற்பாடு பயன் அளிக்கவும் மாட்டாது. குடும்பத்தில் ஆணும் பெண்ணும் சம மான பங்களிப்பை செலுத்த வேண்டும் என்ற கருத்தே இன்றைய நிலைப்பாட்டில் மேற்கொள்ள வேண்டிய கடப்பாடாகும். இக்கருத்தை நிலைப்படுத்தி வீட்டில் பெண் வகிக்கும் பங்கை குறைவாகக் கணிப்பது அர்த்தமற்றதாகிவிடும்.

சமூகப் பொருளியல் வாதியான கார்ல் மாக்சின் உற்ற நண்பனாக ஏங்கல்ஸ் பெண்ணினத்தின் அன்றைய நிலைமையை எடுத்துரைக்கும் போது மிகவும் உணர்ச்சிவசப் பட்டு இவ்வாறு கூறினார்.

''சமூக உற்த்தியில் இருந்து வெளியேற்றப்பட்ட பெண் தனியே வீட்டிற்குள் அடங்கினவளாய், ஆண்களுக்கு இன்பம் தரும் போதைப் பொருளாகவும், பிள்ளை பெறும் இயந்திரமாகவும் மாறிவிட்டாள்.'' பெண்ணினத்தின் உரிமை புறக்கணிக்கப்பட்டது பெண் சமூக வரலாற்றில் பெற்ற மாபெரும் தோல்வியாகும். பொதுவுடமைக் கொள்கையை முன்வைத்து நாம் ஆராயும் போது பெண்கள் வேலைக்காரிகளாகவும், குழந்தை பெறும் நவீன மயமாக்கப்பட்ட தொழில்நுட்ப சாதனமாகவும் மாற்றியமைக் கப்பட்ட நிலைமையை எடுத்துக் கூறுவதையும் நாம் காணலாம்.

இந்த தசாப்தத்தில் பெண்கள் சட்டரீதியான அந்தஸ்த்தில் எந்தவகையான மாறுதல்களை கொண்டுவந்தது என்பது பற்றியும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இன்றைய சமூக பொருளாதார கண்கொண்டு நோக்கும் போது வளர்முக நாடுகளில் கொடிய வறுமை, பிரதிபலனற்ற உழைப்பு, கடும் குடும்பச் சுமைகள், குறை வான ஆதரவு இவையெல்லாம் பெண்களின் யதார்த்தங்களாகும். கூடுதலான குழந்தை கள், குறைந்த தேர்ச்சிகள், அவர்களது பெறுமதிக்குக் குறைந்த அங்கிகாரம் என்பன வெல்லாம் இப்பெண்மக்களின் வாழ்க்கையினை சீரழித்து வருகின்றன. இச்சீரழிவு அவர் ளது குடும்பங்களிலும், சமூகங்களிலும், நாடுகளிலும் கூட வியாபித்து வருகின்றது. இந்தப் பிணைப்புகளில் இருந்து விடுபடுவதும், முழு மனித சமுதாயத்திற்கு உதவுவதும் இன்றைய பெண்களின் நிலைப்பாடாக அமைந்து காணப்படுகின்றது.

இந்த வேளையில் பெண்களின் விழிப்புணர்வுகளை தூண்டும் பல்வேறு விதமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதும், அவற்றை அமுல்படுத்துவதும் முக்கியமான பணி யாகும். இன்று இலங்கை நிலைமையினை நாம் ஆராய்வோமானால் மேற்குறிப்பிட்ட பிணைப்புகளில் இருந்து பெண்கள் விடுதலையடையும் நோக்குடன் பெண்களின் முன் னேற்றத்துக்கான கொள்கைகளை வகுப்பதற்கும் அவற்றை அமுல் செய்வதற்கும் உத்தி யோக பூர்வ மட்டத்தில் பெண்கள் பணியகமும், மகளிர் விவகார அமைச்சும் தாபிக் கப்பட்டன. இவற்றால் பெண்களின் விழிப்புணர்வைத்தூண்டிய பல்வேறு நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறான நடவடிக்கை மூலமாக ஆண், பெண் சமத்துவத்தினை அடிப்படை உரிமைகளில் ஒன்றாக சட்டப்படி பிரகடனம் செய்யப்பட்டது. அரச துறை தொழில் வாய்ப்புகளைப் பெறுவதில் பெண்கள் எதிர் நோக்கிய தடையும் நீக்கப்பட்டது.

இதேவேளையில் மூன்றாம் உலக நாடுகளை நாம் உற்றுநோக்கும் போது வளர்ந்து வரும் நவீன மயமாக்களும், அது தொடர்பான உல்லாசப் பயணத் துறை களிலும் பெண்கள் மிக மோசமான சுரண்டலுக்கும், கலாசார சீரழிவிற்கும் உட்படுத்

தப்படுகின்றார்கள். இலாபம் சம்பாதிப்பதற்காக பெண்களை விபசாரத்திலும் ஈடுபடுத்துகின்றார்கள். இத்தகைய நிலையில் பெண்கள் பொருளாதாரச் சுரண்டலுக்கும், ஒழுக்கச் சீர்கேட்டிற்கும், எயிட்ஸ் நோய்க்கும், ஆன்ம அழிவிற்கும் ஆளாக்கப்படுகின்றார்கள்.

இதேபோன்று இலங்கையிலும் அதிக கருத்து முரண்பாடான ஒரு சட்ட மூலமும் நிறைவேற்றப்பட்டது. அதாவது பெண்களுக்கு இரவு நேர வேலையை அனுமதித்தது. இது சர்வதேச தொழில் தாபனத்தின் சில வரையறைகளையும் மீறியதாக அமைந்திருந்தது.

மேலும் இந்த தசாப்தத்தில் அரசு சார்பான பல பெண்கள் இயக்கங்களும், பெண்ணுரிமைக் கழகங்களும் தோன்றி வளர்ச்சி கண்டன. பெண்களுக்கு தொழில் திறன்களைப் பயிற்றுவித்து தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொடுக்கும் பங்கினை நிறைவு செய்தன. வீட்டுடன் பெண்களைப் பூட்டி அல்லது பிணைத்து வைக்கும் பாரம்பரிய அணுகு முறையை இந்நடைமுறை பெரிதும் நலிவடையச் செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.

வளர்முக நாடுகளை நோக்கும் போது இலங்கையில் பல செயல் திட்டங்கள் மூலம் சுதந்திர வர்த்தக வலயத்திலும், தொழில் நுட்ப நிலையங்களிலும், சுற்றுலாத் துறைகளிலும் பெண்களுக்கு அதிகளவு தொழில் வாய்ப்புகளைத் தோற்றுவித்தன. அத்தோடு இன்றைய நிலைப்பாட்டில் பெண்கள் அனேகமானோர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு குடிபெயர்ந்து வீட்டுப் பணிப்பெண்களாக தொழில் புரிவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது, சில துறைகளில் கூடுதலான வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்ட போதும் இன்னமும் பெண்களின் நிலைமை கவலைக்கிடமாகவே காணப்படுகின்றது. அபிவிருத்தி திட்டங்கள் பெண்களிடையே சாதகமான தாக்கங்களைக் கொண்டு வரவில்லை.

இலங்கையின் சுதந்திர வர்த்தக வலையம் அனேகமாக பெண்களையே வேலைக்கு அமர்த்தியுள்ளது. ஆனால் இப் பெண்கள் குறைந்த வேதனங்களைப் பெறுவதுடன், அவர்களுக்கு தொழில் உத்தரவாதமோ, தொழில் புரியும் இடங்களில் சுகாதார வசதிகளோ, வசதியான தங்குமிடங்களோ இல்லை. இதே போன்று மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரியும் பெண்கள் இலங்கை நாட்டிற்கு கணிசமான அளவு வெளிநாட்டுச் செலவாணியை சம்பாதித்து தந்த போதிலும் அவர்கள் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளிலும், அவலங்களிலும் இன்னும் கரிசினை காட்டப்படவில்லை.

இன்று கல்வி கற்ற பெண்களில் பெரும்பாலானோர், பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்கள் உட்பட வேலையற்று இருக்கிறார்கள். வேலையற்றோர் எண்ணிக்கையில் ஆண்களை விட பெண்களே அதிகம் காணப்படுகின்றனர். ஆசிரிய தொழில், வைத்திய, சுகாதார சேவைகள், வீட்டுப் பணிப்பெண்கள், சுருக்கெழுத்து, தட்டச்சு போன்ற துறைகளில் அவர்கள் அதிகமாக ஈடுபட்டுள்ளனர். புதிய வேலை வாய்ப்புகள், புதிய துறைகள் என்று ஆரம்பிக்கப்பட்ட போதிலும் பொறியியல்துறை, தொழில் நுட்பத் துறை, கட்டிடக்கலை போன்றவற்றில் பெண்கள் குறைவாக வேலைக்கமர்த்தப்பட்டிருக்கின்றார்கள். வளர்ச்சியடைந்த நாடுகளில் பெண்கள் மிகவும் பொறுப்பு வாய்ந்த கடமைகளில் ஈடுப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். விண் வெளிக்கப்பலில் கூட பெண் உறுப்பினர் இடம் பெற்று விட்டனர். விமானம் ஓட்டிகளாகவும் தொழில் ஆலோச

கர்களாகவும் கூட கடைமையாற்றுகின்றார்கள். அது மட்டுமல்ல நாட்டை நிர்வகிக்கும் பணியில் கூட பிரதம மந்திரிகளாகவும், போர்ப்படைகளுக்கு ஆலோசகர்களாகவும் இன்றைய பெண்கள் நிலை கொண்டுள்ளனர். இவ்வாறு மேலோங்கி நிற்கும் பெண்ணினம் இன்னும் சில உரிமைகள் அற்றவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

வர்த்தக விளம்பர துறைகளின், விளம்பரங்களில் ஒரு விம்பமாக பெண்களைப் பயன்படுத்தும் போக்கும் செயற்பாடும் வர வர அதிகரித்துக் கொண்டே வருகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளிலும், வளர்முக நாடுகளிலும் பத்திரிகைகள், தொலைக்காட்சிகள், வானொலி போன்ற பொது சனத் தொடர்பு சாதனங்கள் மூலமாக செய்யப்படும் சகல விளம்பரங்களிலும் பெண்கள் சில வியாபாரப் பண்டங்களுக்கு சமமாக தொடர்பு படுத்தி காண்பிக்கப்படுகின்றனர். இவ்விளம்பரங்களை அணுகி ஆராயும் போது சில பெண்களின் பாரம்பரிய கலாசாரத்தை தொடர்புபடுத்தி மேன்மைப்படுத்துவனவாகவும், கூடுதலானவை அவற்றிற்கும் நடைமுறை வாழ்க்கைக்கும் எதிர்மாறானதாகவும், ஆபாச உணர்ச்சிகளை தூண்டுவனவாகவும் அமைந்து காணப்படுகின்றன. இதே போன்று நாட்டிற்கு நாடு நடைபெறும் அழகுராணிப் போட்டிகளும் இந்த நிலைப்பாட்டில் இருந்து தவறவில்லை. சில பெண்ணினத்தை இழிவு படுத்துவனவாக அமைந்துள்ளன.

இன்றைய நிலைப்பாட்டில் பெண்களின் அந்தஸ்த்து, பிரச்சினைகள், பெண் விடுதலை போன்ற செயல்களில் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. உலகெங்கும் மகளிர் இயக்கங்களும், பெண்ணுரிமைக் கழகங்களும் தோன்றியுள்ளன. குறிப்பாக வளர்முக நாடுகளில் அரசாங்கங்கள் இத்துறையில் கவனம் செலுத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. பெண் விடுதலைக்கான அர்ப்பணிப்புகளும் திட்டங்களும், விழிப்புணர்வும், மாற்றங்களுக்கான வேட்கையும், பெண்விடுதலைக்கான திட சித்தமும், இடைவிடா முயற்சியும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது என்பதை நாம் காணலாம்.

மகளிரின் இன்றைய நிலைப்பாட்டில் பெண்ணினவாதிகள் பெண்களுக்கு சமமான அந்தஸ்த்து கோரும் இவ்வேளையில் பெண்ணை ஒரு பெண்மையுள்ள ஆணாக உருவாக்க முயலக் கூடாது என்பது எமது கருத்தாகும்.

பெரிய கடை போய் வந்தோம்
சாமான் வாங்க
எரிகின்ற நெஞ்சுடனே வீடு மீண்டோம்
ஏன் என்றால்
ஆனை விலை, பூனை எல்லாம்
கரிக்கின்ற குறங்கொள்ளி எங்கள் வாழ்வு
கடைகள் எல்லாம்
கனவான் தான் நடத்துகின்றார்.

- கவிஞர் முருகையன் -




# அண்ணனுக்கு ஓர் அஞ்சல்

செல்வி மரீனா இல்யாஸ்
தமிழ்த்துறை விடுகை வருடம் (கலைப்பீடம்)

*அன்பின் சோதரா......!*
*சுகசெய்திகள் என்னவென்று கேட்டு*
*நீ அனுப்பிய கடிதம் கிடைத்தது...*
*சுபசேதிகள் ஒன்றுமேயில்லை -*
*நாங்கள் உயிரோடு இருக்கிறோம்*
*என்பதைத் தவிர....!*

*ஊர்ப்புதினங்களை*
*எழுதும்படி கேட்டிருந்தாய்...*
*சொல்கிறேன் கேள்...!*

*உன்னைப் பல்கலைக்கழகத்துக்கு*
*அனுப்பிய ஊர்ப்பாடசாலை*
*இப்போது -*
*மழைக்கு மக்கள் ஒதுங்கும்*
*ஒரு மண்டபமாக மட்டுமே*
*இருக்கிறது...!*
*நீ நீந்தி விளையாடிய*
*நீல ஆறு - இப்போது*
*சிவப்பாக ஓடிக்கொண்டிருக்கிறது...!*
*அதிலுள்ள மீன்களெல்லாம்*
*மனிதப் பிண்டங்களைச் சாப்பிட்டுச்*
*சந்தோஷமாக இருக்கின்றன...!*

எங்கள் தெருக்கடைகள்
எப்போதாவது திறக்கும்...
எங்களது இமைகளோ
எப்போதாவது மூடிக்கொள்ளும்...

விடிந்ததும்,
கதவைத் திறந்தால்
வாசலை அலங்கரிப்பது
கோலமல்ல - பிணங்கள்...!

அண்ணா...!
நீ நட்டுவைத்த ரோஜாச்செடிகள்
பூத்திருக்கின்றனவா என்று
கேட்டெழுதியிருந்தாய்...
உன் பாத்திகளுக்கு
மனிதப்பிணங்களே பசளையாகின்றன...
என்றாலும்,
உன் செடியில் ரோஜாக்களில்லை......!
எங்கள் மனங்களில்
முட்கள் மட்டும்
முளைத்திருக்கின்றன.........!
அப்பாவின் வயல்களென்றால்
அறுவடைக்குத் தயாராக நிற்கின்றன......
ஆனாலும் -
வீட்டை விட்டு வெளியிறங்க முடியாத -
- நிலை.........!

பிறந்த மண்ணிலேயே நாங்கள்
அன்னியராகிவிட்டோம் அண்ணா.......!
அடுத்த வளவுக்குப் போவதற்கும்
எங்களுக்கு அடையாள அட்டை
தேவைப்படுகின்றது.........!

இன்னொரு அதிசயம்,
எங்கள் வீதியில் வாகனங்கள் வந்தால்
திரும்பிப் போவதில்லை........
போனால் - திரும்பி வருவதுமில்லை..........!

இன்னும் கொஞ்சநாளில்
இங்கே இருக்கும் ஒவ்வொரு கல்வீடும்
ஒவ்வொரு கல்லறையாய் மாறிவிடலாம்........ !

இருந்தும்,
இப்போது அம்மா
எந்த இழவு வீட்டுக்கும்
ஒப்பாரிவைக்கச் செல்வதில்லை......
இழப்பு நிகழாத வீடு
ஏதாவது இருக்கின்றதா என்று தேடித்தேடி
அவள் களைத்துப்போயிருக்கிறாள்......!

முன்பு,
இடியோசை கேட்டால்
ஓடிப்போய் அம்மாவின் மடியில்
முகம் புதைக்கும் என்னைப் பார்த்து
நீ கேலிசெய்வாயே......!

இப்போதெல்லாம் நான் அப்படியில்லை......
வெடிச்சத்தங்களைக் கேட்டுக் கேட்டு
காதுகள் மரத்துவிட்டதால்.
இடிச்சத்தம் கேட்கும்போது - நான்
திடுக்குறாமல் இருக்கிறேன்......

ஒருநாள்,
ஊரில் ஒரு கொலை நிகழ்ந்த
சேதிகேட்டு
இளையவள் மயங்கி விழுந்தாளே......
ஞாபகம் இருக்கின்றதா......?
அவளுக்குக்கூட, - இப்போது
கொலை என்பது ஒரு சாதாரண செய்தித்-
துணுக்கு......!
'தலைபோகும்' சங்கதிகள்
இங்கே தாராளம்......!
சுடுகாடாய் மாறிக்கொண்டிருக்கும்

இந்தக் கிராமத்தில் - இனி
சுதந்திரமாய்ச் சுவாசிக்கவும் முடியாது...

அதனால் -
நாளை நாங்கள்
இந்த மண்ணிலிருந்து
வெளியேறிவிடத் தீர்மானித்துள்ளோம்...

"எங்கே போகிறீர்கள்...?"
என்று கேட்காதே...
அது எங்களுக்கே தெரியாது...!

அகதிகள் என்ற நாமத்தோடு
அடைக்கலம் தேடிப்
புறப்படப் போகிறோம்....

"என் கட்டை இந்த மண்ணில்தான்
வேக வேண்டும்" என்று
ஆரம்பத்தில் அடம்பிடித்த அம்மா,
ஒரு பிடி மண்ணை அள்ளி
முந்தானையில் முடிந்துகொண்டு
எங்களோடு வரத் தயாராக இருக்கிறார்..

கடன்பட்டுக் கட்டிய வீட்டுச்சுவரில்
தலையை மோதி மோதி
அப்பா அழுதுகொண்டிருக்கிறார்...

முற்றத்து மாமரத்தில் பழம்
- பொறுக்குவதற்காக
முதல் ஆளாய் நித்திரை விட்டெழும்
சின்னத் தங்கை
அந்த மாமரத்தையே வெறித்தபடி
ஏக்கத்தோடு வாசலில்
- குந்தியிருக்கிறாள்...

அப்பா என்பேருக்கு எழுதியிருக்கும்
அரை ஏக்கர் காணித்துண்டில்
நான் கடைசியாக ஒருமுறை
காலார நடந்துவிட்டு வந்தேன்......

நாளை -
பொழுது புலரும் - ஆனால்
நாங்களெல்லோரும் இருட்டில்
- இருப்போம்

இல்லை -
முகவரியில்லாத கடிதங்களைப்போல...!
எங்கெங்கோ அலைந்து
- கொண்டிருப்போம்—!

இனிமேல்,
வீட்டு விலாசத்துக்குத் தபாலிடாதே—!
அடுத்த அஞ்சலை வரைவதற்கு
ஏதாவது ஒரு அகதிமுகாமில்
எனக்கொரு இடம்கிடைக்கும்
என்ற நம்பிக்கையோடு விடை
பெறுகிறேன்—!

அண்ணா——...!
இந்தக் கடிதத்தைப் பார்த்துவிட்டு
உன் குடும்பத்துக்காக மட்டும்
கண்ணீர் வடிக்காதே...
யுத்தத்தில்
செத்துக்கொண்டிருக்கும்
அப்பாவி மக்களுக்காகவும்
அழு—...!
ஆனால்,
அழுதுவிட்டு ஓய்ந்துவிடாதே...
நம் ஊரை எரித்த
இந்தக் கலவரத் தீ
நம் தேசத்தையும் பொசுக்கிவிடுமுன்

எழு——!
வீறுகொண்டெழு——!
பச்சை நிலத்தில் படிந்திருக்கும்
சிவப்புக் கறைகளைத் துடைத்தெறிய
உன்போன்ற இளைஞர்களால்
முடியும்...—!
புறப்படு அண்ணா—
உன் வீட்டு முற்றத்தை
மட்டுமல்ல,
உன் தேசம் முழுவதையும்
பூக்களால் அலங்கரிக்கப்
புறப்படு—...!

# கீழைத்தேய கலை, அழகியல் மெய்யியலில் இந்தியாவின் பங்களிப்பு: ஓர் அறிமுகம்



— செல்வன் பீ. எம். ஜமாஹிர் —
மெய்யியற்றுறை, விடுகையாண்டு
(கலைப்பீடம்)

மெய்யியல் ஆய்வில் கலை, அழகியல் எனும் எண்ணக்கருக்கள் ஒரு விசேட துறையாகும். இதில் அழகியல் விழுமியங்கள் சார்ந்த ஒரு துறையாக இனங்காணப்படுகிறது. கிழக்கிலும், மேற்கிலும் அழகு என்பது என்ன? கலை என்பது என்ன? இவற்றை எவ்வாறு விவரிப்பது? இவற்றின் தரிசனம் அகவயமானதா? புறவயமானதா? என்ற கேள்விகளும் இவை தொடர்பான ஆய்வுகளும் இன்னும் நீடிக்கப்போகும் பழைய சங்கதிகளாகும்.

பொதுவாகக் கலையைப் பற்றி நாம் பேசும் போது, கலை என்று நாம் எதை நினைக்கின்றோம்? என்பதைத் தெளிவாக விளக்கவேண்டும். மனிதர் அக அனுபவத்தினைக் குறியீடுகள் மூலம் வெளியிடுவதே கலை எனலாம். இக்குறியீடுகள் ஒலிகளாக இருக்கலாம். அதாவது இசை, வாய்மொழி இலக்கியம் அல்லது எழுதப்படாத அடையாளங்கள் குறிப்பாக வரைகோடுகளாக இருக்கலாம். அல்லது வண்ணங்களாக இருக்கலாம். (ஓவியம்), அல்லது சிற்பங்களாக இருக்கலாம். எனவே மனிதனால் படைக்கப்படுவனவற்றைக் கலை எனும் வட்டத்துக்குள்ளடக்கி அதில் பயன்பாட்டை நோக்கமாகக் கொண்டவற்றையும், அழகை வெளிப்படுத்துபவற்றையும் இனம் காணலாம்.

இவ்வடிப்படையில் இந்தியாவின் இரசாயனவியலின் பங்களிப்பை நோக்கின், அலெக்சாண்டர் பாம்காட்டன் (1714-1762) முதன்முதலில் அழகியல் கலைக்குக் கொண்ட விளக்கமான ''சொல்லினால் தக்க முறையில் உணர்த்த இயலாத அறிவைக்குறிப்பது'' என்ற கருத்திலிருந்து விலகி, இந்திய அழகியல் நுண்கலைகளின் விஞ்ஞானத்தையும் அதன் உண்மையையும் உணர்த்தி நிற்கின்றது.

இங்கு குறிக்கப்படும் நுண்கலைகள், கவிக்கலை, இசைக்கலை, கட்டடக்கலை என்பன இந் நுண்கலைகளின் ஆசிரியர்கள் பரம் பொருளையே தாங்கள் கருதியவாறு அவரவர் கலைகளில் உணர்த்துவதாக கூறுவதாலும் நுண்கலைகளின் மெய்ப்பொருள் என்ற பாகுபாடு பொருந்துகின்றது. கலையில் காணப்படும் மெய்ப்பொருள் பற்றி மூன்றுவகைக் கொள்கைகள் இந்திய மரபில் காணப்படுகின்றன. அவையாவன;

i இரசபிரமவாதம்.
ii நாதப்பிரமவாதம்.
iii வஸ்துபிரமவாதம்,

இயற்கையில் உண்டான எவையும் தராத ஒரு உணர்ச்சியை நுண்கலைகள் தருவதால், அவை இந்திய மரபில் வெறும் கலைகள் எனக் கருதப்படாமல் ஒரு தனி மதிப்பை பெறுகின்றன. ஏனெனில், இந்திய கலைப் படைப்புக்கள் கண்ணுக்குக் குளிர்ச்சியூட்டும் நோக்கம் கொண்டதாக அன்றி, ஆழ்ந்த இன்றியமையாமையும், அகத்தேவையுமே கொண்டு காணப்படுகின்றன.

ரவீந்திரநாத் தாகூர் கூறியபடி, கலை கருத்தின் உறைவிடம், அழகின் பிறப்பிடம். இன்பம் இதன் பயன் என்ற இவ்வகைக் கருத்தானது கலை தன்னலமும் பழி பாவங்களும் நிறைந்த துன்ப உலகை விட்டு நம்மை அப்பால் அழைத்துச் செல்வது என்பதைப் புலப்படுத்தும். இவ்விலக்கணம் இந்திய அழகியலுக்கு முற்றிலும் பொருந்தும். ஏனெனில், இந்தியக்கலை அளிக்கும் அழகு வெறும் செயற்கை அல்லது இயற்கை அழகன்று, இக்கலை மனிதவினத்தின் வழிமுறை அனுபவத்தைக் காட்டுவதோடு வாழ்வின் நோக்கத்தையும் நிறைவேற்றுகிறது.

மெய்யியல், ஒழுக்கவியல், அழகியல் ஆகியன முறையே உண்மை, நன்மை, அழகு என்பவற்றை எடுத்துக்கூறும் இத்தொடரில், அழகியலை மெய்யியலுக்கும்- ஒழுக்கவியலுக்குமிடையே வைத்துக்காண்பவரும் இந்திய மரபில் உளர். இவர்கள் பேருண்மையின் கருவாக அமைந்தது அழகு என்பர். உபநிடதங்களும் அப்பேருண்மையினை என்றுமுளதென்றும், அறிவே உருவானது என்றும், ஆனந்தமயமானதென்றும் விபரிக்கின்றது. உண்மையில் உபநிடதம், சாந்தம், சிவம், சுந்தரம் என்ற தன்மையாலும் பிரமத்தின் இயல்புகளை விபரிக்கின்றது. இதனால் இந்தியாவின் பக்தர்கள் பரம் பொருளிடத்திலே அழகின் பூரணத்துவத்தை கண்டனர் என்று கொள்வதில் தவறு எதுவுமில்லை. ஏனெனில், பூரணத்துவம் பெற்ற அழகையே மனிதர் விரும்புவர். அதனால் அவன் புலன்கள் திருப்திகொள்கின்றன. இவ்வாறு கருத்து முரண்பாடான விளங்கங்கள் கூறப்பட்டாலும் இங்கு நாம் அழகு இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இதில் சிலர் பரம் பொருளை இறுதியும், உண்மையுமான அழகாக ஏற்கின்றனர். இவ்வகையில் இஸ்லாமிய சிந்தனையாளர்களில் ஒருவரான இப்னுல் அரபியின் கருத்தையும் கவனத்தில் கொள்ளலாம். ''இறைவனே அழகு, அழகே இறைவன்''. என்கிறார்.

இக்கருத்துக்களின் உள்ளடக்கமாக இந்தியக் கலைத்துவம், இந்திய சமயம், தத்துவக்கருத்துக்கள் ஆகியன அமைந்துள்ளன. இந்தியர் ஆன்மாவின் உண்மையைப் பல வகைப்பட்ட கலைகளிலும், ஒலி, நிறம் வடிவங்களின் மூலம் குறியீட்டிற் காட்ட முயன்றனர். இந்நோக்கைப் பிரதிபலிப்பதாகவே சில கலை முறைகள் இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

கலைஞன் தான் படைக்கும் பொருளைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இதற்கு இந்தியக்கலை மரபில் தியானம் பயன்பட்டது. இது சாஸ்திர விதி முறைகளுக்கு இணங்க, தியானத்தின் மூலம் வருவதுதான் தூய கலையாக இனங்காணப்பட்டது. தியானத்தில் மனம் படைப்பில் ஒன்றி விட வேண்டும். அல்லாவிட்டால் படைக்கும் கலையில் தவறு ஏற்பட்டு விடுவதாக எண்ணினர்.

கலைஞனது உள் மனமும் அதில் பதிந்த படமுமே உண்மையான கலை என்று பௌத்தக்கலை மரபினர் கூறுகின்றனர். கலைஞனும் கலையும் ஒன்ற வேண்டும் என்ற கருத்தை இந்து மரபினரும் வலியுறுத்துகின்றனர். மேலும் உண்மையான கலை உள்ளுணர்விலிருந்து வருவது. அதை அவ்வாறே பிரதி செய்வது வெறும் மொழி பெயர்ப்பு போன்றதே என்று பௌத்த மரபினர் கூறுகின்றனர். இவ்வாறே மேற்கில் பிளேட்டோ, உண்மையில் செய்யப்பட்ட இந்தப் பௌதீகப் பொருள் உண்மையுருவின் பிரதியாகும். எம் முன்னே காணப்படுகின்ற பொருட்கள் யாவும், கருத்துலகிற் காணப்படுகின்ற பொருட்களின் பிரதிகளே என்றார். ஆனால் கலை உணர்வு ரீதியானது என்பதை இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்பௌதீகப் பொருட்களை வரையும் ஒருத்தன் பிரதியின் பிரதியையே செய்கிறான். எனவே தான் பிளேட்டோவின் பார்வையில், பௌத்த மரபு போன்று ஓவியம், சிற்பம் என்பவை ''போன்றதை போல'' அதாவது இக்கருத்தை பௌத்த மரபில் சொன்னால் வெறும் மொழிபெயர்ப்பு

போன்றது. இந்துக்களோ உள்ளுணர்வு, புறத்தே உள்ள பொருள் இரண்டையுமே கலையின் இரு கூறுகளாகக் காண்பார்கள். அதாவது உள்ளுணர்வை புறப்படமாக மாற்றுவதே உண்மையான கலை என்கின்றார்.

இந்தியக்கலை மரபில், கலைஞனது மனத்தில் பதிந்த தோற்றத்தை புறவடிவமாக மாற்றும் முறைகளை "சில்பரத்னம்", "பஞ்சராத்திரம்" ஆகிய நூல்கள் கூறுகின்றன. தான் காணும் உலகப் பொருட்களின் உண்மையான இயல்புகளை நினைவில் இருத்தி வைக்கப்பழகியவனே மனதில் பதிந்த காட்சியைக் கலையாக வரைய முடியும். காணும் காட்சிகளை மட்டுமன்றிக் கேட்கும் ஓசைகளையும், பண்களையும், தாளத்தையும், குரலையும் நினைவில் இருத்தி ஆழ்ந்த சிந்தனையால் மனதில் பதிக்க வேண்டும் என, "சில்பரத்னம்" கூறுகின்றது. இம் முறையைப் பின்பற்றியே இந்தியக்கலைஞர்கள் தெய்வ வடிவங்களின் பல்வேறு இசை பண்களையும், ஒத்திசைகளையும் காட்டியது புலனாகிறது. இந்த ஆத்மீக ரீதியான இந்தியக் கலை மரபில் கலைஞனின் ஒழுக்கம் முக்கியமாகக் காட்டப்படுகின்றது. ஒழுக்கத்திற்கு அடிப்படை மனத்தூய்மையாகும். இம்மனத்தூய்மை, இல்லையெனில் கலை கருத்துச் செல்லாது மனம் ஒரு நிலையில்லாதது. இதனால் கலைஞன் தன் பணியைத் தொடங்கு முன் சமயச்சடங்குகளைச் செய்ய வேண்டும் என்று "பஞ்சராத்திரம்" கூறுகிறது. இக்கருத்து இன்றும் இந்தியக்கலை மரபில் நடைமுறையில் உளது.

இந்த அடிப்படையில் இந்தியக் கலைஞன் அக, புறக்கருத்தை உணர்த்த வல்ல கலைமொழியை படைத்து விட்டான். "நாட்டிய சாத்திரம்", "அபிநய தருப்பணம்" போன்ற நூல்கள் பல வகையான அபிநயங்களைப் பற்றிக் கூறுகின்றது. கலைஞன் இவைகளைக் கையாண்டால் உணர்ச்சியும், சுவையும் தோன்றும். இது இந்திய அழகியலில் ரசக் கொள்கையாக தனித்துக்காட்டப்படுகிறது. இக்கருத்தை நோக்கின், பக்தி, பக்தன் அனுபவித்த மெய்ப்பொருள் அனுபவமாகவும், சத்தியம், தத்துவஞானி அனுபவித்த மெய்ப்பொருள் அனுபவமாகவும் இருக்கும் போது, கலை அழகெனும் ரசம் கலைஞன் அனுபவித்த மெய்ப்பொருள் அனுபவமாகவும் உள்ளது.

இந்தியர் இயல்பாகவே கலையுணர்வும் கவிப்பண்பும் பெற்றவர்கள். இப்பண்புகள் இந்தியக்கலைகளில் வியாபித்துக் காணப்படுகின்றன. கூத்தும், பாட்டும் இயற்கைச் சூழலையொட்டி இயல்பாக எழுந்த கலைகளாகும். இதில் இந்தியரின் சமயப்பற்று, பண்பாடு, எளிமை, தூய்மை முதலியவெல்லாம் இடம் பெற்றுள்ளன. இந்தியக் கலை மரபு கடந்தகால நினைவல்ல, வாழும் மரபாகும். ஆகவே ஆத்மீகக் கருத்தைச்சடப் பொருளால் காட்டுவது இந்தியக் கலையின் தலையாய தத்துவமாகும். மனித அழகு இயற்கையின் எதிரொலியெனக்கருதுபவர் இந்தியர். இக்கருத்தே இந்தியக் கலைகளிலும், இலக்கியத்திலும் மேவியுள்ளது. மதுராப் பொருட்காட்சி சாலையில் இருக்கும் குப்தர் காலப் புத்தர் சிலை இந்தியக்கலை, அழகியல் மரபுக்கு அருமையான சான்றாகும். இச்சிலையில் புத்தரின் ஞான ஒளி மிளிர்வது சிறப்பாகக் குறித்துக்காட்டப்பட வேண்டிய கலையம்சமாகும்.

இது போன்று இரண்டாம் உலகப் போரின் பின், நெதர்லாந்தின் றொட்டர்டாம் நகரில் கல்லால் வடிவமைக்கப்பட்ட ஒரு சிலை காணப்படுகிறது. நிதர்சனமான ஒரு சிலையைப் போன்றே இது இல்லை. உண்மையான மனிதனைப் போலல்லாமல் வெறும் மனித எலும்புக் கூடு ஒன்றைப்போன்றே இது இருக்கிறது. தூரத்திலிருந்து பார்ப்பவருக்கு இது எந்த நேரத்திலும் விழுந்து நொருங்

கிவிடும் போன்று தோன்றுகின்றது. ஏனெனில் இச்சிலையின் அமைப்புக்கிடையில் எவ்வித இணக்கப்பாடும் இல்லை. இச்சிலையானது சமகால நவீன மனிதனைப் பிரதி பலித்துக் காட்டுவதாக உள்ளது. இவ்வுதாரணத்திற் பிரதி பலிக்கப்படும் கருத்தாவது நவீன மனிதன் இன்று படைக்கும் உண்மையான கலைப் படைப்புக்கான ஆரம்பத்தை இந்தியக் கலைஞர் சமயக்கலை வரலாற்றின் தொடக்கத்திலேயே இந்தியாவுக்கு என மட்டுப்படுத்தாமல் ஒரு பொதுமையை நோக்கி தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர்.


அபிநயம் இந்திய சமயக்கலை வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளன. அஜந்தா ஓவியக்கலை பல்வேறு அபிநயங்களையும், அவைகளின் கருத்துக்களையும் காட்டுகின்றன. இது பௌத்த மரபின் புதுமையும், மேன்மையும் பெற்றுள்ளதோடு கலை உணர்வின் பல தன்மைகளையும் ஒருங்கே காட்டுவதாகவும் திகழ்கிறது. மேலும் இந்தியக்கலை அழகியல் மரபின் உன்னத படைப்புக்களின் உண்மைத்தன்மையை வான்மீகி இராமாயணம், மாமல்லபுரச்சிற்பம், தியாகய்யரின் கீர்த்தனை, அபிநயதர்ப்பணம், கீதகோவிந்தம் ஆகிய கலைப்படைப்புக்களிலிருந்து காணலாம்.

இந்தியாவின் பிரதான கலைப் படைப்புக்களிலுள்ள கீதகோவிந்தத்துக்கும் இலங்கையின் தலை சிறந்த ஓவியர் ஜோர்ஜ்கீட் (1901 - 1993) ச்சுக்குமுள்ள தொடர்பை இந்தியாவின் கலை, அழகை பற்றிப் பேசும் போது நாம் மறந்து விட முடியாது. ஏனெனில் ஜோர்ஜ்கிட் ஜெயதேவரின் கீத கோவிந்த மொழிபெயர்ப்பிற்கான விளக்கப்படங்களை மிகத்திறமையாக வரைந்துள்ளார். கீத கோவிந்தம் ராஜ புத்திர காலத்துக் காவியமாகும். அக்காலத்து ஓவியர்களுக்கு கீத கோவிந்தம் உணர்வுந்தல் காரணியாக அமைந்தது. இக்காலகட்ட ஓவியர்கள் கீத கோவிந்த நாயகர்களையும், அதன் காட்சிகளையும் தமது ஓவியங்களாய்ப்படைத்தனர். இக்காலத்திலேயே ராக பாவங்கள் இந்திய ஓவியத்தின் பெரும் கருப் பொருளாய் பரிணமிக்கத் தொடங்கின.

இலங்கையின் கௌதமி விகாரைச் சுவரோவியங்கள் கீட்டால் வரையப்பட்டன. இது பெருமளவு அஜந்தா ஓவியங்களின் வளைந்த ரேகையமைப்பையும் உருவ ஒப்புமைகளையும் கொண்டிருப்பதை நாம் காணலாம். இதிலிருந்து கீட் இந்திய ஓவியங்களை மிக நுணுக்கமாக ஆராய்ந்து தனது பயன்பாட்டுக்கும் கொண்டாரென நாம் கருதலாம்.

கலையும் அழகும் நேர்த்தொடர்புடையது. இவ்வகையில் கலையழகை முழுமையாகக் கண்டவர்கள் இந்தியர். மேற்கில், ஒவ்வொரு உறுப்பினதும் உலகியல் உண்மைக்கு ஒத்த இயல்பு இருப்பது கருத்தில்கொள்ளப்பட, இந்தியக்கலைஞர் உறுப்புக்களனைத்தும் சேர்ந்து தாம் கருதிய பொருளின் முழுமை வெளிப்படுகிறதா? என்பதையே முக்கியமாகக் கருதுவார்கள். இதன் மூலம் இன்பமே கலையின் தலை சிறந்த பயன் எனக் கொண்டனர்.

எனவே உண்மையான கலை அனுபவம் மக்கட் சமுதாயத்தில் உயர் மாறுதலைக் கொண்டுவருவதாக இருக்க வேண்டும். அது மனிதத்தன்மையை உயர்நிலைக்கு இட்டுச்செல்வதாக இருக்க வேண்டும். அப்போதுதான் மனிதக் கலையுணர்வின் அழகியல் முழுமை பெற முடியும்.



# உரமாகிப் போனது

— கே. எம். அப்துஸ் ஸமது —
விடுகையாண்டு, கலைப்பீடம்

பனி பெய்யும்
பொழுதிலும்
கிள்ளும்
குளிரின்
விடியலிலும்
தன்
பணியிலே
அவள் கரங்கள்.....!

பெற்றெடுத்த
பிஞ்சுக் கொழுந்துகளின்
முகம் கூட
அவள்கரங்கள்
கொய்யும் மெல்லிய
பச்சைக் கொழுந்தில்!

வாடிய கொழுந்தை
கூடைசுமக்க
கூடவே
அவள்
வாழ்க்கை(ப்)
பையை
வறுமை நிறைக்கும்.
அவர்கள்
இரத்த வியர்வை
பச்சைக்
கொழுந்தைக்கூட
சிவப்பு (ப்)
பானமாக்கியதால்
மானிட
உள்ளத்துக்கும்
இல்லத்துக்கும்
அது
உரமாகிப்
போனது.........

பொழுது புலர
அவள்
கடமை
புலர்ந்தும்
விடிந்தும்
விடியாத பொழுதாய்
அவள் வாழ்க்கை
மலையகம்......!
அவள்
இருக்கும்
இடம் தான்
உயரத்தில்.......!
வாழ்க்கையோ
பாதாளத்தில்.........!

கொழுந்தைக்
கிள்ளிக் கிள்ளியே
வாழ்க்கையை
மெல்ல.... மெல்ல!
நகர்த்தும்
சக்கரம் இவள்...!

# குறள் கூறும் நவீன மருத்துவம்

— ஸ்ரீதரன் ஜெயரட்ணம் —
— பெ. சதானந்தன் —
இறுதியாண்டு - மருத்துவபீடம்

இன்றைய மருத்துவத்தின் துரித வளர்ச்சிக்கு, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட சில தத்துவங்களே அடிப்படையாக அமைந்துள்ளன. இத் தத்துவங்கள் பல நூற் றாண்டு காலமாக பல நாடுகளைச் சார்ந்த, பல அறிஞர்களின் அயராத முயற்சியால் பெறப்பட்டவையாகும். அவற்றில் முக்கியமான பல, கடந்த நூற்றாண்டினுள்ளேயே கண்டுபிடிக்கப்பட்டு அதனிலும், குறைந்த காலத்தினுள்ளேயே சகலராலும் ஏற்றுக்கொள் ளப்பட்டுள்ளன. இது இவ்வாறு இருக்கும்போது, ''எல்லா பொருளும் இதன் பாலுள'' என ஏற்றுக்கொள்ளப்படும் திருக்குறளில் இவ்வடிப்படை மருத்துவக் கொள்கைகள் அடங் கியுள்ளன என்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் இவை மிகத் தெளிவாக வரையறுக்கப் பட்டு இன்றைய நவீன இலத்திரனியல் மருத்துவ உலகம் கூட இவற்றைப் புறக்க ணிக்க முடியாதவாறு அடங்கியிருப்பதே வியக்கத்தக்கதாகும். திருவள்ளுவரின் குறள்கள் சிலவற்றை ஆராய்வோம்.

''நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்''

இதில் வள்ளுவர் என்ன கூறுகிறார்? ஒரு வைத்தியர் நோயை அதன் அறிகுறிக ளால் எதுவெனக் கண்டு, அந்நோய் ஏற்பட்ட காரணத்தை அறிந்து, அதைத் தீர்க்கும் வழியை அறிந்து, அவ்வழியில் தவறில்லாமல் செயற்பட வேண்டும் என்கிறார்.

இன்றைய மருத்துவமும் அவ்வாறே, நோயுற்ற ஒருவனுக்கு சிகிச்சையளிக்கும்போது குணங் குறிகளினால் (Signs and Symptoms) நோய் எது (Diagnosis) என அறிந்து நோய் காரணிகளை (Aetiology) ஆராய்ந்து அதற்கேற்ப நோய் குணங் குறிகளுக்கும் (Symptomatic Treatment), காரணிகளுக்கும் (Treatment of Cause) சிகிச்சையளிக்க வேண்டும் என நிர்ணயித்துள்ளது. அத்தோடு, இன்று இன்னும் மேலே ஒரு படி சென்று மேற்கூறியவற்றை திர்க்கமாக அறிந்துகொள்ள ஆய்வு கூடச் சோதனைகளும் (Investigations) நடத்தப்படுகின் றனவே தவிர மேற்கூறப்பட்ட அடிப்படைத் தத்துவத்தில் பாரிய மாற்றமெதுவுமில்லை.

''உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச் செல்வானென்று
அப்பால் நாற் கூற்றே மருந்து''

ஒரு பிணிக்கு மருந்தாவது, நோய் உற்றவன், அதை தீர்ப்பவன் (வைத்தியர்), மருந்து, மருந்தை அருகிலிருந்து வழங்குவர் (தாதி), என நான்கு பிரிவுகளை உடையது. 'அப்பால் நாற் கூற்று' என்பது இன்னும் நான்கு கூறுகளை ஒவ்வொரு பிரிவும் கொண்டுள்ளதென சில திருக்குறள் விளக்கவுரையாளர்கள் இயம்பியுள்ளனர். இன் நான்கு பிரிவுகளும் இன்றைய தனிப்பெரும் மருத்துவத் துறைகள் ஒவ்வொன்றிலும் அடக்கப் பட்டுள்ளன. உதாரணமாக, தீர்ப்பவன் என்ற பிரிவிலுள்ள நான்கு கூறுகளில் அன்புடைமை, தூய்மை என்பவை Medical Ethics என்ற துறையின் முக்கிய அம்சமாகவும், வைத்திய சத்தியப் பிரமாணத்தின் ஒரு அங்கமாகவும் விளங்குகின்றது. அதே போல், உற்றவன் சம்பந்தமான, நோயின் நிலையை அறிவிக்கும் வன்மை, மருத்துவன் வழிநிற்றல் என்பன ஆரம்ப கட்டத்திலேயே வைத்தியரை நாடவும் விரைவில் குணமடைவதற்கு மிக முக்கியமாக அமைவதால் சமூக மருத்துவத் துறையில் (Community Medicine) என்றுமில்லாதவாறு முக்கியத்துவம் பெறுகின்றன.

"உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்"

இதில் திருவள்ளுவர், மருத்துவ நூல் கற்றவன் நோயுற்றவனது அளவையும், அது பற்றிய காலமும் நன்கு கருதி தக்கவாறு செய்யக் கடவன் என்று கூறியுள்ளார்.

ஒரு நோய்க்கு சிகிச்சையளிக்கும் முகமாக, மருந்து வழங்கும்போது நோயாளியின் அளவு (வயது, நிறை), பிணியளவு (Severity of Disease), காலம் (Duration Timing) என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே, என்ன மருந்தை எந்த அளவில் (Dose) எப்போது தொடக்கம் எவ்வளவு காலத்திற்கு (Duration) வழங்க வேண்டும் என்பவை இன்று தீர்மானிக்கப்படுகின்றன. உதாரணமாக, தொற்று நோய்களுக்கு வள்ளுவரின் பின் 22 நூற்றாண்டுகளுக்குப் பின் கண்டு பிடிக்கப்பட்ட நுண்ணுயிர்க் கொல்லிகளை (Antibiotics) வழங்கும்போது, அவரவர் வயதிற்கேற்ப தகுந்த நேரத்தில், உரிய நாட்களுக்கு, சரியான அளவில் வழங்கினாலன்றி நோய் குணமாகாது.

"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று"

ஒருவனது உணவும், செய்கையும், உரியளவுக்கு மேற்பட்டாலும், குறைந்தாலும், மருத்துவ நூல் வல்லோரால் காற்று முதலாக எண்ணப்பட்ட மூன்று நோய்களும் துன்பம் செய்யும் என்கிறார் திருவள்ளுவர்.

இதில் "காற்று முதலாக எண்ணப்பட்ட மூன்று நோய்களும்" தற்போது மருத்துவத் துறையில் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலும், உடலில் எக்காரணியும் தகுந்த அளவில் இல்லாமல் கூடினாலோ அல்லது குறைந்தாலோ நோய்கள் உண்டாகும் வாய்ப்பு அதிகம் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. உதாரணமாக, அதிகளவு கொழுப்பு மாரடைப்பு, நீரழிவு போன்றவற்றை ஏற்படுத்தும் அதே வேளையில், கொழுப்பற்ற உணவு உட்கொள்ளும்போது விட்டமின்கள் A, D, E, K என்பன சிறுகுடலில் அகத்துறிஞ்சப்படமாட்டா. அளவுக்கதிகமான தேகப்பியாசம் சிறு நீரகங்களை பாதிக்கும். ஆனால், தேகப்பியாசமில்லாதோருக்கு மாரடைப்பு, நீரழிவு, குருதிக்குழாய் வெடிப்பு என்பன அதிகளவிலுண்டு.

"அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து"

முன்பு உண்ணதை அறிந்து மிகவும் பசித்து உண்ணும்போது மாறுகொள்ளாத உணவுகளை கடைப்பிடித்து உண்ணக் கடவன்,

ஒவ்வாமை (Allergy) உணவோடு மிகவும் நெருங்கிக் காணப்படுவதும், ஒருவருக்கு மருந்து வகைகளை கொடுக்கும்போது அவற்றுக்கு ஒவ்வாமை உண்டா என்பதை அறிய நோயாளியின் ஒவ்வாமை வரலாற்றைப் (History of Allergy) பெறுவது இன்றைய வழக்கம்.

இவையனைத்தும் நோக்கும் போது, அன்றைய பழந் தமிழர் 2300 ஆண்டுகளுக்கு முன்பே விஞ்ஞான ரீதியான அடிப்படைக் கொள்கைகளை அறிந்துள்ளார்கள் என்பது தெளிவு. ஆனால், பின்வந்த சந்ததிகள் நவீன மருத்துவத் துறைக்கு எவ்வளவு தூரம் பங்களிப்புச் செய்துள்ளனர் என்பது கேள்விக்குறியே! நாம் எங்கோ தவறிவிட்டோம்? கடுகையும் அணுவையுந் துளைத்து, ஏழ்கடலைப்புகட்டி, குறுகத்தறித்தக் குறள் என்றும், இதன் பால் இல்லாத பொருள் எதுவென்றும், திருவள்ளுவரின் பெயர்கள், திருக்குறளின் பெயர்கள், தோன்றிய காலம் என்பனவற்றில் பெருமளவில் வெறும் ஆராய்ச்சிகள் செய்தோமேயொழிய, வள்ளுவரது அடிப்படை விஞ்ஞான கருத்துக்களை ஆய்வு செய்து பயன் கண்டோம் அல்லோம்.

கத்தி இன்றி ரத்தம் இன்றி
யுத்தம் ஒன்று வருகுது
சத்தியத்தின் நித்தியத்தை
நம்பும் யாரும் சேருவீர்!

காந்தி என்ற சாந்திமூர்த்தி
தேர்ந்து காட்டும் செந்நெறி
மாந்தருக்குள் தீமை குன்ற
வாய்ந்த தெய்வ மார்க்கமே

- நாமக்கல் கவிஞர்
- இராமலிங்கம் பிள்ளை

# சமநிலை உணர்ந்து சமன் செய்து கொண்டு

— செல்வன் T. V. R. சங்கர் (மறக்கவி) —
இரண்டாம் வருடம் (பொறியியற்பீடம்)

'திக்' என்றிருந்தது - நெஞ்சம்
திடுக்கிட்டுப் போயிற்று
என்ன நிகழ்ந்தது
எப்படி நடந்தது
ஒன்றும் புரியவில்லை.
புரிந்தது விபத்தென்று - ஆயினும்
நடக்கக் கூடாதது
நடந்து விட்டது
நடந்தது நடந்ததுதான்.

மனிதாபிமானம் அப்போதே
மன்னிப்பு கேட்டது.
மறுபடி கேட்டது
மறுபடியும் கேட்டது.
கேட்டது கிடைத்தது
கேட்கப்பட்டது - மறுதலித்து
மன்னிப்பு கேட்டது
மனங்கள் புரிந்து கொண்டன
நடந்தது தெரிந்து நின்றன.

சுற்றியிருந்த கூட்டமொன்று
சுறுசுறுப்படைந்து - சுருதி
கூட்டி, நீட்டி, முழக்கி
காரணம் காட்டி
ஈட்டியாய் இறக்கிற்று

"சுத்தமாய் உனக்கு சுயநினை
- வில்லை......"
வாயடைத்துப் போயிற்று
வார்த்தை வரவில்லை.

ஆடு நனைந்ததென்று
ஓநாய்க் கூட்டமொன்று
அவசர அவசரமாய்
அழுது தீர்த்தது.

புயல் ஒன்று கருக்கட்டி
கனலாய் வீசிற்று
சந்தர்ப்பம் கூட சதிசெய்து
புயலை பூகம்பமாக்கிற்று.

குருஷேத்திரத்தின்
சக்கரவியூகத்தில்
சக்கராயுதமுமின்றி
சொல்லம்புகளால்
சல்லடை பட்டு
ரணங்கள் கூட
ரத்தம் வடியும்வரை
பல்லால் பதம்பார்க்கப்பட்டபோது
- உள்ளம்
பதறித்தான் போயிற்று - சமாளித்து
வியூகம் உடைத்து
சற்றே தலைநிமிர்த்தி - தலைசாய்க்க
தோழமையுடன் தோள்களைத்
தேடிய போது.........
நிழலும் கூட தலை நிமிர்த்தி
ஒருமுறை மிதித்துப் பார்த்தது.

முகம் பார்த்து - நிறம் பார்த்து
கனம் பார்த்து - அதன்
கௌரவம் பார்த்து
செய்யப்பட்ட நட்புகள்
சொல்லாமல் துறவறம் பூண்டன.

பாம்பு கேட்டதும்
கருடன் சொன்னதும்
பாட்டாக அன்றிப்
பாடமாகிப் போனது.

தருமனும் ஒருமுறை
தர்ம தேவதையால்
மன்னிக்கப்பட்டான்,
தண்ணீர் கூடதன்னுள்
தவறியவர்களை தலையெடுக்க
அனுமதிக்கிறது - ஏன்
இந்த சமூகம் மட்டும்.........

வாழ்க்கை என்பது
(ம)ரணங்களையும் சேர்த்துத்தான்
ஓ..............................
இதுவும் கூட
அடிபட்ட ஓர்
அனுபவமாய்..........

தவறுவதும் தவிப்பதும்
கண்டிப்பதும் கடிவதும்
நேசிப்பதும் நேசமறுப்பதும்
மன்னிப்பதும் மறப்பதும்-எல்லாமே
எல்லாமே மனித சுபாவமாய்

சமநிலை உணர்ந்து
சமன் செய்து கொண்டு
வாழ்வெனும் வேள்விக்காய்
மீண்டும் தலை நிமிர்ந்து..........

# வளி மாசடைதல்: காரணங்களும் விளைவுகளும்

— வை. நந்தகுமார் எம். ஏ. (இலங்கை), எம். எஸ். ஸீ. (யப்பான்) —
முதுநிலை விரிவுரையாளர்
(புவியியற்றுறை)

புவியின் மேற்றளத்தில் உறை போன்று கவிந்து கொண்டிருப்பதும், நிறமற்றதும், கண்கொண்டு காணமுடியாததுமான வாயுப்பகுதியையே நாம் வளி என அழைக்கின்றோம். சராசரி ஒரு மனிதன் ஒரு நாளைக்கு ஏறத்தாழ 20,000 லீற்றர் (21,200 குவாட்ஸ்) அளவு காற்றினைச் சுவாசிக்கின்றான். இக்காற்றில் நைதரசன், ஒட்சிசன் ஆகியவை 99 வீதமாக இடம்பெற ஏனைய சிறியவாயுக்களின் அளவு 1 வீதமாக இடம்பெறுகின்றது. மனிதன் ஒவ்வொரு தடவையும் சுவாசிக்கும் போது அதில் துளி அளவு திரவச்சேர்க்கைகளும் பல தரப்பட்ட துகள்களும் சேர்ந்து காணப்படுகின்றன.

வளி மாசுபடலில் இயற்கையான சேர்க்கைகளை விட மானிட நடவடிக்கைகளின் தொழிற்பாடுகளே கூடிய பங்களிக்கின்றன. வளியை மாசுறச்செய்வதில் மோட்டார் வாகனங்களினால் வெளியிடப்படும் புகை, மின் ஆலைகள், தொழிற்சாலைகள், மின்சார உபகரணங்கள், புகைத்தல் என்பன முக்கிய இடத்தை வகிக்கின்றன. மாசடையும் வளியானது மனிதனின் சுவாசத்தொகுதியைப் பாதிப்படையச் செய்வதோடு மனிதவாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடைய தாவரங்கள், கட்டிடங்கள், உலோகங்கள், போன்றவற்றையும் பாதிப்படையச்செய்கின்றது.

## வளியை மாசடையச்செய்யும் மாசுக்களின் வகைகள்:-

காற்றுக்களின் பெரும்பாலும் புவியின் மேற்பரப்பிலிருந்து மேலே 8-12 கிலோ மீற்றர் தூரத்திற்குப் பரந்து காணப்படுகின்றது. புவியை ஒரு ஆப்பிள் பழத்திற்கு ஒப்பிடுவோமாயின் காற்று இடம்பெறும் பகுதி ஆப்பிள் பழத்தின் தோலை விட நுண்ணியதாக அமையும். தூய வரண்ட காற்றில் 78% நைதரசன் ஆகவும் 20.9% ஒட்சிசனாகவும், 1% சடத்துவ வாயுக்களாகவும், 0·03% காபனீரொட்சைட்டாகவும் காணப்படுகின்றன. வளியானது சிறிதளவு நீராவியையும் கொண்டிருக்கும். இதனளவு துருவப்பகுதியில் 0.01% ஆகவும் அயன ஈரப்பகுதியில் 5% ஆகவும் காணப்படுகின்றது.

தூயகாற்று புவி மேற்பரப்பில் அசைவுறும் போது இயற்கையின் தொழிற்பாட்டினாலும், மனித நடவடிக்கையினால் வெளியேறுகின்ற பலவகைப்பட்ட இரசாயனச்சேர்க்கையினாலும் மாசுக்களைப் பெற்றுக் கொள்கின்றது. பெற்றுக்கொள்கின்ற மாசானது வளிமண்டலத்தில் குத்தாகவும், கிடையாகவும், கலப்புற்று வளியில் இரசாயன மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. வளியில் புதிதாகச் சேர்க்கப்படும் இரசாயனச்சேர்க்கையானது மனிதன், விலங்குகள், தாவரங்கள், கட்டிடங்கள், உலோகங்கள் என்பவற்றிற்குத் தீங்கை ஏற்படுத்துமிடத்தே அவற்றை வளி மண்டலத்தை மாசடையச்செய்யும் துணிக்கைகள், எனக்

கொள்ளப்படுகின்றன. ஐக்கிய அமெரிக்காவில் வளிமாசடைதல் காரணமாக பாரிய தாக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. வளிமாசடைதலானது 53,000 சிசுக்களின், இறப்பிற்குக் காரணமாக இருப்பதுடன் பயிர்கள், ஏனைய தாவரங்கள், கட்டிடங்கள் போன்ற 100 மில்லியன் டொலர் பெறுமதியான சொத்துக்களின் அழிவிற்கும் காரணமாக அமைகின்றது.

நூற்றுக்கும் அதிகமான துணிக்கைகள் வளியை மாசடையச்செய்தாலும் ஒரு சில பதார்த்தங்களே அதிகளவான மாசுபடுதலுக்குக் காரணமாக உள்ளன. 90% மான வளிமாசடைதல் ஐந்துவகையான மாசுக்களினால் ஏற்படுகின்றது. காபன்மொனச்சைட், நைதரசன் ஒட்சைட், சல்பர் ஒட்சைட், ஆவியாக்கம் கூடிய சேதனப்பொருட்கள் (Volatile Organic Compounds) ஐதரோகாபன் மற்றும் வளியில் மிதக்கும் நுண்ணிய துணுக்குகள் என்பன வளியை மாசடையச்செய்வதில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

## வளியை மாசடையச்செய்யும் முக்கிய மாசுக்கள்

| (1) மாசுக்களின் வகைகள் | அவற்றில் காணப்படும் மூலகங்கள் |
|---|---|
| **வாயுக்கள்** | |
| காபன் இரு ஒட்சைட்டு ($Co_x$) | காபன் மொனோக்சைட் ($Co$)<br>காபன் இரு ஒட்சைட்டு ($Co_2$) |
| சல்பர் இரு ஒட்சைட்டு ($So_x$) | சல்பர் இரு ஒட்சைட்டு, ($So_2$)<br>சல்பர்டை ஒக்சைட்டு ($So_3$) |
| நைதரசன் ஒட்சைட்டு ($No_x$) | நைற்றிக் ஒட்சைட்டு ($No$)<br>நைதரசன் ஒட்சைட் ($No_2$)<br>நைற்றஸ் ஒட்சைட்டு |
| **(2) ஆவியாக்கக்கூடிய நுண்ணிய சேதனத் துணுக்குகள்** (Vocs):- | |
| ஐதரோக்காபன் (HCS) காபனையும் ஐதரசனையும் உள்ளடக்கியது | மீதேன் ($CH_4$),<br>பியூடேன் ($C_4H_{10}$)<br>ஈதலின் ($C_2H_4$)<br>பென்சின் ($C_6H_6$)<br>பென்சோபிறின் ($C_2H_{12}$) |
| ஏனைய சேதனப் பொருட்கள் | போமல் டிஹைட் ($CH_2O$),<br>குளோரோபோம் ($CHcl_3$),<br>மீதிலின் குளோரைட் ($CH_2cl_2$)<br>ஈதலின்டை குளோரைட் ($C_2H_2d_2$) |

- ரைகுளோரோதிலின் ($C_2Hcl_3$)
வினில் குளோரைட் ($C_2H_6d$)
காபன்ரெற்றா குளோரைட் ($Ccl_4$)
ஈதலின் ஒட்சைட்டு ($C_2H_4O$)

**(3) தொங்கு நிலையிலுள்ள நுண்ணிய துணிக்கைகள்**

(அ) திண்ம துணுக்குகள் (Spm)

தூசு, (மண்)
புகைக்கரி (காபன்)
கல்நார் (அஸ்பெஸ்டர்)
ஈயம் (Pb)
கடமியம் (cd)
குரோமியம் (Cr)
(arsenic) ஆர்சானிக் (As)
பொலியம் (Be)
நைதரேட் ($No_3$)
சல்பேட் $(So)_4$ உப்புக்கள்.

(ஆ) திரவ துணுக்குகள்

சல்பூரிக்கமிலம் ($H_2So_4$)
நைத்திரிக்கமிலம் ($HNo_3$),
எண்ணெய் D.D.T போன்ற
கிருமி கொல்லிகள்.

**(4) இரசாயனத் தாக்கங்களினால் ஏற்படும் மாசுக்கள்.**

ஞாயிற்று ஒளியின் போது வளியிலுள்ள நைதரசன், ஒட்சிசன் என்பனவற்றின் இரசாயன தாக்கத்தினால் ஏற்படும் ஒளி இரசாயன ஒட்சிசன் (PhotoChemical Oxidants)

ஓசோன் ($O_3$)
பெறோசயல், நைற்ரேட்ஸ் (PANS)
போமல்டிஹைட், ($CH_2O$)
அகசற்ரல் டிகைட் ($C_2H_4O$)
ஐதரசன் பேர் ஒட்சைட்டு ($H_2O_2$)

ஐக்கிய அமெரிக்காவின் வளிமாசடைதலின் விகிதத்தில் 50% காபன் பொறொக்சைட்டும், 16% சல்பர்டை ஒட்சைட்டும் 15% ஆவியாக்கக் கூடிய சேதனக்கூட்டுகளும் 14% நைதரசன் ஒட்சைட்டும் 5% தொங்கு நிலையிலுள்ள நுண்ணியதுகள்களும் என அமைந்து காணப்படுகின்றன.

**வளி மாசுக்களின் மூலகங்கள்:-**

வளியை மாசடையச் செய்யும் இயற்கைக்காரணிகளாக மின்னல் தாக்கிக் காடுகள் தீப்பற்றுதல், மகரந்தம் பரவுதல், பாறைகளில் ஏற்படும் காற்றிலான தின்னல், எரிமலைகளின் தோற்றப்பாடுகள் முதலியவற்றுடன் தாவரங்களின் இலைவ

கைகளிலிருந்தும் எளிதில் ஆவியாகக்கூடிய சேதனப்பொருட்களிலிருந்து ஏற்படும் ஆவியாக்கத்தையும் குறிப்பிடலாம். பைன் போன்ற மரங்களிலிருந்து வெளியேற்றப் படும் "தேர்ப்பைன்" என்பதை ஒத்த பல தரப்பட்ட மணங்களைச் சில தாவரங்கள் தோற்றுவிக்கின்றன. சேதனப் பொருட்கள் அழுகுவதால் தோற்றுவிக்கப்படும் பற்றீரியாத் தொழிற்பாடுகள், யுரேனியம், பொஸ்பேட், கிரனைற்று போன்ற படிவுகளிலிருந்து வெளியேற்றப்படும் றண்டம்-222 வாயு, இயற்கையான கதிரியக்கத்தாக்கம் என்பன போன்ற இயற்கையின் செயற்பாட்டால் ஏற்படும் மாசடைதல் புவியின் பல பாகங்களிலும் காணப்பட்டாலும், இதனால் ஏற்படும் சூழல் பாதிப்பு அரிதாகவே உள்ளது. ஆயினும் விதிவிலக்காக எரிமலை போன்றவற்றின் செயற்பாடுகளின் போது அதிகளவான சல்பர் இரு ஒட்சைட், மிதக்கும் துணிக்கைகள் உருவாதல் தவிர்க்க முடியாதவையாகும். இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் பாரியளவாகவுள்ளன.

அதிகளவான மாசுக்கள் மானிட நடவடிக்கையின் காரணமாகவே மாறன் மண்டலத்தை வந்து சேருகின்றன. கைத்தொழில் நடவடிக்கைகள், மின் உற்பத்தி என்பவற்றுக்காகப் பயன்படுத்தப்படும் எரிபொருள், போக்குவரத்துச் சாதனங்களினால் வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்கள் என்பன வளியை மாசடையச் செய்கின்றன. ஐக்கிய அமெரிக்காவின் மாசடைதல் வீதத்தில் 90% மானவை இவ்வாறு ஏற்படுகின்றது.

உலகின் வளிமாசடைதலின் முக்கியமான கேந்திரஸ்தானமாக பிறேசிலின் சாஓபோலோவிற்கு அருகிலுள்ள கியூபாடோவைக் குறிப்பிடலாம். செறிவான கைத்தொழில் ஆலைகளைக் கொண்டுள்ள இந்நகரத்தின் வளியில் இடம்பெற்றுக் காணப்படும் மிதக்கும் துணுக்குகளின் அளவானது, உலக சுகாதார ஸ்தாபனத்தினால் மாசடைதலின் அளவு எனக்கருதும் அளவினை விட இரு மடங்கினதாகக் காணப்படுகின்றது. இதனால் இங்கு எவ்விதமான பறவைகளையோ, பூச்சிகளையோ காண முடியாதுள்ளது. மேலும் அனேகமான மரங்கள் கருகிய நிலையில் காணப்படுவதுடன், இலத்தீன் அமெரிக்காவில் இடம்பெறும் குறைபிரசவங்களை விட அதிகமான குறைப்பிரசவங்கள் இங்கு இடம் பெறுகின்றன. வளிமண்டல மாசுபடுதலை அளவிடும் கருவிகள் கூட அடிக்கடி செயலிழப்பதனை இங்கு நோக்கக் கூடியதாக உள்ளது.

## முதனிலை மாசடைதலும், இரண்டாம் நிலை மாசடைதலும்:-

வளிமாசடைதலை முதல்நிலையான வளிமாசடைதல், இரண்டாம் நிலையான வளிமாசடைதல் என இரண்டாகப் பிரித்து நோக்கலாம். இயற்கையின் செயற்பாடுகள் காரணமாகவோ, மானிட நடவடிக்கைகள் காரணமாகவோ, சூழலில் பாரிய தாக்கத்தை (கெடுதியை) விளைவிக்கக்கூடிய மாசுக்கள் வளியை வந்தடைவதை முதல் நிலை மாசடைதல் எனலாம்.

காபன்மொனோசைட், காபன் உள்ளடங்கிய பொருட்களான நிலக்கரி, பெற்றோலியம், இயற்கைவாயு என்பன முழு நிலையிலோ $(C+O_2 \rightarrow CO_2)$ அரை நிலையிலோ $(2C+O_2 \rightarrow 2Co)$ எரியும் போது ஏற்படும் காபன்மொனோக்சைட், காபன் டை ஒட்சைட் என்பன முதனிலை மாசடைதலுக்கு உதாரணங்களாகும். ஐக்கிய அமெரிக்காவில் 71% மான எல்லாவித காபன்மொனோக்சைட்டுக்களும் ஓடும் வாகனங்களினாலேயே ஏற்படுத்தப்படுகின்றன. அடுத்த முதனிலை வளிமாசாக விளங்குவது சல்பர் ஒக்சைட்டாகும். $(SO_2)$ இது எரிமலைகளின் தொழிற்பாடுகளினாலும் நிலக்கரி, நிலநெய் என்பன எரிவதனாலும் ஏற்படுகின்றது. $(S+O_2 \rightarrow SO_3)$.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மூலகங்களின் இரசாயனத்தாக்கத்தால் ஏற்படுத்தப்படும் சூழல் பாதிப்புக்களை வளியின் இரண்டாம் நிலை மாசடைதல் எனலாம். உதாரணமாக முதல் நிலை மாசான சல்படை ஒட்சைட்டை எடுத்துக் கொண்டால் சல்படை ஒட்சைட்டு வளியிலுள்ள ஒட்சிசன் வாயுவுடன் தாக்கத்திற் குட்பட்டு ($2SO_2+O_2 \rightarrow 2SO_2$) சல்பறைய் ஒக்சைட்டாக (Sulfer Trioxide) மாறி வளியில் சேரும், அது இரண்டாம் நிலை வளி, மாசடைதல் எனக் கொள்ளப்படுகின்றது. இச்சல்படை ஒக்சைட்டு வளியிலுள்ள நீராவியுடன் இணைந்து இன்னொரு இரண்டாம் நிலை மாசான சல்பூரிக்கமிலத்துளிகளைத் தோற்றுவிக்கின்றது. ($So_3+H_2O \rightarrow H_2 So_4$)

காற்றோட்டமற்ற குகைகளில் நெருப்பினைப் பாவிக்க முற்பட்டபோதுதான் ஆதிமனிதன் வளி மாசடைதலைப் பற்றி முதலில் உணர்ந்தான். விவசாயப் புரட்சியைத் தொடர்ந்து உலகில் விறகு மற்றும் நிலக்கரிப் பாவனை அதிகரித்த பொழுது வளிமாசடைதல் மேலும் அதிகரித்தது. பல வருடங்களுக்கு முன்னர் வளிமாசடைதலைத் தடுப்பதற்காகப் பல முறைகளைக் கையாண்டு உள்ளனர். கி. பி. 1273ம் ஆண்டில் எட்வர்ட் I மன்னர் வளி மாசடைதலைக் குறைப்பதற்காக இங்கிலாந்தில் நிலக்கரிப் பாவனையைத் தடுத்து விறகுகளைப் பாவனைக்குட்படுத்துமாறு ஊக்கமளித்தார். இதன் மூலமாவது ஓரளவு வளிமாசடைதலைத் தடுக்கலாம் என எட்வர்ட் I மன்னர் கருதினார். 1911ம் ஆண்டில் லண்டனில் 1,150 பேர் நிலக்கரிப் புகையின் தாக்கத்தினால் உயிரிழந்தனர். மேலும் 1952ல் லண்டனில் வளிமாசடைந்ததன் காரணமாக 4000 பேரும் 1956, 1957, 1962ம் ஆண்டுகளில் மொத்தம் 2,500 பேரும் உயிரிழந்தனர். இவ்வாறான உயிரிழப்பு அதிகமாகக் காணப்பட்டதனால் லண்டன் நகரில் வளிமாசடைதலுக்குக் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. அதன் காரணமாக இன்று லண்டன் நகரம் ஓரளவு சுத்தமான வளியைக் கொண்டு காணப்படுகின்றது.

ஐக்கிய அமெரிக்காவின் வளிமாசடைதலானது கைத்தொழில் புரட்சிக்குப் பின் ஏற்பட்ட கைத்தொழில் அபிவிருத்தி காரணமாக ஏற்பட்ட அதிகளவு நிலக்கரிப்பயன் பாட்டினால் ஆரம்பமாகியது. 1940ம் ஆண்டில் பிற்ஸ்பேக், சென்லூயிஸ் போன்ற கைத்தொழில் மையப்பகுதிகளில் பகற்பொழுதிலும் வாகனங்களுக்கு வெளிச்சத்தைப் பாவிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. 1940 களிலிருந்து அதிகரித்து வந்த வாகனங்களினால் உருவான ஒளி இரசாயனப்புகார் (Photo Chemical Smong) வளியில் புதுவிதமான மாசுக்களைத் தோற்றுவித்தது. நில நெய்யை எரிப்பதனால் வெளியேறும் புகையுடன் வாயு மண்டலத்தில் கலக்கும் விச ஈயத்துணிக்கைகள் (Toxic Lead). வளியை மாசடையச் செய்கின்றது. 1948ல் பென்சில்வேனியாவின் டொனேறோ என்ற நகரம் சல்பர் இரு ஒட்சைட்டு புகையினாலும், மிதக்கும் துணிக்கைகளினாலும் 5 நாட்கள் மூடப்பட்டிருந்தமையை ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்ட முதலாவது பாரிய வளிமாசடைதல் நிகழ்வு எனலாம். இச்சம்பவத்தின் போது 14,000 குடிமக்களில் 6,000 பேர் நோய் வாய்ப்பட்டனர். அத்துடன் 20 பேர் இறந்தனர்.

மேலும், விரைவான மாசடைதலின் காரணமாக 1963ல் நியூயோர்க் நகரத்தில் 300 பேர் இறந்ததுடன் பல்லாயிரக்கணக்கானோர் நோய்வாய்ப்பட்டனர். இத்தகைய பல பாரிய விளைவுகள் ஏற்பட்டதன் காரணமாக வளி மாசடைதலைக் கட்டுப்படுத்தும் திட்டங்கள் 1980 களிலிருந்து உலகின் பல பாகங்களிலும் தீவிரமடைந்தது.

## கட்டிடங்களின் உட்பகுதியினுள் வளி மாசடைதல்:-
## (Indoor Air Pollution)

மக்கள் தமது நேரத்தில் 85% - 90% வரை செலவிடும் இடமான கட்டிட உட்பகுதியிலும் வளிமாசடைதல் நடைபெறுகின்றது. தரைக்கீழ் சுரங்கங்களில் வளியோட்டம் குறைவாக இருப்பதனால் இதனை நன்கு அவதானிக்கலாம். பல வருடங்களாக குளிர்ப்பிரதேசங்களிலுள்ள கட்டிடங்களை வெப்பமூட்ட நிலக்கரியைப் பயன்படுத்தினார்கள். இதனால் கட்டிடங்களின் உட்பாகங்களில் மாசடைதல் நடைபெற்றது. இன்று சில வீடுகள், பாடசாலைகள், அலுவலகங்கள், என்பனவற்றில் காணப்படும் வளியின் மாசடைந்த தன்மையானது புகாரான நாட்களில் வளியில் இடம் பெற்றுக் காணப்படும் மாசடைதலை விட ஆபத்துக்கூடியது என சில ஆராய்ச்சிகளின் பெறுபேறுகள் கூறுகின்றன.

பொதுவாக வீட்டிலுள்ள தளபாடங்கள், விரிப்புகள், வர்ணப்பூச்சுக்கள், நகங்களுக்குப் போடும் மை, காற்றைச் சுத்தம் செய்யப்பாவிக்கும் இரசாயன வில்லைகள் சிகரெட் போன்ற பொருட்களின் மூலம் ஏற்படும் மாசுக்களின் தாக்கம் வெளிப்புற, (out door) வளிமாசடைதலை விட மூன்று மடங்கு அதிகமானதால் பலவகைப்பட்ட புற்றுநோய் ஏற்படக் காரணமாகின்றது. மேலும் கட்டிடங்களில் காணப்படும் ஏனைய மாசுக்கள் பொதுவாக தலை சுற்றல், தலையிடி; இருமல், தும்மல், கண் எரிவு, போன்ற நோய்களைத் தோற்றுவிக்கின்றன.

நிறம், மணம் அற்ற றேடன் 222 என்ற கதிர் இயக்க வாயுவே கட்டிடங்களின் உட்பாகத்தில் காணப்படும் மாசுக்களில் கொடுமையானது எனச்சூழல் பாதுகாப்பு ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது. இவை சுவாசப்பையைப் பாதிப்பதுடன் ஒருவர் 20 அல்லது 30 வருடங்களுக்குத் தொடர்ந்து இத்தகைய கதிரியக்கத் துணிக்கைகளின் தாக்கத்திற்குட்பட்டால் அவருக்கு சுவாசப்புற்று நோய் ஏற்பட வாய்புண்டு எனப்படுகிறது. ஐக்கிய அமெரிக்காவில் ஒன்பது வீட்டுக்கு ஒரு வீடு என்ற முறையில் இத்தகைய றேடன் 222 வாயுவின் பாதிப்பு இருப்பதாகச் சூழல் பாதுகாப்பு ஸ்தாபனம் கூறுகின்றது.

## நகர வளி மாசடைதல்:-

நகரங்களில் வளி மாசடைதலை, கைத்தொழிலால் ஏற்படும் புகைகள், மற்றும் ஒளி இராசாயனப் புகை (photo chemical smong) மூலம் ஏற்படும் மாசு என இருவகைப்படுத்தலாம். அனேகமான நகர்ப்புறங்களில் இவை இரண்டுமே குறிப்பிடத்தக்க அளவில் கலந்து காணப்படுகின்றன. கைத்தொழிலால் ஏற்படும் புகைகள், பெரும்பாலும் சல்பர்டை ஒக்சைட்டையும் மிதக்கும் துணுக்குகளையும் கொண்டிருப்பதுடன் பலவகைப்பட்ட திண்மப் பொருட்களையும் சல்பர்டை ஒக்சைட்டினால் உருவாகும் சல்பூரிக்கமில துணிக்கைகளையும் கொண்டிருக்கும். இத்தகைய பொருட்கள் காணப்படுமிடத்து தெளிவற்ற புகார் போன்ற நிலையில் வளிமண்டலம் காணப்படும். இந்நிலையில் காணப்படும் நகரங்கள் ''நரைவளி நகரங்கள்'' (gray air cities) என்றழைக்கப்படுகின்றன. மாசடைந்த கைத்தொழில் நகர்ப்புறங்களில் குறிப்பாக மாரிகாலத்தின் காலை நேரங்களில் இத்தன்மைகளை அவதானிக்கலாம்.

லண்டன், சிக்காக்கோ, சென்லூயிஸ், பிற்ஸ்பேக் போன்ற நகரங்களில் இத்தகைய மாசடைதல் ஏற்படுகின்றது. இந்நகரங்களில் குளிரான மாரிகாலத்தில் அறைகளை வெப்பமூட்டுவதற்காக மின்வலுவைப் பெறுதற் பொருட்டு நிலக்கரி, நிலநெய், என்பனவற்றைப் பயன்படுத்துவதினால் சூழல் மாசடைதல் மேலும் அதிகரிக்கின்றது.

## ஒளி இரசாயனப் புகை:

முதல்நிலை வளி மாசுக்களான காபன் மொனோ ஒக்சைட், நைற்றிக் ஒக்சைட், ஐதரோக்காபன் என்பவையும் இரண்டாம் நிலை மாசுக்களான நைதரசன்டை ஒக்சைட், நைற்றிக்கமிலம், ஓசோன், ஐதரசன்பேர் ஒக்சைட், போமல்டிஹைட் என்பனவும் சூரிய ஒளியின் போது தாக்கத்திற்கு உட்படுவதால் வளிமண்டலத்தில் ஒளி இரசாயன புகை தோற்றுவிக்கப்படுகின்றது. ஒளி இரசாயனப்புகையை உள்ளடக்கிய நகரங்கள் பொதுவாக வரண்ட வெப்பமான சூரிய ஒளியை உடைய காலநிலைத்தன்மை கொண்டதாக அமைவுறும். குறைந்தளவு கைத்தொழில்களை உடைய நகரங்களுக்கு அருகாக உள்ள பகுதிகளின் வளிமண்டல மாசடைதலில் வாகனங்களினால் ஏற்படும் புகை முக்கிய பங்கை வகிக்கின்றது. லொஸ் ஏன்ஜல்ஸ், டென்வர், உப்பு ஏரி நகரம், அவுஸ்திரேலியாவில் சிட்னி, மெக்சிக்கோ நகரம், ஆஜன்டீனாவில் புவனர்ஸ் அயர்ஸ் நகரம் ஆகிய நகரங்களை இதற்கு உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இத்தகைய புகையின் அதிகளவான தாக்கத்தை கோடை காலத்தில் மத்தியானத்திலிருந்து மாலை 4 மணி வரையான காலப்பகுதியில் அவதானிக்கலாம்.

ஒளி இரசாயனப்புகை பெரும்பாலும் வாகன நெருக்கடி கூடிய அதிகாலை நேரத்தில் ஏற்படுவதைக் காணலாம். வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் நைற்றிக் ஒக்சைட் ஒட்சிசனுடன் தாக்கத்திற்குட்பட்டு நைதரசன் இரு ஒக்சையிட்டைத் தோற்றுவிக்கின்றது. இது ஒரு வித கபில நிறமான மந்தாரமான புகாரைத் தோற்றுவிக்கும். எனவேதான் லொஸ்ஏன்ஜல்ஸ் நகரம் சில சமயங்களில் குறிப்பிடத்தக்க அளவான ஒளி இரசாயனப்புகைகளைக் கொண்டுள்ள போது "கபில வளி நகரம்" (brown air cities) என அழைக்கப்படுகின்றது. சூரியனின் ஒளி பரவத்தொடங்கியதும் ஊதாக்கதிர் வீச்சுத் தாக்கத்தால் நைதரசன் இரு ஒக்சைட் மீண்டும் நைற்றிக் ஒக்சைட்டாக மாற்றமடைவதுடன் செறிவான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய ஒட்சிசன் அணுக்களையும் தோற்றுவிக்கின்றது. ($NO_2 +$ ஊதாக்கதிர் வீசல் $\rightarrow NO + O$) இத்தகைய சில ஒட்சிசன் அணுக்கள் ஒட்சிசன் வாயுவுடன் இணைந்து ஓசோன் வாயுவினைத் தோற்றுவிக்கின்றது. ($O_2 + O \rightarrow O_3$) இத்தகைய செறிவான தாக்கங்கள் காலை 10 மணிக்கும் மாலை 4 மணிக்கும் இடையில் ஏற்படுகின்றன. காலை நேரங்களில் ஆவியாகக்கூடிய சேதன ஐதரசன் காபன்கள் ஆவியாக்க மூலம் வளிமண்டலத்தினுள் சென்றடைகின்றது. கைத்தொழில் ஆலைகளின் வெளியேற்றங்களினாலும் அரைகுறையாக எரிந்த நிலநெய் என்பவற்றாலுமே இது பெரிதும் தோற்றுவிக்கப்படுகின்றது.

ஒளி இரசாயன புகையின் தாக்கம் பெரும்பாலும் அப்பகுதியின் உள்ளூர்க் கால நிலையிலும் இடவிளக்கவியலிலும் குடித்தொகை மற்றும் கைத்தொழில் அடர்த்தி, என்பவற்றிலும் போக்குவரத்து, கைத்தொழில் ஆலைகளுக்குப் பயன்படுத்தப்படும் வலுசக்தி போன்றவற்றிலும் தங்கியுள்ளது. செறிவான படிவுவீழ்ச்சிப் பகுதிகளில் மழை, பனி என்பன வளியினை மீண்டும் ஓரளவு சுத்தமடையச் செய்கின்றது. காற்றும் மாசுக்களை இடம் பெயரச் செய்து தூயகாற்றினை ஏற்படுத்துகின்றது. எவ்வாறாயினும் குன்றுகள், மலைகளிலிருந்து காற்றுக்கள் கீழ் இறங்குவதால் பள்ளத்தாக்குப்பகுதிகளில் மாசுக்களின்செறிவு நிலமட்டத்தில் கூடிக்காணப்படும். இதேபோன்று கட்டிடங்கள் செறிவான நகர்ப்புறங்களிலும் காற்றோட்டம் குறைவாகவும், மெதுவாகவும் இருப்பதால் மாசடைதல் குறைவடைவதற்கான சந்தர்ப்பம் இல்லாமலுள்ளது.

காற்று நிலமேற்பரப்பில் கிடையாக அசைவது மட்டுமன்றி வளிமண்டலத்தை நோக்கி நிலைக்குத்தாகவும் அசைகின்றது. பகற்காலத்தில் சூரியன் புவியை வெப்பமடையச்செய்வதுடன் புவியிலிருந்து ஏற்படும் கதிர்வீச்சும் புவியை அண்டிய மேற்பகுதியை வெப்பமடையச்செய்கின்றது.

இவ்வாறு வெப்பமூட்டப்பட்ட வளி பக்கலில் விரிவடைந்து மேலெழுவதால் மாசுக்களும் மாறன்மட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. வெப்பமூட்டப்பட்ட வளி விரிவடைந்து மேலெழுந்ததும் அமுக்கம் கூடிய பகுதியிலுள்ள வளி தாழமுக்கப் பகுதியை நோக்கி நகர்கின்றது. இவ்வாறாக வளிகளின் கலக்கும் தன்மைகள், புவியின் மேற்பரப்பினை அண்டிய பகுதியின் மாசடைதலை மேலும் அதிகரிப்படையச் செய்கின்றது.

சில சந்தர்ப்பங்களில் நகர்ப்புறப் பள்ளத்தாக்கு, வடிநிலம் என்பனவற்றில் அடர்த்தியான குளிர்காற்று வரண்ட காற்றுப்படையினால் தடுத்து வைக்கப்படுகின்றது. இது வெப்ப நேர்மாறல் எனப்படுகின்றது. இந்த வெப்பக்காற்று அப்பிரதேசத்தின் மேல் சிறிய படைபோன்று அமைந்து காணப்படுவதுடன், வளிமண்டல மாசுக்களை மேல்நோக்கி நகர்ந்து செல்வதையும் தடுக்கின்றது. பொதுவாக இந்நிலை சில மணித்தியாலங்களுக்கே உரியதாகக் காணப்பட்டாலும் உயரமுக்கம் ஓரிடத்தில் தொடர்ந்து காணப்படுமிடத்து இந்நிலை சில நாட்களுக்கு நீடிக்கின்றது. இத்தன்மையின்போது புவியின் மேற்பரப்பின் மாசடைதல் மேலும் செறிவடைந்து உயிர் ஆபத்துக்களை கூடத்தோற்றுவிக்கும் தன்மையினை சில சந்தர்ப்பங்களில் ஏற்படுத்துகின்றது.

பென்சில்வேனியாவில் டொனறா பகுதிகளிலும் லண்டனிலும் இத்தகைய நிகழ்வுகளின் மூலம் பாரிய அழிவுகள் ஏற்பட்டுள்ளன. நீண்டகால வெப்பநேர்மாறல் நிகழ்வுகளே இவற்றைத் தோற்றுவிக்கின்றன. மேலும் இத்தகைய வெப்ப நேர்மாறல் மலைகளால் சூழப்பட்ட பள்ளத்தாக்கு நகர்ப்பகுதிகளிலும் (லொஸ் ஏன்ஜல்ஸ்) அடிக்கடி தோற்றுவிக்கப்படுகின்றது.

## நகர் வெப்பத்தீவுகள்: (Urban Heat Island)

சக்தியானது ஒன்றிலிருந்து இன்னொன்றாக மாற்றமடையும் போது குறைந்தளவு வெப்பமே வளிமண்டலத்தைச் சென்றடைகின்றது. எனினும் இவ்வளவானது வளிமண்டலத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. ஒரு சராசரி மனிதன் 100 வோல்ட் மின்குமிழ் வெளிச்சத்திற்கு சமமான வெப்பத்தினை வளிமண்டலத்துக்கு வெளியேற்றுகின்றான். இவ்வாறு பல்வேறு வழிகளாலும் வளிமண்டலத்தை வெப்பமடையச் செய்யும் செயற்பாடுகள் பெரிய நகரங்களின் நகரப்பகுதிகளில் கூடிக்காணப்படுகின்றது. சுற்றுப்புற உபநகரங்களை, கிராமப்பகுதிகளைச் சூழ்ந்து குளிரான பகுதி காணப்பட வெப்பமான மத்தியிலான நகரம் "வெப்பத்தீவு" "Urban Heat Islands" எனப்படுகின்றது. நகர வெப்பத்தீவின் நிலையைக் கொண்ட வளி, எளிதில் மிதக்கும் தன்மையிலுள்ள மாசுக்களை தம்வசப்படுத்தி நகர்ப்புறங்களின் மேல் ஒரு தூசுப்படலம் (கூரை) ஒன்றை உருவாக்குகின்றது. இதன் விளைவால் நகர்ப்புறங்களில் மிதக்கும் துணிக்கைகளின் செறிவு கிராமப்புறங்களில் இடம் பெற்றுக் காணப்படுவதை விட ஆயிரம் மடங்கு அதிகமானதாக அமைகின்றது. காற்றின் வேகம் அதிகரிக்குமிடத்து அதன் சுற்றுப்புற கிராமம் மற்றும், உப நகர்ப்பகுதிகளுக்கு இத்தூசுப்படலம் பரவ ஏதுவாகின்றது. இவ்வாறு தூசுப்படலம் பரவுவதால் மேலும் பல நகரங்கள் இணைந்து ஒரு பிரதேசத்திற்கான வெப்பத்தீவினை உருவாக்குகின்றது. இத்தன்மையானது இப்பிரதேசத்தின் காலநிலையிலும் பல பாதிப்புக்களை உண்டுபண்ணுகிறது.

## அமிலப்படிவு வீழ்ச்சி:

கைத்தொழிற்சாலைகள், மின் ஆலைகள் என்பனவற்றின் வலு சக்தியான எரிபொருட்களிலிருந்து வெளியேற்றப்படும் சல்பர் இரு ஒக்சைட், மிதக்கும்

நிலையிலுள்ள துணிக்கைகள், நைதரசன் ஒக்சைட்டுகள் என்பன புவியின் மேற்ப ரப்பை அண்மித்த பகுதியை மாசடையச் செய்வதைக் குறைப்பதற்காக புகைபோக் கிகளை உயரமாக அமைத்து அதன் மூலம் புகைகளை (மாசாக்கிகளை) வளி யின் உயரமான பகுதிக்கு அனுப்பும் முயற் சிகள் அண்மைய காலத்தில் அதிகரித்து வருகின்றது. ஐக்கிய அமெரிக்கா, கனடா, மேற்கு ஐரோப்பிய நாடுகளின் நகரப்புறத் தில் மேற்பரப்பை அண்மித்த பாகத் தின் மாசடைதல் இவ்வாறு பெருமளவு கட் டுப்படுத்தப்படுகின்றது, எவ்வாறாயினும் இந்நடவடிக்கைகளில் மாசடைதலை வேறு ரீதியில் அதிகரிக்கவே செய்கின்றது. கீழ் இறங்கும் காற்றுக்கள் மூலம் இம்மாசுக்கள் கிராமிய மற்றும் நகரப்பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. சல்பர் இரு ஒக்சைட்டும், நைற்றிக் ஒக்சைட்டும் காற் றினால் அதிகளவு தூரத்திற்கு எடுத்துச் செல்லப்படும் போது இவை இரசாயன மாற்றத்திற்குட்பட்டு இரண்டாம் நிலை மாசுக்களான நைதரசன் ஈர் ஒக்சைட், சல்பூரிக்கமிலத் துளிகள், நைற்றிக்கமிலம், திண்ம சல்பேட் துணிக்கைகள், நைற் றேற் உப்புக்கள் என்பனவற்றைத் தோற் றுவிக்கின்றன.

இவ்விரசாயனச் சேர்க்கை கீழ் இறங்கும் காற்றுக்களாலும் மற்றும் மழை வீழ்ச்சியின் போதும் மேற்பரப்பை வந்த டைகின்றன. படிவு வீழ்ச்சியின் போது இவை சல்பூரிக்கமிலம், நைத்திரிக் கமிலம் என மாறி புவியின் மேற்பரப்பைத் தாக் குகின்றது. வரண்ட நிலையின் போது வளியின் திண்ம மாசுக்களான சல்பேற்றுத் துணிக்கைகள், நைற்றேற் உப்புக்கள், சல் பைட். ஒக்சைட் என்பன காற்றுக்களின் இயக்கத்தால் கீழ் இறங்குகின்றது. இவை யாவும் பின்னர் மண்ணிலுள்ள நீருடன் இணைந்து சல்பூரிக், நைத்திரிக் கமிலங் களை ஏற்படுத்துகின்றன. இவ்வாறு வரண்ட, ஈரலிப்பான முறையான அமி லப்படிவு வீழ்ச்சி ஏற்படுகின்றது. இதனை ''அமில மழை'' என அழைக்கின்றனர். இவ்வமிலப் படிவு வீழ்ச்சி பனி, பனிகலந்த மழை, ஆலி, மூடுபனி மழைப்பனி என்ற வடிவங்களிலும் ஏற்படுகின்றது. இதன் அமிலத்தன்மையை "PH" அளவீட்டின் மூலம் கணிக்கலாம். இயற்கையான படிவு வீழ்ச்சியின் போது 'PH' - 5.1 ஆக அமை யும். (இடத்தைப் பொறுத்து 5.0லிருந்து 5.6 வரை காணப்படலாம்) இதனை விட PH அலகு குறைவுபடுமிடத்து அமிலத்தன் மையின் தாக்கத்தைக் கூடுதலாக அவதா னிக்கலாம். இவ்வமிலத்தன்மை மண்ணின் வளத்தினை பாதிப்படையச் செய்வதுடன், மீன்கள், தாவரங்கள், நீரிலுள்ள சிறு அங்கிகள் என்பவற்றையும் அழிவுறச் செய் யும். இவை சில சந்தர்ப்பங்களில் காடுகள், தாவரங்களை அழிப்பதுடன் மனிதனின் உடல்நலத்தையும் பாதிப்படையச் செய் கின்றது.

மனித நடவடிக்கையினாலான சூழல் பாதிப்புகளில் இவ் அமில மழை மத்திய, மேற்கு ஐரோப்பிய நாடுகள், ஸ்கண்டி னேவிய நாடுகள், வடகிழக்கு ஐக்கிய அமெரிக்கா, தென்கிழக்குக் கனடா, தென் கிழக்கு சீனா ஆகிய நாடுகளில் பல பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. காலப் போக்கில் இது ஏனைய நாடுகளுக்கும் பரவலாம். பெரும்பாலும் இவ்அமிலமழை யைத் தோற்றுவிக்கும் இரசாயனப் பதார்த் தங்கள் ஒரு நாட்டினால் உருவாக்கப்பட் டாலும் காற்றின் செயற்பாட்டால் ஏனைய பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப் படுகின்றது. உதாரணமாக மூன்றில் நான்கு பாகமான அமிலப் படிவு வீழ்ச்சி நோர்வே, சுவிஸ்சலாந்து, ஒஸ்ரியா, சுவீடன் நெதர்லாந்து, பின்லாந்து ஆகிய நாடு களில் கிடைக்கப்பெறுகின்றன. இவை மேற்குக் கிழக்கு ஐரோப்பாவின் கைத் தொழில் நாடுகளிலிருந்தே உருவாகின்றது. இதேபோன்று கனடாவில் தோற்றுவிக்கப் படும் அமிலமழையின் அரைப்பாகத்திற்கும் ஐக்கிய அமெரிக்காவின் மாசடைந்த வளியே காணரமாக அமைகின்றது.

ஐக்கிய அமெரிக்காவின் முக்கிய மாசாக்கிகளான சல்பர் ஒக்சைட்டின் அரைப்பகுதியையும் நைத்திரக் ஒக்சையிட்டின் கால்ப்பகுதியையும் அந்நாட்டின் மத்திய மேற்கு மாநிலங்களின் செறிவான கைத்தொழில் நகரங்களாகக் காணப்படும் ஒகியோ, இந்தியானா பென்சில்வேனியா, இலினோய், மிசூறி, மேற்கு வேர்ஜினியா, ரெனிசி ஆகிய ஏழு நகரங்களுமே வழங்குகின்றன. இம்மாசுக்களை வடகிழக்குப் பகுதிகளுக்கு காற்று எடுத்துச் செல்வதனாலேயே அமெரிக்காவின் வடகிழக்கு தென்கிழக்குக் கனேடியப் பகுதிகளுக்கு அமிலமழை ஏற்படுகின்றது. ஐக்கிய அமெரிக்காவின் குடித்தொகையில் 86 வீதமும் கனேடிய மக்கள் தொகையில் 50 வீதமும் இப்பகுதியிலேயே வாழ்கின்றனர். கலிபோனியாவில் வாகனங்களினால் வெளியேற்றப்படும் மாசுக்களாலும், மெக்சிக்கோ அமெரிக்க எல்லைகளின் நகரமாசடைதலினாலும் ஐக்கிய அமெரிக்காவின் மேற்குப் புறந்தில் அமிலமழை ஏற்படுகின்றது.

## வளிமாசடைதலினால் ஏற்படும் உடல் நலப் பாதிப்புகள்:-

வளி மாசடைதல் பலதரப்பட்ட உடல் நலப்பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. இத்தகைய உடல்நலப் பாதிப்புக்களின் தன்மையானது வளிகொண்டுள்ள மாசுக்களின் வகை, அவற்றின் செறிவு என்பனவற்றைப் பொறுத்தே அமைகின்றது. அமெரிக்காவில் வருடத்திற்கு 53,000 குறைமத பிரசவங்கள் எரிபொருட்களினால் வெளியேற்றப்படும் மாசுக்களால் தோற்றுவிக்கப்படுகின்றன. வயோதிபர், குறிப்பாக இருதயம், சுவாசப்பை, பாதிப்புடையவர்கள் மற்றும் குழந்தைகள் அதிகமாக வளிமாசடைதலினால் பாதிக்கப்படுகின்றனர்.

வளிமண்டல மாசடைதலானது பலவித நோய்களுக்கும் சில சந்தர்ப்பங்களில் இறப்புகளுக்கும் கூட காரணமாக அமைகின்றது. என்பதை பல ஆய்வுகள் காட்டுகின்றன.

மனிதனின் சுவாசப்பையின் அமைப்பு முறையானது அவனை மாசடைந்த வளியிலிருந்து ஓரளவு பாதுகாத்துக் கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. மனிதன் சுவாசிக்கும் போது மூக்கினுளுள்ள நுண்ணிய மயிர்கள் வளியிலுள்ள துணிக்கைகளைச் சுவாசத்திற்கு செல்லாது பாதுகாக்கின்றது. எனினும் துணிக்கைகளின் அசௌகரியத்தினால் ஏற்படும் தும்மல், இவ்வளிமாசாக்கிகளை சுவாச அமைப்புக்குள் செல்வதற்கு ஏதுவாக அமைந்தாலும், சுவாசப்பையின் பாதுகாப்பான அமைப்பானது அவற்றை மீண்டும் உள் வாய்ப்பகுதிக்கு அனுப்பி அவற்றை துப்புவதற்கோ விழுங்குவதற்கோ ஏற்ற முறையினைச் செய்கின்றது.

எனினும் அளவு கடந்த மாசாக்கிகள் காணப்படும் போது ஒரு பகுதி சுவாசத்தின் பாதுகாப்பான தன்மைகளைக் கடந்து சென்று மனிதனைத் தாக்குகின்றது. இதனால் மாறாத இருமல், சளிச் சுரம், சுவாசப்பை புற்றுநோய் ஏற்பட ஏதுவாகின்றது.

சுரங்கங்களில் வேலை செய்வோர், தூசுதுணிக்கைகளைத் தோற்றக் கூடிய ஆலைகளில் வேலை செய்வோர், கட்டிட வேலைகளில் ஈடுபடுவோர் மேலும் தூசு துணிக்கைகள் அதிகமாகக் காணப்படும் சுற்றுப்புறச் சூழலில் வசிப்பவர்கள் பெரும்பாலும் சுவாசப்பை நோயினால் பீடிக்கப்படுகின்றனர்.

## தாவரங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்

வளி மாசாக்கிகளில் சல்பர் ஒக்சைட், ஓசோன், நைதரசன் - ஒக்சைட் பெறோசியல் நைற்றேற், (Pans) என்பன தாவரங்களின் இலைகளை நேரடியாகத் தாக்கி பாதிப்புறச் செய்கின்றன. இவ் வாயுக்கள் இலைகளின் துவாரங்களினூடாக உட்செல்வதுடன் இலைகளின் மேற் பரப்புப் பாதுகாப்பிற்காக மூடிக் காணப்படும் மெழுகு போன்ற படைகளையும்

செயழிலக்கச் செய்வதால் வரட்சியின் போது தாவரங்களின் ஆவியுயிர்ப்பினைக் கட்டுப்படுத்தும் ஆற்றலையும் இல்லாமல் செய்கின்றது, இலைகள் பாதிப் படைவதால் வரட்சி, பனி, பீடைகள் என்பனவற்றிலிருந்து பாதுகாக்கின்ற ஆற்றலும் குறைவுபடுகின்றது. இலைகளினால் ஏற்படும் பாதிப்பு ஒளிச்சேர்க்கையை குறைவடையச் செய்கிறது. இதனால் இலைகள் பச்சையம் இல்லாத நிலையில் மஞ்சள் அல்லது பழுப்பு நிறமாக மாறி இறுதியில் உதிர்ந்தும் விடுகின்றன. ஊசியிலைக் காட்டு மரங்களின் இலைகளின் அமைப்பு மாசடைந்த வளி மண்டலத்தினுள்ளும் ஓரளவுக்குத் தாக்குப்பிடிக்கின்றன.

வளி மாசடைதலினால் இலைக ளுக்கு ஏற்படும் இத்தகைய நேரடிப்பாதிப் புக்களை விட அமிலப்படிவு வீழ்ச்சியினால் ஏற்படும் பாதிப்புக்கள் தாவரங்கள் மட் டுமன்றி முழு சூழற்றொகுதியையே பாதிப்படையச் செய்கிறது. இவை தாவர ஊட்டமான கல்சியம் போன்ற போஷாக் குகளையும், மண்ணில் நுண்ணங்கிகளை யும் அழிக்கின்றன. மேலும் இதனால் மண்ணில் அலுமினிய அயன்கள் தோற்று விக்கப்படுகின்றன. இவை தாவரங்களின் வேர்களை பாதிப்படையச் செய்கின்றன. இச்செய்முறைகளால் தாவரங்களின் வளர்ச்சிக்குத் தேவையான நீர், மண்ணி லுள்ள ஊட்டம் என்பனவற்றைப் பெற முடியாத நிலையில் தாவரங்கள் இறக் கின்றன.

பல்வேறுபட்ட வளிமாசாக்கிகளால் தாவரங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் ஆரம்பத்தில் சில வருடங்களுக்கு கட்புல னாக முறையில் அமைவுறும் காலப்போக் கில் சடுதியாகப் பெருமளவான மரங்கள் ஊட்டச்சத்தின்மையால் பீடைநோய்கள், வரட்சி என்பனவற்றால் பாதிக்கப்படும் போதே அவற்றின் தாக்கங்களை அறிய முடிகின்றன. ஐரோப்பாவில் பெருமளவான காடுகளின் அழிவுகள் இம்முறையிலேயே ஏற்பட்டுள்ளன. 1982ம் ஆண்டில் மேற்கு ஜெர்மனியில் 8 வீதமான காடுகள் இவ் வகையில் அழிவுற்றன. ஒரு வருடத்திற்கு பின்னர் காடுகளின் அழிவு 34 வீதமாகவும் 1985ல் 52 வீதமாகவும் உயர்வடைந்தது. இத்துடன் 10 மில்லியன் டொலர் பெறு மதியுள்ள வர்த்தகரீதியான மரங்களும் அழிந்தன. இவை பல்வகைப்பட்ட வன விலங்குகளின் அழிவுக்கும் காரணமாக அமைந்தன. 1985ல் இதே போன்று அழி வுகளை மேலும் 15க்கு மேற்பட்ட ஐரோப்பிய நாடுகளில் அவதானிக்க முடிந்தது. குறிப்பாக லக்ஸம்பேர்க், நெதர்லாந்து, ஒஸ்ரியா, சுவிஸ்லாந்து, செக்கோஸ்லாவாக்கியா, ஆசிய நாடுகளில் மொத்த வனவளத்தின் 25 அல்லது 50 வீதமானளவு இவ்வாறு அழிவுற்றன.

ஐக்கிய அமெரிக்காவிலும் இதே மாதிரியான அழிவுகள் காற்றுப்புறத்தினை நோக்கி அமைந்துள்ள உயர்மலைச்சாய்வு களில் ஏற்பட்டன. உயர்மலைச்சாய்வுகளை மாசடைந்த முகில்கள், மூடுபனி மூடியி ருப்பதால், இப்பகுதியை நோக்கி அசை கின்ற வளித் துணிக்கைகளின் மாசாக்கி கள், இத்தகைய பாதிப்புக்களை அடிக்கடி ஏற்படுகின்றன. கிழக்கு அமெரிக்காவின் 15 மாநிலங்களில் 1960ற்கும் 1980ற்கும் இடை ப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி வேறுபட்ட 34 இன மரங் களின் வளர்ச்சியானது 40 வீதத்தினால் வீழ்ச்சியுற்றுக் காணப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவின் வனவள அளவீடுகளின் படி தென்கிழக்குப் பகுதியின் வர்த்தக முக்கியத்துவமுடைய பைன் மரங்களினது வளர்ச்சியில் வீழ்ச்சி காணப்பட்டுள்ளது. 1972 - 1982 வரையான காலப்பகுதியில் வளர்ச்சியை நோக்கின், 1961 - 1972 காலப்பகுதிகளை விட 20 தொட்டு 30 வீதம் வரை வீழ்ச்சியுற்றுக் காணப்படுகி றது. எனவே உலகின் காட்டுவளம் அரு கிச்செல்வதற்கு வளிமாசடைதலும் முக்கிய காரணியாக உள்ளது.

**கால் நடைகள், மீன்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்:-**

மாசடைந்த வளிகளின் இரசாயனக் கூறுகள், கால்நடைகளின் ஆரோக்கியத்தை வெகுவாக பாதிப்பதை நோக்க முடிகின்றது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் புளோரைட் படிவுகளைக் கொண்ட புற்களை கால்நடைகள் உட்கொள்ளுமிடத்து அவற்றின் பால்கறக்கும் அளவு பாதிப்படைகின்றது. மேலும் அவை நாளடைவில் கால்நடைகளின் எலும்புகளைப் பாதிப்பதால் கால்நடைகள் ஊனமுற்று இறுதியில் இறக்க நேரிடுகின்றன.

சுற்றுப்புறச் சூழலின் மண்ணில் கலந்து காணப்படும் அமிலத்தன்மை நீர் வாழ் உயிரினங்களையும், பாதிப்படையச் செய்கின்றது. வட வரைக் கோளத்தில் வசந்த காலங்களில் பனி உருகுவதனால் அல்லது வரட்சியைத் தொடர்ந்து ஏற்படும் மழை மண்ணின் அமிலத்தன்மைகளை ஏரிகளுக்கு எடுத்துச் செல்வதனால் ஏற்படும் அமிலச்செறிவினால் நீர் வாழ் உயிரினங்கள் பாதிப்படைகின்றன. சுவீடனில் 40,000 ஏரிகளில் 4,000 ஏரிகளின் நீரில் அமிலத்தன்மை கலந்து காணப்படுவதால் அவற்றில் உயிரினங்கள் வாழ முடியாமலுள்ளன. மேலும் 18,000 ஏரிகள் ஓரளவான அமிலத்தன்மையைக் கொண்டுள்ளன. மேலும் அமிலத்தன்மையை கொண்ட முறையில் 90,000 கிலோ மீற்றர் நீளமான நதியும் இங்கு காணப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்காவின் கிழக்குப் பாகத்தில் குறைந்து 1000 ஏரிகள் அமிலத்தன்மைக் குட்பட்டுள்ளன. குறிப்பாக நியூ இங்கிலாந்தில் இதனளவு உயர்ந்து காணப்படுகின்றது. (PH 5.0 உம் குறைவு) இத்தகைய அமிலத்தன்மை மீனினத்தை வெகுவாகப் பாதிப்படையச் செய்கின்றது. மேலும் 3,000 ஏரிகளில் அமிலத்தன்மையைப் பெற்றுள்ளன. கனடாவின் ஒண்டாறியோவில் 1,600 ஏரிகளில் அமிலத்தன்மையின் பாதிப்பினால் மீனினங்கள் வாழ முடியாமலுள்ளன. மேலும் 48,000 ஏரிகள் அமிலத்தன்மையைப் பெறும் நிலையிலுள்ளன. எனவே ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஆகிய இரு நாடுகளும் இணைந்து வளிமாசடைதலை கட்டுப்படுத்தும் திட்டங்களை மேற்கொள்ளா விடின் இதனைக் கட்டுப்படுத்த முடியாமலிருக்கும். ஒரு நாட்டின் வளிமண்டல மாசாக்கி அதன் அயல்நாட்டினைப் பாதிப்படையச் செய்வதால் சர்வதேச ரீதியிலான முறையில் வளிமாசடைதலைத் தடுப்பதற்கான திட்டங்கள் ஏற்படுத்தப்படுதல் அவசியமானதாகும்.

**கட்டிடப் பொருட்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்:**

வளி மாசடைதலினால் வருடா வருடம் 10 மில்லியன் டொலர் பெறுமதி வாய்ந்த கட்டிடத்தளபாடங்கள், சிற்பங்கள், வரலாற்றுச் சின்னங்கள் பாதிப்படைகின்றன. மாசடைந்த வளிமண்டலத்திலிருந்து விழும் மணற் துணிக்கைகள், புகைக்கரி அமிலத்தன்மை என்பனவற்றால் ஏற்படும் பாதிப்புக்களை திருத்துவதற்கே பெருந்தொகையான பணம் செலவிடப்படுகின்றது.

மேற்கு வேர்ஜினியாவையும் ஓசியோவையும் இணைக்கும் உருக்குப்பாலம், 1967ம் ஆண்டில் இவ்வாறான மாசடைந்த வளியின் பாதிப்பினால் உருக்குலைந்து வீழ்ந்தது. இதனால் 46 பேர் வரை உயிரிழந்தனர், மேலும் வளிமாசாக்கிகள் மிருகங்களின் தோல், இறப்பர், கடதாசி, வர்ணப்பூச்சுகள், துணிகள், பருத்தி, றியோன் நைலோன் எனப்பல தரப்பட்ட மூலப் பொருட்களையும் பாதிப்படையச் செய்கின்றன.

**ஓசோன் படையில் ஏற்படும் தாக்கங்கள்**

வளிமண்டலத்தின் கீழ்ப்பகுதியில் ஓசோன் ஒரு வளிமாசாக்கியாகக் காணப்படுவதுடன், அது குறிப்பிட்டளவிலும் அதிகமாக வளியில் காணப்படுமிடத்து மனிதனின் தேக ஆரோக்கியத்தையும், தாவரங்களையும் பாதிப்படையச் செய்கின்றது. ஆனால் வளிமண்டலத்தின் ஓசோன்படை, மனிதனையும் புவியிலுள்ள

உயிரினைகளையும் ஞாயிற்றின் ஊதாக் கதிர் வீச்சிலிருந்து காப்பாற்றும் கவசமாகச் செயற்படுகின்றது. குளோரோ, புளோரோக் காபன் (CFC) படை மண்டலத்திலும் ஓசோனின் செறிவை குறைவடையச் செய்கின்றது. குளோரோ, புளோரோக் காபனை பிறியோன் (Freon) என அழைப்பதுண்டு. இவ் இரசாயனப் பொருளின் பாவனை 1955ம் ஆண்டிலிருந்து வெகுவாக அதிகரித்தது. குளிரூட்டி சாதனங்கள், குளிர்ப்பெட்டிகள், வீடுகளை வெப்பமாக வைத்திருப்பதற்காக பயன்படுத்தப்படும் பலவகைப்பட்ட பிளாஸ்டிக் தகடுகள், உணவுகளைப் பாதுகாக்கப் பயன்படும் றெஜிபோர்ம் என்பனவற்றுக்குப்பயன் படுத்தப் பட்டன. குளிரூட்டிப் பெட்டிகள், குளிரூட்டி சாதனங்களிலிருந்து ஏற்படும் கசிவு, மற்றும் பிளாஸ்டிக் என்பனவற்றை எரிப்பதால் வெளிவிடப்படும் இவ்வாயு, வளிமண்டலத்தில் 110 வருடம் வரை நிலைத்து நிற்கும் தன்மையுடையது. இவை பின்னர் பொதுவாக வளிமண்டலத்தை அடைய ஆரம்பிக்கும். படை மண்டலத்தில் ஊதாக்கதிர்வீசலின் தாக்கத்தால் இவை குளோரின் அணுக்களை வெளியிடுகின்றன. இதனால் ஓசோன் ($O_3$) வாயு உடைவுபட்டு ஒட்சிசனாக ($O_2$) மாற்றப்படுகின்றது. 1955 யிலிருந்து 1987ம் ஆண்டு காலப்பகுதியில் வெளிவிடப்பட்ட குளோரோ புளோரோக் காபனின் 95 வீதமானவை இன்னமும் படை மண்டலத்தை நோக்கி நகர்ந்த வண்ணமுள்ளன. 1978 லிருந்து குளோரோ புளோரோக் காபனை வெளிவிடும் காற்றுப்பம்பிகளின் பாவனைகளை அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் முற்றாக தடை செய்துள்ளன. இவ்வாறு இதன் பாவனைகளில் கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டாலும் ஏற்கனவே வளிமண்டலத்திலுள்ள குளோரோ புளோரோக் காபனின் தாக்கத்தால், இன்னமும் 100 வருடத்தில் படை மட்டத்தின் ஓசோனின் அளவு 3 விருந்து 5 வீதம் வரை குறைவடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது, இதனால் 2050 ஆண்டளவில் படை மண்டல ஓசோனின் அளவு 10 வீதம் வரை குறைவடையலாமென அமெரிக்க தேசிய செலவுகளின் ஆய்வுக் கழகம் கருத்துத் தெரிவித்துள்ளது.

1983ம் ஆண்டு இலையுதிர் காலத்திலிருந்து ஒவ்வொரு வருடமும் தென்துருவப்பகுதியில் செப்டம்பர், நவம்பர் மாதங்களில் படைமண்டலத்தின் ஓசோன் தூரத்தினை செய்மதிப்படங்களின் மூலம் அவதானிக்க முடிகின்றது. இத்துவாரம் ஐக்கிய அமெரிக்காவின் நிலப்பரப்பின் அளவினைக் கொண்டிருப்பதுடன், இப்பகுதியின் ஓசோனின் அளவு சாதாரணமாகக் காணப்பட வேண்டியளவினை விட 40 வீதமளவு குறைவாகக் காணப்படுகின்றது. வட துருவப்பகுதியிலும் இவ்வாறான ஓசோன் துவாரம் அவதானிக்கப் பட்டுள்ளது. இத்துவாரம் வருடாவருடம் வளிமண்டலத்திற்கு கிடைக்கப்பெறும் குளோரோ புளோரோக் காபனின் தாக்கத்தினால் ஏற்பட்டதா அல்லது 1982ல் மெக்சிக்கோவில் ஏற்பட்ட எல் சின்சோனல் எரிமலைத் தொழிற்பாட்டினால் ஏற்பட்டிருக்கலாமா எனத்தெளிவாகக் கூறமுடியாதுள்ளது.

## ஓசோன் குறைவடைதலினால் ஏற்படும் பாதிப்புக்கள்:-

படை மண்டலத்தின் ஓசோன் அளவு குறைவுபடுமிடத்து ஞாயிற்றுக்கதிர் வீசலின் கொடூரமான ஊதாக்கதிர் வீசல் புவியின் மேற்பரப்பை வந்தடைவதற்கு ஏதுவாகின்றது. சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் கணிப்பீட்டின்படி ஓசோனின் 5 வீதத்தின் வீழ்ச்சி, 970,000 சருமப் புற்று நோயாளிகளை வருடாவருடம் தோற்றுவிப்பதுடன் கண் நோய் (வெள்ளைப்படல நோய்) போன்ற பல, வித நோய்கள் ஏற்படவும் ஏதுவாகிறது.

வளிமண்டலத்தின் ஒளி இரசாயனப் புகையின் தாக்கத்தினால் கண் எரிவு நோய் 10 வீதத்தால் அதிகரிக்கும். என எதிர்பார்க்கப்படுகின்றது. படைமண்டலத்

தின் 1சதவீத ஓசோனின் இழப்புத்தானும் வளிமண்டலத்தில் அதிகளவான சல்பஈர் ஒக்சைட், நைதரசன் ஒக்சைட்டுகளை கொண்ட பகுதியில் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படும் அமிலமழையையும் அதிகரிக்கச் செய்யும். இச்செயற்பாடுகள் கால்நடைகளைத் தாக்குவதுடன் முக்கிய உணவுப்பயிர்களான கோதுமை, நெல், சோளம் என்பனவற்றையும் பாதிப்படையச் செய்யும்.

## ஓசோன் படையைப் பாதுகாத்தல்:-

புவியின் வளிமண்டல மாசுக்களில் ஓசோனை குறைவடையச் செய்யும் குளோரோ புளோரோக் காபனின் அளவினைக் கட்டுப்படுத்துவது கொள்கையளவில் இலகுவில் செய்யக் கூடியதாகுமா? குளோரோ, புளோரோக் காபனை அதிகளவில் உற்பத்தி செய்யும் நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, சோவியத் யூனியன், ஸ்கண்டினேவிய நாடுகள் மேற்கு ஐரோப்பிய நாடுகள் தமக்கிடையிலான ஒப்பந்தங்கள் மூலம் இதனைச் செய்யலாம். மேலும் குளோரோ புளோரோக் காபனின் தேவை சமுகத்திற்கு மிக அவசியமானதல்ல. இதற்கான பதிவீட்டு பொருட்கள் பல அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் குளோரோ புளோரோ காபனின் அளவினை 1987ம் ஆண்டின் மட்டத்தில் வைத்திருக்க வேண்டுமானால் உடனடியாக உலக ரீதியான குளோரோ புளோரோக் காபனின் வெளியேற்ற வீதத்தினை 85 வீதத்தால் குறைக்க வேண்டும் என ஆய்வுகள் எடுத்துக்காட்டியுள்ளன.

எவ்வாறாயினும் இதனைக் காட்டுவதற்கான சர்வதேச ரீதியான ஒப்பந்தம் அவ்வளவுக்கு சாத்தியமில்லையென்றே கூறலாம். பல நாடுகள் தமது குறுகிய கால பொருளாதார விருத்தியைக் கவனத்திற் கொண்டுள்ளமையினால் குளோரோ புளோரோ காபனின் பாவனைக் குறைப்புகளை மேற் கொண்டுள்ளனவா திடமாகக் கூறமுடியாமலுள்ளது. பல புதிய கண்டு பிடிப்புகளும், நவீன தொழில் நுட்பத்தின் திறனால் உருவாகும் புதிய சாதனங்களுமே இதற்கு விடை பகிரவேண்டும்.

## புவிமேற்பரப்பு வெப்ப அதிகரிப்பும் பச்சை வீட்டு விளைவுகளும்:

புவி ஞாயிற்றிலிருந்து கதிர்வீசல் மூலம் தமது இயக்கத்திற்கான வெப்பத்தைப் பெற்று மீண்டும் புவிக்கதிர் வீசலாக அவற்றைத் திருப்பியனுப்புவதன் மூலம் தமது சராசரி வெப்பத்தை பேணிக் காத்து வருகின்றது. வளிமண்டலத்தின் வெப்பத்தினை அதிகரிப்பதில் காபன்டை ஒக்சைட், நீராவி மற்றும் மாறன் மண்டலத்திலுள்ள ஓசோன், மீதேன், நைற்றஸ் ஒக்சைட், குளோரோ புளோரோக் காபன் என்பனவற்றின் பங்கு உயர்ந்து காணப்படுகின்றது.

இவ்வாயுக்களை பச்சை வீட்டு வாயுக்களாக கூறுமளவுக்கு இவற்றின் செயற்பாடுகள் காணப்படுகின்றன. இவ்வாயுக்கள் வளிமண்டலத்தில் ஒரு கண்ணாடி மூடி போல் அமைந்து, புவியிலிருந்து ஏற்படும் வெளிப்போக்குக் கதிர் வீசலின் அளவினை குறைவடையச் செய்கின்றது. இதனால் புவியை அண்மித்த வளிமண்டலத்தின் கீழ்ப்பாகத்தில் வெப்பம் அதிகரிக்க ஏதுவாகின்றத. இதனையே பச்சை வீட்டு விளைவு எனப்படும். வளிமண்டலத்தில் பச்சை வீட்டு வாயுக்கள் காணப்படாவிடின் புவியின் சராசரி வெப்பம் - 18°C (0.4°F) பாகையாக, உயிரினங்களற்ற கோளமாகவும் அமைவுறும்.

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பல பச்சை வீட்டு வாயுக்கள் வளிமண்டலத்திலிருந்து வெளிச்செல்லும் வெப்பத்தைக் குறைவடையச் செய்வதால், புவியின் சராசரி வெப்பமும் அதிகரிக்க காரணமாகின்றது. இவ்வாறாக அதிகரித்துச் செல்லும் வெப்பம் புவியின் கால நிலையைப் பாதிப்படையச் செய்வதுடன்

உணவு உற்பத்திப் போக்கினையும் மாற்றி அமைக்கிறது. இயற்கையான செயற்பாடுகளாலும், மானிட நடவடிக்கைகளாலும் வளிமண்டலத்தை வந்தடையும் நுண்ணிய மிதக்கும் பொருட்களும் புவியின் வெப்பத்தை அதிகரிக்க அல்லது குளிரடையச் செய்யலாம்.

1860லிருந்து 1986ம் ஆண்டு காலப் பகுதியின் வளிமண்டலத்திலுள்ள காபன்டை ஒக்சையிட்டின் அளவு 275 PPM லிருந்து 346 PPM ஆக 26 வீதம் உயர்வடைந்துள்ளது. உலகின் எரிபொருள் பாவனையின் அதிகரிப்பினாலேயே இவ் உயர்வு ஏற்பட்டுள்ளது. ஒளிச்சேர்க்கையின் போது காபன்டை ஒக்சைட்டை தாவரங்கள் உறிஞ்சிக் கொள்கின்றன. எனவே அயனக்காடுகளின் அழிவும் காபன்டை ஒக்சைட்டின் அதிகரிப்பிற்குக் காரணமாகின்றது

கைத்தொழில் நடவடிக்கைகளினால் 275 PPM லுள்ள காபன்டை ஒக்சைட்டின் அளவு 550 PPM ஆக அதிகரித்தால், வளியின் வெப்பநிலை 4°C (7°F) பாகையாக அதிகரிக்குமென காலநிலை மாதிரிகள் விளக்கமளிக்கின்றன. மேலும் துருவத்தை அண்டிய பகுதியில் இதனளவு இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இன்று நியூயோர்க், சிக்காக்கோ நகரங்கள் காணப்படும் பகுதிகளில் 20,000 ஆண்டுகளுக்கு முன்னர், கடைசிப்பனிக் காலம் நிலவிய போது புவியின் வெப்பநிலை 5°C (9°F) பாகையில் காணப்பட்டது.

புவியின் சிறியளவு சராசரி வெப்ப மாற்றம் தானும் கடும்வரட்சியை உண்டு பண்ணலாம். 1°C அல்லது 2°C பாகை வெப்ப அதிகரிப்பே கொடூரமான காற்றுக்களின் உற்பத்திக்குக் காரணமாகின்றது. 2040ற்கும் 2100ம் ஆண்டிற்கும் இடையிலான காலப்பகுதியில் நிலநெய், நிலக்கரி போன்ற எரிபொருள் போன்ற பாவனையினால் மட்டும் காபன்டை ஒக்சையிட்டின் அளவு 550 PPM வரையினதாகலாம். எனினும் மானிட நடவடிக்கையினாலான பச்சை வீட்டு வாயுக்களின் உற்பத்தியும் தொடருமாயின் இந்நிலை 2010ற்கும் 2050 ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்திலேயே ஏற்படலாம்.

வளிமண்டலத்தில் காபன் அதிகரிப்பு தாவரங்களின் ஒளிச்சேர்க்கையை அதிகரிக்கப்படுவதனால் உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்யலாம். ஆனால் மாறாக அதிகரித்த வெப்பம் அதிகளவான பீடைகளை, பூச்சிகளைத் தோற்றுவிக்கும் எனவே விளைச்சலில் பாதிப்பு ஏற்படும். எனினும் புவிமேற்பரப்பின் படிவு வீழ்ச்சி, அளவுகளிலும் மாற்றம் ஏற்படலாமென்பதால் சில பகுதிகளின் பயிர் உற்பத்தி கூடியும் மேலும் சில பகுதிகளில் குறைந்தும் காணப்படலாம். புவி குளிர்வடைந்தாலும் இத்தகைய தாக்கத்தையே எதிர்பார்க்கலாம்.

புவியில் அதிகரித்த வெப்பம் கடல் மட்டத்தையும், உயர்வடையச் செய்யும். வளிமண்டல வெப்ப அதிகரிப்பு மலைச் சாரல்களிலும் துருவப் பகுதிகளிலும் அண்டாட்டிக்கண்டத்திலும் உள்ள பனிப் படலங்களை உருகவைக்கும் இன்றைய கணிப்பீடுகளின்படி 4°C (7°F) பாகை வளிமண்டல வெப்ப அதிகரிப்பு 0.6 மீற்றருக்கு (2 அடி) கடல் மட்டத்தை உயர்வடையச் செய்யும். இது உலகின் உயர் நெல் உற்பத்தி பகுதிகளான வங்களாதேசம், இந்தியா, சீனா, ஆகிய நாடுகளின் தாழ் நிலங்களை வெள்ளத்தில் மூழ்கடிக்கச் செய்யும். இதே போன்று ஐக்கிய அமெரிக்காவிலும் லூசியானா. புளோரிடாப் பகுதிகளிலும் வெள்ளப்பெருக்கைத் தோற்றுவிக்கலாம். மேலும் அத்திலாந்திக், குடா நாட்டுக் கரையோரத்தின் கட்டிடங்கள் போக்குவரத்து பாதைகள் வாயு சேமிப்புத் தாங்கிகள், பலவும் நீரின் கீழ் செல்ல வேண்டி ஏற்படலாம். கடல்நீரின் உள்நோக்கிய நகர்வினால் தரை நீரின் தரமும் பாதிக்கப்படும். இதனால் நீர் விநியோகம் உணவு உற்பத்தி, வாழ்விடம், போக்குவரத்து, என முழுப் பொருளாதாரமும் பாதிப்படையும்.

இயற்கையின் சமநிலையை மனிதன் குழப்புமிடத்து இயற்கையே அவனை அழித்துவிடும்.




# காத்தல்

செல்வன். இரா. இரவிசங்கர்
முதலாம் வருடம்
(விவசாய பீடம்)

வாருங்கள்
நண்பர்களே
களத்தில் குதிப்போம்
கடமைகளைச் செய்ய.

வீதிக்கு வரும்வரை
வெய்யிலின் கோபம்
விளங்கவில்லை

கரையை அலைகள்
கரைக்கும்போதுதான்
கடலின் கோபம்
தெரிகிறது.

இலைகளை துப்பி
மரங்கள்
மரத்துப் போகும்போதுதான்
மரங்களின் சோகம்
புரிகிறது.

பாலைவனத்தை
பகைத்ததாலா
அவை தம்மை பலப்படுத்த
பருத்துப்போகிறது.

அடுப்பை எரிக்க
காடுகளை கொன்றதால்
இன்று
வீடுகள் எரிகின்றன.

மிருகங்கள்
அஸ்தியோடு வந்தபோதுதான்
காடுகள் கருகியது
நாட்டுக்கு தெரிகிறது.

அழுகிய மேகங்கள்
அழமாட்டாமல்
அடம் பிடிக்குது.

தென்றல்
தேம்பியதால்
பறக்கிறது
அனலாக.

யாரங்கே?
வாருங்கள்.
களத்தில் குதிப்போம்
கடமைகளைச் செய்ய

ஆடையை அகற்றி
பூமியை
நிர்வாணமாக்குவது
யார்?

வாருங்கள்
சந்திரனைத் தொட
ஓசோனை கிழித்த நாம்
அதைத் தைத்துவிட
ஊசியினைக்கோர்த்துவிடுவோம்

நாம்
புகைத்ததால்
வளிமண்டலத்திற்கு
புற்று நோய்.

வாருங்கள்
தொழிற்சாலைப் புகையினை
வீணடிக்காது
வியாபாரம் செய்திடுவோம்

வானத்திற்கு
காய்ச்சல் என்று
பயந்தோடுது
பனிக்கட்டிகள்

வாருங்கள்
வடக்கிற்கும் தெற்கிற்கும்
ஊர்வலம் சென்று
உருகும் பனிக்கு
ஆறுதல் சொல்வோம்

சுடுகாடுகளை
சுத்தம் செய்து
மரங்கள் நட்டு
மகிழ்ந்திடுவோம்

பாலைவனத்தில்
புற்கள் நாட்டி
மேய விட்டு
மெச்சிக் கொள்வோம்.

வாருங்கள்
உயிர்ப்பிச்சை கேட்கும்
காடுகளுக்கு
ஒட்சிசன்
கொடுப்போம்.

கரையின் கண்ணீரால்
கடல்
உப்புக்கரிப்பதால்
வாருங்கள்
கடற்கரையில்
கல்வேலி அமைத்து
சிறுமணலை
சிறை வைப்போம்.

வாருங்கள்
நண்பர்களே
களத்தில் குதிப்போம்
கடமைகளைச் செய்ய
பூமித்தாய்
பூரிப்பாள்.

எமது சந்ததிக்கு
உயிர் கொடுக்க முன்
பூமித்தாய்க்கு
உயிர் கொடுப்போம்

சொல்லுங்கள்-
இன்று நாம்
பூமிக்கு பாரமா
பூமி
நமக்குப் பாரமா?



# பழந்தமிழ் இலக்கியத்தில் அங்கத மரபுகள்

— கலாகீர்த்தி, பேராசிரியர், டாக்டர் பொ. பூலோகசிங்கம் —

I

தமிழ் இலக்கியப் பரப்பிலே அங்கத இலக்கிய மரபுகளுக்கு நீண்ட பாரம்பரியம் உண்டு, ஆயினும் அங்கத இலக்கியம் பெருவளவினவாய்த் தமிழ் இலக்கியத்திலே காணப்படவில்லை. அங்கத இலக்கியத்தின் இயல்புகள் தனித்தன்மை வாய்ந்தவை. அவற்றைப்பேணி அங்கதம் படைத்தல் எல்லோருக்கும் இயலுமான செயலன்று. அங்கத இலக்கியப் படைப்பாளி திறமைமிகுந்த சிருஷ்டிகர்த்தாவாக இருத்தல் வேண்டும். இதனாலேயே அங்கத இலக்கியம் தமிழ் இலக்கியப் பரப்பிலே உதிரிப்பூக்களாக அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காட்சியளித்துச் சோபனம் செய்கின்றது.

அங்கத இலக்கியத்திலே நகைச்சுவையும் இகழ்ச்சியும் நன்னோக்கமும் ஒன்றாகக் கலந்துவருபன. கணநேர மகிழ்ச்சியை நமக்குத்தந்து அதனோடு ஒழியும் மேலாட்டமான நகைச்சுவையன்று அங்கதம் தரும் நகைப்பு; ஆழ்ந்த உணர்ச்சியையும் ஆழமான பொருளையும் உடையதாய் நினைத்த பயனுக்குக் கருவியாக அமைவதது. கணத்தில் தோன்றும் மனவேறுபாட்டுக்கு ஒரு போக்கிடமாய் அமைந்த இகழ்ச்சியாக ஒருவரைத் தனிப்படக் குறித்துத் தோன்றாமல் பொதுமையுடையதாய் — பொதுவாக ஒரு இனத்தினை — குறித்ததாக அமைந்து குற்றத்தைக் கண்டித்துத் திருத்தும் நோக்கம் உடையதாக அமையும் அங்கத இகழ்ச்சி. அது பொருளுள்ளதாகவும் நன்மைக்கு வழி செய்வதாகவும் அமையும். அங்கதத்தின் அடிப்படை, நன்னோக்கம். அங்கதப்படைப்பாளி தன் வெறுப்பையோ கசப்பையோ விரக்தியையோ பட்டவர்த்தனமாகக் காட்டமாட்டான்; அனுதாபத்தோடும் பரிவோடும் தான் எடுத்துக் கொண்ட விடயத்தை அவன் அணுகுவான். இதனால் சமூகத்தின் ஊழல்களைக் கண்டறிந்து அவற்றைக் குத்தலான முறையிற் கண்டிப்பதற்கு அங்கதம் சிறந்த போக்கீடாக அமைகின்றது. நயமாகவும் சரளமாகவும் பரிகசிக்கும் அங்கதப்படைப்புகள் பலவாக உலக இலக்கியத்திலே காணப்பெறினும் கொதித்துப் பொங்கும் எரிமலையாகிக் கண்டனங்களை நெருப்பாறுகளாகப் பாய்ச்சும் படைப்புகளும் இல்லாமலில்லை.

தொல்காப்பிய ஆசிரியர் அங்கதம் வசையொடும் நிசையொடும் புணர்ந்தது என்று கூறுவர். மேலும் அவர் அங்கதம் செம்பொருளாகவும் மொழிகரந்தும் வரும் என்றும் கூறுவர்; செம்பொருளாக வருவதை வசையென்றும் மொழிகரந்து வருவதைப் பழிகரப்பு என்றும் கூறுவர்.

இக்காலத்தில் செம்பொருளாக வரும் வசைக்கவியை அங்கதத்திலே வைத்து நோக்கும் மரபு இல்லை. மொழிகரந்து வரும் பழிகரப்பு வகையினையே அங்கதம் என்று பொதுவாக இன்று வழங்குவர்.

பதினெட்டாம் நூற்றாண்டிலே வீரமாமுனிவர் என்று அழைக்கப்பெறும் பெஷ்கி சுவாமிகள் (1680 - 1747) பரமார்த்தகுரு கதை என்ற தொடரை எழுதினார். இத் தொடரிலே அவர் தம் காலத்து இந்து மத குருமார்களையும் தலைவர்களையும் கிண்டல் செய்கிறார். தமிழ் வசனத்தை இலக்கிய தரத்திற்கு இட்டுச் சென்ற பரமார்த்த குரு கதை அங்கத இலக்கிய வரிசையிலே முக்கியத்துவம் உடையது.

அச்சுவேலி நீ. காசிநாதப் புலவர் (1796 - 1854) பாடிய தாலபுராணம் பற்றிக் கூறிமிடத்துப் பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் ஆணல்ட் சதாசிவம் பிள்ளை, "பனைப் பெருமை கூறினும் ஓர் போது ஒருவகைக் கேலிப்பாடலாகவும் இருக்கலாம்." என்று ஐயுற்றிருக்கிறார் (1886, பக். 96). கோப்பாய் வே. இராமலிங்கம் பாவலர் சரித்திரதீபகம் தோன்றுவதற்கு (1886) ஏழெட்டு வருடங்களின் முன் மறைந்தவர். அவர் பாடிய கோட்டுப்புராணம் இழித்தும் பழித்தும் பாடப்பெற்றது என்பர் ஆணல்ட் சதாசிவம் பிள்ளை (பாவலர் சரித்திரதீபகம், 1886, பக். 41). இப் புராணம் நீதித்தலத்திலே வாதிபிரதிவாதிகளுக்கு நேரும் பணநட்டம், கஷ்டம், அல்லல் தொல்லைகளையும், அந்நீதித்தலங்களில் இருதிறத்தாரையும் மூட்டிவிட்டுப் பணம் பறிக்கும் கோட்டுப்புளுக் களையும், இருபுறமும் கைநீட்டும் நியாயதுரந்தரர்களையும் பற்றியது என்பர் பாவலர் சரித்திரதீபக ஆசிரியர்.

வண்ணார்பண்ணை சுப்பையர் என்பவரும் பாவலர் சரித்திரதீபகம் தோன்று வதற்கு முன்பு (1886) வாழ்ந்தவர். இவர் பாடிய கனகிபுராணத்திற்குரியவையாகச் சுமார் 30 பாடல் கிடைக்கின்றன; கனகிபுராணம் என்ற பெயரும் அதற்கு உரியனவாகக் கிடைக்கும் பாடல்களும் அதனை ஒரு சிறந்த அங்கத இலக்கியமாகக் காட்டுகின்றன.

கனகிக்கும் புராணத்திற்கும் உள்ள உடன் பாடின்மையே இகழ்ச்சியை நன்கு புலப் படுத்துகின்றது. இழிவுபடுத்திக் கூறப்படுவதை அதற்குரிய சாதாரண முறையிற் சொன் னாற் சுவையிருக்காது அதைப் பெருமை வாய்ந்த வகையிற் கூறினாற்றான் இகழ்ச்சி சிறந்து விளங்கும் என்பதைச் சுப்பையர் நன்குணர்ந்திருந்தார். புராணம் என்ற இலக்கிய வடிவத்தையே சுப்பையர் கேலி செய்கிறார். திரிமூர்த்திகளையும் ஏனைய தெய்வங்களை யும் சான்றோரையும் பாடப் பயன்படுத்தி வந்த இலக்கிய வடிவத்திலே, தாசி ஒருத்தியைப் பாடுவதா? அபசாரம். "புதுமைப்பித்தன்" காளான் குடைநிழலிற் கரப் பானை அரசிருத்திக் காவியம் என்ற இலக்கிய வடிவத்தினையே கேலி செய்து "மகா காவியம்" படைத்தான்! சாமுவேல் பட்லர், அலெக்சாண்டர் போப் போன்றவர்கள் வீரகா வியத்தை நையாண்டி செய்து மேசநாட்டிலே பாடல்கள் இயற்றியுள்ளமை இங்கு மனங் கொளத்தக்கது.

புகழேந்திப்புலவரும் வில்லிபுத்தூராழ்வாரும் குலமகளிராகப் பிறந்து, கன்னி மாடத்திலே வளர்ந்து, மணமகளிராக மாறும்போது, தமயந்தியையும் திரௌபதியையும் சுயம் வரமண்டபத்திற்கு இட்டுச் செல்வது போல நட்டுவச் சுப்பையனாரும் விலைமகள் ஆடவனைத் தெரிவதைச் சுயம்வரம் என ஏளனம் செய்கிறார்!

யாழ்ப்பாணத்துச் சமூகத்திலிருந்த சீர்கேட்டை நகையாடித்திருத்துவதை நோக்க மாகக் கொண்டிருந்தது கனகிபுராணம். நாவலர்பெருமான் சுப்பிரபோதம், நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முதலாம் பிரசுரங்களிலே ஆத்திரங்கொண்டு கண்டித்த விடயத்தைச் சுப்பையாப் புலவர் நையாண்டி செய்திருக்கிறார்.

தாதுவருடப் பஞ்சத்தின் (1876) கொடுமையினால் அம்பலமான மனித வர்க்கத்தின் சகலவிதமான போலித்தனங்களையும் கண்டு பிரமனூர் வில்லியப்பபிள்ளை பஞ்சலட்சணத் திருமுக விலாசத்திலே எள்ளி நகையாடிக் கைகொட்டிச் சிரிக்கிறார். வில்லியப்ப பிள்ளை பஞ்சலட்சணத்தினை விகாரி வருடம் தைமாதம் 26 ஆம் திகதி (1900) அரங்கேற்றினார்.

கவிமணி சி. தேசிகவிநாயகம்பிள்ளை நாஞ்சினாட்டு வேளாளர் மக்களிடையே. நிலவிய மருமக்கள் தாய முறை அச்சமுதாயத்தைச் சீரழித்துக்கொண்டிருந்த வாற்றினைச் சித்திரித்துக் காட்டுவதற்காக படைத்ததுதான் மருமக்கள் வழி மான்மியம். திருவனந்தபுரத்திலிருந்து வெளிவந்த ''தமிழன்'' பத்திரிகையில் 1917 மார்ச்சு முதல் 1918 பெப்ருவரி வரை மான்மியம் வெளிவந்தது.

மருமக்கள் வழி மான்மியம் சுயசரிதை. நாஞ்சில் நாட்டிலே வேளாளர் குலத்திலே ஏழைக்குடும்பத்திலே பிறந்து பதினாறு வயதிலே ஐந்தாம் மனைவியான பெண் ஒருத்தி தன் சீவியத்திலே அனுபவித்த கஷ்டங்களையெல்லாம் எடுத்துச்சொல்லி வருந்துகிறாள். தங்களுக்குள் வழங்கும் மருமக்கள் வழி வாரிசுக்கிரமத்தை அவள் பழித்துரைக்கிறாள்.

இராமாயணத்தைப் புதுமைப் பித்தன், எம். ஆர். ராதா, புலவர் குழந்தை ஆகியோர் நாரதராமாயணம், கீமாயணம், இராவணகாவியம் என்பனவற்றிலே நையாண்டி செய்திருக்கின்றார்கள். இவை தோன்றுவதற்கான காரணங்கள் வேறுவேறானவை ஆயினும் பொது இலக்கு ராமாயணத்தைக் கேலி செய்வதேயாகும்.

பம்மல் சம்பந்த முதலியார் (1873 - 1964) எழுதிய சபாபதி சினிமா, சபாபதி துவிபாசதி, சபாபதி ஜமீன்தார், தாசிப்பெண், பிராமணனும் சூத்திரனும் அல்லது பரிஹாரம் முதலிய நாடகங்கள் அங்கத நாடகங்களாகக் கருதப்படுபவை. ''நாடோடி'', ''சாவி'', பூர்ணம் விசுவநாதன், கோமதிஸ்வாமிநாதன் இயற்றிய பல நாடகங்கள் நகைச்சுவைப் பண்பு மிக்கனவாகக் காணப்படுவன.

''எஸ். வி. வி.'', ''கொனஷ்டை'', ''கிருத்திகா'', ''தேவன்'' போன்ற கதாசிரியர்களின் ஆக்கங்களிலும் அங்கதப்பண்பினை காண முடியும். கோமளம் குமரியானது, தலையணை மந்திரோபதேசம் போன்ற முன்னோடிகள் நகைச்சுவையினை இலக்கைக் கொண்டிருந்தன.

புதுமைப்பித்தன் ''இணையற்ற இந்தியர்'' நல்லதொரு அங்கதப்படைப்பு.
''வேதம் படித்திடுவோம் வெறுங்கைமுழம் போட்டிடுவோம் சாதத்துக் காகச் சங்கரனை விற்றிடுவோம். அத்தனைக்கும் மேலல்லோ அஹிம்சைக் கதைபேசி வித்தகனாம் காந்தியினை விற்றுப் பிழைக்கின்றோம்.

இந்தியா தேசம் - அது
இணையற்ற தேசம்''

இலங்கையிலே ''தான்தோன்றிக் கவிராயர்'' அங்கதப் பண்புடைய கவிதைகள் பலவற்றை ஒருகாலத்திலே இயற்றியிருக்கிறார்.

## III

பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து சிறிதளவிலே காணப்படும் அங்கத இலக்கியம் முன்னைய நூற்றாண்டுகளிலே தேடியும் காண்பதரிதாகின்றது. வித்துவத்தருக்கும்

புலமைக் காய்ச்சலும் தலைமைத்துவம் வகித்த 14ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்திலே இம்மென எழுநூறும் அம்மென ஐந்நூறும் பாடியவர்கள் வசைபாடும் காளமேகங்களாக உலவினர். அவர்கள் நிந்தாஸ்துதியாகவும் ஸ்துதிநிந்தையாகவும் தம்மாற்றலை வெளிப்படுத்தினர். முன்னைய சோழப் பெருமன்னர் காலத்திலே பேரரசு தந்த பெருமிதவுணர்வுகள் ரசோ பாவங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கவிச் சக்கரவர்த்திகளாக உயர வழி செய்தன. அக்காலை கவியழகு கவிஞர்களை மயக்கிநின்றது. நாக்கொண்டு மானிடம் பாடாத மெய்யடியார் தம் பக்தியனுபவத்தை புலப்படுத்திய திருப்பாடல்கள் நீங்கலாகச் சமத்காரமாகச் சிற்சிலபோது பாடிய பாசுரங்களிலே நகைச்சுவைப் பண்பு ஆகியன ஓரளவு இடம் பெறுகின்றன.

களப்பிரர் ஆண்ட காலகட்டத்திற்குரிய இலக்கியங்களிலே முதன்மை பெறும் திருக்குறளிலே அங்கதமும் வசையும் உத்திகளாக இடம் பெறுதல் குறிப்பிடத்தக்கது.

O ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே கெட்டா
னெனப்படுத லன்று. ... (967)

O இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான். ... (1062)

O சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ் ... (1078)

எனும் குறட்பாக்களை,

★ நெருந லுளனொருவ னின்றில்லை யென்றும்
பெருமை யுடைத்திவ் வுலகு ... (336)

★ கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின். ... (403)

★ பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில். ... (839)

★ இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
துன்ப முருஅ வரின். ... (1052)

★ நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர் ... (1072)

★ தேவ ரனாயர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான். ... (1073)

எனும் குறட் பாக்களுடன் ஒப்பிட்டு நோக்குவார் வள்ளுவர் வசையையும் நசையையும் பொருளறிந்து பயன்படுத்துவதை உணர்வர்.

## IV

பண்டைத் தமிழ்ப் பாடல்களிலே நகைச்சுவையும் அங்கதமும் போற்றப்பட்ட அமிசங்களாகக் காணப்படுகின்றன, அகப் பாடல்களிலும் புறப் பாடல்களிலும் அங்கதப் பண்பு காணப்படுகின்றது. தலைவனின் புறவொழுக்கத்தினைக் கண்டிக்க வேண்

டிய சந்தர்ப்பங்களிலே தலைவியோ அல்லது தோழியோ அங்கதப் பாணியிலே அவ்வாறு செய்யும்போது செய்யுளின் இலக்கிய தரம் சிறந்து நிற்கின்றது.

ஒருநாள் புதல்வன் தேரோடும் தெருவிலே தனியே நின்று விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது ஒரு பெண் அங்கும் இங்கும் பார்த்துக்கொண்டு அவன் அருகே சென்று "என் உயிரே வா" என்று அழைத்துத் தூக்கிக்கொண்டாள். அப்போது அங்கு சென்ற நான் திகைத்து நின்றுவிட்டேன். பின்பு ஒரு மாதிரியாய் சுதாகரித்துக்கொண்டு அவள் நின்ற இடத்திற்குச் சென்று அவளை அணைத்து "குற்றமற்ற இளம்பெண்ணே! ஏன் பயப்படுகிறாய்? நீயும் இவனுக்குத் தாய்தான்" என்று கூறினேன். அவள் அவ் வார்த்தைகளைக் கேட்டு தாம் செய்தகளவைக் கண்டுகொண்டார் முன் உடன்பட்டு நிற்பார்போல முகத்தைக் கீழே கவிழ்ந்து கொண்டு கால்விரலால் நிலத்தைக் கீறிக் கொண்டு நாணி நின்றாள். அப்போது நான், தலைவா! அருந்ததி போன்ற அவள் உன் புதல்வனுக்குத் தாயாதல் தகும் என்று எண்ணி, அவளை விரும்பினேன்.

இது சாகலாசனார் பாடிய மருதப்பாட்டு. அகநானூற்றிலே 16 வது பாடலாக இடம்பெறுவது. பரத்தையர் சேரியிலே இருந்து திரும்பி வீட்டுக்கு வந்தபோது ஊடி நின்ற தலைவியை நோக்கித் தனக்கு வேறொரு பெண்ணையும் தெரியாது என்று ஊடல் தணிக்க உரைத்த தலைவனுக்குத் தலைவி கூறியதாக அமையும் பாடலின் பொருட்சுருக்கம் இது. தலைவனின் பொய்க் கூற்றைக் கேட்டு தலைவி கொதித்தெழுந்து வசை பாடவில்லை. அவனுடைய புறவொழுக்கத்தைக் கதை மூலம் நையாண்டி செய்கிறாள்.

இவ்வே
பீலி யணிந்து மாலை சூட்டிக்
கண்டிரா ணோன்காழ் திருத்திநெய் யணிந்து
கடியுடை வியனக ரவ்வே யவ்வே
பகைவர்க் குத்திக் கோடு நுதி சிதைந்து
கொற்றுறைக்குற்றில மாதோ வென்றும்
உண்டாயிற் பதங்கொடுத்
தில்லாயி னுடனுண்ணும்
இல்லோ ரொக்கற் றலைவன்
அண்ணலெங் கோமான் வைந்நுதி வேலே

(புற. 95)

என்பது ஔவையார் பாடல். அதிகமான் நெடுமானஞ்சியின் உயிர் நண்பர் ஔவையார். அவன் மீது தொண்டைமான் படையெடுக்க ஆயத்தமானான். அவன் படையெடுப்பைத் தடுக்க வேண்டிய நிலைமை அப்பொழுது நிலவியது. ஔவையார் தொண்டைமானிடம் தூது போனார். தொண்டைமான் தன் படையெடுப்பு ஆயத்தங்களைக் காட்டும் முகமாகப் படைக்கலச்சாலையையும் காட்ட அழைத்துச் சென்றான். ஔவையாருக்கு அரிதொரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதனை அவர் நன்கு பயன்படுத்தினார். தொண்டைமானே! இங்குள்ள படைக்கலங்கள் அலங்கரிக்கப்பட்டு, நெய்யிடப்பட்டு காவலுடன் படைக்கலச்சாலையிலே இருக்கின்றன. எம் தலைவன் வேல் நுனி சிதைந்து கொல்லன் பட்டறையிலே எந்நாளும் இருக்கிறது என்று கூறினாள் ஔவை. அதிகமான் நெடுமானஞ்சியின் வீரத்தைமெச்சும் முகமாகத் தொண்டைமான் அவனோடு போர் புரியத் தகுதி

யில்லாதவன் என்றும் ஔவையார் கூறிவிட்டார். நையாண்டிப் பண்பின் செப்பத்தின் சிறப்பினைப் புறப்பாட்டு தெளிவாக்குகின்றது.

இரத்தவெறி பிடித்த குறுநில மன்னர் தமது ஆதிபத்திய ஆசையென்ற பலிபீடத்திலே தமிழ்ப் பெருங்குடிமக்களைப் பலியிட்டுத் தமிழ்ச் சமுதாயத்தைச் சீரழித்த கதையைத்தான் புறநானூறு புலப்படுத்துகின்றது என்பார் கூற்று புனராலோசனை செய்யப் படவேண்டியது. புறப்பாடல்கள் பலவற்றிலே புலவர்கள் அரசர்களின் ''தீரச்செயல்'' களைக் கூறும்போது தரும் விபரங்களை நோக்கும் போது — தெருக்களைக் கழுதைகளைப் பூட்டி உழுது பாழ் படுத்தல், வயல்களை குதிரைகள் பூட்டிய தேர்களைக் கொண்டு அழித்தல், வாவிகளை யானைகளைக் கொண்டு சீரழித்தல், பகைவரின் பெண்களைப் பிடித்து அவர்களுடைய கூந்தலை அரிந்து அவற்றைப் போராகக் குவித்து தீ மூட்டல்— இவற்றையெல்லாம் பெருமைமிக்க செயல்களாகத்தான் ''செந்நாப்புலவர்'' கருதினாரா என்று சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

பெண்களின் கூந்தலையரிந்து போராகக் குவித்து தீ மூட்டும் வீரதீரச் செயலை எந்த மகன் போற்ற முடியும்? உண்மையிலே இத்தகைய சொல்கள் போற்றப்பட்டனவா அல்லது இகழப்பட்டனவா என்று ஆராயப் படல் வேண்டும். அப்பொழுது உண்மை புலப்படும். ●

## பேராசிரியர் சு. வித்தியானந்தன் பற்றி..........

நாடக உலகில் வித்தியின் சாதனைகள் மகத்தானவை, பல்கலைக் கழகத்தில் பதினாறு நாடகங்களைத் தயாரித்தவர் அவர். நாட்டுக் கூத்துக்களைநவீன முறையில் அரங்கேற்றிய சிறப்பு இந்நாட்டு நாடக வரலாற்றில் பொறிக்கப் படத் தகுந்தது. அவர் தயாரித்து அரங்கேற்றிய கர்ணன்போர், நொண்டி நாடகம், இராவணேசன், வாலிவதை ஆகிய நாட்டுக் கூத்துக்கள் நன்கு வரவேற்கப் பட்டுப் பாராட்டப்பட்டன. தானே நாடகங்களைத் தயாரிப்பதோடு நின்று விடாது, கிராமிய நாடக வளர்ச்சிக்குப் பல வகையிலும் உற்சாகமளித்தார். நாட்டுக்கூத்து நூல்களைப் பதிப்பித்தமை, கிராமியக் கலைஞர்களை அறிமுகப் படுத்திக் கௌரவித்தமை, நாடக கருத்தரங்குகளையும் அண்ணாவிமார் மாநாடுகளையும் நடத்தியமை முதலானவை, அந்த வகையில் குறிப்பிடத்தக்கவையாகும்.

இத்தனைக்கும் மத்தியில், வித்தி சிறந்த செயல்வீரர் என்பதற்கு உயர்ந்த எடுத்துக்காட்டாகப் பலரால் கருதப்படுவது 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகாநாடாகும். பல எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் தளர்ந்து விடாது அம் மகாநாட்டினைச் சிறப்பாக நடத்திய பெருமை அவருக்கு உரித்தானது.

பேராசிரியர் சி. தில்லைநாதன்




# ஒரே ஒரு முறை மட்டும்...

செல்வி ந. தாரணி (கவிதா)
தமிழ்த்துறை, விடுகை வருடம்
(கலைப்பீடம்)

உன்
சகோதரர்களின்
கைகள்
வெட்டப்பட்டுத் துடிக்கின்றார்
-கள்!

நீ
உன்
பாதங்களுக்கு
இறக்கைக் கட்டி
கொண்டாயா?

உன்
வீட்டுத் தெருக்களில்
புதிதாக
அகதி முகாம்கள்
பிரசவிக்கப் படுகையில்,
பாரிஸ் நகரின்
பழைய சாலைகளில்
தாஜ் மகால்
கனவுகளுடன்
வலம் வருகின்றாயா
இளைஞனே?

உன்
இனத்தின் வீடுகளும்
உன்
சகோதரர்களின்
உணர்வுகளும்
அக்கினிக்குள்
சமாதியடைகின்றது
இங்கே
ஆனால்
நீ.........?

ஏ. சி. க்குள்
புதைந்திருக்கின்றாய்
உன்
உணர்வுகளைப் போல.
உன்
நினைவுகளைக்
கொஞ்சம்
நிறுத்திப் பார்க்க
மாட்டாயா?

உன்
இனத்து

சகோதரிகளின்
கற்பு
இங்கே
சோரம்
போய்க் கொண்டிருக்கின்றது
நீ.......

கடலுக்கப்பால்
இருந்து
கண்ணகி பற்றி
கவிதை வடிக்கின்றாய்.
உன் கவிதை
கூட
உணர்விழந்து
விட்டதா
உன்னைப் போல.

உன்னையே
தன்னுள்
அத்வைதம்
ஆக்கிக் கொண்ட
அந்த
தந்தைக்கு
என்ன செய்தாய்?

அவர்
இறக்கும் முன்பே
அவருடைய
மனம்
மரணித்துப் போனது
உனக்குத் தெரிய
நியாயமில்லை.

உனக்காக
அனுப்பப் பட்ட
தந்தி
விலாசம் மாறி

உன்
'டொலர்' களிடம்
சென்று விட்டதா?
அதனால் தான்
உனக்குப் பதிலாய்
'அவை'
வந்தனவா?
உனக்குப் பதிலாய்
வந்த
உன்
தந்தியால்
உன்
தந்தையின்
பிணம் கூட
மரணித்துப் போனது.

உன்
தாயின்
பெரு மூச்சில்
காற்றுக்குக் கூட
வியர்த்து
விட்டது.

நீ.........
மின் விசிறிக்குக்
கீழே
அமர்ந்து
குளிர் காய்கின்றாய்.
உன்
எண்ணங்களுக்கு
ஜலதோஷம்
அதனால்
தான்
கடிதங்கள் கூட
ஜன்னி
கண்டு
விட்டன.

உன்னைப் பெற்றவள்
விடும்
கண்ணீரில்
தான்
உன்
சகோதரர்களின்
குருதி
கழுவப் படுகின்றது.

எரிந்து
போயிருப்பது
உன்
வீடு மட்டுமல்ல
தாயின்
மனம்
கூடத் தான்.

உன்னால்
துடைக்கப்படும்
கார்களில்
உள்ள
பனித் துளிகளை
விட

இங்கே
பன் மடங்கு
அக்கினித் துளிகள்
உன் தாயின்
கண்களில்
தெறிக்கிறதே!
எப்போது
துடைக்கப் போகின்றாய்?

ஒன்று மட்டும்
செய்
உன்
தந்தைக்குப் போல
தாய்க்கும்
தந்தி அனுப்பாதே.

ஒரு முறை
ஒரே ஒரு முறை.........
உன்னை
அவளுக்கு
அடையாளம்
காட்டிச் செல்.

## திருமணம்

★ மணம் ஒரு மாளிகை; உள்ளே சென்றவர் வெளியே வர விரும்புவர், வெளியே இருப்பவர் உள்ளே செல்ல விரும்புவர்.


- எமர்ஸன்

★ மணம் செய்வதா? செய்யாமல் இருப்பதா? — எது செய்தாலும் ஏன் செய்தோம் என்று வருந்துவாய்.

- ஸாக்கிரட்டீஸ் -

★ பணத்திற்காகவும் மணம் செய்யாதே; பணம் கையில் இல்லாமலும் மணம் செய்யாதே.

- ஆவ்பரி -



# பதிவு நவிற்சி ஓவியங்கள்

கலாநிதி ந. வேல்முருகு
முதுநிலை விரிவுரையாளர்
(புவியியற்றுறை)

கிளோட் மோனே வரைந்த 'சூரிய உதயம் : பதிவு நவிற்சி' என்னும் ஓவியத்தை விமர்சனம் செய்த லூயிஸ் லெறொய் என்னும் ஓவிய விமர்சகர் "பதிவு நவிற்சி ஓவியர்களின் ஓவியக் கண்காட்சி" எனத் தவறாகப் பெயரிட்ட நாளிலிருந்து பதிவு நவிற்சி என்னும் ஓவிய மரபொன்று ஓவிய வரலாற்றில் இடம் பெறலாயிற்று. பதிவு நவிற்சி என்னும் பதம் இன்றுவரை பெருவழக்கிலுள்ள ஒன்றாகும். பதிவு நவிற்சி என்ற இவ்வோவியப் பாணியில் அழகியல்சார்ந்த கருத்துக்களையும், அக்காலப்பகுதியின் இயல் நிகழ்ச்சிகளையும் பரக்க இனங்காணலாம். இவ்வோவிய மரபினை ஓரிரு வசனங்களில் வரையறை செய்வது மிகவும் கடினமானதொன்றாகும்.

"ஒரு ஓவியத்தின் முக்கிய பண்பாக ஒளி திகழ்கின்றது," "இயற்கையில் கோடுகள் கிடையாது". என்ற இரண்டு பிரதான கருத்துக்களைப் பதிவு நவிற்சி ஓவியர்கள் வலியுறுத்தினார்கள். தன் வாழ்நாள் முழுவதும் பதிவு நவிற்சி ஓவியனாகத் திகழ்ந்த கிளோட் மோனே மேற்கூறிய கருத்துக்களை உள்வாங்கி ஏற்றதோடு தனது ஓவியங்களில் "காற்றின் அழகினை"ச் சித்திரிப்பதில் பெரிதும் முனைந்ததைக் காணலாம்.

எடுவா மனே (1832 - 1883), போல் செசான் (1839 - 1906), பேர்த்தி மொறிசோ (1841 - 1895), கிளோட் மோனே (1840 - 1926), கமீல் பிச்சாரோ (1830 – 1903), அல்பிரட் சிச்லி (1840 - 1899), எட்கார் டெகா (1834 - 1917), ஒகுஸ்றி றென்னவா (1841 - 1919), ஆகியோருடன் மற்றும் சிலரும் பதிவு நவிற்சி ஓவியங்களை வரைந்துள்ளனர். பதிவு நவிற்சி என்னும் மரபினை எல்லா ஓவியர்களும் மனதார ஏற்காது வெவ்வேறு பாணிகள் சார்ந்த ஓவியங்களையும் வரைந்துள்ளனர். எனினும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பதிவு நவிற்சி ஓவிய மரபானது பிரான்ஸ் நாட்டில் வளரலாயிற்று.

உண்மையில் பதிவு நவிற்சியாளர்கள் ஒரு சிந்தனைக் கூட்டத்தினராகச் செயற்படாது குழுக்களாகச் செயற்பட்டனர். இதனால் இவர்களுக்கென இறுக்கமான விதிமுறைகள் இருக்கவில்லை. இக்குழுவினர் தமது ஓவியங்களை ஒன்றாகக் காட்சிப்படுத்தியதோடு ஓரளவு ஒரே வகையான பாணியையும் பின்பற்றினர். இவர்களில் சிலர் ஒன்றாக இணைந்தும் செயலாற்றினர். இத்தகைய மூன்று குழுக்கள் இயங்கியமைக்கான சான்றுகளை ஓவிய விமர்சகர்கள் எடுத்துக்காட்டுவர்;

1. சென்ற் சைமன் குழுவினரில் பவுடின், ஜோங்கின்ட், கோபெட் ஆகியோர் ஒன்றாக இயங்கினர்.

2. போல் செசான், கமீல் பிச்சாரோ போன்றோர் இரண்டாவது குழுவாகக் கருதப்பட்ட அகடமி சுயிசி குழுவில் அங்கம் வகித்தனர்.

3. 'நால்வர் குழு' என அழைக்கப்பட்ட குழுவில் பசிலி, அல்பிரட் சிச்லி, ஒகுஸ்ற் றென்னவா, கிளோட் மோனே ஆகிய நால்வரும் இயங்கினர்.

பெரும்பாலான பதிவு நவிற்சி ஓவியர்களும் இயற்கைவாத நாவலாசிரியர்கள், எழுத்தாளர்களான எமிலி சோலா, மாப்பசான் போன்ற எழுத்தாளர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். சிறப்பாக எமிலிசோலாவுடன் இவ்வோவியர்கள் நெருங்கிய நண்பர்களாகத் திகழ்ந்ததோடு ஒரே விதமான சிந்தனையுடையவர்களாகவும் விளங்கினர். அக்காலக்கட்டத்தில் பதிவு நவிற்சிப் பாணியானது புரட்சிகரமான ஒரு கலைவடிவமாகவும் கருதப்பட்டது. உண்மையில் இவ்வோவியர்கள் புரட்சிகர அரசியல் சித்தாந்தம் உடையவர்களாகத் திகழவில்லை. மெய்யியலில் எடுத்துக் காட்டப்பட்ட நேர்க்காட்சி வாதம் என்னும் கருத்துகளுக்கும் பதிவு நவிற்சியாளர்களின் கருத்துகளுக்குமிடையே ஓரளவு ஒத்த கருத்துக்கள் காணப்பட்டன. நவீன மனிதனுடைய அன்றாட வாழ்க்கைச் சூழலைப் பதிவு நவிற்சியாளர்கள் மிக்க ஆர்வத்தோடு சித்திரிக்க முனைந்தனர். இயற்கையில் காணப்படுவனவற்றை மனதில் பதித்து ஓவியங்களாகத் தீட்டுவதே தனது முக்கிய பணி என செசான் மறைவின்றி எடுத்துக் காட்டியதுபோல 1912 ஆம் ஆண்டில் கிளோட் மோனேயும் ''இயற்கையின் முன் நான் எதனை அனுபவிக்கின்றேனோ அதனை என் அறிவுக்கெட்டியவாறும் புலன்களால் உணர்ந்தவாறும் எடுத்துக் காட்ட முனைந்துள்ளேன்'' என்று மிகத் துல்லியமாகக் கூறியுள்ளார்.

இயற்கையின் பல்வேறு அம்சங்களையும் பதிவு நவிற்சி ஓவியர்கள் ஓவியங்களாகத் தீட்டியுள்ளனர். ஓயாது அலைமோதும் கடற்கரைக் காட்சிகளும் அக்கரையோரங்களில் அலைகள் மோதும் கற்பாறைகளையும் இவ்வோவியர்கள் வரைய முற்பட்டதோடு குறுகிய நேரத்தில் மாற்றமடையும் கட்புலக் காட்சிகளையும் ஒளி, வண்ணம் என்பவற்றிற்கேற்ப தத்ரூபமாகப் பிரதி செய்வதில் கூடிய கவனம் செலுத்தினர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து பிரான்சின் சமூக, பொருளாதார அரசியல் கலாசார வாழ்விலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டதோடு அவை கலைஞர்களையும் ஓவியர்களையும் வெகுவாகப் பாதித்தன. பிரெஞ்சுப் புரட்சியின் பின்னர் ஓவியர்களின் சமூக அந்தஸ்திலும் வாழ்க்கை நிலைமைகளிலும் பெருமாற்றங்கள் ஏற்பட்டன. பெருநகரங்கள் வளர்ச்சியுற்றதோடு போக்குவரத்து வசதிகளும் அதிகரித்தன. பெருநகர வாழ்வில் சலிப்புற்ற கலைஞர்களும் மக்களும் கிராமங்களையும் அழகிய இயற்கைக் காட்சிகளையும் கண்டுகளிக்கக்கூடிய விதமாக துரித போக்குவரத்து வசதிகள் வழிவகுத்துக் கொடுத்தன. ஓவியர்கள் அடிக்கடி தமது நண்பர்களை ஓவியப் பட்டறைகளிலும் சிற்றுண்டிச் சாலைகளிலும் சந்தித்து அளவளாவிக் கருத்துக்களைப் பரிமாறக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டன. வெளிக்களங்களுக்குச் சென்று நவீன வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களையும் இவ்வோவியர்கள் படங்களாக வரைய முற்பட்டனர். சிறப்பாக பரிஸ் நகர வாழ்வினையும், ஆங்கிலக் கால்வாயின் கரையோரங்களையும் வடகடலின் கரையோரப் பகுதிகளையும் சீன், ஓய்சி ஆற்றுக் கரையோரங்களில் அமைந்திருந்த கிராமங்களையும் சித்திரிக்க முனைந்ததோடு விரைவில் மாறுகின்ற வெவ்வேறு நிலக்காட்சிகளையும் வரைந்தனர். மொனே விரைவில் சிதைவுறும் காட்சிகளான மிதக்கும் பெரிய பனிக்கட்டிப் பாளங்களையும் மூடுபனி, பனிக்கால வெதுவெதுப்புவேளை, பார்வையை மறைக்கும் படலக் காட்சிகளையும் தனது ஓவியப் பொருளாக்கினார். அத்தோடு இவ்வோவியர்கள் புதிதாக அமைக்கப்பட்ட இரும்புப் பாலங்களையும் புகையிரத நிலையங்களையும் வரைவதில் இன்பம் கண்டனர். இவ்வோவியங்களில் உலோக அமைப்புக்கள் நீராவியாலும் இயந்திரங்களின் புகையினாலும் மூடி மறைக்கப்படும் காட்சிகள் தத்ரூபமாகச்

சித்திரிக்கப்பட்டன. சந்தைகளிலும் புகையிரத நிலையங்களிலும் இரும்புடன் பொருத்தப்பட்ட கண்ணாடியன்னல்களும் செயற்கைச் சுவர்களும் ஒளியையும் காற்றினையும் ஊடுருவச் செய்ததோடு இவர்கள் தீட்டிய ஓவியங்களுக்கும் புதிய அழகினையும் பரிமாணத்தினையும் வழங்கின. இயற்கை நிலத்தோற்றங்களை வரையும்போது தாம் விரும்பிய இடங்களைத் தெரிவு செய்து சிறிய ஓவியங்களுக்குள் காட்சிகளை அடக்க முற்பட்டனர். அல்பிரட் சிச்லி, ஒகுஸ்ற் றென்னவா, கமீல் பிச்சாரோ ஆகியோர் தீட்டிய ஓவியங்கள் இலகுவான கனபரிமாணம் கொண்டவையாகவும் ஒத்திசைவு கொண்டவையாகவும் விளங்கின. அத்தோடு மோனே, றென்னவா போன்றோர் மத்தியதர வர்க்கத்தினரின் நகர வாழ்வினையும் அவர்களின் பொழுதுபோக்குகளையும் பரிஸ் நகரின் உபநகர பொழுதுபோக்குக் களியாட்டங்களையும் சித்திரித்தனர். பிச்சாரோவின் ஓவியங்கள் பரிஸ் நகரை அடுத்திருந்த சிறிய கிராமப்புறங்களில் வாழ்ந்த விவசாயிகளின் வாழ்க்கையைச் சித்திரிப்பனவாக அமைந்தன. 1870 களில் எடுவா மனே, எட்கார் டெகா, ஒகஸ்ற் றென்னவா ஆகியோர் நகர்ப்புறக் களியாட்டங்களை ஓவியங்களாக்கினர். பெரும்பாலும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட நிலக்காட்சிகள் ஓவியப் பொருள்களாயின.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல்துறைகளிலும் புதிய ஆய்வுகளும் புதிய கண்டுபிடிப்புக்களும் தமது செல்வாக்கைச் செலுத்தின. சிறப்பாக இரசாயனம், பௌதீகம் ஆகிய அறிவியல்களில் அநேக நூல்கள் பிரசுரிக்கப்பட்டன. இவ்வறிவியல்களின் பெறுபேறுகள் ஓவியக்கலையிலும் பெருமாற்றங்களை ஏற்படுத்தின. உதாரணமாக யூஜின் செவ்றியல், ஹோர்மன் ஹெம் ஹோற்ஸ், ஜேம்ஸ் மக்ஸ்வெல், ஒக்டன் றூட், போன்ற விஞ்ஞானிகளின் கருத்துக்கள் பதிவு நவிற்சி ஓவியங்களை வெகுவாகப் பாதித்தன. கட்புலனோடு தொடர்புடைய ஒளி. வண்ணம் என்பன பற்றிய புதிய கருத்துக்கள் இவ்வோவியர்களது ஓவியப் பாணியையும் மாற்றி அமைத்தன. ஒளியே ஒரு பொருளின் தோற்றத்தையும் நிறத்தினையும் நிர்ணயிப்பதோடு அசைவு, காலம், மாற்றங்கள் என்பவற்றையும் நிர்ணயிக்க உதவுபவை என்று பதிவு நவிற்சியாளர்கள் உணரத் தொடங்கினர். இதனால் ஒரு பொருளின் நிறமானது அடிக்கடி மாறும் தன்மையுடையது என்பதனை உணர்ந்தனர். சிறப்பாக காணப்படும் பொருளில் விழுகின்ற ஒளியின் தன்மையோடு ஏனைய பொருட்களில் இருந்து சிதறும் ஒளியினாலும் வண்ணங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. சூழலில் உள்ள வண்ணங்களின் தன்மைக்கேற்பவும் ஒளி நிர்ணயிக்கப்படுகின்றது. பெரும்பாலான பதிவு நவிற்சி ஓவியர்கள் நிழல்கள் சாம்பல் நிறமாகவோ அல்லது கரிய நிறமாகவோ இல்லாததை இனங் கண்டதோடு அவை பல வண்ணங்களைக் கொண்டவையாக இருப்பதையும் கண்டு கொண்டனர். உதாரணமாக ஒரு மஞ்சள் நிறப் பொருளின் நிழலானது சற்று செங்கருநீல நிறங்கொண்டு விளங்கும். இதனால் இவ்வோவியர்கள் வண்ணத் தட்டுகளில் நிறங்களைக் கலக்காது வண்ணப் பொருட்கள் வைக்கப்படும் குழாய்வடிவக் கொள்கலன்களிலிருந்து நேரடியாக மஞ்சள், சிவப்பு, நீலம் முதலான முதனிலை வண்ணங்களை தீட்டினர். அத்தோடு வண்ணங்களை அருகருகாகத் திட்டுக்களாகத் தீட்டுவதன் மூலம் ஒளி நயம் ஏற்படுவதை நன்கு உணர்ந்தனர். இவ்வாறு மஞ்சள், செம் மஞ்சள், குருதிச் சிவப்பு, சிறிது நீலம் கலந்த திண் சிவப்பு, செங்கருநீலம், நீலம், பச்சை ஆகிய ஏழு நிறங்களையும் தாராளமாகப் பயன்படுத்தினார்கள். இவை கட்புலனில் போலி மருட்சியை உண்டாக்கி நிறச் சேர்க்கையை ஏற்படுத்தின. இதனால் உண்மையில் நிறங்கள் ஒன்றோடொன்று கலக்கப்படாமலே பார்வையாளனின் கட்புலனால் கலக்கப்பட்டன. இதனால் இவ்வோவியங்களை மிக அருகில் இருந்து பார்க்கும் போது நன்கு ரசிக்க முடியாது

சற்றுத் தொலைவில் இருந்து பார்க்கும் போது நிறங்கள் ஒன்றுடன் ஒன்று கலக்கும் உணர்வு ஏற்படும்.

பதிவு நவிற்சி ஓவியர்களால் இவ்வாறு உன்னத படைப்புக்கள் உருவாக்கப்படலாயின. பார்வையாளருக்கு மலைப்பினை உண்டாக்கக் கூடிய விதத்தில் வண்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு பார்வைக்குரிய உண்மைகளும் பதிவாகின. இவ்வோவிய முறைகளால் முறைசார் கூட்டமைவு (உறுப்பளவமைதி) ஏற்பட்டதோடு அவை நுட்ப வேறுபாடு கொண்டவையாகவும் நுண்ணயத்திரிவு கொண்டவையாகவும் விளங்கின. பதிவு நவிற்சி ஓவியங்களில் நூற்றுக் கணக்கான ஒழுங்கற்ற தூரிகையின் கீற்று வரைகள் காணப்படுவது வழக்கம். இவை ஓவியத்தின் நளினத்தை மேலும் அதிகரிக்கச் செய்தன. மாறுகின்ற காட்சிகளைத் தீட்டிய காரணத்தால் சில ஓவியர்கள் சில காட்சிகளைப் பதினைந்து நிமிடங்களுக்கு மேல் வரைய முடியாமற் போனதும் உண்டு. அதே இயற்கை நிலைமை பிறிதொரு நாளில் நிலவும் போது தொடர்ந்து வரையக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டதுமுண்டு இதனால் ஒரு ஓவியத்தைப் பூர்த்தி செய்வதற்குப் பல நாட்கள் தேவைப்பட்டதுமுண்டு.

பதிவு நவிற்சி ஓவியர்கள் குழுக்களாக இயங்கிய காரணத்தால் சிலவேளைகளில் ஒரே காட்சி வெவ்வேறு ஓவியர்களால் வெவ்வேறு ஓவியங்களாக வரையப்பட்டது. உதாரணமாக 1869 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் மோனேயும், ரென்னவாவும் லா கிறெனூரயிலியர் எனும் இடத்தில் பல ஓவியங்களை வரைந்தனர். 1872 ஆம் ஆண்டிலிருந்து 1878 ஆம் ஆண்டு வரை மோனே வாழ்ந்த ஆர் ஜென்ரியுல் என்னும் இடத்திற்குப் பல ஓவியர்கள் சென்று ஓவியங்களை வரைந்தனர். இதே போன்று 1872 - 1882 வரை பிச்சாரோ வாழ்ந்த பொன்ரொயிஸ் என்னும் இடத்திற்குப் பல ஓவியர்கள் விஜயம் செய்து பல காட்சிகளைத் தமது ஓவியங்களாகத் தீட்டினர். மோனே, ரென்னவா, பிச்சாரோ ஆகிய ஓவியர்கள் தம் வாழ்நாள் முழுவதும் நெருங்கிய நண்பர்களாக வாழ்ந்தமையும் மனங் கொள்ளக்கூடிய ஒன்றாகும். இக் காரணங்களால் 1874 - 1880 வரை வீறார்ந்த பதிவு நவிற்சி ஓவியக் காலமெனக் கலை விமர்சகர்கள் கருதுவர்.

1874 ஆம் ஆண்டிலிருந்து 1886 ஆம் ஆண்டு வரை பதிவு நவிற்சி ஓவியர்களும் ஏனைய ஓவியர்களும் சேர்ந்து எட்டு ஓவியக் கண் காட்சிகளை முறையே 1874, 1876, 1877, 1879, 1880, 1881, 1882, 1886 ஆம் ஆண்டுகளில் நடாத்தினார்கள். முதலாவது ஓவியக் கண் காட்சியில் மோனே, பிச்சாரோ, ரென்னவா, சிச்லி, டெகா செசான், போதி மொறிசொற், ஆகியோரின் ஓவியங்கள் காட்சிப்படுத் தப்பட்டன. இவற்றுள் டெகா பேர்த் மொறிசொற், பிச்சாரோ ஆகியவர்களின் ஓவியங்கள் மாத்திரமே 1886 இல் நடைபெற்ற எட்டாவது கண்காட்சியில் இடம் பெற்றன. 1886 ஆம் ஆண்டுக் கண்காட்சியில் புதிய இளம் ஓவியர்களான கோகான் (1848 - 1903), சியோரா (1859 - 1891), சின்யாக் (1863 - 1935) ஆகியோரின் ஓவியங்களும் காட்சிப்படுத்தப்பட்டன.

பதிவு நவிற்சி ஓவியர்களில் கிளோட் மோனே மாத்திரம் தன் வாழ்நாள் முழுவதையும் இவ்வோவிய மரபுக்கு அர்ப்பணித்துள்ளார். இக்கருத்தினை பிலிக்ஸ் பெனியோன், ஜோர்ஜ் கிரப்பே போன்ற விமர்சகர்கள் சிலாகித்துக் கூறியுள்ளனர். மோனே தனது பதினேழு வயதில் இருந்து இறக்கும் வரை சிறந்ததோர் பதிவு நவிற்சியாளனாகத் திகழ்ந்தமைக்கு கடின உழைப்பும், அவரின் அனுபவங்களும் முக்கிய காரணங்களாகும். பல தசாப்தங்களாக மோனே தனது ஓவியங்களைத் தீட்டிய போது 1889 ஆம் ஆண்டின் பின்னரே பெரும்புகழீட்டக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டன இவ்வாண்டில் றொடின் என்னும் உலகப் புகழ்பெற்ற சிற்பியுடன் இணைந்து கண்காட்சி ஒன்றை நடாத்திய தன் பின்னர் புகழும் வசதியான வாழ்க்கைக்கு ஏற்ற வருமானமும் ஈட்டக்கூடிய வாய்ப்புக்கள் உருவாகின. 1895 ஆம் ஆண்டிலிருந்து மோனேயின் புகழ் ஐக்கிய அமெரிக்காவிலும் பரவலாயிற்று.

மோனே வரைந்த ''தொடர்'' ஓவியங்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. பல்வேறு இடங்களிலும் வெவ்வேறு காலப் பகுதிகளிலும் இத்தொடர் ஓவியங்கள் வரையப்பட்டுக் காட்சிப் படுத்தப்பட்டன. 1891 ஆம் ஆண்டில் 'வைக்கல் போர்' என்ற பதினைந்து தொடர் ஓவியங்கள் காட்சிப்படுத்தப் பட்டபின்னர் இவ்விதமான தொடர் ஓவியங்களை வரைவதில் ஆர்வம் காட்டினார். இத்தொடர் ஓவியங்கள் ஒரே பொருளை மாறும் ஒளிக்கேற்ப சித்திரித்தன. மெய் வருத்தம் பாராது பனி, காற்று, மழை போன்ற இயற்கைத் தடைகள் ஏற்பட்டபோதும் தன் மன வலிமையினால் கண்ணி வைப்பவர் போன்று மோனே தன் ஓவியங்களைத் திட்டியதாக மாப்பசான் விதந்து கூறியுள்ளார். 1892 - 1894 வரை தீட்டிய இருபதிற்கும் மேற்பட்ட ரூவென் தேவாலயத்தின் புறத்தோற்றம் என்னும் தொடர் ஓவியங்களும் வோட்டர்லூ பாலத்தின் பதினாறு ஓவியங்களும் 1900 ஆம் ஆண்டுகளில் தீட்டத் தொடங்கிய நூற்றுக்கும் மேற்பட்ட தேம்ஸ் நதியின் தொடர் ஓவியங்களும், தனது வீட்டுத் தோட்டத்தில் அமைந்திருந்த அல்லித் தடாகத்தின் தொடர் ஓவியங்களும் உலகப் பிரசித்தி பெற்றவை. இத்தொடர் ஓவியங்களை வரைவதற்கு ஏற்றவிதமாக கொண்டு செல்லக்கூடிய ஓவிய உபகரணங்கள் அடங்கிய பெட்டிகளும் இவருக்குப் பெரிதும் உதவின. லண்டன் மாநகரின் தேம்ஸ் நதிக் காட்சிகளை வரைவதற்கென லண்டன் மாநகரத்திற்கு மாரிகாலங்களில் பல தடவைகள் பிரயாணம் செய்தார். சவோய் ஹோட்டலின் ஐம்பதாவது மாடியிலிருந்து லண்டன் தேம்ஸ் நதியில் அமைக்கப்பட்டிருந்த மூன்று பாலங்களையும் கோதிக் கட்டிடக்கலைப் பாணியில் அமைந்த வெஸ்ட் மினிஸ்டர் கட்டிடத்தையும் தொடர் ஓவியங்களில் சிறைப்படுத்தினார். இத்தொடர் ஓவியங்களில் லண்டன் மாநகரின் எழிலினை மூடுபனிக்கூடாக என்றும் காணக்கூடிய விதமாக இவ்வோவியங்கள் திகழ்கின்றன. இத்தலைசிறந்த பதிவு நவிற்சியாளனின் 'அல்லித் தடாகம்' என்னும் தொடர் ஓவியங்கள் ஓவிய வரலாற்றில் திருப்புமுனையாக அமைபவை. மிகச் சிறந்த இவ்வோவியங்களில் வண்ண அமைதியும், ஓவியச் சிறப்புக்களும், கவிநயம் மிக்கவையாகக் காணப்படுகின்றன. வேறு விதமாகக் கூறுவதாயின் இவ்வோவியங்கள் வண்ணக் கவிதைகள் எனக் கூறத்தக்கவை. இருபதாம் நூற்றாண்டில் இவருடைய இக்கலைப் படைப்புக்களை கண்டிஸ்கி (1866 - 1944), ஜக்சன் போலக் (1912 - 1956) போன்ற நவீன ஓவியர்கள் பெரிதும் விதந்து கூறியுள்ளார்கள். இவை சூட்சும வெளிப்பாட்டு நவிற்சியினருக்கு ஆதர்ச சக்திகளாகத் திகழ்ந்துள்ளன.

பதிவு நவிற்சியாளர்களின் ஓவியங்கள் இந்நூற்றாண்டில் பலராலும் அறியப்பட்ட ஓவியங்களாகவும், மிகவும் விரும்பப்படும் ஓவியங்களாகவும், உலக ஓவிய வரலாற்றில் மிகவும் இலகுவாக யாவராலும் விளங்கக் கூடிய ஓவியங்களாகவும் விளங்குகின்றன. இக்காரணங்களால் ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் பல செல்வந்தர்கள் இவ்வோவியங்களைத் தமது உடமைகளாகச் சேகரித்துள்ளனர். ஒளிப்படக் கருவிகள் மூலம் பல்வேறு காட்சிகளை ஒரு கணத்தில் சிறைப்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் இருந்தபோதும் பதிவு நவிற்சியாளர்களின் வண்ண ஓவியங்கள் காலத்தைவென்று வாழ்பவையாகத் திகழ்கின்றன. சூரிய ஒளியினைச் செவ்வையாகத் தீட்ட முடியாவிடினும் ஏதோ ஒரு வகையில் அவை பதிவு செய்யப்பட வேண்டியவை எனப் பதிவு நவிற்சி ஓவியர்கள் நன்கு உணர்ந்திருந்தனர்.

இவ்வோவியர்களது ஓவியங்களைப் பல விற்பனையாளர்கள் காலத்துக்குக் காலம் சந்தைப்படுத்த முயன்றுள்ளனர். 1850 களிலும் 1860 களிலும் இவ்வோவி

யங்களுக்கான சந்தை விலைகள் மிகக் குறைவாக இருந்தன. ஓவியர்களின் நண்பர்களே இவற்றை மலிவான விலை கொடுத்து வாங்கினர். லண்டன், பரிஸ், நியூயோக் போன்ற பெருநகரங்களில் ஓவியக் கண்காட்சிகள் நடாத்தப்பட்டதன் பின்னர் படிப்படியாக ஓவியங்களின் பொருளாதார மதிப்பு அதிகரிக்கலாயிற்று. 1880 களின் பின்னர் டுறான்ட் ரூவெல் போன்ற விற்பனையாளரின் தொடர்பும் புதிய செல்வந்தர்களின் தொடர்புகளும் பதிவு நவிற்சி ஓவியங்களின் செல்வமதிப்பினை மேலும் அதிகரிக்கச் செய்தன.

காலத்துக்குக் காலம் வெவ்வேறு விமர்சனங்கள் போற்றியும் இகழ்ந்தும் எழுதப்பட்டுள்ளன. சிலர் இவ்வோவிய மரபினைத் தூற்றிய போதும் இன்று இவ்வோவியங்கள் பெரும் அரும் பொருட்களாகக் கருதப்படுன்றன. ஓவியத்தில் நவீனத்துவம் உருவாவதற்கு இவ்வோவிய மரபு அத்திவாரம் இட்டது எனலாம். ஓவியனின் ஆளுமைக்கு இவ் ஓவியங்கள் வடிகால்களாகத் திகழ்ந்தன. பதிவு நவிற்சியாளர்களின் பின்னர் ஓவியச் செல்நெறியாக வளர்ச்சியடைந்த போவிஸ் பாணியினரும், புதிய பதிவு நவிற்சியினரும், கனவடிவு நவிற்சியினரும் இப்பதிவு நவிற்சி ஓவியப் பாணியிலிருந்து பல புதிய நுட்பங்களைக் கற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டன.

பிரான்ஸ் நாட்டில் மாத்திரம் உத்வேகத்துடன் வளர்ச்சியடைந்த பதிவு நவிற்சி ஓவியப்பாணியானது ஏனைய நாடுகளில் அதிகம் தாக்கங்களை ஏற்படுத்தாத போதும் இங்கிலாந்தில் பிலிப் வில்சன் ஸ்ரீர் (1860 - 1942), ஜேர்மனியில் மக்ஸ் லீபேர்மன் (1847 – 1935), ஐக்கிய அமெரிக்காவில் சில்டி ஹசாம் (1859-1935) போன்ற ஓவியர்களது ஓவியப் பாணிகளை ஓரளவுக்கேனும் பாதித்துள்ளன.

## மனோதைரியம்

★ பலவீனருடைய பாதையில் தடையாயிருக்கும் கல் பலமுள்ளவருடைய பாதையில் படிக்கல்லாய் இருக்கும்.

- கார்ல்லைல் .. -

★ மனோதைரியத்தை இழந்தாலன்றி எவனையும் எந்தக் காலத்திலும் உண்மையிலேயே தோற்கடிக்கப்பட்டான் என்று கூற இயலாது.

- ஆவ்பரி -

# இயற்கை அளிக்கும் ரகம், இதயம் களிக்கும் சுகம்!



செல்வன் எம். வை. எம். அலி
இரண்டாம் வருடம் (கலைப் பீடம்)

கரையோடு வந்து மோதிக்,
கலக்கின்ற அலையைப் பாரும்!
இரைதேடிச் சிறக சைத்து,
எழுகின்ற குயிலைப் பாரும்!
விரைந்தோடிக் கடலில் சேர,
வருகின்ற நதியைப் பாரும்!
இறையோனின் அருளாம், இந்த
இயற்கையைத் திரும்பிப் பாரும்!

தேன்சிந்தும் பூக்க ளெல்லாம்,
தருகின்ற வதனம் பாரும்!
மீன்துள்ளிப் பாய்ந்து வந்து,
முகர்கின்ற நாணல் பாரும்!
மான்ரண்டு ஜோடி சேர்ந்து,
மேய்கின்ற வெளியைப் பாரும்!
வான்மீது வெண்ணி லாவும்,
வருகின்ற அழகைப் பாரும்!

செந்தாழம் பூவின் வாசம்,
தருகின்ற சுகத்தைப் பாரும்!
சிந்தாத தேனைத் தேக்கிச்,
சிவந்துள்ள கனியைப் பாரும்!
அந்தாதி பாடக் கேட்ட,
அழகான சிகரம் பாரும்!
விந்தைகள் கோடி செய்து,
வியப்பூட்டும் இயற்கை பாரும்!

கவலைகள் சுமந்த வானில்,
கண்ணீராய் மழையைப் பாரும்!
தவளைகள் இசையெ ழுப்பித்,
தலைநீட்டும் எழிலைப் பாரும்!
பவளங்கள் போன்று கண்ணைப்
பறிக்கின்ற மின்னைப் பாரும்!
சுவனத்தை ஒத்த காட்சி,
சுமந்திட்ட இயற்கை பாரும்!

சோலைகள் சுமந்த பூவில்,
சுகங்காணும் வண்டைப் பாரும்!
வாழைகள் விரித்த தண்டை,
வளைக்கின்ற தென்றல் பாரும்!
பாலைகள் பூத்த தென்னை,
விரித்துள்ள நிழலைப் பாரும்!
லீலைகள் புரியு மிந்த,
இயற்கையைத் திரும்பிப் பாரும்!

பொன்னந்தி மாலை நேரம்,
பொழிகின்ற அழகைப் பாரும்!
செம்மஞ்சள் பூசி நிற்கும்
செந்தூர வானைப் பாரும்!
பண்பாடி வானம் பாடி,
பறக்கின்ற திசையைப் பாரும்!
கண், கண்ணை மறக்கும் வண்ணம்,
கனிவூட்டும் இயற்கை பாரும்!

**சிந்திக்க சில துளிகள்**

வீரன் விழலாம், ஆனால் பணியமாட்டான்

— **லத்தீன் பழமொழி**

பகைவனை அஞ்சினால் பலம் போய்விடும், அது
பகைவனுக்கு பலத்தை அளிக்கும்

— **ஷேக்ஸ்பியர்**

# செயலாளர் ஏட்டிலிருந்து. . . .

**1926 ஆம்** ஆண்டில் கணிதப் பேராசிரியர் அடங்காத்தமிழன் சி. சுந்தரலிங்கம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, இடைஇடையே தவிர்க்க முடியாமல் செயற்பாடற்றுப் போய், வெட்ட வெட்டத் தழைக்கும் மரம் போல மீண்டும் மீண்டும் எழுந்து வீறு நடைபோடும் எமது தமிழ்ச் சங்கத்தின் 59 ஆவது நிர்வாகக் குழுவில் செயலாளராகப் பணியாற்றக் கிடைத்தமையை நான் ஒரு பாக்கியமாகவே கருதுகிறேன்.

பல்கலைக்கழகத்தில் தனியே ஏட்டுக்கல்வியுடன் நின்று விடாது மாணவர் தமது கலைத்திறமையை வளர்த்தெடுத்துக் கொள்ளக் களம் அமைத்துக் கொடுப்பதில் எமது சங்கம் என்றுமே பின்நின்றதில்லை. அதே வேளை பல கலை நிகழ்ச்சிகளூடாக எமது மாணவரிடையே எமது கலை/ கலாச்சாரப் பண்பாட்டு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் எமது சங்கம் முயற்சி செய்தே வந்துள்ளது.

இந்த வகையில் கடந்த காலங்களைப் போலவே எமது நிர்வாக சபையும் பல கலை கலாச்சார நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து நடத்தியது. அவற்றுள் சிலவற்றை இங்கு தொகுத்துத் தரலாம் என எண்ணுகிறேன்.

## 3 - 9 - 92: கவியரங்கம்

எமது நிர்வாகக் குழு பொறுப்புகளைக் கையேற்று நடத்திய முதலாவது நிகழ்ச்சி இதுவாகும். "பொன் விழாக் காணும் பல்கலைக் கழகம்" என்ற தலைப்பில் எமது பல்கலைக் கழகத்தின் 50 ஆண்டு பூர்த்தியை குறிப்பதற்காக இக் கவியரங்கம் ஒழுங்கு செய்யப்பட்டது. கலாநிதி க. துரைமனோகரன் தலைமை தாங்கினார். செல்வன். எஸ், குகரூபன் பொறியியல் (பீடம்), செல்வன். K. M. அப்துல் சமது (கலைப் பீடம்), செல்வன். எம். அகமட் டீன் (கலை), செல்வன். மு. மலிக்கான் (கலை) ஆகிய கவிஞர்கள் தமது ஆக்கங்களை சமர்ப்பித்தனர். செல்வி. ஜீவகவி (கலை), எழுதிய கவிதையை செல்வி. அம்பிகை வேல்முருகு (கலை) வாசித்தார்.

## 11 - 10 - 93 கலைவிழாவும் இளங்கதிர் வெளியீடும்.

எமது சங்கத்தின் வருடாந்த முக்கிய நிகழ்வாகிய கலைவிழா காலையமர்வு மாலையமர்வு என இரு பகுதிகளாக நடைபெற்றது. காலையமர்வு தமிழ்ச் சங்கக் கொடியேற்றலுடன் ஹெட்டியாராச்சி கலையரங்கில் காலை 9.30 மணியளவில் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமானது. "இளங்கதிர் ஒளியால் இவ்வையகம் விளங்க" என்ற தலைப்பில் கலாநிதி க. துரைமனோகரன் தலைமையில் கவியரங்கம் முதலில் நடந்தது. செல்வன் ராஜன் நசூர்தீன் (கலை), செல்வன் க. மணிவண்ணன் (பொறியியல்) செல்வி, மரீனா இல்யாஸ் (கலை), செல்வி. சுல்ஹறா பீபீ (கலை) ஆகியோர் கவியுரைத்தனர், அதனையடுத்து "தமிழ்ச் சங்கத்தின் பாதையில்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. பேராசிரியர் சி, தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் திரு. இ. சிவகுருநாதன் (பிரதம ஆசிரியர் / தினகரன்) திரு. செ. குணரத்தினம்

(தலைவர் / கொழும்பு தமிழ்ச் சங்கம்) திரு. ஆ. சிவநேசச்செல்வன் (பிரதம ஆசிரியர். வீரகேசரி) ஆகியோர் கலகலப்பான தமது பழைய நினைவுகளைப் பார்வையாளருடன் பகிர்ந்து கொண்டனர்.

மாலையமர்வு பொறியியல் பீட E. O. E. பெரெய்ரா அரங்கில் நடைபெற்றது, மங்கள இசையுடன் மாலை 5.00 மணிக்கு ஆரம்பமான இவ்விழாவில் அடுத்து குமாரி ரொணி டொமினிக் அவர்களின் மாணவிகளின் பரத நாட்டியம் இடம் பெற்றது. பேராசிரியர் சி. தில்லைநாதனின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பேராசிரியர் A. S. குலசூரிய (கலை) பேராசிரியர் L. திலகரட்ண (பல் மருத்துவ பீடம்) பேராசிரியர் W. P. ஜெயசேகரா (பொறியியல்) பேராசிரியர் S. மகாலிங்கம் (பொறியியல்) பேராசிரியர் S. .T பெர்னான்டோ (விலங்கு விஞ்ஞானம்) பேராசிரியர் H. A. அபோன்சோ (மருத்துவம்) ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் ''இளங்கதிர்'' வெளியிட்டு வைக்கப்பட்டது. அதன் முதல் பிரதியை திரு. முத்தையாJ. P. அவர்களும் திரு. கே. நல்லசாமி அவர்களும் பெற்றுக் கொண்டனர். அதனையடுத்து செல்வன். பா. நிர்மலராஜனின் ''விடியலைத்தேடி'' என்ற நாடகமும் செல்வன். சி. சிவானந்தனின் ''அவலங்கள்'' என்ற நாடகமும் இடம் பெற்றன.

## 23 - 10 - 92 வாலிவதை ஒளிப்பதிவு

எமது சங்கத்தின் 91/92 ஆம் ஆண்டு நிர்வாக சபையினரால் தயாரிக்கப்பட்ட ''வாலிவதை'' என்ற நாட்டுக் கூத்து இலங்கை தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுவதற்காக ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்தால் ஒளிப்பதிவு செய்யப்பட்டது. எமது பல்கலைக்கழக, E. O. E. பெரெய்ரா அரங்கு, கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபம், கண்டி இந்து கலாச்சார மண்டபம் ஆகிய இடங்களில் மேடையேற்றப்பட்ட இக்கூத்து தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்பட்ட போது மக்கள் மத்தியில் பெரு வரவேற்பைப் பெற்றது. இக்கூத்தை செல்வன். ஜொய்ஸ் டெல்பின் குரூஸ் நெறியாள்கை செய்திருந்தார்.

## 16 - 12 - 92 பேராசிரியர் கைலாசபதி நினைவு விழா

பேராசிரியர் கைலாசபதியின் 10 ஆம் ஆண்டு நினைவு விழாவும் நூல்கள் வெளியீடும் ஹெட்டியாராச்சி கலையரங்கில் பேராசிரியர் சி, தில்லைநாதன் தலைமையில் மாலை 5.00 மணிக்கு நடைபெற்றது. இந்நிகழ்வில் பேராசிரியர் கைலாசபதி நினைவுப் பேருரையை திரு. ந. ரவீந்திரன் (விரிவுரையாளர் / ஸ்ரீபாதக் கல்வியியல் கல்லூரி) நிகழ்த்தினார். அதனையடுத்து திரு. சி. கா. செந்திவேல் எழுதிய ''கைலாசபதியின் சமூக நோக்கும் பங்களிப்பும்'' என்ற நூலும் பல ஆய்வாளர்கள் எழுதிய ''பன் முக ஆய்வில் கைலாசபதி'' என்ற கட்டுரைத் தொகுதியும் வெளிடப்பட்டன. தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீடுகளான மேற்படி நூல்களை அதன் செயலாளர் திரு. சோ. தேவராஜா வெளியிட்டு வைத்தார். இந்நூல்கள் மீதான ஆய்வுரையை கலாநிதி. எம். ஏ. நுஃமான் நிகழ்த்தினார். இதனையடுத்து ''சமூக முன்னேற்றத்திற்கு பல்கலைக் கழகங்கள் அவசியம்'' என்ற தலைப்பில் விவாத அரங்கு நடைபெற்றது. திரு. சோ. தேவராஜா நடுவராகக் கடமையாற்றினார். இக்கருத்தை ஒட்டி பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் செல்வன். க. மணிவண்ணன், (பொறியியல்) செல்வி

ஜெயகௌரி வேல்முருகு (பல்வைத்தியம்) செல்வன் த. ரவிசங்கர் (பொறியியல்) ஆகியோர் பேசினர். இக்கருத்தை வெட்டிப் பேசுவதற்கு கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச் சங்க மாணவர்கள் வந்திருந்தனர். அவர்கள் சார்பில் செல்வன்கள் சுரேஷ், கென்னடி அமீன் என்போர் பேசினர். இறுதியாக ''நல்லதோர் வீணை'' எனும் உரைச் சித்திரத்தை செல்வன்கள் பா. பாலநந்தகுமார் (பொறியியல்) க. நந்தகுமார் (பொறியியல்) அ. ராஜ்குமார் (மிருகவைத்தியம்) செல்வி. கலைவாணி பாலசிங்கம் (விவசாயம்) ஆகியோர் வளங்கினர்.

## 28 - 4 - 93 புதிய மாணவர் வரவேற்பு வைபவம்

வழக்கம் போலவே இம்முறையும் புதிய மாணவர் வரவேற்பு வைபவம் ஒன்றை எமது சங்கம் உலகப் பல்கலைக்கழக சேவைகள் மண்டபத்தில் பேராசிரியர் சி. தில்லைநாதன் தலைமையில் நடாத்தியது. பல்கலைக்கழக புகுமுக தமிழ் பேசும் மாணவர்கள் அனைவரையும் வரவேற்குமுகமாக நடைபெற்ற இந்நிகழ்வில் புதிய மாணவர்கள் பலரதும் திறமைகள் வெளிப்பட்டன. கலாநிதி வ. முத்துக்குமாரசாமி, திரு. வி. சண்முகரத்தினம் ஆகியோர் புதிய மாணவர்க்கு பல அரிய அறிவுரைகளை வழங்கி அவர்களை உற்சாகப் படுத்தினர்.

## 14 - 6 - 93 தமிழ்த் திரைப்படம்

எமது சங்கத்திற்கு நிதி சேகரிக்குமுகமாக ''மெல்லத் திறந்தது கதவு'' என்ற திரைப்படம் கலையரங்கில் இரு காட்சிகளாகக் காண்பிக்கப்பட்டது.

## 17 - 6 - 93 பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவு விழா

எமது சங்கத்தின் முன்னாள் பெருந்தலைவராக இருந்து எமது சங்கத்தின் வளர்ச்சிக்கு அரும் பணியாற்றிய பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் எம்மால் என்றும் நினைவு கூறப்பட வேண்டியவர், அன்னாரின் நினைவு விழா கலையரங்கில் மாலை 5.00 மணிக்கு செல்வன். எஸ். வை. ஸ்ரீதர் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் சி. தில்லைநாதன் பேராசிரியர் சி. பத்மநாதன் (வரலாற்றுத்துறை/யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோர் நினைவுப் பேருரைகளை நிகழ்த்தினர். அவர்களையடுத்து செல்வி. மரீனா இல்யாஸ் (கலை), செல்வி. என். தாரிணி (கலை), செல்வன். ஏ. ஷி. எம். நஸீம் (கலை), செல்வன். எச். எம். கலால்தீன் (கலை) ஆகியோர் கவிதை வாசித்தார்கள். அன்றைய நிகழ்ச்சியில் இடம் பெற்ற ''கண்ணதாசன் கவிதைகளில் விஞ்சி நிற்பது காமமா காதலா'' என்ற தலைப்பில் ஒரு பட்டி மன்றம் மிகவும் கலகலப்பாகவும் விறுவிறுப்பாகவும் நடந்தது. காமம் தான் என்று கூறி செல்வன்கள். மு. ரவி (கலை), எம். எம். லாபீர் (கலை) எச். எம். கலால்தீன் (கலை), என்போரும் காதல்தான் என்று கூறி செல்வன்கள் க. சரவணபவன் (பொறியியல்) க. மணிவண்ணன் (பொறியியல்), பிரான்சிஸ் ஜோன்சன் (விவசாயம்) ஆகியோர் வாதிட்டனர். கலாநிதி. க. துரைமனோகரன் நடுவராகக் கடமையாற்றினார்.

## 21 - 7 - 93 கவிஞர் மகாகவி நினைவு விழா

9 - 1 - 29 முதல் 20 - 6 - 71 வரை வாழ்ந்து தமிழில் பல முற்போக்கு நூல்கள் படைத்த நம் நாட்டு எழுத்தாளர் கவிஞர் மகாகவி உருத்திரமூர்த்திக்கும் எமது சங்கம் நினைவு விழா எடுக்கத் தவறவில்லை. மேற்படி விழா சங்கத் தலைவர் செல்வன்

க. நா. (சண்முகதாசன்) தலைமையில் கலைப்பீட புவியியல் அரங்கில் நடைபெற்றது. கலாநிதி. க. துரைமனோகரன் கலாநிதி எம். ஏ. நுஃமான் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினார்கள். அதனையடுத்து நிகழ்ந்த கவிதா நிகழ்வில் செல்வன் அப்துல் சமது (கலை), செல்வன் ரசீட் எம். நியாஸ் (கலை). செல்வன் எச். எம். கலால்தீன் (கலை செல்வி மரீனா இல்யாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்

## 7 - 8 - 93 கலை மதுரம்

எமது செயற்குழுவின் பிரமாண்டமான செயற்பாடு கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடந்த கலைமதுரம் எனும் கலை நிகழ்ச்சியாகும். எமது "இளங்கதிர்" சஞ்சிகையை வெளியிடுவதற்கு நிதி திரட்டுமுகமாக இந்நிகழ்ச்சியை ஒரு மாதத்துக்கு மேலாகப்பாடுபட்டு நாம் தயாரித்திருந்தோம். இந்நிகழ்ச்சி பல்கலைக் கழக மாணவர்கள் அனைவரதும் ஒத்துழைப்புடன் வெற்றிகரமாக நடைபெற்றது. பேராசிரியர் சி. தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு கௌரவ பி. பி. தேவராஜ் (இந்து கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்) அவர்கள் கலந்து கொண்டார். மங்கள விளக்கேற்றலுடன் மாலை 5.00 மணியளவில் ஆரம்பமான விழாவில் முதலில் "ராகரஞ்சனி" என்ற கீழைத்தேய இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இதனைப் பொறியியல் பீட உதவி ஆசிரியர் திரு. திருஞானசுந்தரன் அரவிந்தன் நெறியாள்கை செய்தார். அதனையடுத்து விவசாயபீடத்தைச் சேர்ந்த செல்வன் பி. ஜோன்சனின் "இப்படிக்கு உணர்வுகள்" என்ற நாடகம் இடம்பெற்றது. அடுத்து "இராவணன் வதம்" என்ற நாட்டுக் கூத்து இடம்பெற்றது. இதனைப் பொறியியல் பீட மாணவன் செல்வன் ஜொய்ஸ் டெல்பின் குரூஸ் நெறியாள்கை செய்தார். அடுத்து செல்வன் என். டேவிட் செல்வகுமார் நெறியாள்கையில் பேராதனைப் பல்கலைக் கழக சங்கீத நாட்டிய சங்கம் வழங்கிய "இசைத்தென்றல்" என்ற மேலைத்தேய இசை நிகழ்ச்சி இடம்பெற்றது.

## 31 - 8 - 93 நாடக விழா

எமது சங்கத்தின் வருடாந்த நாடகப் போட்டி பொறியியற் பீட E. D. E பெரெய்ரா அரங்கில் மாலை 5.00 மணிக்கு நடைபெற்றது. பின்வரும் நாடகங்கள் இந்நாடகப் போட்டியில் கலந்து கொண்டன.

1. மொஸ்கோ விசாரணை

   நெறியாள்கை: செல்வன் வ. பார்த்திபன் (கலை)
   செல்வன் மு. மகாசேனன் (கலை)

2. பேசும் ஊமைகள்

   நெறியாள்கை: செல்வன் பா. நிர்மலராஜன் (பொறியியல்)

3. திக்குத் தெரியாத காட்டில்

   நெறியாள்கை: செல்வன் ச. விஜயமோகன் (விஞ்ஞானம்)

4. பிரவாகம்

   நெறியாள்கை: செல்வன் யோ. பெர்னாந்துப்பிள்ளை (விவசாயம்)

இந்நாடகங்களுள் திக்குத் தெரியாத காட்டில் நாடகம் முதலாம் இடத்தையும் மொஸ்கோ விசாரணை இரண்டாம் இடத்தையும் பெற்றன. செல்வன் க. நந்தகுமார் (மொஸ்கோ விசாரணை) சிறந்த நடிகராகத் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த நடிகையாக செல்வி

சுகந்தி ராஜரட்ணம் (திக்குத் தெரியாத காட்டில்) தெரிவு செய்யப்பட்டார். சிறந்த நெறியாளராக செல்வன் ச. விஜயமோகன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த நாடகப் பிரதியாக மொஸ்கோ விசாரணை தெரிவு செய்யப்பட்டது. இப்போட்டிக்கு பிரதம நடுவராக கலாநிதி இரா. சிவகணேசன் கடமையாற்றினார். அவருக்கு உதவியாக எழுத்தாளர் மாத்தளை கார்த்திகேசு, அரங்காடிகள் அமைப்பைச் சேர்ந்த திரு எஸ். விந்தன் ஆகியோர் கடமையாற்றினர்.

எமது சங்கம் பல்கலைக்கழக மட்டத்தில் நடாத்திய மேற்படி நிகழ்ச்சிகளை விட அவ்வப்போது கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் நடாத்திய நிகழ்ச்சிகளிலும் மொறட்டுவைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றம் நடாத்திய நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு வந்தது. குறிப்பாக மொறட்டுவைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கிய மன்றத்தின் கலைவிழாவில் கண்ணதாசன் கவிதைகளில் விஞ்சி நிற்பது காமமா காதலா கற்பனையா என்ற தலைப்பில் நடந்த விவாத அரங்கைக் குறிப்பிடலாம். எமது சங்கத்தைச் சேர்ந்த செல்வன் ந. ரவீந்திரன் (பொறியியல்), செல்வன் த. ரவிசங்கர் (பொறியியல்), செல்வன் எஸ். சிவகாந்தன் (பொறியியல்) ஆகியோர் கற்பனையே எனும் தலைப்பில் வாதாடினர்.

எமது சங்கத்தின் சாதனைகளில் குறிப்பிட்டுக் கூறக்கூடியது அதன் தயாரிப்பான நாட்டுக் கூத்தாகும். துரித கதியில் நகரமயமாகி வரும் இன்றைய சமுதாயத்தில் எமது பாரம்பரிய கலைகளை அருகிவிடாமல் காப்பாற்றும் முயற்சியாக நாம் இதனைக் கூறலாம். சென்ற ஆண்டில் ''வாலிவதை'' நாட்டுக் கூத்தையும் இம்முறை ''இராவணன் வதம்'' நாட்டுக் கூத்தையும் பெரும் பொருட் செலவுடனும் பெரும் பிரயத்தனத்துடனும் நாம் தயாரித்திருந்தோம். இம்முறை இராவணன் வதம் நாட்டுக்கூத்து எமது பல்கலைக்கழக அரங்கிலும், கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் அரங்கிலும் கண்டி இந்து கலாசார மண்டபத்திலும் அரங்கேறியது. இந்நாட்டுக் கூத்து தயாரிப்பு முயற்சிகள் எதிர்காலத்திலும் உற்சாகத்துடன் முன்னெடுத்துச் செல்லப்படும் என்பதில் எமக்கு நம்பிக்கையுள்ளது.

எமது சங்கச் செயற்பாடுகளில் ஆர்வமுடன் கலந்து கொண்டும் பல வழிகளிலும் எமக்கு உதவிகள் புரிந்தும் வந்த மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும். ''கலை மதுரம்'' நிகழ்ச்சியின் வெற்றிக்குழைத்த மாணவர்கள் அனைவருக்கும் எமது பிரத்தியேக நன்றிகள். இசைத் தென்றல் நிகழ்ச்சியை வழங்கிய சங்கீத நாட்டிய சங்கத்திற்கும் எமது நன்றிகள். எமது கலை மதுரம் நிகழ்ச்சியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கௌரவ பி. பி. தேவராஜ் (இந்து கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்) அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள். இந்நிகழ்வுக்கு பல வழிகளிலும் உதவியாக இருந்த கொழும்பு நகர பதில் மேயர் திரு கே. கணேசலிங்கம் அவர்களுக்கும் அவர்தம் செயலாளர் திரு எஸ். சரவணபவானந்தன் அவர்களுக்கும் எமது நன்றிகள் உரித்தாகின்றன. கலை மதுரம் நிகழ்ச்சிக்கென விளம்பரம் உட்பட நிதியுதவி தந்த அனைத்து ஸ்தாபனங்களுக்கும் நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

எமது நாடக விழாவில் நடுவராக கடமையாற்றிய கலாநிதி இரா. சிவகணேச னுக்கும் அவருடன் பணிபுரிந்த திரு. மாத்தளைக் கார்த்திகேசு திரு. எஸ். விந்தன் ஆகி யோர் என்றென்றும் நன்றிக்குரியவர்கள். இந்நாடக விழாவில் பரிசுகளை வழங்கி இவ் விழாவின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த கலாநிதி ந. வேல்முருகு, கலாநிதி வ. முத்துக்குமாரசாமி ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள் கிறோம்.

எமது சங்கத்தின் செயற்பாடுகளில் இரண்டறக் கலந்து விட்டவர்களில் ஒருவர் கலாநிதி க. துரைமனோகரன் ஆவார். அவரது அளப்பரிய உதவிகளுக்கு எமது நன்றி கள். மேலும் எமது சங்கத்துடன் நெருங்கிய தொடர்புகளை வளர்த்துக் கொண்டு தமது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வாய்ப்புகள் தந்த கொழும்பு பல்கலைக்கழகத் - தமிழ்ச் சங்கத்தினருக்கும் மொறட்டுவப் பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகின்றன. எமது சங்கங்களுக்கிடையேயான ஒத்துழைப்பு மேலும் ஓங்க வேண்டும் என்பதே எமது அவாவாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக எமது சங்கத்தை தமது ஆற்றல் மிகு வழிகாட்டலால் நடத்திச் செல்லும் பெருந்தலைவர் பேராசிரியர், சி. தில்லைநாதன் பெரும் பொருளாளர் ஜனாப் எம். எஸ். ஏ. காதர் ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அடுத்து வரும் செயற்குழு எமது சங்கத்தின் பணிகளை மேலும் சிறப்பாக நடத் திச் செல்லும் என்ற நம்பிக்கையுடனும் அவர்களுக்கு எனது வாழ்த்துக்களைக் கூறியும் இவ்வறிக்கையை முடிக்கிறேன்.

நன்றி !

சி. சிவானந்தன்
செயலாளர், தமிழ்ச்சங்கம்

மின்னியற்றுறை,
இறுதியாண்டு, (பொறியியற் பீடம்)

# சங்கத்தின் பாதையிலே....

இளங்கதிரின் சங்கத்தின் பாதையிலே .. ...என்னும் இப்பக்கங்களை நாம் இருந்த இவ் வருடத்தின் தமிழ்ச்சங்கச் செயற்பாடு களில் எமது நிர்வாகக்குழு எதிர்கொண்ட சில பிரச்சினைக்குரிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள விளைகின்றேன். இதன் மூலம் எதிர்வரும் தமிழ்ச் சங்கங்கள் முன் நோக்குத் திட்டங்களையும், தமது செயற் பாடுகளையும் இலகுவாக்க முடியுமென்ப தால், இனிவரும் இளங்கதிரிலும் இப்பக் கங்கள் தொடரப்படவேண்டும் என்று விரும்புகின்றேன்.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் பாதையிலே 59வது நிர்வாகக் குழுவினராக நாம் (03 - 08 - 92) பொறுப் பேற்றுக் கொண்டோம். கடந்த வருடத்து நிர்வாகக்குழுவில் உபதலைவராக இருந்து பின் இவ்வருடம் சங்கத்தலைவராக தெரிவு செய்யப்பட்டமையால் எமது சங்கச் செயற் பாடுகளை நடைமுறைப்படுத்துவது ஓரளவு இலகுவாகவே இருந்தது எனலாம். அத் துடன் கடந்த வருட தமிழ்ச்சங்கத் தலை வர் செல்வன் வ. பவஹரன் வழியிலும், தமிழ்ச்சங்கப் பெரும்தலைவர் பேராசிரியர் சி. தில்லைநாதன், பெரும் பொருளாளர் ஜனாப். எம். எல். ஏ. காதர் வழிகாட்டலி லும் நாம் எம்மாலியன்றளவு செயற்பாடு களைத் திறம்பட நடத்தினோம் என்பதில் ஐயமில்லை.

எனினும் நாம் பதவியேற்கும் போது எம்மால் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் சில நடைமுறையில் சாத்தியப்படவில்லை என்பது வருத்தத்திற்குரிய செய்தியாகும். அவையாவன, தமிழ் இலக்கியப் புத்தகக் கண்காட்சி ஒன்றை நடத்துவது... இந்திய அறிஞர்கள் சிலரை அழைத்து சொற் பொழிவுகள் அல்லது கவியரங்குகள் நடத் துவது... எமது பல்கலைக்கழகத்துடன் கொழும்பு, மொறட்டுவ, கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகங்களை இணைத்து நாடக விழாக்கள், இலக்கிய நிகழ்வுகள், போட் டிகள் வைப்பது......எமது பல்கலைக்கழக தமிழ்ச்சங்க சார்பில் சுற்றுலா செல்வது... விரிவுரையாளர்களுடன் சுவையான விவாத அரங்குகள், கவியரங்குகளினை நடத்து வது.../இவற்றினைச் செயற்படுத்த முடியா மற் போனமைக்கு பல காரணங்கள் உள் ளன. நாட்டு நிலமைகாரணமாக சில வருடங்கள் சீர்குலைந்திருந்த பல்கலை கழகம் மீண்டும் திறக்கப்பட்டபின்னர் வெவ்வேறு பீடங்களின் பரீட்சைகள், விடுதலை நாட்கள் என்பன வெவ்வேறு காலங்களில் வருவது... நிகழ்ச்சி நடத்துவதற்கு வேண்டிய அனுமதிகள் பெறுவதும், ஒழுங்கமைப்பு செய்வதும் சிர மங்களாக இருப்பது...... தமிழ்ச் சங்கத்திற் கென ஒரு காரியாலயம் போன்ற இடவச தியோ அறிவித்தல்ப் பலகையோ இல்லா திருப்பது... நாட்டின் தற்போதைய நிலமை காரணமாக அடிக்கடி பதற்ற நிலமை உரு வாவது... வெவ்வேறு மன்றங்களின் நிகழ்ச் சிகள், நாம் ஒழுங்கு செய்த திகதிகளில் இடம்பெறுவது... என்பதாகும்.

இனிவரும் சங்கத்தினர், இவ் இடர் பாடுகளைத் தவிர்ப்பது அவசியம். முன் கூட்டியே சகல வேலைகளையும் திட்டமிட் டும், காலம் முந்தி ஆயத்தங்கள் செய்தும் இவ் வேலைகளை இலகுவாக்கமுடியும்.

இதற்கு கலைப்பீட உறுப்பினர்கள் உதவி புரிவதும், பொறுப்பேற்றுச் செயற்படுவதும் மிகப்பொருத்தமாக இருக்கும். அத்துடன் கலைப்பீட தமிழ் பேசும் விரிவுரையாளர் களின் உதவியுடன் மேற்படி நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வது சாலச்சிறந்ததாகும்.

அத்துடன் எமது காலத்திலும், கடந்த வருடத்திலும் கலைப்பீட மாணவர்கள் குறைந்தளவு ஆர்வத்தினையே காட்டி வந்தனர். குறிப்பாக முஸ்லீம் சகோதர மாணவர்கள் தனியே கவி நிகழ்வுகளில் மட்டும் பங்குபற்றுவதும், ஏனைய நிகழ்ச்சி களில் பார்வையாளர்களாக கூட சமுகம் தாரது விலகியிருப்பதும், மிகவும் கவ லைக்குரியது. இனிவரும் மாணவர்கள் இதை உணர்ந்து செயற்படவேண்டும். கலைப்பீட மாணவர்களே நிகழ்ச்சிகளைப் பொறுப்பேற்று நடாத்த முன்வரவேண் டும்.

பல்கலைக்கழகத்தினுள் பகட்டான நிகழ்ச்சிகளை நடாத்துவதை விடுத்து அறிவு, இலக்கிய, இயல், இசை, நாடக நோக்கோடு வெவ்வேறு வகையான சுவை யான நிகழ்ச்சிகளை தொடர்ந்தும் நடாத்த முன்வரவேண்டும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தினில் கலை இலக்கியத்துடன் தொடர்புடைய தாக தமிழ்ச்சங்கம், சங்கீத நாட்டிய சங் கம், இந்துமாணவர் சங்கம் என்பன இயங்கி வருகின்றது, இந்துமாணவர் சங் கம் ''இந்து தர்மம்'' நிதிசேகரிப்பு கலைநிகழ்ச்சி ஒன்றையும், நூல் வெளி யீட்டு விழா கலைநிகழ்ச்சியினையும் சிறப் பாக நடாத்தி வருகின்றது. சங்கீத நாட்டிய சங்கம் இசைநிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றது. தமிழ்ச்சங்கச் செயற் பாடுகள் யாவரும் அறிந்ததே.

இவ்வாண்டில் இம்மூன்று சங்கங்களும் சிறப்பாக இயங்கி வந்தபோதிலும், தமக் குள் புரிந்துணர்வு இல்லாமல் சில மனஸ் தாபங்களை வளர்த்துக்கொண்டதுமிக வும் கவலைக்குரிய விடயமாகும். பொது வாக மாணவர்கள் பாரபட்சமின்றி எந்த சங்கத்திற்கும் வேலைசெய்த போதிலும் சில நிர்வாகக் குழுவினரின் வாய்ப்பேச்சு களே மேற்படி மனஸ்தாபங்களைத் தோற் றுவித்திருக்கின்றது.

இனிவரும் காலங்களில் இப்படியான பிரச்சினைகள் தோன்றாமல் சகல சங்கங் களும் புரிந்துணர்வின் அடிப்படையில் இயங்குவது அவசியமாகும்.

தமிழ்ச்சங்கத்தின் வருடாந்த சஞ்சிகை யான ''இளங்கதிர்'' வெளியீடு பொது வாக சிரமமான காரியமாகவே இருந்து வந்திருக்கின்றது. அதனால்தான் 59 வது தமிழ்ச்சங்கத்தில் 27 வது ஆண்டு மலர் வெளிவருகின்றது. நாம் ''இளங்கதிர்'' வெளியீட்டு நிதிக்காக கொழும்பில் எமது பல்கலைக்கழக மாணவர்கள் மாத் திரம் பங்கேற்ற ''கலைமதுரம்'' என்னும் பல்சுவைக் கதம்ப நிகழ்ச்சி ஒன்றினை நடத்தினோம். தற்போதைய சூழ்நிலை காரணமாக இது மிகவும் கஷ்டமான காரி யமாகவே இருந்தது. இருந்த போதிலும் பலரினது ஒத்துழைப்புடனும் இதனை வெற்றிகரமாக நடாத்தினோம்.

எமது நிர்வாகக்குழுவில் உறுப்பி னர்கள் சகலரும் என்னுடன் நன்றாக ஒத்துழைத்தனர். ஆயினும் சிலர் மாத்தி ரம் கஷ்டப்பட்டு வேலைகள் செய்தது குறிப்பிடத்தக்கது. தமிழ்ச்சங்க ஒழுங்க மைப்பு வேலைகள் கடினமானவை என்ப தாலும், நிர்வாகக் குழுவில் பன்னிரண்டு மாணவர்கள் மாத்திரமே இருப்பதாலும் சகல மாணவர்களும் பொறுப்பாக இயங் கினால் இலகுவாக செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த முடியும்,

அத்துடன், பொதுவான செயற்பாடு களில் நிர்வாகக்குழு உறுப்பினர்களல்லாத மாணர்கள் நன்கு உதவிகள் புரிந்து ஒத் துழைத்தமை சிறப்பானது. அந்த வகை

யில் எனக்கு விசேட உதவிகள் புரிந்த விஞ்ஞான பீட மாணவன் செல்வன் ச. விஜயமோகன், எனது பீட சக மாணவர்கள் யாவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

இவ்விதழினை சிறந்த முறையில் வெளிக்கொணர்வதற்கு பாடுபட்ட இதழாசிரியர் செல்வன் எஸ். வை. ஸ்ரீதரின் பணி பாராட்டத்தக்கது.

இவ்விதழினை வெளியிட உதவியவர்களுக்கும், தமிழ்ச்சங்க செயற்பாடுகளிற்கு உதவிய சகலருக்கும் நாம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

க. நா. சண்முகதாசன்
தலைவர், தமிழ்ச்சங்கம்

## மனு நீதி !

ஏ...மனிடனே !

உன்னை விட வயது குறைந்தவன்,
உன்னை விட அந்தஸ்து குறைந்தவன்,
உன்னை விட பணம் குறைந்தவன்,
ஆயினும்...
ஆளுமை மிக்கவன், திறமையுள்ளவன்,
ஆற்றல் நிறைந்தவன் - ஒருவன்
சமூகத்தை வழிநடத்துவதைத்
தடுக்க முற்படாதே!

அது - உனக்கு அவமானமல்ல.
சமதர்மம்! சமூக முன்னேற்றம்!!

பீற்றர் ரஞ்சித்
இறுதியாண்டு (விவசாயபீ

# நன்றி நவில்கிறோம்

வளாகத்து மண்ணில் கால் பதித்த
தமிழ்ச் சங்கத்து வளர்ச்சிப் பாதை
முத்திரையை வெளியிட – இத்தரையில்
வருகின்றது இளங்கதிர்.

வாழ்த்துக்கள் தந்திட்ட
துணைவேந்தர் அவர்கட்கும் ஊக்கமும், ஆக்கமும் தந்து
யோசனைகள் பல நல்கிய பெருந்தலைவர் மற்றும்
பெரும் பொருளாளருக்கும்

ஊக்கத்துடன் ஆக்கங்கள் அளித்திட்ட
பேராசிரியர்கள், கலாநிதிகள் - மற்றும்
விரிவுரையாளர்கள் - கூடவே எங்கள்
மாணவச் சகோதரர்களுக்கும்


உற்சாகமூட்டி எக்காலத்திலும்
ஆக்கங்கள் சரிபார்த்துதவிய
தமிழ்த்துறை விரிவுரையாளர்களான
கலாநிதிகள் அருணாசலம், துரைமனோகரனுடன்
செல்வி சோதிமலருக்கும்

இந்த மலரை வெளிக்கொண்டுவர
கொழும்பில் நடைபெற்ற 'கலைமதுர' நிகழ்ச்சியினைச்
சிறப்பாக நடத்த உதவிய யாவருக்கும்

அச்சுப் பிரதி சரிபார்த்து உதவிய
தம்பி சிமியோன் சில்வெஸ்ரருக்கும்
பலவகையிலும் உதவிகள் பல புரிந்த
எஸ். ஜெயசீலன் அண்ணாவிற்கும்
ஆக்கங்கள் பிரதி பண்ணி உதவிய
மகேஸ்வரன், அமீர் அலி, கலால்தீன்
யோகராஜா, கிருபாகினி, கமலினி ஆகியோருக்கும்

அட்டைப் படத்தை அழகாக
வரைந்திட்ட ராஜேசுக்கும் - அதற்கு
எழுத்தமைப்புச் செய்து தந்த திக்குவெல்ல ஸிம்ரிக்கும்
அழகாக அச்சிட்ட 'செனித் அச்சக' உரிமையாளருக்கும்

மற்றும் நேரடியாகவும் மறைமுகமாகவும்
உதவிகள் நல்கிய யாவருக்கும்
பேராதனை வளாகத்துத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில்
மிக்க நன்றிகள் பல.



— இதழாசிரியர்

இவ்வா
சிறப்பாக இ
குள் புரிந்துண

சுபம்

அச்சுப்பதிவு:- .செனித் அச்சகம் 192, கொட்டுகொடல்ல வீதி, கண்டி